# பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களும் பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் அவற்றின் தாக்கமும்



வட மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டப் பங்குபற்றுகை ஆய்வு


TRANSFORM
Building Inclusive Communities and Promoting Women's Leadership
உள்ளடங்கலான சமூகத்தை கட்டியெழுப்புதல் மற்றும் பெண் தலைமைத்துவத்தை மேம்படுத்தல்
ප්‍රජා අතර එකමුතුව සවිබල ගැන්වීම සහ කාන්තා නායකත්වය ප්‍රවර්ධනය කිරීම
Funded by
European Union
Implemented by
Chrysalis
Catalyzing change
LAW & SOCIETY TRUST

# பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களும் பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் அவற்றின் தாக்கமும்

வட மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டப்

பங்குபற்றுகை ஆய்வு

*“ஒருவர் பிறக்கும்போது பெண்ணாகப் பிறப்பதில்லை, மாறாக அவள் பெண்ணாக ஆகின்றாள்”* - Simone de Beauvoir

கிரிஜா சிவகுமார்
டிசெம்பர் 2021

© சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை
பதிப்புரிமை பெற்றது.
டிசெம்பர் 2021
வடிவமைப்பு: முத்தையா காந்தரூபன்
அட்டைப் படம்: சந்திரன் கணேஷ்வரன்
அச்சகம்: டிரெக்ட் பிரின்டர்ஸ்

**ISBN 978-624-5545-12-4**

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை
3, கின்ஸி டெரஸ்,
கொழும்பு 08,
இலங்கை.
தொலைபேசி: 94 (0) 11 2684845
தொலைநகல்: 94 (0) 11 2686843
மின்னஞ்சல்: info@lstlanka.org
இணையம்: www.lstlanka.org

இந்த ஆய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட முடிவுகளே ஆகும். அவை சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அல்லது கிறிசலிஸ் இன் கருத்துக்களாக அமையாது. சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை மற்றும் கிறிசலிஸ் இன் முன் அனுமதியின்றி இவ்வெளியீட்டின் எப்பகுதியும் மீள் பிரதி செய்யப்படுதலோ, மீளப் பெறக்கூடிய வகையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படுதலோ அல்லது இலத்திரனியல், இயந்திரம், பிரதியெடுத்தல், பதிவு செய்தல் அல்லது வேறு முறை என எவ்வடிவிலேனும் அல்லது எம்முறையிலேனும் பகிரப்படுதலோ கூடாது.

# முன்னுரை – சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

பால்நிலைச் சமத்துவமின்மை இலங்கையில் பல தசாப்தங்களாக ஊடாடிவரும் ஒரு விடயமாக இருந்து வருகின்றது. ஒருபுறத்தில் பெண்கள் உயர் எழுத்தறிவு வீதத்தினைக் கொண்டுள்ளனர், பல தசாப்தங்களாகச் சர்வசன வாக்குரிமையினை அனுபவித்து வருகின்றனர், பல சட்டங்கள் (அனைத்துச் சட்டங்களும் இல்லாதிருந்தாலும் கூட) பால்நிலை ரீதியாக நடுநிலையானவையாக இருக்கின்றன. இருந்தபோதிலும் பால்நிலைச் சமத்துவமின்மை நிலவுகின்றது, மேலும் அது சமூகரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கட்டாயம் தீர்க்கப்படவேண்டிய அநீதி ஒன்று உள்ளது என கூறும் தாங்கிக்கொள்ள முடியாத உணர்வுகள் வெளிப்படுவதைக் காண முடியாதுள்ளது. இந்த நிலவரங்களினால் அனைத்துச் சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளது என்பது உணரப்படவில்லை.

பொதுவாக, பால்நிலைச் சமத்துவமின்மை சட்ட மறுசீரமைப்புக்களால் தீர்க்கப்படுகின்றது உத்தியோகபூர்வ அடிப்படையில் பாரபட்சத்தினைத் தடைசெய்யும் சட்டங்களை இயற்றல், மிகவும் பாகுபாடுமிக்க சட்டங்களைத் திருத்துதல் மற்றும் பெண்களையும் விளிம்புநிலையில் உள்ள குழுமங்களையும் மேம்படுத்துவதற்காக விசேட ஏற்பாடுகளுக்கான ஆணையினை வழங்கல். ஆனால் இந்த மறுசீரமைப்புக்களும் கூட தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. பெண்கள் காணிகளை அணுகுவதை இயலுமாக்குவதற்காகச் சில கொள்கை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுப் பெண்கள் அவர்களின் வாழ்வாதாரங்களை முன்னேற்றப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் பெண்களுக்குத் தேவைப்படும் நெறியுதாரண மாற்றத்தினை இந்த நடவடிக்கைகள் உருவாக்கவில்லை.

வட மாகாணத்தை மையப்படுத்தும் இந்த ஆய்வு பால்நிலைச் சமத்துவமின்மைக்கான அடிப்படைக் காரணங்களில் நிலவிவரும் பால்நிலைப் பாகுபாடுமிக்க சமூக நியமங்களும் ஒன்றாகும் எனும் உண்மையினை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது. வட மாகாணம் என்பது பால்நிலைச் சமத்துவமின்மை ஆழமாக வேரூன்றியுள்ள பழமைவாதத்தின் கோட்டையாகும்.

சமத்துவமின்மைகளுக்கு நியாயங்கற்பிக்கும் இந்தச் சமூக நியமங்கள் பெண்களினாலும் அதேபோல் ஆண்களினாலும் ஆழமாகப் பற்றிப்பிடிக்கப்படுகின்றன என்பதுடன் பால்நிலைச் சமத்துவமின்மையினை இல்லாதொழிப்பதையும் தடைசெய்து வருகின்றன. மோதல் சமூகத்தினை புரட்டியெடுத்துள்ளதுடன், பெண்கள் பாரம்பரியமற்ற வகிபாத்திரங்களை வகித்து, தமது குடும்பங்களுக்குத் தலைமைதாங்கி நிதர்சனமான தடைகளை உடைத்து வருகின்றனர். யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்கள் கழிந்த நிலையில் யுத்தத்தின் விளைவுகளும் அதன் அழிவுகளும் வட மாகாணப் பெண்களின் வாழ்விலும் உரிமைகளிலும் சுதந்திரங்களிலும் இன்னும் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. காலம் கடந்து செல்கின்றது. காணி மற்றும் உறுதியான வாழ்வாதாரங்களுக்கு அணுகல் அற்ற நிலையில் வாழ்ந்து வரும் பெரும் எண்ணிக்கையிலான பெண் தலைமைக் குடும்பங்கள் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அங்கவீனமான பெண்களுடன் புதிய இயல்புநிலைக்குள் சமூகம் நுழைகின்ற இந்த வேளையில், பெண்களின் முன்னேற்றத்தினை இன்னும் தடுத்துவைக்கும் பால்நிலைப் பாரபட்சமிக்க நியமங்கள் புதிய நிலைத்துநிற்கும் தன்மையை அடைகின்றன.

பெண்களின் மீது ஒன்றுடன் ஒன்று பிணைந்த கட்டுப்பாடுகளின் வலையினை உருவாக்கும் சமூக நியமங்கள் பற்றிய தனித்துவமான நுழைபுலங்களை இந்த ஆய்வு வழங்குகின்றது. இந்த கட்டுப்பாடுகள் 'நல்ல பெண் மற்றும் கற்புள்ள பெண்' பற்றிய பால்நிலைசார்ந்த கருத்தியல்களைக் கொண்டுள்ளன. இவள் தமக்கென வரையறுக்கப்பட்ட வீட்டு வேலைப் பரப்புக்குள் தள்ளப்படுவதால் மற்றும் தள்ளப்படும் போது நல்ல மற்றும் கற்புள்ள பெண் ஆகின்றாள். நல்ல பெண் தனக்கென எவ்வித அபிலாஷையும் இன்றித் தனது குடும்பத்திற்காக வாழ்கின்றாள். இச்சமூக நியமங்கள் பெண்களைப் பௌதிக ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாதிக்கின்றன. இவை பெண்களின் செயற்பாடுகளையும் அசைவியக்கத்தினையும் அவர்களின் அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புக்களையும் கட்டுப்படுத்துகின்றன.

இந்த கட்டுப்பாடுகள் ''நல்ல பெண்'' என்பவளை வரைவிலக்கணம் செய்யும் பாடசாலைப் புத்தகங்கள், விளம்பரங்கள், செய்திப் பத்திரிகைகள் மற்றும் இலக்கியங்கள் போன்ற தேசிய எடுத்துரைப்புக்கள் மூலம் வலுப்படுத்தப்படுகின்றன. இவை சமயச் சித்தாந்தங்களினாலும் நடைமுறைகளினாலும் வலுப்படுத்தப்படுவதுடன் குடும்பத்தின் உள்ளே இருக்கும் குடும்பத்தலைமையாக இருக்கும்

பாரம்பரியங்களின் பாதுகாவலர்கள் பரப்புனர்களாக இருக்கும் பெண்களினாலும் பெண்களினதும் ஆண்களினதும் பிரக்ஞையிலும் நனவிலி மனதிலும் பதிக்கப்படுகின்றன. இதனால் பெண்களே அவர்களின் சிறைக்காவலர்களாக மாறுகின்றனர்.

பெண்களின் வாழ்வினை நிலைமாற்றுவதற்குத் தேவைப்படும் சட்ட மறுசீரமைப்புக்களையும் கொள்கைகளையும் ஆய்வு தெளிவுபடுத்துகின்ற அதேவேளை, மாற்றத்தினை உருவாக்கவேண்டுமாயின் வட மாகாணத்தில் இந்தச் சமூக நியமங்களை நிலைமாற்றுவதற்கான தேவையினையும் அடையாளம் காண்கின்றது. பால்நிலைப் பாகுபாடுமிக்க பிரதான சமூக நியமங்களையும் அவற்றின் தாக்கங்களையும் அடையாளம் கண்டு, மதிப்பிட்டு, புரிந்துகொள்வதே இந்த ஆய்வின் பிரதான குறிக்கோளாக இருக்கும் அதேவேளை, பெண்களை வரைவிலக்கணப்படுத்தும் எடுத்துரைப்புக்களைப் பெண்களையே கட்டுடைத்து கேள்விகளைக் கேட்க வைக்கும் பங்கேற்பு முறையிலான செயற்பாட்டு ஆய்வு ஊடான பெண்களுடனான ஈடுபாட்டின் மூலம் இக்குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இதுவே இந்த ஆய்வினைத் தனித்துவமானதாகவும் நிலைமாற்றும்தன்மை மிக்கதாகவும் ஆக்கியிருக்கின்றது. தமது முன்னேற்றத்தினைத் தடைசெய்யும் காரணிகளைத் தாமே அடையாளம் காண பெண்களை இந்த ஆய்வு இயலுமாக்குவதுடன், அவர்கள் தங்களின் வகிபாத்திரங்களை மீள வரைவிலக்கணம் செய்வதற்கு அவர்கள் தங்களின் செயலாண்மையினைப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் உணரச் செய்கின்றது.

பால்நிலைச் சமத்துவம், மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் மற்றும் நீதி ஆகியவற்றின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பின் மூலம் வட இலங்கையில் ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்தினை சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை கிறிசலிசுடனான பங்காண்மையுடன் மேற்கொண்டிருக்கின்றது. இந்தக் குறிக்கோளின் ஒரு பகுதியே இந்த ஆய்வாகும். இந்த முயற்சியில் பங்காண்மை அமைத்த கிறிசலிசையும் இதற்கு நிதியுதவி வழங்கிய ஐரோப்பிய யூனியனையும் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை மெச்சுகின்றது. இந்தக் கருத்திட்டத்தில் எம்முடன் இணைந்து தங்களின் கதைகளைப் பகிர்ந்து மாற்றத்திற்கான முகவர்களாக இருப்பதற்கான தங்களின் தயார்நிலையினை வெளிப்படுத்திய பெண்களினால் நாங்கள் புத்துணர்ச்சியும் பெருமிதமும் அடைகின்றோம்.

கலாநிதி சகுந்தலா கதிர்காமர்
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

# முன்னுரை - கிறிசலிஸ்

நாம் செய்யும் அனைத்தினதும் மையமாக இருப்போர் பெண்களும் இளைஞர்களுமே ஆவர். பெண்களையும் இளைஞர்களையும் அவர்களின் பால்நிலை, வயது, இனத்துவம், சமயம் மற்றும் வகுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் விளிம்புநிலைக்குத் தள்ளும் பல சிக்கலான சவால்களை நாம் புரிந்துகொள்ளும் அதேவேளை, இலங்கை அதன் ஆற்றல்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் தலைவர்கள் இப்பெண்களும் இளைஞர்களுமே என்பதை நாம் முன்னெப்பொழுதையும் விட இப்போது நம்புகின்றோம். சமத்துவமின்மைகளுக்குச் சவால் விடுத்து உள்ளடக்கும் தன்மைமிக்க வளர்ச்சியை ஏற்படுத்தும் புத்தாக்கமிக்கதும் பூரணமானதுமானத் தீர்வுகளை நாம் கிறிசலிசில் உருவாக்குவதால், மாற்றங்களையும் நிலைமாற்றத்தினையும் உந்திச் செலுத்துவதற்குப் பெண்களையும் இளைஞர்களையும் வலுவூட்டுகின்றோம். அனைத்து பால்நிலைகளைச் சேர்ந்த மக்களும் பாரபட்சத்தினை ஏற்படுத்தும் மற்றும் சவால்விடுக்கும் உறவுகளை எதிர்கொள்வதற்கான அறிவு, திறன்கள் மற்றும் ஆற்றலை கொண்டுள்ளனர் என்பதையும், சமத்துவமின்மையினை நிலைக்கச்செய்யும் நியமங்கள், விழுமியங்கள், நடத்தைகள் மற்றும் நிறுவனரீதியான தடைகளை நிலைமாற்றுவதற்கான தீரத்தினைக் கொண்டுள்ளனர் என்பதையும் உறுதிப்படுத்துவதன் மூலம் நாம் உள்ளடக்கும் தன்மைமிக்க வளர்ச்சியினை மேம்படுத்துகின்றோம்.

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையுடனான (LST) எமது பங்காண்மையின் மூலம் எமது பணிகள் செழுமைப்படுத்தப்படுகின்றன. நாட்டின் சமூக - பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவினைப் புரிந்துகொள்வதில் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைக்கு இருக்கும் ஆழமான புரிதல், குறிப்பாகப் பெண்கள் மற்றும் ஏனைய குழுக்கள் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டு பாரபட்சத்திற்கு உட்படுத்தப்படல் பற்றிய அதன் புரிதல், பாரபட்சத்தின் மூல காரணங்கள் பற்றிய எமது சொந்தப் புரிதலைக் கூர்மைப்படுத்தி சமுதாயங்கள், உள்ளூராட்சி அதிகாரசபைகள் மற்றும் எமது சகபாடிகளுடன் சேர்ந்து பொருத்தமானதும் நீடுறுதியானதுமான தீர்வுகளை உருவாக்க எம்மை அனுமதித்துள்ளது.

வட மாகாணத்தில் நிலவும் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை அடையாளங்கண்டு பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் அவை ஏற்படுத்தும் தாக்கங்களை அடையாளம் காண்பதே இந்த ஆய்வின் பிரதான குறிக்கோளாக அமைந்திருந்தது. பால்நிலை சார்ந்த வகிபாத்திரங்கள் நிலைமாறிவருகின்ற, குறிப்பாக பெண்களுக்கான வகிபாத்திரங்கள் நிலைமாறிவருகின்ற யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவில் பால்நிலைப் பாரபட்சமிக்க தேசிய எடுத்துரைப்புக்கள் இவ்வாறான சொல்லாடல்களில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதையும் இந்த ஆய்வு ஆராய்ந்துள்ளது. தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட சமூக நியமங்கள் பகுப்பாய்வு வரைபுச் சட்டகம் (SNAP) உள்ளிட்ட ஆய்வினை மேற்கொள்வதற்காக ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட பங்கேற்பு முறையிலான அணுகுமுறைகள் முன்னாள் பெண் போராளிகள், அங்கவீனமான பெண்கள், ஒற்றைத்தாய் மற்றும் விதவைகள் உள்ளிட்ட தனித்துவமான குழுக்கள் முகங்கொடுக்கும் நயநுட்பமிக்க பிரச்சினைகள் பற்றிய ஆழமான புரிதலை வழங்கின.

வட மாகாணத்தில் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் நிலவுகின்றமை தொடர்பாக ஆய்வு புதிய சான்றுகளை உருவாக்கியுள்ளதுடன் பெண்கள் அவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் அணுகுவதை இந்த நியமங்கள் எவ்வாறு தடுக்கின்றன என்பதையும் இந்த ஆய்வு நிரூபிக்கின்றது. தனிப்பட்ட வெளிகளிலும் பொது வெளிகளிலும் பெண்களின் வகிபாத்திரங்களில் செல்வாக்குச் செலுத்தி அவர்களின் கௌரவம், பாதுகாப்பு மற்றும் ஆபத்தற்ற நிலை ஆகியவற்றினை விலையாகச் செலுத்தவைத்து அவர்களின் இனப்பெருக்க வகிபாத்திரங்களை வலுப்படுத்தும் நியமங்களே பெண்களின் உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் பாதிக்கின்ற முக்கியமான காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் இருந்து கண்டறிந்த விடயங்கள் தற்போது நிலவுகின்ற நிலைக்குச் சவால் விடுத்து பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை நிலைமாற்றுவதற்கு எம் அனைவரினதும் இயலுமையை வளர்க்கும் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

இந்த ஆய்வினை நடத்தியமைக்காகவும் இலங்கையின் வளர்ச்சியில் பெண்களையும் இளையோரையும் ஈடுபடுத்தும் எமது பணிநோக்கில் பெறுமதிமிக்க பங்காளராக எம்முடன் தொடர்ந்து இருப்பதற்காகவும் நாம் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அணிக்கு அளப்பரிய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

நன்றி
அஷிகா குணசேன
பிரதம நிறைவேற்று அதிகாரி
கிறிசலிஸ்

# நன்றி நவிலல்

இந்த ஆய்விற்கானத் தரவுகளை எமக்கு வழங்கிய வட மாகாணத்தைச் சேர்ந்த சமூக உறுப்பினர்களுக்கு என் முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் இந்த ஆய்விற்கானத் தரவு சேகரிப்பாளர்களாக செயற்பட்ட சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொவிட்-19 எனப்படுகின்ற நோய்த்தொற்றினால் ஏற்பட்ட சுகாதார சவால்களுக்கு மத்தியிலும் ஆய்வுப் பங்குபற்றுநர்களிடமிருந்து தரவுகளைத் திரட்டுவதற்கு சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் மேற்கொண்ட அயராத முயற்சிகள் பாராட்டிற்குரியவை.

இந்த ஆய்விற்கு அவசியமான ஒழுங்கமைவு ஆதரவினை எமக்கு அளித்த கிறிசலிஸ் நிறுவனத்திற்கும், அதன் பணியாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறேன். அத்துடன் ஆய்வு முடிவுகள் தொடர்பான பெறுமதிமிக்க பின்னூட்டல்களைத் தந்துதவிய சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி சகுந்தலா கதிர்காமர் அவர்களுக்கும் கிறிஸலிஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஷிகா குணசேன அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த ஆய்வுச் செயன்முறை முழுவதிலும் எமக்கான வழிகாட்டல்களை வழங்கிய சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் திரு. சந்துன் துடுகல அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் இந்த ஆய்வினை மீளாய்வு செய்து தமது பெறுமதிமிக்க பின்னூட்டல்களை வழங்கிய தேசிய கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். கருணாகரன் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம். ஜெயசீலன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், இந்த ஆய்வினை செம்மைப்படுத்துவதற்கு உதவிய சட்டத்தரணிகள் ஷலோமி டேனியல் மற்றும் இன்ஷிரா பாலிக் மற்றும் றூம் டு றீட் நிறுவனத்தின் எழுத்தறிவு பணிப்பாளர் திரு. ஆறுமுகம் செல்வேந்திரன் மற்றும் ஹியுமெடிகா சர்வதேச நிறுவனத்தின் மதியுரைஞர் திரு. நாகரத்தினம் கிருஷ்ணகுமார் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறேன்.

எமது ஆய்வுக் குழுவின் ஆதரவும் அர்ப்பணிப்புமின்றி இந்த ஆய்வு நிறைவு பெற்றிருக்க முடியாது. சதுரிகா செவ்வந்தி, தேவராஜா சுவீர்தன், அனுஷா காயத்ரி செல்வேந்திரன், வேனுஜா நவரட்ணராஜா, மதிவதனி குருச்சந்திரநாதன் மற்றும் நஸ்ரின் ஜான் ஆகியோரே எமது ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாவர். இந்த ஆய்வினை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்காக தமது ஆதரவினையும் அர்ப்பணிப்பினையும் வழங்கிய இவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் இந்த ஆய்விற்கு உதவிபுரிந்த, இங்கு பெயர் குறிப்பிடப்படாத ஒவ்வொருவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிரிஜா சிவகுமார்
ஆய்வாளர்

# உள்ளடக்கம்


அத்தியாயம் 1 — 1

| | |
|---|---|
| 1. ஆய்வு அறிமுகம் | 1 |
| 1.1 அறிமுகம் | 1 |
| 1.1.1. பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் | 4 |
| 1.1.2. பங்கேற்பதற்கான வாய்ப்புகளின்மை | 6 |
| 1.2 பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கான இலங்கையின் தேசிய மற்றும் சர்வதேச சட்டக் கடப்பாடுகள் | 9 |
| 1.3 பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களும் பால்நிலை சமத்துவத்தில் அவற்றின் தாக்கமும் | 11 |
| 1.4 சமூக நியமங்கள், சட்டங்கள், வழக்காற்றுச் சட்டங்கள் மற்றும் மத நம்பிக்கைகள் | 13 |
| 1.4.1. ஆதன உரிமைகள் | 15 |
| 1.4.2. பாலியல் வன்புணர்வு தொடர்பான சட்டம் | 16 |
| 1.5 முடிவாக... | 18 |

அத்தியாயம் 2 — 19

| | |
|---|---|
| 2. இலக்கிய மீளாய்வு | 19 |
| 2.1 சமூக நியமங்களும் அவற்றின் பண்புகளும் | 19 |
| 2.1.1 சமூக நியமங்கள் பால்நிலையுடன் தொடர்புறுகின்ற பாங்கு | 19 |
| 2.1.2 சமூக நியமங்களும் மதக் கோட்பாடுகளும் | 20 |
| 2.1.3 பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களும் பால்நிலை சமத்துவமும் | 22 |
| 2.1.4 சமூக நியமங்களின் தொடர்ச்சியான இருப்பிற்கான காரணங்கள் | 23 |
| 2.2 சமூக நியமங்களும் பெண்களின் பால்நிலை வகிபாகமும் | 24 |
| 2.2.1 இனப்பெருக்கம் செய்பவர்களாகப் பெண்களின் பால்நிலை வகிபாகம் | 24 |
| 2.2.2 வீட்டுப் பராமரிப்பாளர்களாகப் பெண்களின் பால்நிலை வகிபாகம் | 25 |
| 2.2.3 கலாசாரக் காவிகளாகப் பெண்களின் பால்நிலை வகிபாகம் | 26 |
| 2.2.4 'சிறந்த பெண்' என்பவள் யார்? | 26 |
| 2.3 பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களைக் கட்டிக்காப்பதிலும் கடத்துவதிலும் பெண்களின் வகிபாகம் | 27 |
| 2.4 யுத்தத்திற்குப் பிற்பட்ட சமூகங்களில் சமூக நியமங்களின் போக்கு | 28 |

அத்தியாயம் 3 — 31

| | |
|---|---|
| 3. ஆய்வு முறையியல் | 31 |
| 3.1 அறிமுகம் | 31 |
| 3.2 ஆய்வுக் குறிக்கோள்கள் | 31 |
| 3.3 ஆய்வு நெறிமுறைகள் | 32 |
| 3.4 தரவு சேகரிப்பு முறைகள் | 33 |
| 3.5 ஆய்வுப் பங்குபற்றுநர்களின் தெரிவு | 36 |
| 3.6 தரவு சேகரிப்பாளர்கள் | 37 |
| 3.7 தரவுப் பகுப்பாய்வு | 41 |
| 3.8 தரவுகளைச் சரிபார்த்தல் | 42 |
| 3.9 இறுதி ஆய்வறிக்கையினை எழுதுதல் | 42 |

| | | |
|---|---|---|
| **4.** | ஆய்வு முடிவுகள்- பகுதி 1 | 43 |
| **4.1** | அறிமுகம் | 43 |
| **4.2** | வட மாகாணத்தில் பிரதானமாக நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் | 43 |
| | 4.2.1 மாவட்ட அடிப்படையில் | 44 |
| | 4.2.2 வட மாகாணம் முழுவதிலும் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க பிரதான சமூக நியமங்கள் | 49 |
| **4.3** | சமூகத்தில் நிலைத்திருக்கின்ற பிரதான பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பான வகைப்படுத்தப்பட்டத் தரவுகள் | 51 |
| | 4.3.1 பாலின அடிப்படையில் | 51 |
| | 4.3.2 மத அடிப்படையில் | 54 |
| | 4.3.3 வயது அடிப்படையில் | 56 |
| | 4.3.4 கல்விமட்ட அடிப்படையில் | 58 |
| **4.4** | அடையாளப்படுத்தப்பட்ட பிரதான பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை SNAP கட்டமைப்பினூடாக மதிப்பீடு செய்தல் | 60 |
| | 4.4.1 சமூக நியமங்கள் தொடர்பான சமூக எதிர்பார்ப்புக்கள் | 60 |
| | 4.4.2 சமூகத் துலங்கல் - சமூக அங்கீகரிப்பு மற்றும் புறக்கணிப்பு | 63 |
| | 4.4.3 சமூகத் துலங்கலின் தாக்கம் | 64 |
| | 4.4.4 விதிவிலக்குகள் | 65 |
| | 4.4.5 செல்வாக்கு செலுத்தும் நபர்கள் (Reference Group) | 65 |
| **4.5** | அடையாளப்படுத்தப்பட்ட பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களின் நிலைத்திருப்பிற்கான காரணங்கள் | 67 |
| **4.6** | அடையாளப்படுத்தப்பட்ட பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் தாக்கம் செலுத்தும் பாங்கு- தர்க்கரீதியான பகுப்பாய்வு | 74 |
| | 4.6.1 பெண்களது வகிபாகங்களைக் குடும்பச் சூழலுக்கு மாத்திரமாக மட்டுப்படுத்துகின்ற சமூக நியமங்கள் | 74 |
| | 4.6.2 'நல்ல பெண்' மற்றும் 'கற்புள்ள பெண்' ஆகிய கருத்தேற்புக்களை அடிப்படையாகக் கொண்டு பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மட்டுப்படுத்துகின்ற சமூக நியமங்கள் | 77 |
| | 4.6.3 பெண்களுடைய தொழில் உரிமைகளை மட்டுப்படுத்துகின்ற நடைமுறைகள் / சமூக நியமங்கள் | 80 |
| | 4.6.4 பெண்களுடைய மதச் சுதந்திரத்தினை மட்டுப்படுத்துகின்ற நடைமுறைகள் / சமூக நியமங்கள் | 82 |

அத்தியாயம் 5 86

5. ஆய்வு முடிவுகள்- பகுதி 2 86

5.1 பால்நிலை பாரபட்சமிக்க தேசிய எடுத்துரைப்புகளும் கூறுரைகளும் அவை பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் செலுத்துகின்ற தாக்கமும் 86

5.1.1 அறிமுகம் 86

5.1.2 ‘பிள்ளைப் பராமரிப்பு பெண்களுக்கானது’ என்பதனை வலியுறுத்துகின்ற தேசிய எடுத்துரைப்புக்கள் 87

5.1.3 ‘சமையல் மற்றும் வீட்டு வேலைகள் பெண்களுக்கானவை’ என்பதனை வலியுறுத்துகின்ற தேசிய எடுத்துரைப்புக்கள் 87

5.1.4 ‘பெண்கள் மென்மையானவர்கள்’ என்பதனை வலியுறுத்துகின்ற தேசிய எடுத்துரைப்புக்கள் 90

5.1.5 ‘பெண்களே மத வழக்கங்களைப் பேண வேண்டியவர்கள்’ என வலியுறுத்துகின்ற தேசிய எடுத்துரைப்புக்கள் 91

5.2 யுத்தத்தின் விளைவால் சமூக நியமங்களின் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 91

5.2.1 அறிமுகம் 91

5.2.2 யுத்த காலப்பகுதியின்போது சமூக நியமங்களின் போக்கு 92

5.2.3 யுத்தத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் சமூக நியமங்களின் போக்கில் ஏற்பட்ட மாற்றம் 93

அத்தியாயம் 6 96

6. முடிவும் பரிந்துரைகளும் 96

6.1 முடிவு 96

6.2 பரிந்துரைகள் 97

6.2.1 சட்ட சீர்திருத்தத்திற்கானப் பரிந்துரைகள் 97

6.2.2 நீதித்துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களுக்கானப் பரிந்துரைகள் 98

6.2.3 அரச செயற்பாட்டாளர்களுக்கானப் பரிந்துரைகள் 98

6.2.4 சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கானப் பரிந்துரைகள் 99

பின்னிணைப்புகள் 101

உசாத்துணை 138

## அட்டவணைகளின் பட்டியல்


**அட்டவணை 1.1** - நபர்களுக்கெதிரானப் பாரதூரமானக் குற்றங்களினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் 2015-2019 *4*

**அட்டவணை 1.2** - வட மாகாணத்தில் பாலியல் வன்புணர்வினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை, வருட அடிப்படையில் (2016-2020) *5*

**அட்டவணை 1.3** - வட மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி அமைப்புகளின் பாலின அமைப்பு 2018 *6*

**அட்டவணை 1.4** - மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் எண்ணிக்கை பால் மற்றும் வருட அடிப்படையில் 2004, 2008-2009, 2012-2013-2014 *7*

**அட்டவணை 1.5** - பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, பால் மற்றும் வருட அடிப்படையில் 1989-2020 *7*

**அட்டவணை 1.6** - வட மாகாணத்தைச் சேர்ந்த பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, வருட அடிப்படையில் *8*

**அட்டவணை 1.7** - நீதிபதிகளின் எண்ணிக்கை, பால் அடிப்படையில் 2017 *9*

**அட்டவணை 3.1** - SNAP கட்டமைப்பு *35*

**அட்டவணை 3.2** - மாவட்டம் மற்றும் பாலின அடிப்படையில் ஆய்வுப் பங்குபற்றுனர்களின் வகைப்பாடு *36*

**அட்டவணை 3.3** - வயது அடிப்படையில் ஆய்வுப் பங்குபற்றுனர்களின் வகைப்பாடு *36*

**அட்டவணை 3.4** - மத அடிப்படையில் ஆய்வுப் பங்குபற்றுனர்களின் வகைப்பாடு *36*

**அட்டவணை 3.5** - கல்வி அடிப்படையில் ஆய்வுப் பங்குபற்றுனர்களின் வகைப்பாடு *37*

**அட்டவணை 3.6** - மாவட்டம் மற்றும் பாலின அடிப்படையில் தரவு சேகரிப்பாளர்களை வகைப்படுத்தல் *37*

**அட்டவணை 3.7** - குவிமையக் குழுக் கலந்துரையாடல்களின் விபரம் *41*

**அட்டவணை 4.1** - யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதானமாக நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் *44*

**அட்டவணை 4.2** - வவுனியா மாவட்டத்தில் பிரதானமாக நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் *45*

**அட்டவணை 4.3** - கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதானமாக நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் *46*

**அட்டவணை 4.4** - முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதானமாக நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் *47*

**அட்டவணை 4.5** - மன்னார் மாவட்டத்தில் பிரதானமாக நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் *48*

**அட்டவணை 4.6** - வட மாகாணம் முழுவதிலும் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க பிரதான சமூக நியமங்கள் *49*

**அட்டவணை 4.7** - சமூகத்தில் நிலைத்திருக்கின்ற பிரதான பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பான வகைப்படுத்தப்பட்டத் தரவுகள் - பாலின அடிப்படையில் 52

**அட்டவணை 4.8** - சமூகத்தில் நிலைத்திருக்கின்ற பிரதான பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பான வகைப்படுத்தப்பட்டத் தரவுகள் - மத அடிப்படையில் 54

**அட்டவணை 4.9** - சமூகத்தில் நிலைத்திருக்கின்ற பிரதான பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பான வகைப்படுத்தப்பட்டத் தரவுகள் - வயது அடிப்படையில் 56

**அட்டவணை 4.10** - சமூகத்தில் நிலைத்திருக்கின்ற பிரதான பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பான வகைப்படுத்தப்பட்டத் தரவுகள் - கல்விமட்ட அடிப்படையில் 58

**அட்டவணை 4.11** - மற்றையவர்கள் என்ன செய்கிறார்கள் என நான் நினைக்கின்றேன்? 60

**அட்டவணை 4.12** - நான் என்ன செய்ய வேண்டுமென மற்றையவர்கள் எதிர்பார்ப்பதாக நான் நினைக்கின்றேன்? (விதிமுறை எதிர்ப்பார்ப்புகள்) 61

**அட்டவணை 4.13** - சமூகத் துலங்கல்- சமூக அங்கீகரிப்பு மற்றும் புறக்கணிப்பு 63

**அட்டவணை 4.14** - விதிவிலக்குகள் 65

**அட்டவணை 4.15** - செல்வாக்கு செலுத்தும் நபர்கள் 66

**அட்டவணை 4.16** - அடையாளப்படுத்தப்பட்ட பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களின் நிலைத்திருப்பிற்கான காரணங்கள் 67

## பின்னிணைப்புக்களின் பட்டியல்


*1* - அறிமுகமும் பிரயோகமும் *101*

*2* - ஆய்வுத் திட்டம் *106*

*3* - ஆய்வுப் பங்குபற்றுநரின் அடிப்படைத் தகவல்கள் *117*

*4* - தரவு சேகரிப்பாளர்களின் பெயர் பட்டியல் *133*

*5* - தரவு உள்ளீட்டாளர்கள் *135*

*6* - தரவு சேரிப்புக்காக செய்யப்பட்ட கலந்துரையாடல்களின் பட்டியல் *137*

# நிறைவேற்றுச் சுருக்கம்

பால்நிலை சமத்துவமென்பது எந்தவொரு சமூகத்தினதும் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும். இலங்கையில் பால்நிலை சமத்துவத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டிருக்கின்ற போதிலும், நடைமுறையில் அது உறுதிப்படுத்தப்படவில்லை. முப்பது ஆண்டுகளாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம், திகன கலவரம், அளுத்கம-பேருவளை கிளர்ச்சி மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உள்ளடங்கலாக அவ்வப்போது இடம்பெறுகின்ற வன்முறைகள் சமூகத்தில் நிலவுகின்ற பால்நிலை பாரபட்சத்தினை மேலும் மோசமானதாக்குகின்றன. ஏனெனில், யுத்தம் மற்றும் கிளர்ச்சிகள் பாலினப் பேதமின்றி அனைவரையும் பாதிக்கின்றபோதிலும், அவை பெண்களில் ஏற்படுத்துகின்ற பாதிப்புக்கள் தீவிரமானதாயும் தனித்துவமானதாயும் காணப்படுகின்றன. இத்தீவிரமான மற்றும் தனித்துவமானப் பாதிப்புக்கள் பெண்கள் தங்களுடைய பால்நிலை அடையாளத்தின் விளைவாக எதிர்கொள்கின்ற பாரபட்சங்களை மேலும் பாரதூரமானதாக்குகின்றன. அவ்வகையில், 1970 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக வன்முறைகளை எதிர்கொண்டு வருகின்ற இலங்கையில் பால்நிலை சமத்துவம் என்பது சவாலுக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது.

பால்நிலை பாரபட்சத்தினைத் தோற்றுவிக்கின்ற மூல காரணிகளுள் ஒன்றாகச் சமூகத்தில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் காணப்படுகின்றன. வேறுவகையில் கூறின், பால்நிலை சமத்துவமின்மைகள் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களில் பதிக்கப்பட்டுள்ளன எனலாம். மரபுகள், கலாசார நியமங்கள், பாரம்பரியப் பழக்கங்கள் அல்லது விழுமியங்கள் என சமூக நியமங்கள் பல்வேறு பெயர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றன. பொதுவாக, இச்சமூக நியமங்கள் பால்நிலை சார்ந்து கட்டமைக்கப்பட்டிருக்கின்றமையினால் அவை பால்நிலை பாரபட்சமிக்கவையாகின்றன. இப்பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களின் தோற்றுவாயினைப் பார்ப்போமாயின் ஒன்றில் அது மதமாக அல்லது கலாசாரமாகக் காணப்படுகின்றது. இச்சமூக நியமங்கள் தனிநபர்களது வகிபாகங்களை மரபுசார்ந்து வடிவமைக்கின்றன. பெரும்பாலும், இச்சமூக நியமங்கள் மற்றும் இச்சமூக நியமங்களினால் வடிவமைக்கப்பட்டுள்ள பால்நிலை வகிபாகங்கள் பெண்களையே பாரபட்சத்திற்குள்ளாக்குகின்றன. கலாசாரங்களைக் கட்டிக்காக்க வேண்டிய கடமை பிரத்தியேகமாகப் பெண்களிடமே காணப்படுகின்றது என்ற மனோபாவமே இதற்கான காரணமாக அமைகின்றது. இச்சமூக நியமங்கள் இனப்பெருக்கம் செய்தல், கலாசாரத்தைக் கட்டிக் காத்தல் மற்றும் வீட்டைப் பராமரித்தல் என்பனவற்றை பெண்களுக்குரியப் பிரதான பால்நிலை வகிபாகங்களாக அடையாளப்படுத்துகின்றன.

பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கான இலங்கையின் சட்டக் கடப்பாடு அரசியலமைப்பின் உறுப்புரை 12(2) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் பல்வேறு சர்வதேச சமவாயங்களை ஏற்று அங்கீகரித்திருப்பதன்வாயிலாகப் பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கான சர்வதேசக் கடப்பாடுகளையும் இலங்கை ஏற்றுள்ளது. அடுத்தடுத்து ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளை எடுக்கின்றன. எவ்வாறெனினும், பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றமை மற்றும் அவர்கள் பகிரங்க வாழ்வில் பங்கேற்பதற்கு போதுமான வாய்ப்புக்கள் அளிக்கப்படாமை என்பன இலங்கையில் பால்நிலை சமத்துவம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதற்கான குறிகாட்டிகளாகின்றன.

பால்நிலை பாரபட்சத்தினைத் தோற்றுவிக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் நிலைமாற்றப்படாதவரையில் பால்நிலை சமத்துவத்தினை உறுதி செய்ய இயலாது. ஆகவே, பால்நிலை சமத்துவத்தினை உறுதி செய்யும் முயற்சியின் முதற்கட்டமாக பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை நிலைமாற்ற வேண்டும். அதற்கு முதலில் தற்போது சமூகத்தில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் யாவை, அவற்றின் பலம் அல்லது உறுதித்தன்மை எத்தகையது, அவை நடைமுறையில் நிலைத்திருப்பதற்கான காரணங்கள் என்ன மற்றும் அவற்றால் பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் எவ்வாறு பாதிப்படைகின்றன என்பதனை அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

அவ்வகையில், இலங்கையில் யுத்தத்தின் விளைவுகளை அதிகமாக எதிர்கொண்ட வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை அடையாளங்காண்பதும் அவற்றை மதிப்பிடுவதுமே இந்த ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது. TRANSFORM நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் செய்யப்படுகின்ற இந்த ஆய்வினூடாக அடையாளங்காணப்படுகின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை நிலைமாற்றுவதற்கானத் தலையீடுகளை வடிவமைத்து, அத்தகைய நிலைமாற்றத்தினை நடைமுறை சாத்தியமாக்குவதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான இலக்காக அமைந்துள்ளது. அவ்வகையில், இந்த ஆய்வானது வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பான ஒரு புதிய அறிவினைப் பெற்றுத் தருகின்ற ஆவணமாகக் காணப்படும். இந்த ஆய்வின் குறிக்கோள்களாக:

1. சமூகத்தில் (வட மாகாணத்தில்) நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களையும், அவை பெண்கள் மீது கொண்டுள்ள பால்நிலை சார்ந்தத் தாக்கங்களையும், அவை எவ்வாறு பெண்கள் அவர்களது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்து கொள்வதற்குத் தடை விதிக்கின்றன என்பதனையும் அறிந்து கொள்ளுதல்;

2. மோதல் காலப்பகுதியில் மற்றும் மோதலுக்குப் பிற்பட்ட காலப்பகுதிகளில் சமூக நியமங்கள் எத்தகைய மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன என்பதனையும் அச்சமூக நியமங்களின் தாக்கங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காகப் பெண்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த உபாயப் பொறிமுறைகளையும் கண்டறிதல்;

3. பால்நிலை பாரபட்சமிக்க தேசிய எடுத்துரைப்புக்கள் எவ்வாறு பெண்கள் அவர்களது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்துக் கொள்வதில் தாக்கம் செலுத்துகின்றன என்பதனை ஆராய்தல் என்பன காணப்படுகின்றன.

இந்த ஆய்வினைச் செய்வதற்காகப் பங்கேற்பு அணுகுமுறை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆய்வுப் பிரதேசமாகிய வட மாகாணத்தின் சமுதாய உறுப்பினர்களின் பங்கேற்பு மற்றும் பங்களிப்புடனேயே இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆய்விற்கானத் தரவுகள் முதனிலை மற்றும் இரண்டாம்நிலை மூலங்களின் வாயிலாகச் சேகரிக்கப்பட்டன. வட மாகாணத்திலுள்ள 532 சமுதாய உறுப்பினர்களிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன. தகவல்களைச் சேகரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட வினாக்கொத்தானது வட மாகாணத்தின் சமுதாய உறுப்பினர்களுடனான தொடர் கலந்துரையாடல்களில் பெற்றுக்கொண்ட அறிவினை மையமாகக் கொண்டு LST இன் ஆய்வுக் குழுவினரால் ஆக்கப்பட்டது. வட மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 51 சமுதாய உறுப்பினர்களே தரவு சேகரிப்பாளர்களாகவும் கடமையாற்றியிருந்தனர். இதனைத்தவிர, வட மாகாணத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட மதத் தலைவர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் நேர்காணல் செய்யப்பட்டனர். அத்துடன், கணவனை இழந்த பெண்கள், இயலாமைகளை உடைய பெண்கள் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் போன்ற விசேட குழுவினருடன் குவிமையக் குழுக் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு வினாக்கொத்து, நேர்காணல்கள் மற்றும் குவிமையக் குழுக் கலந்துரையாடல்கள் எனப் பல்வேறு வழிகளினூடாக இந்த ஆய்விற்கானத் தரவுகள் திரட்டப்பட்டன.

இந்த ஆய்வின் முதல் அத்தியாயமானது ஆய்வு விடயப்பொருள் தொடர்பான ஓர் அறிமுகத்தை வழங்குகின்றது. பால்நிலை சமத்துவம், சமூக நியமங்கள், பால் மற்றும் பால்நிலை போன்ற எண்ணக்கருக்கள் ஆய்வு நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. மேலும், பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் பெண்கள் பகிரங்க செயற்பாடுகளில் பங்கேற்பதற்கான போதிய வாய்ப்புகளின்மை ஆகிய குறிகாட்டிகளின் அடிப்படையில் இலங்கையில் பால்நிலை சமத்துவம் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதனை இவ் அத்தியாயம் நிறுவுகின்றது. அடுத்ததாக, இவ் அத்தியாயமானது பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கான இலங்கையின் தேசிய மற்றும் சர்வதேசக் கடப்பாடுகளை பட்டியலிட்டுக் காட்டுகின்றது. இறுதியாக, பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் சட்டங்களில் கொண்டுள்ள தாக்கம் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இரண்டாம் அத்தியாயமானது சமூக நியமங்கள் மற்றும் பால்நிலை சமத்துவம் பற்றிய உள்நாட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச ஆய்வுகள் மற்றும் கற்கைகளைத் தர்க்க ரீதியாகப் பகுப்பாய்வு செய்துள்ளது. இந்த இலக்கிய மீளாய்வுப் பகுதியில் சமூக நியமங்களின் பண்புகள், அவை நிலைத்திருப்பதற்கான காரணங்கள், அவற்றிற்கும் மதக் கோட்பாடுகளுக்குமிடையிலான தொடர்புகள் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் இவ் அத்தியாயமானது குறிப்பாக பெண்களின் பால்நிலை வகிபாகம் குறித்தும், 'கற்பு' சார்ந்த விடயங்கள் குறித்தும் ஆராய்ந்துள்ளது. மேலும், யுத்தத்தினால் சமூக நியமங்களில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்கள் குறித்தும் இவ் அத்தியாயத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

மூன்றாம் அத்தியாயம் ஆய்வு முறையியலை விபரிக்கின்றது. ஆய்வுப் பிரச்சினை, ஆய்வுக் குறிக்கோள்கள், தரவு சேகரிப்பு முறை, தரவு சேகரிப்பு கருவி உள்ளடங்கலாக ஆய்வு முறையியலின் ஒவ்வோர் அம்சத்தினையும் இவ் அத்தியாயம் விரிவாக விளக்குகின்றது.

நான்காம் மற்றும் ஐந்தாம் அத்தியாயங்கள் ஆய்வின் முடிவுகளை வெளிப்படுத்துகின்றன. நான்காம் அத்தியாயமானது வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகமாக நிலைத்திருக்கின்ற முதற் பத்து பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை பட்டியலிடுகின்றது. அத்துடன் வட மாகாணம் முழுவதிலும் அதிகமாக நிலைத்திருக்கின்ற முதற் பத்து பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களையும் பட்டியலிடுகின்றது. மேலும், பட்டியலிடப்பட்ட இப்பத்து சமூக நியமங்களினது பலத்தினையும் SNAP கட்டமைப்பினைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்துகின்றது. அத்துடன் பத்து சமூக நியமங்களையும் வகைப்படுத்தப்பட்டத் தரவுகளினூடாகப் பகுப்பாய்வு செய்கின்றது. அதாவது இச்சமூக நியமங்கள் வேறுபட்ட மதத்தவரிடையே, வேறுபட்டக் கல்வி அடைவுகளைக் கொண்டவர்களிடையே மற்றும் வேறுபட்ட வயதுக் குழுவினரிடையே எந்தளவிற்கு நிலைத்துள்ளன என்பதனையும் இந்த அத்தியாயம் ஆராய்கின்றது. இச்சமூக நியமங்கள் நிலைத்திருப்பதற்கான காரணங்கள் என்ன என்பதனை ஆராய்கின்ற அதேவேளை, இந்த அத்தியாயம் நிலைத்திருப்பில் செல்வாக்கு செலுத்தும் நபர்களையும் அடையாளங்கண்டுள்ளது. இறுதியாக, இச்சமூக நியமங்களினால் பெண்கள் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அணுகிக் கொள்வதில் எத்தகையத் தாக்கங்கள் ஏற்படுகின்றன என்பது குறித்தும் தர்க்கரீதியாகப் பகுப்பாய்வு செய்துள்ளது.

ஐந்தாம் அத்தியாயமானது பால்நிலை பாரபட்சமிக்க எடுத்துரைப்புக்கள் பெண்களின் உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களில் தாக்கம் செலுத்தும் விதத்தினை எடுத்துக் காட்டியுள்ளது. அத்துடன் யுத்தத்தின்போது மற்றும் யுத்தத்தின் பின்னர் சமூக நியமங்களில் எத்தகையத் தாக்கம் ஏற்படுகின்றது என்பதனையும் ஆராய்கின்றது.

இறுதி அத்தியாயம் இந்த ஆய்வின் முடிவினை சுருக்கமாகக் கூறுவதுடன் பரிந்துரைகளைப் பட்டியற்படுத்துகின்றது. சட்டத்துறைக்கானப் பரிந்துரைகள், நீதித்துறைக்கானப் பரிந்துரைகள், அரசாங்க செயற்பாட்டாளர்களுக்கானப் பரிந்துரைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கானப் பரிந்துரைகள் என பரிந்துரைகள் வகைப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

## கண்டறியப்பட்ட முடிவுகள்: ஒரு கண்ணோட்டம்

கீழ்வரும் பத்து சமூக நியமங்களும் வட மாகாணத்தில் அதிகளவில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களாக அடையாளங்காணப்பட்டன. இவை அவற்றின் பலத்திற்கேற்ப கீழே தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. சமூக நியமங்களின் பலத்தினை மதிப்பிடுவதற்காக SNAP கட்டமைப்பு பயன்படுத்தப்பட்டது.

1. பெண்கள்/ பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகம் பேசக் கூடாது
2. மனைவிமார்கள் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது குடும்ப வாழ்வினைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்
3. உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும்
4. பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை

5. சமையல் மற்றும் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள்
6. பெண்கள்/ பெண் பிள்ளைகள் பொலிஸ் நிலையத்திற்கு செல்லக் கூடாது
7. பெண்கள் கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது
8. பெண்கள்/ பெண் பிள்ளைகள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதனை அவர்கள் குடும்பத்தினர் அனுமதிகக்க் கூடாது.
9. பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட பெண்கள் கற்பிழந்தோர்
10. பெண்கள்/ பெண் பிள்ளைகள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது.

*பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை, சமையல் மற்றும் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலை, மனைவிமார்கள் எச்சந்தர்ப்பத்திலும் குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் மற்றும் பெண்கள் கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது ஆகிய சமூக நியமங்கள் ஆண்களை விட பெண்களிடம் அதிகமாக நிலைத்துள்ளன. உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும், பாலியல் வன்முறைகளுக்குள்ளான பெண்கள் கற்பிழந்தோர், பெண்கள்/ பெண் பிள்ளைகள் பொலிஸ் நிலையங்களுக்கு செல்லக்கூடாது, பெண்கள்/ பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகம் பேசக்கூடாது மற்றும் பெண்கள்/ பெண் பிள்ளைகள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது ஆகிய சமூக நியமங்கள் பெண்களை விட ஆண்களிடம் அதிகமாக நிலைத்துள்ளன. பெண்களிடம் அதிகளவில் நிலைத்திருக்கின்ற சமூக நியமங்கள் பெரும்பாலும் அவர்களை குடும்பமெனும் அலகிற்குள் மட்டுப்படுத்துவனவாகவும், திருமண பந்தத்திற்கு முக்கியத்து வமளிப்பனவாகவும் காணப்படுகின்றன. அதேவேளை, ஆண்களிடம் அதிகளவில் நிலைத்திருக்கின்ற சமூக நியமங்கள் பெண்களுடைய கற்பு சார்ந்ததாகவும், அவர்களுடைய நீதிக்கான அணுகலை மட்டுப்படுத்து வனவாகவும் காணப்படுகின்றன.*

*சமையல் மற்றும் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலை, மனைவிமார்கள் எச்சந்தர்ப்பத்திலும் குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் மற்றும் பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை போன்ற சமூக நியமங்கள் பொதுவாக அனைத்து மத சமுதாயங்களிலும் குறிப்பிடத்தக்களவு நிலைத்து காணப்படுகின்றன. அதேபோல, இச்சமூக நியமங்கள் அனைத்து வயது மட்டங்களைச் சேர்ந்தோரிடமும் குறிப்பிடத்தக்களவு நிலைத்து காணப்படுகின்றன. இச்சமூக நியமங்கள் குடும்பம் எனும் அலகிற்குள்ளேயே தோற்றம் பெற ஆரம்பிக்கின்றமையே இதற்கான காரணமாகும். அதாவது பெண் பிள்ளைகளுக்கு சிறுவயது முதலே சமைப்பதற்கும், வீட்டைப் பராமரிப்பதற்கும் மற்றும் குழந்தைகளைப் பராமரிப்பதற்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அத்துடன் பாடசாலைகளும் பெண் பிள்ளைகள் சமைக்கத் தெரிந்தவர்களாக, வீட்டு வேலை செய்யத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டுமென்பதனை பல்வேறு வழிகளில் வலியுறுத்துகின்றன. இவ்வாறு, குடும்பம் மற்றும் பாடசாலை ஆகிய நிறுவனங்களினால் கடத்தப்படுகின்ற இச்சமூக நியமங்கள் சமூகத்தில் வலுவானவையாகவும் பெரும்பான்மையானோரிடத்தில் நிலைத்திருப்பனவாகவும் காணப்படுகின்றன.*

*சமூக புறக்கணிப்பு மற்றும் சமூகத் தண்டனைகள் என்பன இச்சமூக நியமங்களின் தொடர்ச்சியான இருப்பிற்கான மூல காரணங்களாக அமைகின்றன. 60% இற்கும் அதிகமான ஆய்வுப் பங்குபற்றுநர்கள் சமூகத் தண்டனைகளுக்கு அஞ்சியே சமூக நியமங்களைப் பின்பற்றுவதாகக் கூறியிருந்தனர். பெண்ணொருவர் பாலியல் வன்முறை அல்லது வன்புணர்விற்கு ஆளாகின்றபோது அதிகளவான சமூக புறக்கணிப்பினை எதிர்கொள்ள வேண்டியேற்படுகின்றதென ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. அத்துடன் இச்சமூக நியமங்களின் நிலைத்திருப்பிற்கும் பெண்களுடையத் திருமண வாழ்க்கைக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அதாவது இச்சமூக நியமங்களிலிருந்து பிறழ்வடைகின்றமையானது பெண்களின் திருமணத்தில் அல்லது திருமண வாழ்வில் பாதிப்பினை ஏற்படுத்துவதனால் இச்சமூக நியமங்கள் தொடர்ந்தும் பின்பற்றப்படுகின்றன.*

*சமூக நியமங்களின் நிலைத்திருப்பில் மதத் தலைவர்களின் செல்வாக்கு மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன் இச்சமூக நியமங்களின் நிலைத்திருப்பிற்கு தாயின் பங்களிப்பு தந்தையின் பங்களிப்பினைவிடச் சற்று கூடுதலாகவே உள்ளது. பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களினால் பாதிக்கப்படுபவர்களாப் பெண்கள் காணப்படுகின்ற அதேவேளை, அவர்களே இந்நியமங்களைக் கட்டிக்காப்பவர்களாகவும், இவற்றை அடுத்தத் தலைமுறையினருக்கு கடத்துபவர்களாகவும் காணப்படுகின்றனர்.*

அதிகளவில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க இச்சமூக நியமங்களுக்கான மூல காரணியாக மரபுசார் நியமங்கள், கலாசாரக் கோட்பாடுகள் மற்றும் பாரம்பரியப் பழக்கங்கள் என்பன காணப்படுகின்றன. இவற்றைத் தவிர, பாதுகாப்பு கரிசனைகள் மற்றும் குற்றவியல் நீதி முறையிலுள்ள இடைவெளிகள் என்பனவும் இத்தகைய சில பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை நிலைத்திருக்கச் செய்கின்றன. உதாரணமாக, பாலியல் வன்முறைக்கெதிராகப் புகாராளித்தாலும் நீதி கிடைக்காமை அல்லது தாமதமாகக் கிடைக்கின்றமை, இரகசியம் பேணப்படாமை மற்றும் பாதிக்கப்பட்டவர் மேலும் பாதிக்கப்படுதல் போன்ற குற்றவியல் நீதி முறையிலுள்ள இடைவெளிகள், 'பெண்கள்/ பெண் பிள்ளைகள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது' என்ற சமூக நியமத்தினை நிலைத்திருக்கச் செய்கின்றன.

அடையாளப்படுத்தப்பட்ட பத்து சமூக நியமங்களும் ஒன்றில் பெண்களுடைய வகிபாகத்தினை குடும்ப சூழலுக்கு மட்டுப்படுத்துகின்றன அல்லது 'நல்ல பெண்' மற்றும் 'கற்புள்ள பெண்' ஆகிய கருத்தேற்புக்களின் அடிப்படையில் அவர்களது உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மட்டுப்படுத்துகின்றன. பெண்களுடைய வகிபாகத்தினை குடும்பப் பரப்பிற்கு மாத்திரம் மட்டுப்படுத்துவதனால் பெண்களின் பொருளாதார சுயாதீனம் பாதிப்படைகின்றது, அவர்களுக்கெதிரான வன்முறை அதிகரிக்கின்றது, அவர்களது திறன்கள் மற்றும் அறிவு முடக்கப்படுகின்றது மற்றும் அவர்களது ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது. அத்துடன் 'கற்புள்ள பெண்' மற்றும் 'நல்ல பெண்' ஆகிய கருத்தேற்புக்கள் பெண்கள் மீது திணிக்கப்படுகின்றமையினால் அவர்களுடைய நீதியை அணுகுவதற்கான சுதந்திரம், சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்கான சுதந்திரம், சிந்தனை செய்வதற்கான மற்றும் மனசாட்சியைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் மற்றும் நடமாடுவதற்கான சுதந்திரம் என்பன பறிக்கப்படுகின்றன. 'நல்ல பெண்' அல்லது 'கற்புள்ள பெண்' பாலியல் தொல்லைகளுக்கு ஆளாக மாட்டாள் என்ற சமூக நியமமானது பாலியல் தொல்லைகளுக்கு ஆளாகாதிருப்பதற்கானப் பொறுப்பினைப் பெண்கள் மீதே சுமத்துகின்றது. அத்துடன் இச்சமூக நியமமானது பாலியல் வன்முறைகளுக்கு ஆளாகின்றப் பெண்கள் மீது சமூகக் களங்கத்தினையும் ஏற்படுத்துகின்றது. இதன் காரணமாக, பாலியல் வன்முறைகளுக்கு ஆளாகின்றப் பெண்கள் அவற்றுக்கெதிராக முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு மற்றும் அவற்றை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வதற்குத் தயக்கம் காட்டுகின்றனர்.

நடைமுறையில் நிலைத்திருக்கின்ற வேறு பல பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் பெண்களுடைய தொழில் உரிமைகளை மீறுகின்றன. விரும்பிய தொழில் செய்வதற்கான இலங்கைப் பிரஜைகளது உரிமை அரிசயலமைப்பினூடாக உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளபோதிலும், 'இரவு நேரக் கடமைகளை ஏற்கக்கூடாது', 'வெளியிடங்களில் தங்கி பணி புரியக்கூடாது' போன்ற சமூக நியமங்களின் இருப்பினால் இவ் உரிமைக்கான பெண்களுடைய அணுகல் தடுக்கப்படுகின்றது. பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம அளவான ஊதியம் வழங்காமையும் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களின் பிரதிபலிப்பொன்றே ஆகும். விவசாய மாவட்டங்களான கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் விவசாயக் கூலி வேலைகளில் ஈடுபடுகின்ற பெண்களும் ஆண்களும் ஒரே வேலையைச் செய்கின்றபோதிலும் அவர்களுக்கு சம அளவான சம்பளம் வழங்கப்படுவதில்லை, மாறாக, பெண்களைவிட ஆண்களுக்கு அதிகளவான சம்பளம் வழங்கப்படுகின்றது. உத்தியோகம் ஆண்களுக்கானது என்ற நியமத்தின் பிரதிபலிப்பாகவே இச்சம்பள வேறுபாடு அமைகின்றது.

பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் பாலின் அடிப்படையில் பெண்களுடைய மத சுதந்திரத்தினையும் கேள்விக்குட்படுத்துகின்றன. எவ்வாறெனினும், பெரும்பாலும், இச்சமூக நியமங்கள் மத நம்பிக்கைகளாக அல்லது மதக் கோட்பாடுகளாக வெளிப்படுத்தப்படுகின்றமையால் அவற்றிற்கான செல்வாக்கு அதிகரிக்கின்றது. அத்துடன் மத நம்பிக்கைகள் மற்றும் சமூக நியமங்களை வேறு பிரித்தறிதல் கடினமானதாகும். ஆகவே, குறிப்பிட்ட ஒரு நடைமுறை மதக் கோட்பாடா அல்லது சமூக நியமமா என்பதில் குழப்பங்கள் நிலவுகின்றன. பெண்களின் மத சுதந்திரத்தினை கேள்விக்குட்படுத்துகின்ற பால்நிலை பாரபட்சமிக்க நடைமுறைகள் மத நம்பிக்கைகளாக இருப்பினும்சரி அல்லது சமூக நியமங்களாக இருப்பினும்சரி, அவை பெண்களின் மத சுதந்திரத்தைப் பறிப்பதனூடாக பால்நிலை சமத்துவத்தினை இல்லாமற் செய்கின்றன என்பது கண்கூடு. இலங்கையிலுள்ள அனைத்து மத சமுதாயங்களிலும் பெண்களைப் பாரபட்சத்திற்கு உள்ளாக்குகின்ற நடைமுறைகள் காணப்படுகின்றன.

இந்த ஆய்வானது யுத்தம் நடைபெற்ற ஒரு பிரதேசத்தில் செய்யப்படுகின்றமையினால், யுத்தத்தின் விளைவுகளினால் சமூக நியமங்களின் போக்கில் ஏற்பட்ட மாற்றம் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. யுத்த காலப்பகுதியின்போது பெண்களையும் போராட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டிய தேவை காணப்பட்டமையினால் தமிழீழ விடுதலை புலிகள் பெண்களையும் போராளிகளாகத் தமது இயக்கத்தில் இணைத்துக் கொண்டனர் என முன்னாள் பெண் போராளிகள் தெரிவித்திருந்தனர். துப்பாக்கி பயிற்சி உள்ளடங்கலாக ஆண் போராளிகளுக்கு வழங்கப்பட்ட அனைத்து பயிற்சிகளும் இவர்களுக்கும் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அதுவரையில் மரபுசார்ந்த வகிபாகத்தினை மாத்திரமே ஆற்றி வந்தப் பெண்கள் அதிலிருந்து பிறழ்வடைந்து போராளிகள் என்ற வகிபாகத்தினை வகித்ததாக முன்னாள் பெண் போராளிகள் சுட்டிக்காட்டினர். யுத்தத்தினால் அசாதாரண சூழலொன்றை எதிர்கொண்டிருந்த வட மாகாணத்தில் மரபுரீதியான படிமங்களிலிருந்து பெண்கள் பிறழ்வடைந்தமை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதாவது அசாதாரண சூழலொன்றில் தப்பிப் பிழைத்து வாழ்வதற்கான பொறிமுறையொன்றாகப் பால்நிலை சமத்துவம் ஏற்று அங்கீகரிக்கப்பட்டது என இந்த ஆய்வினூடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், யுத்தம் முடிவடைந்த பின்னர் அசாதாரண சூழ்நிலையிலிருந்து சமூகம் மெதுவாகத் தனது பழைய சூழ்நிலைக்கு திரும்பியது. யுத்தத்திற்கு பிற்பட்ட இக்காலப்பகுதியில் பெண்கள் மரபுரீதியானப் படிமங்களிலிருந்து விலகுதல் விமர்சனத்திற்குரிய விடயமாகப் பார்க்கப்பட்டது என கூறப்படுகின்றது. எவ்வாறெனினும், யுத்தத்தின் விளைவுகளினால் சமூக நியமங்களின் போக்கு தொடர்பில் ஆரோக்கியமான சில மாற்றங்களும் ஏற்பட்டிருந்தன. பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் தோற்றம், சிவில் சமுதாய ஒழுங்கமைப்புக்களின் தலையீட்டுடன் பெண்கள் வலுவூட்டப்பட்டமை மற்றும் கணவனை இழந்த பெண்களை சுப காரியங்களில் ஈடுபடுவதிலிருந்து ஒதுக்கிவைக்கின்ற போக்கு ஒழிந்தமை போன்றவற்றை அத்தகைய ஆரோக்கியமான மாற்றங்களுள் சிலவாக சுட்டிக்காட்ட முடியும். எவ்வாறெனினும், யுத்தத்திற்கு பின்னரான சூழலில் வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் யுத்தத்தின் விளைவாக தளர்வடைந்துள்ளனவே தவிர நிலைமாற்றமடையவில்லை. அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கானப் பெண்களின் அணுகுதலை உறுதிப்படுத்த வேண்டுமாயின் சமூத்திலுள்ள பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் நிலைமாற்றமடைய வேண்டும். அவ்வாறு சமூக நியமங்கள் நிலைமாற்றமடைய வேண்டுமாயின், சமுதாய உறுப்பினர்களிடையே காணப்படும் மரபு சாரந்த வாழ்க்கைக் கண்ணோட்டம் மாற வேண்டும். மரபுசார் அம்சங்கள் அகற்றப்படுவதனூடாக மாத்திரமே மக்களுடைய நடத்தை மற்றும் மனோபாவத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். விதிமுறைக்குட்பட்ட மரபுசார்ந்த வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுகின்றபோதுதான், பால்நிலை சமத்துவம் உறுதி செய்யப்படும். தனிநபர்களிடையே இத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்துதல் இலகுவான காரியமல்ல. எவ்வாறெனினும், நன்கு திட்டமிடப்பட்ட நீண்ட காலத் தலையீடுகள் அத்தகைய மாற்றத்தினை நிச்சயமாக சாத்தியமானதாக்கும்.

பால்நிலை சமத்துவம் அடிப்படை உரிமையாக அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட் -டுள்ள போதிலும், அரசியலமைப்பின் உறுப்புரை 16 இன் பிரயோகம் காரணமாக பால்நிலை பாரபட்சமிக்க சட்டங்கள் தொடர்ந்தும் வலுவிலிருக்கின்றன. சில சட்டங்கள் நீண்டகாலமாகப் புதுப்பிக்கப்படாமல் தொடர்ந்தும் பாரபட்சமான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. தண்டனைக் கோவை, சான்று கட்டளைச் சட்டம் மற்றும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டம் போன்ற சட்டங்களை உதாரணங்களாகக் குறிப்பிட முடியும். சட்டம் தனிநபர்களைப் பாதுகாக்க வேண்டுமே தவிர அவர்களை பாரபட்சத்திற்கு உட்படுத்தக் கூடாது. பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயமானது பால்நிலை பாரபட்சமான சட்டங்களைத் திருத்துமாறு அங்கத்துவ நாடுகளை வேண்டுகின்றது. இச்சமவாயத்தினை ஒதுக்கீடுகளெதுவுமின்றி அங்கீகரித்துள்ள நாடென்ற வகையில், இலங்கையில் நடைமுறையிலிருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சட்டங்களைத் திருத்த வேண்டிய தார்மீக மற்றும் சட்டக் கடப்பாடு அரசாங்கத்திற்கு உண்டு. பெண்கள்/ பெண் பிள்ளைகள் பாலியல் வன்முறைகளுக்கு எதிராகப் புகாரளிக்கக்கூடாது என்பது சமூக நியமமொன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான காரணமாக குடும்ப கௌரவம் பறிபோய் விடுமென்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ள அதேவேளை,

இந்நியமத்திற்கான விதிவிலக்கான சந்தர்ப்பமாக 'இரகசியம் காக்கப்படுமெனின் புகாரளிக்கலாம்' என குறிப்பிடப்பட்டுள்ளது. பாலியல் வன்முறை மற்றும் வன்புணர்வு சம்பவத்துடன் இணைந்துள்ள சமூகக் களங்கத்தின் காரணமாகப் பாதிக்கப்படுகின்ற பெண்கள்/ பெண் பிள்ளைகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அத்தகைய சம்பவங்களைப் பகிரங்கப்படுத்த விரும்புவதில்லை. ஆகவே, பாலியல் வன்முறை மற்றும் வன்புணர்வு தொடர்பான வழக்கு விசாரணைகளில் தனிப்பட்ட விளக்கங்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும். அத்துடன் இத்தகைய வழக்குகளை விசாரிப்பதற்கான தனியான விசேட நீதிமன்றமொன்று அமைக்க வேண்டும். அத்துடன் இத்தகைய வழக்குகளின் தீர்ப்புக்களில் பாதிக்கப்பட்டவரின் பெயர் மற்றும் விபரங்களை உள்ளடக்குதல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை பாடசாலை மாணவர்களுக்குக் கடத்துகின்ற ஒரு ஊடகமாகப் பாடசாலைப் பாடநூல்கள் காணப்படுகின்றன. குடும்பத்திற்கு அடுத்தபடியாக பிள்ளைகள் ஊடாடலை மேற்கொள்கின்ற சமூக நிறுவனம் பாடசாலை ஆகும். பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற விடயங்கள் பிள்ளைகளுடைய மனதில் ஆழமாகப் பதிகின்றன. ஆகவே, பாடசாலைப் பாடநூல்களிலுள்ள பால்நிலை பாரபட்சமிக்க பிரதிகள் மற்றும் படங்களை நீக்குதல் அத்தியாவசியமானதாகும். அத்துடன் பாடநூல்களில் பால்நிலை சமத்துவத்தினை ஊக்குவிக்கக்கூடியவாறான பிரதிகள் மற்றும் படங்களை உள்ளடக்குதல் வேண்டும். அத்துடன் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கு பால்நிலை சமத்துவம் தொடர்பான விசேட பயிற்சிகளை வழங்குதல் வேண்டும். அத்துடன் ஆண் பிள்ளைகளும் சமையல் மற்றும் வீட்டு வேலைகளைக் கற்றுக் கொள்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்தும்பொருட்டு அத்தகைய விடயப்பொருட்களை உள்ளடக்கியுள்ள செயன்முறைத் தொழிநுட்பவியல் பாடத்தினை தரம் ஆறிற்கு பிறகு ஏதேனுமொரு தரத்தில் கட்டாயப் பாடமொன்றாக்க வேண்டும்.

பெண் என்ற பால்நிலை அடையாளத்துடன் இயலாமை, கணவனை இழந்துள்ள நிலை மற்றும் முன்னாள் போராளி போன்ற வேறு ஏதேனுமொரு அடையாளமானது இடைவெட்டுகின்றபோது பாரதூரமானப் பாரபட்சத்தினையும் தனித்துவமானப் பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டியேற்படும். பெரும்பாலும், இத்தகைய பாதிக்கப்பட்ட பெண்கள் தமக்கான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கிராம அலுவலர், பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்திற்கு செல்கின்றனர். ஆகவே, இவ்விடங்களில் பணியாற்றுகின்ற அரசாங்க அதிகாரிகளுக்கு பால்நிலை கூர்திறன்மிக்க பயிற்சிகளை வழங்க வேண்டியது மிக அவசியமாகும். அத்துடன் அரசாங்க அதிகாரிகள் தங்களுடைய பணிகளில் பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துகின்றனர் என்பதனைக் கண்காணிப்பதற்கானப் பொறிமுறையொன்றினை நிறுவன மட்டத்தில் ஸ்தாபிக்க வேண்டும்.

அடுத்ததாக, மிக முக்கியமாக, தனிநபர்களிடையே காணப்படுகின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை மாற்றும்பொருட்டு பால்நிலை சமத்துவத்தினை மையப்படுத்திய வீதி நாடகங்கள், சினிமாக்கள் மற்றும் கருத்தாடல்கள் என்பவற்றை ஒழுங்கு செய்ய வேண்டும். பெண்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மற்றும் அவை எவ்வாறு சமூக முன்னேற்றத்திற்கு வழிகோலும் என்பது பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய வேண்டும். பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சுய வேலைவாய்ப்பிற்கான உதவிகள் என்பனவற்றை வழங்க வேண்டும். இத்தகைய முன்னெடுப்புக்களை வட மாகாணத்தில் சேவையாற்றுகின்ற அரச/அரச சார்பற்ற அமைப்புக்கள் மேற்கொள்ள இயலும். அடையாளப்படுத்தப்பட்டுள்ள பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை நிலைமாற்றுவதற்கானத் தலையீடுகளை வடிவமைத்துக் கொள்வதற்கு இப்பங்குபற்றுகை ஆய்வின் முடிவுகள் உதவும்.

# அத்தியாயம் 1

## 1 ஆய்வு அறிமுகம்

### 1.1 அறிமுகம்

*கதவருகிலும், தோட்டங்களிலும், பூங்காக்களிலும்*
*உன் நேரத்தை செலவழிக்க வேண்டாம்!*
*வீட்டு வேலைகளில் சோம்பல் வேண்டாம்!*

*வீட்டுக் கடவுள்களைப் பாதுகாக்கத் தவற வேண்டாம்!*
*கணவனின் இணக்கமின்றி சொந்தப் பிள்ளைக்குக் கூட*
*எதுவும் கொடுக்க வேண்டாம்!*

*கணவனின் கவனம் வேறு பக்கம் திரும்பினும்*
*மௌனம் காத்துக்கொள்! உன் கண்ணீர் மட்டுமே*
*உன் கவலையின் அறிகுறியாகட்டும்!*

*கணவனுக்குப் பிடித்த உணவு சமைத்து- அவர்*
*திருப்தி கொள்வது காண்!*
*தாயைப் போன்று அவர் நலன் பேண்!*

*பின் தூங்கி முன் எழு!*
*கணவன் கண்விழிக்கையில் அருகிலிரு!*
*கணவன் சினம் கொண்டபோதும்*
*நீ கோபமாகப் பேசாதே!*

*(தந்தையொருவர் தன் மகளின் திருமணத்தின்போது மகளுக்குக் கூறிய அறிவுரைகள் - காவ்யசேகர என்ற இலக்கியத்தின் ஒரு பகுதியின் தமிழ் மொழிபெயர்ப்பு)*

விவசாயப் பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்டமைந்திருந்த பாரம்பரிய இலங்கையில் பெண்கள் இனவிருத்தி செய்பவர்களாகவும், பிள்ளைப் பராமரிப்பாளர்களாகவும், பண்பாடு மற்றும் கலாசாரத்தின் பாதுகாவலர்களாகவுமே கருதப்பட்டனர். மதம் மற்றும் கலாசார அம்சங்களினால் வரையறுக்கப்பட்டிருந்தப் பெண்களுடைய வகிபாகம் குடும்பம் எனும் அலகிற்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்பட்டதுடன் அனைத்து மதங்கள் மற்றும் இனங்களைச் சார்ந்த பெண்களுக்கும் இது பொதுவானதாக இருந்தது. இலங்கையின் பெரும்பான்மை மதமான பௌத்த மதத்தின் பொதுவான கருத்தேற்பொன்று, 'முற்பிறவியில் பாவம் செய்தவர்களே பெண்களாகப் பிறக்கின்றனர். அடுத்த பிறவியிலேனும் ஆண்களாகப் பிறக்க வேண்டுமென்பதே பெண்களின் உயரிய இலக்கு' எனக் கூறுகின்றது.[1] சைவ சமயக் கோட்பாடுகள் மற்றும் நூல்கள் என்பனவும் 'முற்பிறவியில் பாவம் செய்தவர்களே பெண்களாகப் பிறக்கின்றனர்' என்ற கருத்தேற்பினை வலியுறுத்துகின்றன.[2] இஸ்லாமியக் கோட்பாடுகளும் பெண்களுக்கு இரண்டாம் நிலையினையே வழங்கியுள்ளன.[3] கிறிஸ்தவமும் பெண்கள் அவர்களது கணவர்மார்களுக்குக் கீழ்படிவுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்றே வலியுறுத்துகின்றது.[4] இவ்வாறு, மத மற்றும் பண்பாட்டுக் கோட்பாடுகளின் அடிப்படையில், அனைத்து மத மற்றும் இனக் குழுக்களிலும் பெண்களுக்கு இரண்டாம் நிலையே வழங்கப்பட்டிருந்தது.

---

*1* Kumari Jayawardena 'Feminism and Nationalism in the Third World' 'Emancipation and Subordination of Women in Sri Lanka'
2 ராமானுஜம், ஸ்ரீபாஸ்யம்.
*3* Supra 1
*4* எபேசியர் 5 ஆம் அதிகாரம் 24 ஆம் வசனம்: "ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்."

எவ்வாறெனினும், 1980 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட அரசியல், சமூக மற்றும் பொருளாதாரக் காரணிகளின் விளைவாகப் பெண்களுடைய இம்மரபுரீதியான படிமம் நிலைமாறத் தொடங்கியது. 1980களில் மற்றும் அதற்கு முன் இடம்பெற்ற ஆயுதக் கிளர்ச்சிகளின் விளைவாகப் பல இளைஞர்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காணாமலாக்கப்பட்டனர். ஆயுதக் கிளர்ச்சிகளின் இத்தகைய விளைவுகள் பெண்கள் மீது அதிகளவானத் தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன. இதனைத் தொடர்ந்து, பெண்களின் சமூக மற்றும் அரசியல் தலையீடு அதிகரிக்க ஆரம்பித்தது. பெண்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரி போராடுவதற்காகப் பல அமைப்புக்களை உருவாக்க ஆரம்பித்தனர். அத்தகைய பெண்கள் எழுச்சி இயக்கமாக 1982 இல் முதலாவதாகத் தாபிக்கப்பட்ட முக்கியத்துவம்மிக்க 'பெண்கள் செயற்பாட்டுக் குழுவினைக்' குறிப்பிட்டுக் காட்ட இயலும். இதனைத் தொடர்ந்து பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் பெண்களால் தலைமைதாங்கப்பட்ட பல இயக்கங்கள் உருவாக ஆரம்பித்தன. அத்துடன், 1970களில், பொருளாதாரக் கட்டமைப்பினை சீர்படுத்துகின்ற நோக்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சுதந்திர வர்த்தக வலயங்கள், ஆடைத் தொழிற்சாலைகள் என்பனவற்றின் விளைவாகப் பெண்களின் பொருளாதாரப் பங்களிப்பும் அதிகரித்தது. 1970 மற்றும் 1980களில் இடம்பெற்ற இத்தகைய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றங்களின் விளைவாகப் பெண்கள் தங்களுடைய மரபுரீதியான வகிபாகங்களுக்கு அப்பால் சென்று பகிரங்க வாழ்விலும் பங்கெடுக்க ஆரம்பித்தனர். எவ்வாறெனினும், பெண்களுடைய மரபுரீதியான படிமங்கள் முற்றாக நிலைமாற்றம் அடையவில்லை என்பதுடன் அவை இன்றளவிலும் பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு செலுத்தி வருகின்றன. தற்போது நடைமுறையிலுள்ள பண்பாடு மற்றும் பாரம்பரியங்களினால் கட்டிக்காக்கப்படுகின்ற சமூக நியமங்கள் மற்றும் அவை பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் தாக்கம் செலுத்தும் விதம் என்பன தொடர்பில் ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.

தற்போதைய இலங்கையின் மொத்த சனத்தொகையில் பெண்கள் 51.6 சதவீதமாயும் ஆண்கள் 48.4 சதவீதமாயும் உள்ளனர் என இலங்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வத் தரவுகள் தெரிவிக்கின்றன.[5] அரைவாசிக்கும் மேற்பட்ட சனத்தொகையினராய் பெண்கள் உள்ள இந்நாட்டில், பால்நிலை சமத்துவமும் பெண்களுக்கான உரிமைகளும் சுதந்திரங்களும் எந்தளவிற்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்பது தசாப்தங்களாக விவாதிக்கப்பட்டு வருகின்றதொரு விடயமாகவே அமைந்துள்ளது.

குறிப்பாக, 1971களிலிருந்தே பல்வேறுபட்ட வன்முறைகள்[6] கிளர்ச்சிகள்[7] மற்றும் இனமோதல்கள்[8] இடம்பெறுகின்ற 'வன்முறை நிறைந்த பூமி' என்ற அடையாளத்தைப் பெற்றிருக்கின்ற இலங்கையில், பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் எத்தகையப் போக்கினைக் கொண்டுள்ளன என்பது ஆராயப்படத்தக்க விடயமொன்றாகக் காணப்படுகின்றது. சுமார் 1980களில் ஆரம்பித்து, 2009 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட இராணுவ வெற்றியுடன் முடிவுற்ற இலங்கையின் உள்நாட்டு யுத்தமானது நாட்டில், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பல்வேறுபட்டத் தாக்கங்களை பல்வேறு மட்டங்களில் ஏற்படுத்தியிருக்கின்றது. அத்தகையத் தாக்கங்கள் பால்நிலை சமத்துவத்திலும், அதனோடு தொடர்புடைய நடைமுறை அம்சங்களிலும் கணிசமானளவு செல்வாக்கு செலுத்தத்தக்க வீரியத்தன்மையினைக் கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்க விடயமொன்றாகும். அத்தகையத் தாக்கங்களின் நீடித்த மற்றும் நிலையான விளைவொன்றாகப், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பினைச் சுட்டிக்காட்ட முடியும். 1981 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 17.4 சதவீதமாகக் காணப்பட்ட பெண்

---

*5* Department of Census and Statistics, <http://www.statistics.gov.lk/GenderStatistics/StaticalInformation/Population/PopulationSri-LankaCensusYearSex> accessed 5 June 2021.

*6* 'Remembering and reflecting on the April 1971 insurrection' (Daily FT, 07 April 2021) <https://www.ft.lk/columns/Remember-ing-and-reflecting-on-the-April-1971-insurrection/4-715963> accessed 5 June 2021.

*7* 'Remembering Black July' (Tamil Guardian, 23 July 2020) <https://www.tamilguardian.com/content/remembering-black-july-0> accessed on 4 June 2021.

*8* 'Easter blasts in Sri Lankan hotels and churches kill at least 207' (Daily Mirror, 22 April 2019) <https://www.dailymirror.lk/Business-News/Easter-blasts-in-SriLankanhotels-and-churches-kill-at- least-207/273-165725> accessed 7 June 2021Ñ 'The Sri Lankan Civil War and Its History, Revisited in 2020' (Harvard International Review, 31 August 2020) <https://hir.harvard.edu/sri-lankan-civil-war/> accessed 20 April 2021.

தலைமைத்துவக் குடும்பங்கள், யுத்தம் முடிவுக்கு வந்த காலப்பகுதியில், அதாவது 2009 ஆம் ஆண்டளவில் 23.2 சதவீதமாகவும்,[9] 2012 ஆம் ஆண்டளவில் 24.3 சதவீதமாகவும்[10] காணப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபரத் தரவுகளின்படி, தற்போது இலங்கையிலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கையின் சதவீதம் 25.8 ஆகக் காணப்படுகின்றது.[11] உலக நாடுகளில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகளவில் காணப்படுகின்ற முதல் பத்து நாடுகளில் இலங்கை ஒன்பதாவது இடத்தைப் பெற்றுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமொன்றாகும்.[12]

உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கை இன்னமும் நிலைமாற்றச் செயன்முறையினை முற்றாகக் கடந்து வரவில்லை. மோதல் இடம்பெறுகின்ற நாடு என்ற நிலையிலிருந்து மோதலுக்கு பின்னரான நாடு என்ற நிலையினை அடைவதற்கான நிலைமாற்றச் செயன்முறை சுமூகமானதாகவோ அல்லது நேரியலானதாகவோ அமையவில்லை. குறிப்பாக, யுத்தத்தினால் அதிகளவான பாதிப்புக்களைச் சந்தித்திருந்த வட மாகாணம் இன்னமும் அதன் விளைவுகளிலிருந்து மீண்டு வரவில்லை. இத்தகையதொரு சூழ்நிலையில், 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதல்கள்,[13] ஏற்கனவே காணப்பட்ட பல பிரச்சினைகளைத் தீவிரமானதாக்கியிருந்ததுடன் பல புதிய பிரச்சினைகளையும் தோற்றுவித்திருந்தன. இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் பல சந்தர்ப்பங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பால்நிலை சமத்துவத்தில் செல்வாக்குச் செலுத்துவதுடன், குறிப்பாக அவை பெண்கள் மீது விகிதசமனற்றத் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

1960 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க நாட்டின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டதன்விளைவாக உலகின் முதல் பெண் பிரதமரைக் கொண்ட நாடு என்ற பெருமையினை இலங்கை தனதாக்கியிருந்தது. அத்துடன், 1931 ஆம் ஆண்டு, டொனமூர் சீர்திருத்தத்தினூடாக, இருபத்தொரு (21) வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான வாக்குரிமையினை அடைந்து கொண்டதன் விளைவாக, ஆசிய மற்றும் ஆபிரிக்க கண்டங்களுள், பெண்களுக்கான வாக்குரிமையினை மிக ஆரம்பத்திலேயே பெற்றுக் கொண்ட நாடுகளுள் ஒன்று என்ற பெருமையினையும் இலங்கை தனதாக்கிக் கொண்டது (Javawardena 2016). இவ்வாறாக, 'இலங்கையில் பால்நிலை சமத்துவம் அங்கீகரிக்கப்படுகின்ற மற்றும் போற்றப்படுகின்ற கருத்தேற்பொன்றாக விளங்குகின்றது' என்பதனைச் சுட்டிக் காட்டுவதற்குப் பயன்படுத்துகின்ற மேற்கூறப்பட்ட உதாரணங்கள் சிறப்பானவையே என்றபோதிலும், அவை மிகப் பழமையானவையும்கூட என்பதனை நாம் நினைவிற் கொள்ள வேண்டியுள்ளது.

2020 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய பால்நிலை இடைவெளி அறிக்கையில், 153 நாடுகளிடையே இலங்கை 102 ஆவது நாடாகத் தரப்படுத்தப்பட்டது.[14] குறிப்பாக, பொருளாதாரப் பங்குபற்றுகை மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பாக 128 ஆம் இடத்தினையும், கல்வி அடைவுகள் தொடர்பாக 88 ஆம் இடத்தினையும் மற்றும் அரசியல் வலுவூட்டல் தொடர்பாக 73 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளது.[15] எவ்வாறெனினும், இலங்கையில் நடைமுறையில் காணப்படுகின்ற பால்நிலை சமத்துவத்தினை மதிப்பிட்டுப் பார்ப்பதற்கு நாம் பல்வேறுபட்டக் காரணிகளை ஆராய வேண்டியுள்ளது. பால்நிலை சமத்துவத்தினை மதிப்பிடுவதற்காகப் பல குறிகாட்டிகள் காணப்படுகின்றபோதிலும், இங்கு நாம் பிரதானமாகப் பெண்களுடைய அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்து கொள்வதற்கு அவர்களுக்கு காணப்படுகின்ற வாய்ப்புக்களின் அடிப்படையில், பால்நிலை சமத்துவத்தினை மதிப்பிடுவதற்கு முயற்சிப்போம். அதற்கமைய, பெண்களுடைய அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் இழக்கப்படுவதற்குக் காரணமாய் அமைகின்ற **'வன்முறைச் சம்பவங்கள்'** மற்றும் அவர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மட்டுப்படுத்தப்படுவதற்குக் காரணமாய் அமைகின்ற **'பங்கேற்பதற்கான வாய்ப்புக்களின்மை'** ஆகிய இரண்டு குறிகாட்டிகளின் அடிப்படையில் பால்நிலை சமத்துவம் மதிப்பிடப்பட்டுள்ளது.

---

9 Department of Census and Statistics, <http://www.statistics.gov.lk/GenderStatistics/StaticalInformation/SpecialConcerns/PercentageOfHouseholdHeadsBySex1981-2016> accessed 5 June 2021.

10 Ibid

11 Ibid

12 World Economic Forum, The Global Gender Gap Report 2020, <http://www3.weforum.org/docs/WEF_GGGR_2020.pdf> accessed 3 March 2021.

13 'Easter blasts in Sri Lankan hotels and churches kill at least 207' (Daily Mirror, 22 April 2019) <https://www.dailymirror.lk/Business-News/Easter-blasts-in-SriLankanhotels-and-churches-kill-at-least-207/273-165725> accessed 7 June 2021.

14 Supra 9

15 Ibid

## 1.1.1 பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள்

பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்களுக்கும் பெண்களுடைய அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்து கொள்வதற்கான அவர்களுடைய இயலுமை அல்லது அவர்களுக்கான வாய்ப்புக்களுக்குமிடையே மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. இதனை மிக எளிமையான உதாரணமொன்றினூடாக விளக்க முற்படின், பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்படுகின்ற ஒரு பெண், அதனைத் தொடர்ந்து, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தனது நடமாட்டத்தினையும் சமூக பங்குபற்றுதலையும் தன்னிச்சையாகவே மட்டுப்படுத்திக் கொள்கின்றார்.[16] இங்கு, அப்பெண்ணின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை இழக்கச் செய்வதற்கான தீர்மானம் அப்பெண்ணால் தன்னிச்சையாக எடுக்கப்படினும்கூட, அத்தீர்மானத்தை நோக்கி அப்பெண் தள்ளப்படுவதற்கு அவள் எதிர்கொள்கின்ற வன்முறைகளும், அவ்வன்முறையின் விளைவுகளை மேலும் மோசமாக்கக்கூடிய ஆற்றல் படைத்த சமூக நியமங்களுமே காரணமாக அமைகின்றன என்பது எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடியதொரு உண்மையாகும். கீழுள்ள அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது. பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்களின் அதிகரித்த எண்ணிக்கையானது, பெண்கள் தங்களது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை இழப்பதற்கு வழிகோலுகின்றது என்பதுடன், அதனூடாக இலங்கையில் பால்நிலை சமத்துவமும் கேள்விக்குட்படுத்தப்படுகின்றது.

**அட்டவணை 1.1**

*நபர்களுக்கெதிரானப் பாரதூரமானக் குற்றங்களினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் 2015-2019*

| கடுமையான குற்றத்தின் வகைகள் | 2015 | | | 2016 | | | 2017 | | | 2018 | | | 2019 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இரண்டு பாலினத்தவர்களும் | பெண்கள் | பெண்களின் வீதம் | இரண்டு பாலினத்தவர்களும் | பெண்கள் | பெண்களின் வீதம் | இரண்டு பாலினத்தவர்களும் | பெண்கள் | பெண்களின் வீதம் | இரண்டு பாலினத்தவர்களும் | பெண்கள் | பெண்களின் வீதம் | இரண்டு பாலினத்தவர்களும் | பெண்கள் | பெண்களின் வீதம் |
| **மொத்தம்** | 8,830 | 4,374 | 49.5% | 8,254 | 3,967 | 48.1% | 7,213 | 3,345 | 46.4% | 7,253 | 3,706 | 51.1% | 6,831 | 3,401 | 49.8% |
| கடத்தல் | 725 | 661 | 91.2% | 738 | 703 | 95.3% | 647 | 601 | 92.9% | 753 | 691 | 91.8% | 663 | 611 | 92.2% |
| ஆட்கடத்தல் | 257 | 128 | 49.8% | 297 | 171 | 57.6% | 251 | 182 | 72.5% | 260 | 186 | 71.5% | 212 | 110 | 51.9% |
| கடுமையான காயம் விளைவித்தல் | 1,388 | 237 | 17.1% | 1,243 | 241 | 19.4% | 1,075 | 223 | 20.7% | 942 | 193 | 20.5% | 894 | 169 | 18.9% |
| வேண்டுமென்றே அபாயகரமான ஆயுதங்களின் மூலம் காயம் விளைவித்தல் | 2,667 | 474 | 17.8% | 2,358 | 90 | 3.8% | 2,130 | 97 | 4.5% | 1,947 | 84 | 4.3% | 1,857 | 79 | 4.3% |
| ஆட்கொலை/ தற்கொலை முயற்சி/ ஆட்கொலை முயற்சி | 664 | 139 | 20.9% | 575 | 159 | 23.6% | 616 | 107 | 17.4% | 533 | 129 | 20.4% | 593 | 114 | 19.2% |
| 16 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மீதான வன்புணர்தல் | 379 | 379 | 100% | 350 | 350 | 100% | 294 | 294 | 100% | 345 | 345 | 100% | 289 | 289 | 100% |
| நியதிச்சட்ட வன்புணர்வு (16 வயதுக்கு குறைவான பெண் பிள்ளைகள்) பாதிக்கப்பட்டவர்களின் சம்மதத்துடனான பாலியல் வன்புணர்வு | 1,339 | 1339 | 100% | 1,394 | 1,394 | 100% | 1,206 | 126 | 100% | 1,199 | 1,199 | 100% | 1,185 | 1,185 | 100% |
| நியதிச்சட்ட வன்புணர்வு (16 வயதுக்கு குறைவான பெண் பிள்ளைகள்) பாதிக்கப்பட்டவர்களின் சம்மதமின்றிய பாலியல் வன்புணர்வு | 315 | 315 | 100% | 292 | 292 | 100% | 232 | 232 | 100% | 248 | 248 | 100% | 305 | 305 | 100% |
| இயற்கைக்கு முரணான குற்றங்கள்/ கடுமையான பாலியல் துஸ்பிரயோகம் | 900 | 592 | 65.8% | 716 | 453 | 63.3% | 614 | 315 | 51.1% | 749 | 545 | 72.8% | 710 | 478 | 57.3% |
| சிறுவர்களைக் கொடுமைப்படுத்துதல் | 101 | 58 | 57.4% | 115 | 78 | 67.8% | 88 | 64 | 72.7% | 104 | 62 | 59.6% | 80 | 39 | 48.8% |
| சிறுவர்கள் மீதான பாலியல் சுரண்டல் | 76 | 36 | 47.4% | 50 | 19 | 38.0% | 48 | 20 | 46.5% | 50 | 24 | 48.0% | 34 | 20 | 58.8% |
| ஆட்கடத்துதல் | 19 | 16 | 84.2% | 26 | 17 | 65.4% | 15 | 4 | 26.7% | 23 | 0 | 0.0% | 9 | 2 | 22.2% |

*மூலம்: இலங்கை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*[17]

*16* பாலியல் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுமியொருவருடனான நேர்காணல் (மன்னார், 23 மார்ச் 2021)

*17* Department of Census and Statistics, <http://www.statistics.gov.lk/GenderStatistics/StaticalInformation/WomenEmpowerment/Membersofparliamentbyyearandsex> accessed 06 March 2021.

மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கெதிரானப் பாரதூரமானக் குற்றங்களுள் பாலியல் வண்புனர்வு, நியதிச்சட்ட பாலியல் வண்புனர்வு ஆகிய குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்களாகப் பெண்கள் மட்டுமே அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அறிக்கையிடப்படாத போதிலும், ஆண்கள் பாலியல் வண்புனர்வினால் பாதிக்கப்பட்டுள்ள சம்பவங்களும் இலங்கையில் இடம்பெற்றுள்ளன.[18] எவ்வாறெனினும், பாலியல் வன்புணர்வினால் பெரும்பான்மையாகப் பாதிக்கப்படுகின்றத் தரப்பினராக பெண்களே காணப்படுகின்றனர். கீழுள்ள அட்டவணை கடந்த வருடங்களில் வட மாகாணத்தில் பதிவாகியுள்ள பாலியல் வன்புணர்வு குற்றங்களின் எண்ணிக்கையினை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

**அட்டவணை 1.2**

*வட மாகாணத்தில் பாலியல் வன்புணர்வினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை, வருட அடிப்படையில்* (2016-2020)

| மாகாணம் | மாவட்டம் | குற்றம் | 2016 - 2020 | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
| வட மாகாணம் | வவுனியா | 16 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் மீதான பாலியல் வன்புணர்வு | 6 | 7 | 3 | 4 | 5 |
| | மன்னார் | | தரவுகள் இல்லை | தரவுகள் இல்லை | 1 | 2 | 1 |
| | கிளிநொச்சி | | 3 | 1 | 3 | 2 | 4 |
| | யாழ்பாணம் | | 7 | 5 | 7 | 4 | 15 |
| | யாழ்பாணம் | | 3 | 1 | 2 | 2 | 4 |
| | **மொத்தம்** | | 19 | 14 | 16 | 14 | 29 |
| | வவுனியா | பாலியல் வன்புணர்வு (16 வயதிற்கு குறைவானவர்களின் சம்மதமின்றி புரியப்படுதல்) | 18 | 12 | 12 | 11 | 15 |
| | மன்னார் | | | | 4 | 4 | 2 |
| | கிளிநொச்சி | | 7 | 26 | 9 | 13 | 13 |
| | யாழ்பாணம் | | 34 | 22 | 9 | 35 | 63 |
| | யாழ்பாணம் | | 0 | 9 | 1 | 6 | 10 |
| | **மொத்தம்** | | 59 | 69 | 35 | 69 | 103 |
| | வவுனியா | பாலியல் வன்புணர்வு (16 வயதிற்கு குறைவானவர்களின் சம்மதமின்றி புரியப்படுதல்) | 8 | 7 | 6 | 8 | 12 |
| | மன்னார் | | | | 2 | 2 | 4 |
| | கிளிநொச்சி | | 16 | 0 | 6 | 5 | 4 |
| | யாழ்பாணம் | | 0 | 2 | 2 | 35 | 10 |
| | யாழ்பாணம் | | 10 | 3 | 12 | 5 | 5 |
| | **மொத்தம்** | | 34 | 12 | 28 | 55 | 35 |

*மூலம்: இலங்கை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*[19]

**18** Centre for Policy Alternatives, 'Legal Reform to Combat Sexual and Gender-Based Violence-Part I' (CPA, November 2020) https://www.cpalanka.org/wp-content/uploads/2020/11/Law-Reform-to-combat-SGBV-PART-1-General-Centre-for-Policy-Alternatives.pdf

**19** Department of Census and Statistics, <http://www.statistics.gov.lk/GenderStatistics/StaticalInformation/SpecialConcerns/PercentageOfHouseholdHeadsBySex1981-2016> Sri Lanka Police crime statistics <https://www.police.lk/index.php/item/138-crime-statistics>

## 1.1.2 பங்கேற்பதற்கான வாய்ப்புக்களின்மை

இவ் அத்தியாயத்தின் இப்பகுதியானது அரசியல் மற்றும் பகிரங்க வாழ்வில் பெண்களின் பங்களிப்பு மற்றும் பங்கேற்பு தொடர்பாக கலந்துரையாடுகின்ற வேளையில், அவற்றை மட்டுப்படுத்துகின்ற சமூகக் கட்டமைப்புக்களுக்கும் சட்டங்களுக்கும் பின்புலமாக சமூக நியமங்கள் காணப்படுகின்றமை குறித்தும், அச்சமூக நியமங்கள் தொடர்பான மேலதிக விளக்கங்கள் குறித்தும் இவ் அத்தியாயத்தின் பிற்பகுதியில் ஆராயப்படவுள்ளது.

திட்டவட்டமாகக் கட்டமைக்கப்பட்டுள்ள சமூகக் கட்டமைப்புக்களினாலும், அதற்கு ஆதரவான சில சட்டங்களினாலும் பெண்கள் அரசியல் மற்றும் பகிரங்க வாழ்வில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன (Abeykoon, 2020). இலங்கையில் உள்ளூர், மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் பெண்களுடைய அரசியல் பிரதிநிதித்துவம் மிகக் குறைவாகவே உள்ளது. உள்ளூராட்சி மட்டத்தில் பெண்களுடைய அரசியல் பிரதிநிதித்துவத்தினை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் 2017 ஆம் ஆண்டு, பெண்களுக்கான 25 சதவீத இட ஒதுக்கீட்டினை அனுமதிக்கின்ற சட்டத் திருத்தமொன்று[20] கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்திருத்தத்திற்குப் பின்னரான முதலாவது உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்றது. இத்தேர்தலில் வட மாகாணத்தில் ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட பெண் மற்றும் ஆண் உறுப்பினர்களின் எண்ணிக்கையினை கீழுள்ள அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது.

**அட்டவணை 1.3**

*வட மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி அமைப்புகளின் பாலின அமைப்பு 2018*

| மாவட்டம் | உள்ளூராட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த உறுப்பினர்கள் | பாலின அமைப்பு | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | % | பெண் | % |
| யாழ்ப்பாணம் | 415 | 318 | 77 | 97 | 23.00 |
| கிளிநொச்சி | 68 | 54 | 79 | 14 | 21.00 |
| முல்லைத்தீவு | 73 | 58 | 79 | 15 | 21.00 |
| மன்னார் | 94 | 79 | 84 | 15 | 16.00 |
| வவுனியா | 111 | 93 | 83 | 18 | 16.00 |

*மூலம்: இலங்கை அரசாங்க வர்த்தமானி, 2018 மார்ச் 9 அன்று வெளியிடப்பட்டது.*

இச்சட்டத்திருத்தத்தின் விளைவாக நடைமுறையில் உள்ளூராட்சி சபைகளில் பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. எவ்வாறெனினும், சமூகத்தில் நிலைத்திருக்கின்ற சமூக நியமங்கள் மற்றும் நிலையான உள எண்ணங்களின் (Stereotyphes) காரணமாக உள்ளூரதிகார சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட பெண் பிரதிநிதிகளுடைய **உண்மையான அரசியல் பங்களிப்பு** எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு அதிகரிக்கப்படவில்லையென்பதே நிதர்சனமான உண்மை. மாறாக, பெரும்பாலும் அவர்கள் பெயரளவிலான பிரதிநிதிகளாக இருக்க வேண்டியதொரு துர்ப்பாக்கிய நிலையினையே எதிர்கொண்டுள்ளனர் (Abeykoon, 2020). மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மிகக் குறைவாக உள்ளது என்பதனைக் கீழ்வரும் அட்டவணைகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

*20 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்*

## அட்டவணை 1.4

*மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் எண்ணிக்கை, பால் மற்றும் வருட அடிப்படையில் 2004, 2008-2009, 2012-2013-2014*

| மாகாண சபை | | 2004 | | 2008/2009 | | 2012/2013/2014 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| அனைத்து மாகாண சபைகளும் | உறுப்பினர்கள் | 361 | 19 | 400 | 17 | 434 | 21 |
| | அமைச்சர்கள் | 35 | - | 39 | - | 44 | 1 |
| மேல் மாகாண சபை | உறுப்பினர்கள் | 98 | 6 | 98 | 6 | 97 | 7 |
| | அமைச்சர்கள் | 5 | - | 5 | - | 5 | - |
| மத்திய மகாகண சபை | உறுப்பினர்கள் | 53 | 5 | 54 | 4 | 54 | 4 |
| | அமைச்சர்கள் | 5 | - | 4 | - | 5 | - |
| தென் மாகாண சபை | உறுப்பினர்கள் | 54 | 1 | 54 | 1 | 54 | 1 |
| | அமைச்சர்கள் | 5 | - | 5 | - | 5 | - |
| வட மாகாண சபை | உறுப்பினர்கள் | - | - | 1 | 1 | 36 | 2 |
| | அமைச்சர்கள் | - | - | - | - | 5 | - |
| கிழக்கு மாகாண சபை | உறுப்பினர்கள் | - | - | 36 | 1 | 36 | 1 |
| | அமைச்சர்கள் | - | - | 5 | - | 4 | 1 |
| வடமேற்கு மாகாண சபை | உறுப்பினர்கள் | 48 | 4 | 50 | 2 | 50 | 2 |
| | அமைச்சர்கள் | 5 | - | 5 | - | 5 | - |
| வடமத்திய மாகாண சபை | உறுப்பினர்கள் | 32 | 1 | 32 | 1 | 32 | 1 |
| | அமைச்சர்கள் | 5 | - | 5 | - | 5 | - |
| ஊவா மாகாண சபை | உறுப்பினர்கள் | 33 | 1 | 33 | 1 | 33 | 1 |
| | அமைச்சர்கள் | 5 | - | 5 | - | 5 | - |
| சப்பிரகமுவ மாகாண சபை | உறுப்பினர்கள் | 43 | 1 | 43 | 1 | 42 | 2 |
| | அமைச்சர்கள் | 5 | - | 5 | - | 5 | - |

*மூலம்: இலங்கை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*[21]

## அட்டவணை 1.5

*பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, பால் மற்றும் வருட அடிப்படையில் 1989-2020*

| சட்டவாக்க சபைகள் | வருடம் | இரண்டு பாலினத்தவர்களும் | % | ஆண் உறுப்பினர்களின் எண்ணிக்கை | % | பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|---|---|
| இரண்டாவது இலங்கை பாராளுமன்றம் | 1989 | 225 | 100 | 212 | 94.2 | 13 | 5.8 |
| மூன்றாவது இலங்கை பாராளுமன்றம் | 1994 | 225 | 100 | 213 | 94.7 | 12 | 5.3 |
| நான்காவது இலங்கை பாராளுமன்றம். | 2000 | 225 | 100 | 216 | 96.0 | 9 | 4.0 |
| ஐந்தாவது இலங்கை பாராளுமன்றம் | 2001 | 225 | 100 | 215 | 95.6 | 10 | 4.4 |
| ஆறாவது இலங்கை பாராளுமன்றம் | 2004 | 225 | 100 | 212 | 94.2 | 13 | 5.8 |
| ஏழாவது இலங்கை பாராளுமன்றம் | 2010 | 225 | 100 | 212 | 94.2 | 13 | 5.8 |
| எட்டாவது இலங்கை பாராளுமன்றம் | 2015 | 225 | 100 | 212 | 94.2 | 13 | 5.8 |
| ஒன்பதாவது இலங்கை பாராளுமன்றம் | 2020 | 225 | 100 | 213 | 94.7 | 12 | 5.3 |

*மூலம்: இலங்கை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*[22]

**21** Department of Census and Statistics, <http://www.statistics.gov.lk/GenderStatistics/StaticalInformation/WomenEmpowerment/Membersofparliamentbyyearandsex> accessed 06 March 2021.

**22** Department of Census and Statistics, <http://www.statistics.gov.lk/GenderStatistics/StaticalInformation/WomenEmpowerment/Membersofparliamentbyyearandsex> accessed 06 March 2021.

அட்டவணை 1.6

*வட மாகாணத்தைச் சேர்ந்த பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, வருட அடிப்படையில்*

| சட்டவாக்க சபை | வருடம் | மொத்த பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை | வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை எண்ணிக்கை | பிரிவு | பெயர் |
|---|---|---|---|---|---|
| இரண்டாவது இலங்கை பாராளுமன்றம் | 1989 | 13 | 1 | வன்னி | திருமதி. ரா.ம.புலேந்திரன் ஐக்கிய தேசிய கட்சி |
| மூன்றாவது இலங்கை பாராளுமன்றம் | 1994 | 12 | 1 | வன்னி | திருமதி. ரா.ம.புலேந்திரன் ஐக்கிய தேசிய கட்சி |
| நான்காவது இலங்கை பாராளுமன்றம் | 2000 | 9 | 0 | | |
| ஐந்தாவது இலங்கை பாராளுமன்றம் | 2001 | 10 | 0 | | |
| ஆறாவது இலங்கை பாராளுமன்றம் | 2004 | 13 | 1 | யாழ்ப்பாணம் | திருமதி. பத்மினி சிதம்பரநாதன் இலங்கை தமிழ் அரசு கட்சி |
| ஏழாவது இலங்கை பாராளுமன்றம் | 2010 | 13 | 1 | வன்னி | திருமதி. விஜயகலா மகேஸ்வரன் ஐக்கிய தேசிய கட்சி |
| எட்டாவது இலங்கை பாராளுமன்றம் | | | | வன்னி | திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா இலங்கை தமிழ் அரசு கட்சி (தேசிய பட்டியல்) |
| | | | | யாழ்ப்பாணம் | திருமதி. விஜயகலா மகேஸ்வரன் ஐக்கிய தேசிய கட்சி |
| ஒன்பதாவது இலங்கை பாராளுமன்றம் | 2020 | 12 | 0 | | |

*மூலம்: இலங்கை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*[23]

தேசிய மட்டத்தில் பெண்களின் அரசியல் பங்கேற்பு குறைவாக உள்ள அதேவேளை, யுத்தத்தின் நீடித்த மற்றும் நிலையான விளைவுகளினால் பல்வேறுபட்ட பிரத்தியேக பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற பெண்கள் அதிகளவில் காணப்படுகின்ற வட மாகாணத் தேசிய மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளமையினை மேலுள்ள அட்டவணைகள் எடுத்துக் காட்டுகின்றன. அத்துடன், தற்போதைய அரசாங்கத்தில்[24] உள்ள அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்கள் 26 பேரில் ஒரேயொருவர் மாத்திரமே பெண்ணாக[25] உள்ளமை அரசாங்கத்தின் நிறைவேற்றுத்துறையில் பெண்களுடைய பங்களிப்பு மிகக்குறைவாகவே காணப்படுகின்றது என்பதற்கு சான்று பகர்கின்றது. அரசாங்கத்தின் மற்றுமொரு அங்கமாகிய நீதித்துறையிலும், பெண்களுடைய பங்களிப்பு திருப்திகரமானதாக இல்லை என்றே கூறவேண்டும். உதாரணமாக, 2017 ஆம் ஆண்டளவில் நாட்டில் உள்ள மொத்த பெண் நீதிபதிகளின் சதவீதம் 28.9 ஆகவே காணப்பட்டது. இதனைக் கீழ்வரும் அட்டவணையில் காணலாம்.

---

**23** Department of Census and Statistics, <http://www.statistics.gov.lk/GenderStatistics/StaticalInformation/WomenEmpowerment/Membersofparliamentbyyearandsex> accessed 06 March 2021.

**24** *2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலினைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட அரசாங்கம்.*

**25** கௌரவத்திற்குரிய திருமதி. பவித்திரா தேவி வன்னியாராச்சி தற்போது போக்குவரத்து அமைச்சராகக் கடமையாற்றி வருகின்றார்.

அட்டவணை 1.7

*நீதிபதிகளின் எண்ணிக்கை, பால் அடிப்படையில் 2017*

| நீதிமன்ற வகைகள் | மொத்த எண்ணிக்கை | % | ஆண்களின் எண்ணிக்கை | % | பெண்களின் எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 11 | 100 | 9 | 81.8 | 2 | 18.2 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 12 | 100 | 10 | 83.3 | 2 | 16.7 |
| சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம்/மேல் நீதிமன்றம்/ மாகாண மேல் நீதிமன்றம் | 81 | 100 | 70 | 86.4 | 11 | 13.6 |
| மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 224 | 100 | 150 | 67.0 | 74 | 33.0 |
| சிறுவர் நீதவான் நீதிமன்றம் | 2 | 100 | 0 | 0 | 2 | 100 |
| தொழில் நியாயசபை | 33 | 100 | 19 | 57.6 | 14 | 42.4 |
| அனைத்துவிதமான நீதிமன்றங்களும் | 363 | 100 | 258 | 71.1 | 105 | 28.9 |

*மூலம்: இலங்கை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*[26]

இவ்வாறாக, பெண்களுடைய பங்களிப்பு மற்றும் பங்குபற்றுகை அரசியல் மற்றும் பகிரங்க வாழ்வில் மிகக் குறைவாகக் காணப்படுகின்றமையானது அவர்களுடைய அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனையே எடுத்துக்காட்டுகின்றது. அதற்கமைய, பெண்களுக்கெதிராக அதிகரித்து வருகின்ற வன்முறைச் சம்பவங்களினால் அவர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் பறிக்கப்படுகின்ற அதேவேளை, அரசியல் மற்றும் பகிரங்க வாழ்வில் அவர்களின் பங்குபற்றுகை போதுமானளவில் உறுதிப்படுத்தப்படாமையின் காரணமாக அவர்களது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மட்டுப்படுத்தப்படுகின்றன. பெண்களுடைய அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் நடைமுறையில் உத்தரவாதப்படுத்தப்படாத ஒரு சமூகத்தில் பால்நிலை சமத்துவம் என்பது நடைமுறை சாத்தியமற்ற விடயமாகவே காணப்படும். அவ்வகையில், இலங்கையில் பெண்கள் தங்களுடைய அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அணுகுவதில் மட்டுப்பாடுகளை விதிக்கின்ற காரணிகளை அறிந்து கொள்ளுதல் காலத்தின் தேவையாயுள்ளது என்பதனைக் கருத்திற்கொண்டு, இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தினால் அதிகளவில் பாதிக்கப்பட்டு நிலைமாற்றச் செயன்முறைக்கு உட்பட்டு வருகின்ற வட மாகாணத்தில் பெண்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் குறித்து நிலவுகின்ற நிலைப்பாடு மற்றும் அவற்றை அடைந்து கொள்வதற்கு தடையாயுள்ள சமூக நியமங்கள் குறித்து ஒரு புரிந்துணர்வினைப் பெற்றுக் கொள்வது இந்த ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.

## 1.2 பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கான இலங்கையின் சர்வதேச மற்றும் தேசிய சட்டக் கடப்பாடுகள்

இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 12 ஆனது பால் அடிப்படையிலான பாரபட்சத்தினைத் தடுப்பதனூடாகப் பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துகின்றது.[27] மேலும், இவ் உறுப்புரையின் உபபிரிவு 4 ஆனது,

---

*26* Department of Census and Statistics, <http://www.statistics.gov.lk/GenderStatistics/StaticalInformation/WomenEmpowerment/Membersofparliamentbyyearandsex> accessed 06 March 2021.

*27* உறுப்புரை *12(2)* ஆனது பின்வருமாறு கூறுகின்றது: "இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்த பிரஜைக்கும் ஓரங்காட்டுதல் ஆகாது:

ஆயின், பகிரங்க சேவையில், நீதித்துறைச் சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில், ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்தின் சேவையில் உள்ள ஏதேனும் ஊழியத்துக்கான அல்லது பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏதேனும் மொழியை அறிந்திருத்தல் நியாயமாக அவசியமானதாகவுள்ளவிடத்து, அத்தகைய ஏதேனும் ஊழியத்துக்கான அல்லது பதவிக்கானத் தகைமையாக அம்மொழியில் போதிய அறிவை நியாயமான காலத்தினுள் பெறுதல் வேண்டுமென ஆளொருவர் தேவைப்படுத்தப்படுவது சட்டமுறையானதாதல் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய ஊழியத்துக்கான அல்லது பதவிக்கான பணிகளுள் எவற்றையும் ஏதேனும் மொழியை அறிந்திருந்தால் தவிர வேறுவிதத்தில் நிறைவேற்ற முடியாதிருக்கும் இடத்து, அத்தகைய ஏதேனும் ஊழியத்துக்கு அல்லது பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கான தகைமையாக அம்மொழியில் போதிய அறிவை உடையவராக இருத்தல் வேண்டுமென ஆளொருவர் தேவைப்படுத்தப்படுவது சட்டமுறையானதாதல் வேண்டும்."

மேலும், இவ் உறுப்புரையின் உபபிரிவு 4 ஆனது, பெண்களுடைய முன்னேற்றத்திற்காக விசேட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதனையும் அங்கீகரிக்கின்றது.[28] எவ்வாறெனினும், அரசியலமைப்பின் உறுப்புரை 16 ஆனது[29] அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கு முன்னர் ஆக்கப்பட்ட எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத சட்டங்கள் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுடன் முரண்படுகின்றபோதிலும் அவை தொடர்ந்தும் வலுவிலிருக்கும் என கூறுகின்றமையினால், இது மிகவும் வெளிப்படையாக பால்நிலை பாரபட்சமிக்க வழக்காற்றுச் சட்டங்களின் நிலைத்திருப்பினை அங்கீகரிப்பதாக அமைந்துள்ளது. இக்குறித்த உறுப்புரையானது பெண்களைப் பால்நிலை பாரபட்சத்திற்கு உட்படுத்துகின்ற கண்டிய சட்டம், தேசவழமைச் சட்டம் மற்றும் முஸ்லிம் சட்டம் போன்ற விசேட சட்டங்கள், தண்டனைச் சட்டக்கோவையின் சில ஏற்பாடுகள், காணியுரிமை தொடர்பான பொதுச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் பிற பொதுச் சட்ட ஏற்பாடுகள் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கு வழிகோலியுள்ளது.

இலங்கை அரசாங்கமானது எவ்விதமான ஒதுக்கீடுகளுமின்றி பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சர்வதேச சமவாயத்தினை ஏற்று அங்கீகரித்துக் கொண்டதனைத்தொடர்ந்து, அச்சமவாயத்திற்கு வலுவளிக்கும்வகையில், 1993 இல் பெண்கள் பட்டயமொன்றினை உருவாக்கியது. இப்பட்டயத்தில் பிரதானமாக ஏழு விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள், கல்வி மற்றும் பயிற்சிக்கான உரிமை, பொருளாதார செயற்பாடுகள் மற்றும் நன்மைகளுக்கான உரிமைகள், சுகாதார பராமரிப்பு மற்றும் போசனைக்கான உரிமைகள், குடும்பத்திற்குள்ளான உரிமைகள், சமூக பாரபட்சத்திலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான உரிமை மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான உரிமை என்பனவே அவையாகும். எவ்வாறெனினும், இவ் ஆவணமானது எவ்விதமான சட்டப்பெறுமதிகளும் வழங்கப்படாது வெறுமனே ஆவணமொன்றென்ற நிலையினை அடைந்திருப்பது துரதிஷ்டவசமானதாகும்.[30]

எவ்வாறெனினும், கடந்த காலங்களில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட பல்வேறுபட்ட தேசிய செயற்திட்டங்களில் பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடு உள்ளடக்கப்பட்டிருந்தது. இதற்கு உதாரணமாக, பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறைகளைக் கையாள்வதற்கான தேசிய செயற்திட்டம் 2016-2020 மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான தேசிய செயற்திட்டம் 2017-2021 போன்ற செயற்திட்டங்களைக் குறிப்பிட்டு காட்டலாம்.

பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கான இலங்கையின் சர்வதேச சட்டக் கடப்பாடுகள் இலங்கையினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள கீழ்வரும் சர்வதேச சமவாயங்களின் ஏற்பாடுகளிலிருந்து தோற்றம் பெறுகின்றன.

---

**28** உறுப்புரை 12(4) ஆனது பின்வருமாறு கூறுகின்றது: "இவ்வுறுப்புரையிலுள்ளதெதுவும், பெண்களின், பிள்ளைகளின் அல்லது இயலாமையுள்ள ஆட்களின் முன்னேற்றத்துக்காக சட்டத்தின் மூலம், துணைநிலைச் சட்டவாக்கத்தின் மூலம் அல்லது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் சிறப்பேற்பாடு செய்யப்டுவதை தடுத்தலாகாது."

**29** உறுப்புரை 16 ஆனது பின்வருமாறு கூறுகின்றது: 16(1) - "இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்தில்லாச் சட்டங்கள் எல்லாம் இந்த அத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இருப்பினும், செல்லுபடியும் தொழிற்பாடும் உடையனவாயிருத்தல் வேண்டும்." 16(2) - "தகுதிவாய்ந்த ஒரு நீதிமன்றத்தின் கட்டளையின் பேரில் எவரேனும் ஆளை, இப்போதுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவிதமான ஒரு தண்டனைக்கேனும் உள்ளாக்குதல், இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளை மீறுவதாகாது."

**30** Sri Lanka Shadow Report to the Committee on the Elimination of All Forms of Discrimination against Women (CEDAW), Submitted for the 66th Session of the CEDAW Committee Geneva, Switzerland 13 February – 03 March 2017 <https://tbinternet.ohchr.org/Treaties/CEDAW/Shared%20Documents/LKA/INT_CEDAW_NGO_LKA_26306_E.pdf> accessed 7 June 2021.

உரு 1.1

**அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், 1948**

**உறுப்புரை 2**

இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைமை, தேசிய அல்லது சமூகத்தோற்றம், ஆதனம், பிறப்பு அல்லது பிற அந்தஸ்த்து போன்ற எத்தகைய வேறுபாடுகளுமின்றி இப்பிரகடனத்தில் தரப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவராவார்.

**பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயம், 1981**

**உறுப்புரை 3**

திறத்துவ நாடுகள் அனைத்து துறைகளிலும், குறிப்பாக அரசியல், சமூக, பொருளாதார, கலாசார துறைகளில், ஆணுக்கு சரிநிகர் என்ற அடிப்படையில் மனித உரிமைகளையும், அடிப்படை சுதந்திரங்களையும் பெண்கள் பிரயோகிப்பதற்கும் துய்ப்பதற்கும் உத்தரவாதமளிக்கும் நோக்கத்துக்கென அப்பெண்களின் முழு அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் நிச்சயப்படுத்துவதற்கு, சட்டவாக்கம் உள்ளிட்ட தோதான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்தல் வேண்டும்.

**குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம், 1976**

**உறுப்புரை 3**

இந்த உடன்பாட்டு ஒப்பந்தத்திற்கான அரச தரப்புக்கள் இவ்வொப்பந்தத்தில் எடுத்துரைக்கப்பட்ட குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் அனைத்தையும் துய்ப்பதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமையை உறுதிப்படுத்துவதற்கானப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும்.

**பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம், 1976**

**உறுப்புரை 3**

இந்த உடன்பாட்டு ஒப்பந்தத்திற்கான அரச தரப்புக்கள் இவ்வொப்பந்தத்தில் எடுத்துரைக்கப்பட்ட எல்லா பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளையும் துய்ப்பதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமையை உறுதிப்படுத்துவதற்கானப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும்.

## 1.3 பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களும் பால்நிலை சமத்துவமும்

'பால்' (Sex) மற்றும் 'பால்நிலை' (Gender) ஆகிய சொற்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சிறு மயக்கத்தினை உண்டுபண்ணுகின்றனவாகக் காணப்படுகின்றன. ஆகவே, பால் மற்றும் பால்நிலை ஆகிய இச் சொற்பதங்கள் உண்மையில் எதனைக் குறிக்கின்றன என்பதனைத் தெளிவுபடுத்தல் அவசியமாயுள்ளது. 'பால்' என்பது ஆண், பெண் மற்றும் வேறு பாலினத்தவர்களுக்கிடையே[31] காணப்படுகின்ற உயிரியல்ரீதியான வேறுபாடுகளைக் (ஹோர்மோன்கள் மற்றும் சாம்களின் அளவு) குறித்துக் காட்டுவதாகும் (WHO, 2014). 'பால்நிலை' என்பது 'பால்' என்பதனைப் போன்று உயிரியல்ரீதியானவொன்றல்ல, மாறாக, சமூகம் சார்ந்து கட்டமைக்கப்பட்டுள்ள அடையாளங்கள் மற்றும் வகிபாகங்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதனூடாக அல்லது கட்டிக்காப்பதனூடாக சமூகத்தினால் செயற்கையாக உருவாக்கப்படுகின்ற ஒன்றாகும். Hilari Chrlesworth பால்நிலை

31 பெண் மற்றும் ஆண் என்ற இருபாலினத்திற்கு மேலதிகமாக திருநங்கைகள், திருனர்கள் மற்றும் பாலினத்தினை தெளிவாக அறிய முடியாதவர்கள் என வேறுபட்ட பாலினத்தவர்களும் காணப்படுகின்றனர்.

என்பதனை, ''பெண்கள் மற்றும் ஆண்கள் என்போருக்கிடையிலான மற்றும் பெண்மை மற்றும் ஆண்மை என்ற கருத்தேற்புக்களுக்கிடையிலான வேறுபாடுகளைச் சமூகம் கட்டியெழுப்பியுள்ள விதம்'' என வரையறுத்துள்ளார் (Chrlesworth 1999). மேலும், அவர், ''இவ்வேறுபாடுகள் உயிரியல்ரீதியாக வேறுபடுத்தப்படுகின்ற 'பால்' என்பதுடன் இணைந்துள்ள மிகையான கலாசாரக் கோட்பாடுகளினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது'' என வலியுறுத்துகின்றார் (Chrlesworth 1999). வேறுவகையில் கூறுவோமாயின், 'பால்நிலை' என்பது வேறுபட்ட சமுதாயங்களினால் தத்தமது அடையாளங்கள், கலாசாரக் கோட்பாடுகள், பண்பாடுகள், பாரம்பரியங்கள் மற்றும் விழுமியங்கள் என்பவற்றின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ள செயற்கையான ஒரு கருத்தேற்பாகும். இக்கருத்தேற்பானது அனைத்து சமுதாயங்களிலும் ஒரே மாதிரியானதாக இருப்பதில்லை என்பதுடன் கால மாற்றங்களுக்கேற்பத் தன் வடிவத்தினை மாற்றிக்கொள்வதற்கு தவறுவதுமில்லை. எவ்வாறெனினும், அனைத்து சமுதாயங்களிலும், 'பால்நிலை' என்ற கருத்தேற்பு கட்டியெழுப்பப்பட்டுள்ளது அதாவது, பெண் மற்றும் ஆண் பாலினர் தத்தமது பாலுக்கேற்ப நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்குமுறைகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன என்பதுடன், அவற்றை ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தகைய ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுகின்றபோதுதான், அவர்கள் அப்பால்நிலைக்குரியவர்களாகக் கருதப்படுவார்கள்.

ஒரு ஆண்பிள்ளை/ஆண் அழுகின்றபோது, 'பெண் பிள்ளைபோல அழுகிறாய்' என்றும் 'ஆண் பிள்ளைகள்/ ஆண்கள் அழக்கூடாது' என்றும் பொதுவாக சொல்வதுண்டு. இங்கு அழுகின்ற இயல்பு பெண்ணிற்குரியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. இதுவே, சமூகத்தினால் கட்டமைக்கப்பட்டுள்ள 'பால்நிலை வகிபாகம்' எனப்படுகின்றது. அதாவது, அழுகின்ற இயல்பு பெண்களுக்கே உரித்தானது என்பதற்கு எவ்வித உயிரியல்ரீதியான காரணமுமில்லை, ஆனாலும், இச்சமூகம் கட்டமைத்துள்ள சமூக நியமங்களுக்கமைய, அழுகின்றமை பெண்களுக்குரிய ஒரு இயல்பாக அதாவது பெண்ணிற்கான பால்நிலை இயல்பாகக் கருதப்படுகின்றது. மற்றுமொரு உதாரணமாக, 'ஆண் பிள்ளை போல சண்டையிடுகிறாள்' எனப் பெண்களைப் பார்த்து கூறும் சந்தர்ப்பங்கள் உண்டு. இங்கும், சண்டையிடும் பண்பு ஆண் பாலிற்குரியது என்பது சமூகத்தினால் கட்டமைக்கப்பட்டுள்ள ஒன்றேயன்றி அது உயிரியல்ரீதியாக அல்லது இயற்கையாக அவ்வாறு அமைந்தது அல்ல.

ஆகவே, பால்நிலை பாரபட்சத்தினை தோற்றுவிக்கின்ற பிரதான உபாயக் கருவியொன்றாக சமூக நியமங்கள் காணப்படுகின்றது'' அடுத்ததாக, 'சமூக நியமங்கள்' என்றால் என்ன என்பதனைச் சற்று ஆராய்வோம். சமூகத்திலுள்ள தனிநபர்களின் வகிபாகத்தினை அவர்களுடைய பால், மதம், கலாசாரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கின்றதும், சமூகத்தில் அதிகாரத் தொடர்புகள் அல்லது அதிகார இயங்காற்றல்கள் எவ்வகையில் அமைந்திருக்க வேண்டுமென்பதனை வரையறுக்கின்றதுமான 'விதிகள்' அல்லது 'நெறிமுறைகள்' அல்லது 'நடத்தைப்பாங்குகள்' அல்லது 'வழக்கங்கள்' அல்லது 'மரபுகள்' சமூக நியமங்கள் எனப்படும் (UNDP 2020). இச்சமூக நியமங்கள் பெரும்பாலும் மத நம்பிக்கைகள், கலாசாரக் கோட்பாடுகள் மற்றும் பாரம்பரிய வழக்கங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளன. இவற்றைச் சுருக்கமாக, பண்பாட்டு வாழ்வியலைக் கட்டிக்காக்கின்ற அம்சங்கள் எனவும் கூறலாம். உதாரணமாக, சைவ சமயக் கலாசாரத்தினைப் பின்பற்றுகின்ற ஒரு பெண்ணுடைய கணவன் இறந்துபோனால், அப்பெண் அதன்பின் பொட்டு/குங்குமம் வைக்கக்கூடாது என்பது சமூக நியமமொன்றாகும். இச்சமூக நியமமானது சைவ சமயக் கோட்பாடுகள் மற்றும் கலாசார வழக்கங்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டதுடன், அது பால்நிலையினைத் தழுவியதொரு நியமமாகவும் காணப்படுகின்றது.

இவ்வாறு, சமூக நியமங்கள் பால்நிலையினைத் தழுவி ஆக்கப்படுகின்றபோது அவை பால்நிலை பாரபட்சமிக்கதாகின்றன. இவற்றையே நாம் 'பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களென' அடையாளப்படுத்துகின்றோம். பால்நிலை பாரபட்சமிக்க இச்சமூக நியமங்கள் சமூகத்தில் தோன்றுகின்ற 'நிலையான உள எண்ணங்களுக்கான' பின்புலமாக அமைகின்றன. அதற்கமைய, பால்நிலை பாரபட்சத்தினை சமூகத்திற்குள் கட்டமைப்புரீதியாக உள்நுழைக்கின்ற முதன்மைக் கருவியாக சமூக நியமங்கள் காணப்படுகின்றன என்பதுடன், இச்சமூக நியமங்களை காலங்காலமாகப் பின்பற்றி வருவதனால் சமூகத்தில் வேரூன்றுகின்ற நிலையான உள எண்ணங்களும் பால்நிலை பாரபட்சமிக்கவையாக உள்ளன. இவ்வாறு, சமூகத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள பால்நிலை

பாரபட்சமிக்க சமூக நியமங்களும், நிலையான உள எண்ணங்களும்தான் பெண்கள் மற்றும் ஆண்கள் நடந்துகொள்ள வேண்டிய 'நடத்தைப்பாங்கினை' அல்லது 'முறையினைத்' தீர்மானிக்கின்றன. உதாரணமாக, நடைமுறையிலுள்ள சமூக நியமங்களுக்கமைய, குறிப்பாக இஸ்லாமிய கலாசாரத்தில், பெண்கள் தலைமைப் பதவிகளை வகிக்கக்கூடாது என எதிர்பார்க்கப்படுகின்றது (Haniffa, 2008). இச்சமூக நியமமானது பகிரங்க வாழ்வில் ஈடுபடுவதற்கான பெண்களுடைய அடிப்படை சுதந்திரத்தினை கேள்விக்குட்படுத்துகின்றது. இவ்வாறாக, நடைமுறையிலுள்ள பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் பெண்கள் தமது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்து கொள்வதற்கு தடையேற்படுத்துகின்றன என்பதுடன் மறுதலையாக அவை இலங்கை அரசியலமைப்பு மற்றும் இலங்கை கையொப்பமிட்டு ஏற்றுக்கொண்டுள்ள சர்வதேச சமவாயங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பால்நிலை சமத்துவத்தினையும் கேள்விக்குட்படுத்துகின்றது.

**உரு 1.2**

*சமூக நியமங்கள் மற்றும் பால்நிலை சமத்துவமின்மைக்கிடையிலான தொடர்பு*




சமூக நியமங்களின் குறிப்பிடத்தக்கதொரு விசேட இயல்பு யாதெனில், அவை 'குறிப்பிட்ட சமுதாயம் அல்லது குழுவிற்கு உரித்துடைய வழக்கங்கள்' என்ற அடையாளத்தினைப் பெற்றுக் கொள்கின்றமையாகும் (UNDP 2020). இவ் 'அடையாளம்' என்கிற கூறு, சமூக நியமங்களுடன் பின்னிப் பிணைந்திருத்தலே சமூக நியமங்களின் பலமாகவும், அவை சமுதாயங்களில் ஆழமாக வேரூன்றுவதற்கான அடிப்படைக் காரணமாகவும் அமைந்துள்ளது. குறித்த சமூக நியமங்களிலிருந்து பிறழ்வடைகின்றமையானது அல்லது குறித்த சமூக நியமங்களுக்கு அப்பால் செயற்படுகின்றமையானது, தமது சமுதாயத்திற்குரிய அடையாளத்தினை துறக்கின்ற செயலொன்றாக அல்லது தமது சமுதாயத்தின் அடையாளத்தினை இழிவுபடுத்துகின்ற செயலொன்றாக சித்தரிக்கப்படுகின்றமையினால், இச்சமூக நியமங்கள் தலைமுறை தலைமுறையாகத் தனது தொடர்ச்சியினை மற்றும் இருப்பினை இலகுவாகக் காத்துக் கொள்கின்றன.

## 1.4 சமூக நியமங்கள், சட்டங்கள், வழக்காற்றுச் சட்டங்கள் மற்றும் மத நம்பிக்கைகள்

ஒரு சமுதாயத்தில் நிலைத்திருக்கின்ற சமூக நியமங்கள் மற்றும் அச்சமுதாயத்தினை ஆளுகின்ற சட்டங்கள், வழக்காற்றுச் சட்டங்கள் மற்றும் அச்சமுதாயத்தின் மத நம்பிக்கைகள் என்பவற்றுக்கிடையில் மிக நெருக்கமானத் தொடர்புகள் காணப்படுகின்ற அதேவேளை, சில சமயங்களில் அத்தொடர்புப் பின்னல்கள் சிக்கல் மிகுந்தனவாகவும் அமைகின்றன. குறிப்பாக, ஆசியாவில் சமூக நியமங்கள் மற்றும் மத நம்பிக்கைகள் சட்டவாக்கங்களிலும், சட்டத்திருத்தங்களிலும் மற்றும் சட்டவாக்குநர்களிலும் செல்வாக்கு செலுத்துவதனை நாம் மிகத் தெளிவாகக் காண முடியும். இதற்கு பல உதாரணங்களை சுட்டிக் காட்டலாம். மிகவும் தெளிவாக விளங்கிக் கொள்ளப்படக்கூடிய சமீபத்தைய உதாரணமொன்றாக, மத மற்றும் கலாசாரக் காரணிகள் காரணங்காட்டப்பட்டு, இலங்கையில் 'கருக்கலைப்பு' தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட சட்டத்திருத்தம் கைவிடப்பட்டமையினைக் குறிப்பிடலாம்.[32] இலங்கையில்,

*32* Saira Meyler, 'Abortion- Where is Sri Lanka on the Spectrum?' (Groundviews, 02 September 2018) <https://groundviews.org/2018/09/02/abortion-where-is-sri-lanka-on-the-spectrum/amp/> accessed 7 July 2021.

தண்டனை சட்டக் கோவையின் பிரகாரம், 'தாயின் உயிருக்கு ஆபத்து' என்ற ஒரேயொரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே கருக்கலைப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது.[33] கருக்கலைப்பு தொடர்பான இவ் இறுக்கமான ஏற்பாடுகள் ஆரோக்கியத்திற்கான சுதந்திரம் உள்ளடங்கலாக பெண்களின் பல்வேறு அடிப்படை உரிமைகளை மீறுகின்றன என்ற அடிப்படையில், 'பாலியல் வன்புணர்வு, இயற்கைக்கு முரணான குடும்ப உறவுகளினால் கர்ப்பம் தரித்தல் மற்றும் கருவிற்கு பாரதூரமான நோய்நிலைமைகள் காணப்படல்' போன்ற விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் கருக்கலைப்பினை அனுமதிக்கின்றவகையில் சட்டம் திருத்தப்பட வேண்டுமென தசாப்தகாலங்களாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஆதரித்து வாதாடி வருகின்றனர்.[34] இச்சட்டத் திருத்தத்திற்கான முயற்சிகள் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், மதத் தலைவர்களின் தலையீடு காரணமாக அவையெதுவுமே வெற்றியளிக்கவில்லை (Kumarage, 2019). 1995 ஆம் ஆண்டு, கருக்கலைப்பினை சில விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் அனுமதிப்பதற்கான சட்டத்திருத்தம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்காக முன்வைக்கப்பட்டபோது, அந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத மற்றும் கலாசாரக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அதனைக் கடுமையாக எதிர்த்திருந்தனர்.

"கருக்கலைப்பினை சட்டபூர்வமாக்குதல் அல்லது கருக்கலைப்பு தொடர்பான தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளைத் தளர்வாக்கலானது சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளினதும் எதிர்ப்பினை விளைவாக உருவாக்கும். அவ்வாறு செய்வதனூடாக, நீங்கள் இந்நாட்டு மக்களின் சமூக மற்றும் கலாசார வாழ்வின் அடிப்படைகளில் தாக்கம் செலுத்த முயற்சிக்கின்றீர்கள்."
**- திரு. ஜோ. ஏ. ஈ. அமரதுங்க, பாராளுமன்ற ஹன்சார்ட், 19 செப்ரம்பர் 1995 (பக்கம் 102)**

"இன்று எமது சமூகத்திலே, எமது சமய கலாசாரங்களின்படி, ஒரு பெண் தாய்மையடைவதன் மூலம் தான் அவள் பெண் இனத்துக்கான அதியுயர் பதவியை அடைகின்றாள். ஆனால், இந்தச் சட்டம் தாய்மை என்ற புனிதத்துவத்துக்கு இழுக்கை ஏற்படுத்துகிறது. இதை தாங்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்த சரித்திரமுடைய எமது நாட்டிலே கலாசாரப் பண்பாடுகள் உரிய முறையில் பேணப்பட்டு வருகின்றது."
**- திருமதி புலேந்திரன், பாராளுமன்ற ஹன்சார்ட், 19 செப்ரம்பர் 1995 (பக்கம் 118)**

இவ்விவாதத்தின் முடிவில், அப்போதைய நீதி அமைச்சர், அரசாங்கமானது வேறுபட்ட மத மற்றும் கலாசார பாரம்பரியங்களைக் கருத்திற்கொள்கின்றமையினால் அச்சட்டமூலத்தினை மீளப் பெற்றுக் கொள்வதாக அறிவித்திருந்தார்.[35] மேலும், 2017 ஆம் ஆண்டு அப்போதைய நீதி அமைச்சராக இருந்த கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ இது தொடர்பான சட்ட மூலத்தினைக் கொண்டுவந்த போதிலும், அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன, சட்டமூலத்திற்குக் 'கடுமையான எதிர்ப்பைக் காட்டிய மதத்தலைவர்களுடன் கலந்தாலோசிக்க விரும்பியதால்' அச்சட்டமூலத்தினை வரைகின்ற பணி நிறுத்தப்பட்டது.[36] இங்கு பெண்களுடைய அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு சட்டத்திருத்தம், எவ்வாறு மத மற்றும் கலாசார வழக்கங்களைக் காரணம் காட்டி பல்வேறு சந்தர்ப்பங்களில் தடுக்கப்பட்டுள்ளது என்பதனை வெளிப்படையாகக் காணக்கூடியதாக உள்ளது. இது மத நம்பிக்கைகள், சமூக மற்றும் கலாசார நடைமுறைகள் என்பவற்றிற்கும் பொது மற்றும் வழக்காற்றுச் சட்டங்கள் என்பவற்றிற்கும் இடையிலான தொடர்பினை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு, மத நம்பிக்கைகள் மற்றும் வழக்காறுகள் மற்றும் அதனையொட்டி கட்டமைக்கப்பட்டுள்ள சமூக நியமங்கள் வழக்காற்றுச் சட்டங்களில் மட்டுமல்லாது நாட்டின் பொதுச் சட்டங்களிலும் செல்வாக்கு செலுத்துவதனைப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு சமூக நியமங்கள் மற்றும் மத நம்பிக்கைகள் எவ்வாறு சட்டங்களில் செல்வாக்கு செலுத்தி அதனூடாக தனிமனித உரிமைகளை மறுக்கின்றது என்பதனை Country Howland மூன்று கட்டங்களாக விபரிக்கின்றார் (Howland 1999).

---

*33* *இலங்கைத் தண்டனை சட்டக் கோவை, பிரிவுகள் 303- 307*

*34* Dinesha Samararatne, 'The abortion debate: mismatched and misplaced', (Groundviews, 13 September 2017) <https://groundviews.org/2017/09/13/the-abortion-debate-mismatched-and-misplaced/> accessed 2 February 2021; Law Commission of Sri Lanka, 'Medical Termination of Pregnancy – Proposals of the Law Commission of Sri Lanka', (February 2013), page 2 <http://lawcom.gov.lk/web/images/stories/reports/medical_termination_of_pregnancy_proposals_of_the_law_commi ssion_of_sri_lanka.pdf> accessed 2 February 2021.

*35* *இலங்கை பாராளுமன்ற ஹன்சார்ட், 20 செப்ரம்பர் 1995.*

*36* Supra 21.

உரு 1.3

| | | |
|---|---|---|
| தொன்மையான ஆணாதிக்கக் கட்டமைப்புக்களிலிருந்து தோற்றம் பெற்றுள்ள மத மற்றும் கலாசார பாரம்பரியங்களிலிருந்து பால்நிலை ஒழுங்குவிதிகளை, அதாவது, பெண்கள் மற்றும் ஆண்கள் கைக்கொள்ள வேண்டிய நடத்தைப் பாங்குகளைக் கட்டியெழுப்புதல். → | அப்பால்நிலை ஒழுங்கு விதிகளை சட்டம் மற்றும் அரசியலுக்குள் உட்புகுத்தல். → | அச்சட்டம் மற்றும் அரசியலைப் பயன்படுத்தி தனிநபரது (பெண்களது) உரிமைகளை மறுத்தல். |

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள கண்டிய சட்டம், தேசவழமைச் சட்டம் மற்றும் முஸ்லிம் சட்டம் போன்ற விசேட தனிப்பட்ட சட்டங்களில் இத்தகைய மத மற்றும் கலாசாரக் கோட்பாடுகளின் செல்வாக்கு அதிகளவில் இருப்பதனைக் காணமுடிகின்றது. அவற்றுள் மிகச் சிலவற்றைப் பற்றி கீழே சுருக்கமாக நோக்குவோம்.

### 1.4.1 ஆதன உரிமைகள்

இலங்கையில் பொதுவாக பெண்களுக்கான காணி உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றதொன்றாகவே இருந்து வருகின்றது. வலுவிலுள்ள பல்வேறு சட்டங்கள் காணி உரிமைகள் தொடர்பில் பெண்கள் பால்நிலை பாரபட்சத்திற்கு உள்ளாவதற்கு வழிகோலுகின்றன (Pinto-Jayawartha & Jayantha, 2010). குறிப்பாக வழக்காற்றுச் சட்டங்களை ஆராய்கின்றபோது, தேசவழமைச் சட்டத்திற்குள்[37] உள்ளடக்கப்படுகின்ற 1911 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க யாழ்ப்பாணத் திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 6 ஆனது (1947 ஆம் ஆண்டு 58 ஆம் இலக்க திருத்தத்திற்கு அமைவாக), திருமணமான பெண்களின் தனிப்பட்ட அசையா ஆதனங்களைக் கையுதிர்க்க அல்லது கையாள கணவனின் எழுத்துமூல சம்மதம் தேவை என தேவைப்படுத்துகின்றது.[38] இவ்வழக்காற்றுச் சட்ட ஏற்பாடு, கலாசாரப் பாரம்பரியங்களுடன் தொடர்புறுகின்ற விதத்தினை எடுத்துக்காட்டுவதற்கு, 'மனுதர்ம சாஸ்திரங்கள்' மற்றும் 'காவ்ய சேகர' ஆகிய இலக்கியங்களை எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது.

---

37 தேசவழமைச் சட்டமானது வட மாகாணத்திற்குரிய தமிழர்களை ஆள்வதற்கான தனிப்பட்டச் சட்டமாகும். இது முறையாக ஒழுங்கமைக்கப்படாத, எழுதப்படாத வழக்காற்றுச் சட்டமாகவே ஆரம்பத்தில் காணப்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் ஆளுனர் சைமன்ஸ் இன் கட்டளைப்படி 1806 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க தேச வழமைகள் ஒழுங்குவிதி என்ற பெயரில் கோவைப்படுத்தப்பட்டது. அதன்பின்னர் யாழ்ப்பாண தமிழர்களுக்கான பிரத்தியேக சட்டமாக உள்வாங்கப்பட்டதுடன் அதன் குறைநிரப்பு சட்டமாக உரோமன் டச்சு சட்டம் விளங்கியது. ஆங்கிலேயர் காலத்தில் 1911 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் கட்டளைச்சட்டம் உருவாக்கப்பட்டது.

38 பிரிவு 6 ஆனது பின்வருமாறு கூறுகின்றது: "இக்கட்டளைச் சட்டம் தொடங்கிய பின்னர் திருமணமான எவரேனும் பெண்ணுக்கு அவளது திருமணத்தின் போது உரித்தாக்கப்படக்கூடிய எல்லா அசையும் அசையா ஆதனங்கள் அவளது தனிப்பட்ட ஆதனமாக அவளுக்கு சொந்தமாதல் வேண்டும். கொடை அல்லது வழியுரிமை வாயிலாக திருமணம் நிலையாகவுள்ள போது அப்பெண்ணினால் கொள்ளக்கூடிய அல்லது உரித்துடையவளாக வந்துள்ள எல்லா அசையும் அசையா ஆதனங்களும் அல்லது அவ்வாறு அவளுக்கு உரித்தாக்கப்பட்டிருக்க கூடிய ஏதேனும் ஆதனத்தின் மாற்றம் மூலம் உரித்துடையவளாக வந்துள்ள எல்லா அசையும் அசையா ஆதனங்களும் அவளது தனிப்பட்ட ஆதனமாக அப்பெண்ணுக்கு உரித்தாதல் வேண்டும். மேற்சொல்லப்பட்ட பெண்ணின் தனிப்பட்ட ஆதனம் இரண்டு வகையுள் கொண்டுவரப்பட்டுள்ளது. திருமண தேதியன்று பெண்ணிடம் உள்ள ஆதனம் மற்றையது திருமணம் நிலையாக உள்ள போது வந்துறப்பட்ட ஆதனம். இவை கணவனின் கடன் அல்லது வேறு ஈடுபாடுகளுக்கு பொறுப்பாக மாட்டாது. அத்தகைய பெண் அசையும் ஆதனம் தொடர்பில் கணவனின் சம்மதமின்றி சட்டபூர்வமாக அத்தகைய ஆதனத்தை கையுதிர்க்க அல்லது கையாளுவதற்கான முழுத்தத்துவத்தைக் கொண்டுள்ளார். ஆனால் அசையா ஆதனம் தொடர்பில் கணவனின் எழுத்திலான சம்மதத்துடன் அத்தகைய பெண் கையுதிர்க்க அல்லது கையாளத் தத்துவமுடையவர். அசையா ஆதனத்தை இறுதிவிருப்பாவணம் மூலம் கையுதிர்ப்பின் கணவனின் சம்மதம் தேவையற்றது. அதாவது திருமணமாகாத பெண் போல இறுதிவிருப்பாவணம் மூலம் கையுதிர்க்கலாம்."

முதலாவதாக, மனுதர்ம விதிகள் என்ற நூல் பற்றிப் பார்ப்போமாயின் இது சுவாயம்பு (மனு) என அழைக்கப்படுகின்ற வேத முனிவரொருவரால் கி.மு 1500 ஆம் ஆண்டு எழுதப்பட்டதாகும். இந்நூல் இந்து மக்கள் பிறப்பு முதல் இறப்பு வரையில் வாழ்க்கையில் பின்பற்றவேண்டிய சடங்குகள், சம்பிரதாயங்கள் மற்றும் அற ஒழுக்கவிதிகளை வரையறுக்கின்றது. இந்நூலானது சாதியக் கோட்பாடுகளின் அடிப்படையில் எழுதப்பட்டதொன்றாகும். இம்மனுதர்ம சாஸ்திரங்களின் தாக்கம் இந்தியாவில் அதிகளவில், அதாவது, சட்டத்திற்குள் உள்வாங்கப்படுமளவிற்கு காணப்பட்டது. இலங்கையில், குறிப்பாக வட மாகாணத்தில் நடைமுறையில் பின்பற்றப்பட்டுவருகின்ற பல வழக்காறுகள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டவையே என்ற அடிப்படையில், இம்மனுதர்ம சாஸ்திரங்களின் தாக்கத்தினை வட மாகாணத்திலும் காண முடிகின்றது. இதன், விதி 5:147 ஆனது பின்வருமாறு கூறுகின்றது:

***''பெண் குழந்தையாக இருக்கும்போதும், சிறுமியாக இருக்கும்போதும், வயதானவளாக இருக்கும்போதும் சுயமாக எதையும் செய்யக்கூடாது. தன் சொந்தவீட்டிலும் அவ்வாறு செய்யக்கூடாது.''***

பெண்கள் சுயமாகத் தீர்மானமெடுப்பதற்கு தகுதியவற்றவர்கள் என்ற மனுதர்ம சாஸ்திரத்தின் தழுவலொன்றாகவே, அவளுக்கு உரித்தான அசையும் ஆதனத்தினை விற்பதற்கும் கணவனின் எழுத்துமூல சம்மதம் தேவைப்படுத்தப்படுகின்றது எனக் கருத இயலும். அடுத்ததாக, 15 ஆம் நூற்றாண்டில் தோற்றம்பெற்ற மிகப் பிரபல்யமான காவ்யசேகர எனும் சிங்கள இலக்கியம், ''ஒரு பெண் தன்னுடைய கணவனுடைய சம்மதமின்றி சொந்தப் பிள்ளைகளுக்குக் கூட எதனையும் வழங்கக்கூடாது'' என்ற நியமத்தினை மிகவும் அழுத்தமாகக் கூறுகின்றது (Jayawardena, 2016).

அதற்கமைய, இலங்கையில் செல்வாக்குநிலையினை அடைந்திருந்த சிங்கள மற்றும் தமிழ் சமுதாயங்களினால், தென்னிந்திய சமுதாய மரபுகள் மற்றும் வழக்கங்களின் தழுவலாகப் பின்பற்றப்பட்டு வந்த சமூக வழக்கமொன்றே அல்லது சமூக நியமமொன்றே 1911 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வழக்காற்றுச் சட்டத்தில் ஏற்பாடொன்றாகியுள்ளது எனக் கருத இயலும்.

### 1.4.2 பாலியல் வன்புணர்வு தொடர்பான சட்டம்

இலங்கையில் பாலியல் வன்புணர்வு தொடர்பான சட்டம் இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகளால் ஆளப்படுகின்றது.[39] எவ்வாறெனினும், இலங்கை சான்றுக் கட்டளைச் சட்டமானது[40] பாலியல் வன்புணர்வு வழக்குகளுடன் தொடர்புறுகின்ற சான்று தொடர்பாக பால்நிலை பாரபட்சமிக்க சில ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. அதாவது, சான்றுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 155 ஆனது, சாட்சியின் நம்பகத்தன்மையினை தகர்ப்பது குறித்த ஏற்பாடுகளைக் குறிக்கின்றது. இப்பிரிவின் உபபிரிவு (உ) ஆனது, **''பாலியல் வன்புணர்வு செய்ததாக அல்லது பாலியல் வன்புணர்வு செய்ய எத்தனித்ததாக ஒருவருக்கெதிராக வழக்குத் தொடரப்படும்போது, வழக்குத்தொடர்ந்தவள் பொதுவாகவே ஒழுக்கம் கெட்டவள் எனக் காட்டப்படலாம்''** என கூறுகின்றது. இந்த சட்ட ஏற்பாடு, ''பாலியல் வன்புணர்விற்கு ஆளாகின்ற பெண் ஒழுக்கம் கெட்டவளாகவே இருக்க வேண்டும்'' அல்லது ''ஊசி இடமளிக்காது நூல் உள்நுழைய முடியாது'' அல்லது ''பெண் ஒழுக்கத்துடனிருந்தால் ஆண் தவறு செய்ய முயற்சிக்க மாட்டான்'' போன்ற நடைமுறையிலுள்ள சமூகக் கருத்துக்கள் அல்லது நியமங்களின் பிரதிபலிப்பொன்றாகவே பார்க்கப்படுகின்றது. Care International இனால் 2013 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒரு பங்குபற்றுகை ஆய்வில், ஆய்விற்காகத் தரவுகளை அளித்திருந்த 653 பெண்களுள் மூன்றில் இரண்டிற்கும் அதிகமானோர், ''பாலியல் வன்புணர்வொன்று அறிக்கையிடப்படுகின்றபோது, முதலில் அப்பெண் ஒழுக்கமானவளா எனப் பார்க்க வேண்டும்'' என்ற கருத்தினைத் தெரிவித்திருந்தனர் (Mel, Peris, & Gomez, 2013).

அடுத்ததாக, திருமண பந்தத்திற்குள்ளான பாலியல் வன்புணர்வு தொடர்பாகப் பார்க்கின்றபோது, இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் நீதிமுறைப் பிரிவிற்கு உட்படாத கணவன் மற்றும் மனைவிக்கிடையில் இடம்பெறுகின்ற கட்டாய உடலுறவு (பாலியல் வன்புணர்வு) குற்றமொன்றாக்கப்படவில்லை. 'திருமணமாகின்றபோதே ஒரு பெண் உடலுறவிற்கானத் தனது பரிபூரண சம்மதத்தினை கணவனுக்கு வழங்குகின்றாள்' அல்லது 'திருமணமான அந்நொடியிலிருந்து மனைவி கணவனுடைய உடைமையாகும்' என்ற சமூக அல்லது கலாசாரப் பாரம்பரியங்கள் அல்லது

***39*** *இலங்கைத் தண்டனை சட்டக் கோவை, பிரிவுகள் 363 மற்றும் 364.*

***40*** *1895 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சான்று பற்றிய சட்டத்தினைத் தொகுப்பதற்கும், அதற்கு வரைவிலக் கணங்களைக் கூறுவதற்கும், அதனைத்திருத்துவதற்குமான கட்டளைச் சட்டம்.*

நியமங்களின் அடிப்படையில், திருமணத்திற்குள்ளான பாலியல் வன்புணர்வினைக் குற்றமாக்குவதற்கான சட்டத் திருத்தங்கள் முடக்கப்பட்டு வருகின்றன.[41] இங்கு மனைவியைக் கணவனுடைய உடைமையாகப் பார்க்கின்ற போக்கு, தமிழர் சமூகத்திலும் அதேபோல இஸ்லாமிய சமூகத்திலும் மிக அதிகமாக இருந்து வருகின்றமையினைப் பார்க்க முடிகின்றது. சைவ சமயம்சார் தொன்மைமிக்க புராணமொன்றான மகாபாரதத்தில்,[42] பஞ்ச பாண்டவர்கள் துரியோதனனிடம் சூதாடித் தோற்ற சந்தர்ப்பத்தில், இறுதியாகத் தமது மனைவியினை துரியோதனனிடம் அடகு வைத்து சூது விளையாடுவதாக ஒரு சம்பவம் இடம்பெற்றிருக்கும்.

இப்புராணக்கதை பழைய பாடத்திட்டங்களிலுள்ள பாட நூல்களிலும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. பொதுவாக, இப்புராணக்கதையினை மாணவர்களுக்கு கற்பிக்கின்றபோது, பாண்டவர்கள் சூது விளையாடியமை குற்றமொன்றாக விமர்சிக்கப்படுமளவிற்கு, அவர்களின் மனைவியாகிய திரௌபதியினை அடகு வைத்த செயல் விமர்சிக்கப்படுவதில்லை என்பதுடன் திரௌபதியின் தனிமனித உரிமைகள் பற்றியும் விவாதிக்கப்படுவதில்லை. இவ் இலக்கியத்தினைப் பாடநூல்களில் உள்ளடக்கியுள்ளமையின் நோக்கம் சூதாட்டத்தினை அறத்திற்கெதிரான குற்றமொன்றாகக் காட்டுதலும், இதர பல இலக்கியம்சார் நுணுக்கங்களைக் கற்பித்தலுமே ஆகும். என்றபோதிலும், தர்மத்திற்குப் பேர்போன பாண்டவர்களே அவசர சூழ்நிலையில் தம் மனைவியை அடகு வைத்தனர் என்ற நிகழ்வும், அக்குறிப்பிட்ட நிகழ்வு பெண் உரிமை சார்ந்து அழுத்தமாக விமர்சிக்கப்படாமையும், திரௌபதி பாண்டவர்களின் உடைமை என்ற குறிப்பானதும், மனைவி கணவனுடைய உடைமை என்ற பொதுவானதுமான நிலையான உள எண்ணம் மாணவர்களிடையே தோன்றுவதற்கு வழிவகுக்கக்கூடும். இத்தகைய புராணங்களின் வழிவந்து, இன்றைய சமூகத்திலும் நிலைத்துள்ள 'மனைவி கணவனுடைய உடைமை' என்ற சமூக நியமம்தான் அல்லது நிலையான உள எண்ணம்தான், திருமணத்திற்குள்ளான பாலியல் வன்புணர்வினை குற்றமாகக் கொள்வதனை எம்முடைய கலாசாரத்திற்கு வேறுபட்ட ஒன்றாக கருதுவதற்கு அல்லது அதனை மேலைத்தேய கோட்பாடொன்றாகக் கருதுவதற்கு வித்திட்டுள்ளது எனலாம்.இவ்வாறு சட்டங்களுக்கும் சமூக நியமங்கள் மற்றும் மதக் கோட்பாடுகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்பிருக்கின்றது. எவ்வாறெனினும், சமூக நியமங்களினால் ஏற்படுத்தப்படுகின்ற பால்நிலை பாரபட்சத்திலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்காகச் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களிலும்கூட, சமூக நியமங்களின் உறுதிப்பாட்டுத்தன்மை காரணமாக அவை சட்டங்களினின்று மேலோங்குகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. உதாரணமாக, இலங்கையில் வீட்டு வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கான சட்டம்[43] 2005 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளபோதிலும், வீட்டு வன்முறைகள் தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் புகாரளிக்க பொலிஸ் நிலையம் செல்லும் பெண்களுக்கு அங்குள்ள பொலிஸார் சமூக நியமங்களை 'பெண்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க விதிகளாக' எடுத்துகூறி, புத்திமதி சொல்லி திருப்பி அனுப்பிவைக்கும் போக்கும் காணப்படுகின்றது.[44] இதற்கான மற்றுமொரு உதாரணமாக, தென்னாபிரிக்காவில் கருக்கலைப்பு சட்டபூர்வமாக்கப்பட்ட பின்னரும்கூட,[45] அங்கு இடம்பெறுகின்ற சட்டவிரோதமான கருக்கலைப்புக்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றமையினைக் குறிப்பிடலாம்.[46] இதற்கான பிரதான காரணங்களுள் ஒன்றாக, சமூகத்தில் நிலவுகின்ற கருக்கலைப்பு தொடர்பான சமூக நியமங்கள் மற்றும் சமூகக் களங்கம் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.[47] ஆகவே, சமூக நியமங்களினால் ஏற்படுத்தப்படுகின்ற பால்நிலை பாரபட்சங்களை எதிர்ப்பதற்கான முன்னேற்றகரமான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதிலும், அச்சமூக நியமங்கள் சமூகத்திலிருந்து ஒழிக்கப்படாதவரையில், அச்சட்டங்களின் பூரண பயனை அனுபவிப்பது சாத்தியமற்றதாகும்.

---

**41** இலங்கை பாராளுமன்ற ஹன்சார்ட், 19 & 20 செப்ரம்பர் 19955

**42** மகாபாரதம் எனப்படுவது தர்மவிதிகளைப் பின்பற்றுகின்ற பஞ்ச பாண்டவர்களுக்கும் அதர்மத்தின்வழி நடக்கின்ற துரியோதனன் உள்ளிட்ட கௌரவர்களுக்கும் இடையில் இடம்பெறுகின்ற போர் பற்றி சொல்லும் இலக்கியம் ஆகும். திரௌபதி எனப்படுபவள் பஞ்ச பாண்டவர்கள் ஐவரினதும் மனைவியாகும்.

**43** 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டம்

**44** பெண்ணொருவர் வீட்டு வன்முறைக்காகப் புகாரளிக்க சென்றபோது, திருமண வீட்டில் நடனமாடியதற்காக தான் அடித்ததாக கணவன் கூறியதைக் கேட்ட பொலிஸார் அதனை அங்கீகரித்து அவ்வாறு ஆடுதல் ஒழுக்கமல்ல என அப்பெண்ணுக்கு புத்தி கூறி அனுப்பி வைத்துள்ளனர். பார்க்க: Women Action Network, 'Women's Access to Justice in the North and East in Sri Lanka' CEDAW Shadow Report, (August 2016) <https://tbinternet.ohchr.org/Treaties/CEDAW/Shared%20Documents/LKA/INT_CEDAW_NGO_LKA_25964_E.pdf> accessed 21 November 2020.

**45** The choice on Termination of Pregnancy Act, No. 92 of 1996

**46** 'Preventing unsafe abortions' (WHO, 25 September 2020) <https://www.who.int/news-room/fact-sheets/detail/preventing-unsafe-abortion> accessed 07 July 2021.

**47** Ibid

## 1.5 முடிவாக...

1920 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வாழ்ந்த கவிஞர்களான செல்லம்மாள் மற்றும் பியதாச சிறிசேன ஆகியோரில் ஆரம்பித்து, தற்போதுள்ள மனித உரிமை செயற்பாட்டாளர்கள் வரையில் பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு தரப்பினரால் பெண்களுக்கெதிரான பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் விமர்சிக்கப்பட்டு வருகின்றன. என்றபோதிலும், சமூகத்தில் மிக ஆழமாக வேரூன்றியுள்ள இச்சமூக நியமங்களைக் கலைவதென்பது கடும் பிரயத்தனத்தினைத் தேவைப்படுத்துகின்ற விடயமொன்றாகும். எவ்வாறெனினும், ஒரு நாட்டினது பால்நிலை சமத்துவமென்பது அந்நாட்டின் சமாதானத்தினை வெளிக்காட்டக்கூடிய முக்கியமான குறிகாட்டியொன்றாகக் கருதப்படுவதுடன், பால்நிலை சமத்துவம் வெளிப்படுகின்ற நாடுகளில் வன்முறையின் அளவும் குறைவாக உள்ளது என்பது ஆய்வுகளினூடாக நிரூபிக்கப்பட்டுள்ளது (Jacevic & al, 2021). அவ்வகையில், இத்துனை முக்கியத்து வமுடைய அப்பால்நிலைச் சமத்துவத்தினை அடைந்து கொள்வதற்கு ஒரு கடும் பிரயத்தனத்தினை எடுத்தாக வேண்டிய கடப்பாடும் கட்டாயமும் நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அதற்கான முயற்சியின் முதற்படியாகவே, இலங்கையில் வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களைப் பற்றியும் அவை பெண்களுடைய அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் செல்வாக்கு செலுத்தும் பாங்கு பற்றியும் ஆராய்கின்ற இந்த ஆய்வறிக்கை அமைந்துள்ளது.

# அத்தியாயம் 2

# 2 இலக்கிய மீளாய்வு

## 2.1 சமூக நியமங்களும் அவற்றின் பண்புகளும்

'சமூக நியமங்கள்' (Social norms) என்ற பதத்திற்கான ஒருமித்த வரைவிலக்கணமொன்றினை வழங்குதல் கடினமாகும். சமூக நியமங்கள் வேறுபட்ட சமுதாயங்களின் வேறுபட்ட சூழ்நிலைகளுக்கேற்ப வெவ்வேறான வடிவங்களில் நிலைத்திருக்கும் பாங்கினைக் கொண்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு, UNDP இனால் செய்யப்பட்ட ஆய்வானது, சமூக நியமங்கள் 'பண்பாட்டு வாழ்வியலின் கூறுகளாக', 'கலாசாரக் கோட்பாடுகளாக', 'மதம் சார்ந்த நம்பிக்கைகளாக' அல்லது 'மரபுவழி வந்த பழக்கங்களாக அல்லது பாரம்பரியங்களாக' நிலைகொண்டிருக்க முடியும் என்பதனையும் குறிப்பாக, அவை அடையாளம் சார்ந்தனவாகக் காணப்படுகின்றன என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றது (UNDP 2019). இச்சமூக நியமங்களின் தன்மையினை நேரடியாக அவதானிப்பது கடினமாகுமென்பதனால் இவற்றின் தாக்கங்களை உணர்ந்து கொள்கின்றமை சிக்கல் மிக்கதாகின்றது. எவ்வாறெனினும், இவை சமூகத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையிலான அதிகார இயங்காற்றல்களை வரையறுப்பதனூடாக சமூகத்தின் அதிகாரக் கட்டமைப்புக்களைப் பேணிப் பாதுகாக்கின்றன என்பதனை இந்த ஆய்வு தெளிவாக அடையாளப்படுத்துகின்றது (UNDP 2019).

'சமூக நியமங்கள் உயர் மட்டங்களில் அதிகளவில் நிலைத்திருக்குமென்பது' இந்த ஆய்வினூடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள, சமூக நியமங்களின் மற்றுமொரு குறிப்பிடத்தக்க பண்பாக அமைகின்றது (UNDP 2019). இதனை, 'பால்நிலை பாரபட்சமானது வயது மட்டத்துடன் இணைந்து அதிகரிக்கின்றது' என Ayesha Banu கூறுகிறார். இதற்கு உதாரணமாக, முதனிலைக் கல்வி மற்றும் உயர்நிலைக் கல்வி ஆகியவற்றினைப் பெற்றுக் கொள்வதில் பெண்களுக்குக் காட்டப்படுகின்ற பாரபட்சத்தின் மட்டத்தினை சுட்டிக்காட்டுகின்றார். அதாவது, பெண் பிள்ளைகள் முதனிலைக் கல்வியினைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகளவானத் தடைகள் இல்லையென்றும், ஆனால் அவர்கள் உயர் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு பல சமூகக் கட்டுப்பாடுகள் தடை விதிப்பதனையும் உதாரணமாகக் கூறுகின்றார் (Banu 2016). இவ்விரு ஆய்வுகளுமே, சமூக நியமங்கள் மற்றும் அவை சமூகத்தில் ஏற்படுத்துகின்ற பால்நிலை பாரபட்சமிக்க தாக்கங்கள் தொடர்பான மேலதிகக் கற்கைகளும் ஆய்வுகளும் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டுகின்றன. UNDP இனால் செய்யப்பட்ட ஆய்வானது உலகளாவியதாகவும், Ayesha Banu இனால் செய்யப்பட்டுள்ள ஆய்வானது இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைத் தழுவியதாகவும் அமைந்துள்ளது. எவ்வாறெனினும், இவ்விரு ஆய்வுகளும் இலங்கையின் பின்னணியில், குறிப்பாக யுத்தத்திற்கு பிற்பட்ட சமூகப் பின்னணியில் சமூக நியமங்கள் மற்றும் அவற்றின் தொழிற்பாட்டினை ஆழமாக ஆராயாவிடினும்கூட, சமூக நியமங்கள் மற்றும் அவற்றின் தொழிற்பாடு மற்றும் விளைவுகள் தொடர்பான பொதுவான புரிந்துணர்விற்கு ஏதுவானத் தகவல்களை முன்வைத்துள்ளன.

### 2.1.1 சமூக நியமங்கள் பால்நிலையுடன் தொடர்புறுகின்ற பாங்கு

சமூக நியமங்கள் பெரும்பாலும் பால்நிலை சார்ந்தனவாகவே காணப்படுகின்றன. ''இலங்கையில் 'திருமணம்' என்ற சமூகக் கட்டமைப்பிற்குள் 'தந்தைவழிச் சமூகக் கோட்பாடு' எவ்வாறு தொழிற்படுகின்றது'' என்பது தொடர்பாக 2015 ஆம் ஆண்டு, விதானகே என்பவரால் செய்யப்பட்ட இலக்கிய ஆய்வில், 'தந்தைவழிச் சமூகக் கோட்பாடு' (patriarchy) என்பது ''சமூகத்தில் பெண்கள் மீது முறையாகப் பிரயோகிக்கப்படுகின்ற ஆணாதிக்கமாகும்'' (Vithanage, 2015) என குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தந்தைவழிச் சமூகத்தில் அதாவது, ஆணாதிக்கம் நிறைந்த சமூகத்தில் உருவாக்கப்பட்டுள்ள திருமணம் உள்ளடங்கலான அனைத்து சமூகக் கட்டமைப்புக்களிலும் ஆண்களுக்கு அதிகளவான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதென இந்த ஆய்வினை எழுதிய Vithanage வாதிடுகிறார். இவ் ஆணாதிக்கக் கட்டமைப்பில் உருவாக்கப்பட்டுள்ள சமூக நியமங்கள்

பாலினத்தை அடிப்படையாகக்கொண்டு பெண்களைக் கீழ்நிலையினராய் அல்லது அடிபணிந்தோராய் சித்தரிக்கின்றன என்பதுடன் பெரும்பாலான மதங்கள் ஆணாதிக்கத்திற்கு சார்பானக் கோட்பாடுகளைக் கொண்டுள்ளமையினால் அவை இச்சமூக நியமங்களை ஆதிரிக்கின்றன (Vithanage, 2015) என்றும் இவர் விளக்குகின்றார். ஆக, இச்சமூக நியமங்கள் உருவாக்கப்பட்டுள்ளக் கட்டமைப்பு ஆணாதிக்கம் மிக்கதாக காணப்பட்டமையினால் அச்சமூக நியமங்கள் பால்நிலை பாரபட்சத்தினைக் கொண்டுள்ளன என்றும் அவ் ஆணாதிக்கக் கட்டமைப்பு மதக் கோட்பாடுகளால் ஸ்திரப்படுத்தப்பட்டிருந்தது என்றும் (Vithanage, 2015) இவர் நிறுவுகின்றார். ஆணாதிக்கத்தின் தோற்றம் தொடர்பாகக் கருத்துரைக்கின்றபோது, ''ஆணாதிக்கம் என்பது தானாகத் தோன்றி ஆண்களிடம் உருவாகியதல்ல. மாறாக, காலங்காலமாக மதம் தோற்றுவித்த ஒன்றுதான்'' (Elackia, 2016, p. 14) என இலக்கியா கூறுகின்றார். அத்துடன், உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் இலங்கை சுகாதார அமைச்சு என்பவற்றினால் முன்னெடுக்கப்பட்ட ஒரு ஆய்வில், ''ஆணாதிக்கம் என்பது உயிரியல் சார்ந்தது அல்ல, மாறாக, அது மனிதனால் கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாகும்'' (WHO & Nutrition) என்பது குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு, சமூக நியமங்கள் பால்நிலை சார்ந்து கட்டமைக்கப்பட்டிருக்கின்றமையினால், அவை பால்நிலை பாரபட்சமிக்கனவாகக் காணப்படுகின்றன. இதன் காரணமாக, சமூக நியமங்கள் நிலைத்திருக்கின்ற அளவிற்கும் பால்நிலை சமத்துவமின்மைக்குமிடையே மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அதாவது, சமூக நியமங்கள் அதிகளவில் நிலைத்திருக்கின்ற சமூகங்களில் பால்நிலை சமத்துவமின்மையின் அளவும் அதிகரித்தே காணப்படுகின்றது (UNDP, 2019) என்பது ஆய்வுகளினூடாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதனைப் ''பால்நிலை சமத்துவமின்மைகள் சமூக நியமங்களில் பதிக்கப்பட்டுள்ளன'' (Banu, 2016) என Ayesha Banu தனது அறிக்கையில் குறிப்பிடுகின்றார்.

### 2.1.2 சமூக நியமங்களும் மதக் கோட்பாடுகளும்

மதம் என்பது நேரடியாக மற்றும்/அல்லது மறைமுகமாக சமூக நியமங்கள் உருவாவதற்கான மூலத் தோற்றுவாயொன்றாகக் காணப்படுகின்றது (Vithanage, 2015). எவ்வாறெனினும், Goonesekere, கலாசாரத்தைத் தழுவிய நடைமுறைகளுக்கும், மதக் கோட்பாடுகளுக்குமிடையிலான வேறுபாட்டினைத் தாபிக்க முற்பட்டுள்ளார். சில பாரம்பரிய பழக்கங்களும் மதக் கோட்பாடுகள் அல்லது நம்பிக்கைகளென்ற போர்வையின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக கூறுகின்ற இவர், இதற்கு உதாரணமாக, இலங்கையில் முஸ்லிம்கள் சீதனம் வாங்குகின்றமையினை எடுத்துக் காட்டுகின்றார். இஸ்லாமிய மதப்பிரகாரம் சீதனமென்ற விடயம் அங்கீகரிக்கப்படாதபோதும், இலங்கை முஸ்லிம்கள் அதனை ஒரு பாரம்பரிய வழக்கமாகப் பின்பற்றிவருவதுடன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்நடைமுறைக்கு 'மத வழக்கம்' என்ற அடையாளமே வழங்கப்படுகின்றது (Prof. Goonesekere, 2012). மதக் கோட்பாடுகளுக்கும் மத நம்பிக்கையின் அடிப்படையில் தோற்றம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்ற பழக்கவழக்கங்கள் மற்றும் பாரம்பரியங்கள் என்பவற்றுக்குமிடையிலான வேறுபாட்டினைக் கண்டறிவது மிக முக்கியமானதாகும். ஏனெனில், சமூக நியமங்கள் மதக் கோட்பாடு என்ற போர்வையினைக் கைக்கொள்கின்றபோது, அவற்றின் செல்வாக்கு அல்லது அழுத்தம் மேலும் அதிகரிக்கின்றது.

இலங்கையில், மதங்கள் மற்றும் சமூக நியமங்களுக்கிடையிலான தொடர்பினை ஆராய முற்படுகின்றபோது, ''இலங்கையிலுள்ள பிரதான மதங்கள் இந்து மதத்துடன்[48] இணைந்துள்ள சமூகக் கட்டுப்பாடுகளைக் குறிப்பிட்ட அளவிற்கு தழுவியுள்ளதாக'' Vithanage குறிப்பிடுகின்றார். பிரித்தானிய ஆட்சிக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இலங்கையின் மத வெளிப்படுத்தல்களில் தென்னிந்திய மதமான இந்து மதத்தின் செல்வாக்கு மிகையாக விளங்கியமையே இதற்கு காரணமென அவர் குறிப்பிடுகின்றார் (Vithanage, 2015, p. 39). இதனை மேலும் விளக்க முற்படுகின்றபோது, குறிப்பாக பௌத்தமதம் பால்நிலை சமத்துவத்திற்கு ஆதரவானதொரு மதமென்றும், எவ்வாறெனினும், பிற மதக் கலப்புக்களினால் பௌத்தமும் பெண்களைக் கீழ்மைப்படுத்துகின்றது என்றும் கூறுகின்றார். பௌத்தமதம் பால்நிலை சமத்துவத்திற்கு ஆதரவான மதமொன்று என்ற கருத்தானது Goonesekere இன் ஆய்விலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ''பௌத்த மதத்தின் தாராளவாத விழுமியங்கள் பெண்களுக்கெதிரான பால்நிலை பாரபட்சத்தினை முற்றாக ஒழிக்காவிடினும், அவற்றைக் குறைப்பதற்கு ஏதுவானவையாக அமைந்திருந்தன'' (Prof. Goonesekere 2012) என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

---

**48** இந்து மதமென்பது வட மாகாணத்தில் பெரும்பாலும் "சைவ சமயம்" என குறிப்பிடப்படுகின்றது

இந்து மதத்தின் செல்வாக்கினூடாக அதனோடிணைந்த சமூகக் கட்டுப்பாடுகளை பௌத்தமதம் உள்வாங்கிக் கொண்டமையினை நிரூபிப்பதற்கான உதாரணங்களையும் Vithanage சுட்டிக்காட்டியுள்ளார். உதாரணமாக, ''பெண் என்பவள் தகப்பன், சகோதரன், மகன் என்று எப்போதுமே ஒரு ஆணின் பாதுகாவலில் இருக்க வேண்டும்'' மற்றும் ''கணவனை இழந்தப் பெண்கள் சுப காரியங்களில் ஈடுபடக்கூடாது'' போன்ற இந்து மதம் சார்ந்த மனுதர்ம சாஸ்திர விதிகள் பௌத்தமதத்திலும் உள்வாங்கப்பட்டுள்ளதாக (Vithanage, 2015) இவர் கூறுகின்றார். மேற்சொல்லப்பட்ட இந்து மதம் சார்ந்த மனுதர்ம சாஸ்திர விதிகளின் தோற்றத்திற்கான அடிப்படைக் காரணங்கள் குறித்து விளக்குகின்ற இலக்கியா, கலாநிதி. அம்பேத்காரின் கருத்தியல்களை அடிப்படையாகக் கொண்டு, 'சமுதாயத்தில் சாதியக் கட்டமைப்பினைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே இத்தகைய மனுதர்ம சாஸ்திர விதிகள் தாபிக்கப்பட்டதாக' (Elackia, 2016) வலியுறுத்துகின்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மதக் கோட்பாடுகளைத் தழுவி அமைந்துள்ள சமூக நியமங்களின் ஸ்திரத்தன்மை வேறுபட்ட மட்டங்களில் காணப்படுவதனையும், அவ்வேறுபாடுகளுள் மறைந்திருக்கின்ற பால்நிலை பராபட்சத்தன்மையினையும் Goonesekere உதாரணமொன்றினூடாக எடுத்துக்காட்டியுள்ளார். அதாவது, இஸ்லாம் மதத்தில் 'தத்தெடுப்பு' மற்றும் 'இறுதி விருப்பாவணம்' என்பன அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால், இலங்கைவாழ் முஸ்லிம்கள் இவற்றை வழக்கத்தின்வாயிலாக பின்பற்றுகின்றனர் என்பதுடன் இது தொடர்பாக அவர்கள் பொதுச் சட்டங்களைப் பின்பற்றி வருகின்றனர்.[49] இஸ்லாமில் அங்கீகரிக்கப்படாத இந்நடைமுறைகளை முஸ்லிம்கள் பின்பற்றுவது தொடர்பில் எவ்விதமான ஆட்சேபனைகளும் எழுப்பப்படவில்லை. ஆனால், இலங்கையில் திருமண வயதெல்லையை அனைவருக்கும் 18 ஆக அங்கீகரிக்கும்பொருட்டு, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தில் காணப்படுகின்ற திருமண வயதெல்லை தொடர்பான ஏற்பாடுகளைத்[50] திருத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றபோது, 'மத சித்தாத்தங்களை' முன்வைத்து அம்முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை இடப்படுகின்றது (Prof. Goonesekere 2012). பால்நிலை பாரபட்சமிக்க இவ்வழக்கங்கள் திருத்தப்படுவதனைத் தவிர்ப்பதற்கான ஒரு பாதுகாப்புக் கருவியாக மதக் கோட்பாடுகளும் சித்தாந்தங்களும் பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை, பால்நிலை பாரபட்சமற்ற, அனைவருக்கும் பொதுவான வழக்கங்கள் மத சித்தாந்தங்களுக்கு முரணானவையாக இருக்கின்ற போதிலும் அவை ஏற்றுக்கொள்ளப்படுவதனைத் தெளிவாகக் காண முடிகின்றது. இது தொடர்பாக பார்க்கின்றபோது, Vithanage இனால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள Nuhuman என்ற ஊடகவியலாளரின் கருத்தினை முன்வைப்பது சாலப்பொருத்தமானதாக அமையும். 2011 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட தனது கட்டுரையொன்றில் இஸ்லாமிய மதக் கோட்பாடுகளையும் பெண்களையும் ஆராய்ந்த இவர், ''மத உணர்வுள்ள எந்தவொரு முஸ்லிம் ஆணும் பெண்களுக்கான சமத்துவம் என்ற கோட்பாட்டினை ஏற்றுக் கொள்ள மாட்டார். ஏனெனில், அவர்களைப் பொறுத்தவரையில் அது இஸ்லாம் மதத்திற்கு விரோதமானதாகும்'' என குறிப்பிட்டுக் காட்டியிருந்தார் (Vithanage, 2015, p. 22). பால்நிலை பாரபட்சம் மற்றும் சமத்துவமின்மையினை நியாயப்படுத்துகின்ற பாரம்பரிய சித்தாந்தங்களை சவாலுக்குட்படுத்துகின்ற நியாயப் பிரச்சாரப் பொறிமுறையொன்று இலங்கைக்கு அவசியமென்றும் Vithanage அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மதக்கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பின்பற்றப்படுகின்ற சமூக நியமங்களும் நாளடைவில் சமுதாயத்திலிருந்து நீக்கப்படக்கூடியனவே என்பதற்குப் பெரியார் முன்வைத்துள்ள உதாரணங்கள் சான்று பகிர்கின்றன. ''உடன்கட்டை ஏறுவதை[51] நிறுத்துவதற்காகப் போராடிய அக்காலத்திலும், இந்து மத ஆசாரமே அழிந்துபோவதாகவும், மதத்திற்கே கேடு வந்துவிட்டதாகவும் பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. ஆனால், நாளடைவில் அக்கூறுகளும் அடங்கி, 'ஸ்ககமனம்' எனும் உடன்கட்டையேறும் கொலை வழக்கம் இந்தியாவை விட்டு அறவே மறைந்தது'' (Periyar, 1942) என்ற பெரியாரின் வார்த்தைகளை இங்கு சுட்டிக்காட்டுதல் சாலப் பொருத்தமானதாகும்.

---

49 முஸ்லிம்கள் 1941 ஆம் ஆண்டு, 24 ஆம் இலக்க மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் (பொதுச்சட்டம்) மகவேற்பினை செய்கின்றார்கள்.

50 முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் பிரிவு 23 இன்கீழ் 12 வயதிற்கு கீழ்பட்ட பெண் பிள்ளைகளுக்கு காதியின் சம்மதத்துடன் திருமணம் செய்யலாம் என கூறப்பட்டுள்ளது.

51 கணவன் இறந்தபின் அவரது உடலைத் தகனம் செய்கின்றபோது அத்தீயில் விழுந்து மனைவியும் உயிரினை மாய்த்துக் கொள்கின்ற வழக்கம் "உடன்கட்டையேறுதல்" எனப்படும்.

## 2.1.3 பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களும் பால்நிலை சமத்துவமும்

பால்நிலை சமத்துவம் என்றால் என்ன என்பது தொடர்பிலான வேறுபட்ட மற்றும் பரந்தளவான வரைவிலக்கணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் பிரிவினால் 'பால்நிலை சமத்துவம்' என்பதற்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணமானது பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வரைவிலக்கணமாவது, ''பால்நிலை சமத்துவமென்பது பெண்கள் மற்றும் ஆண்கள், பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கிடையிலான சமமான உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் வாய்ப்புக்களைக் குறிக்கின்றது'' என கூறுகின்றது.[52] பெண்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது மாத்திரம் உண்மையான பால்நிலை சமத்துவமாகாது என UNDP இன் ஆய்வு குறிப்பிடுகின்றது (UNDP, 2019). 2013 ஆம் ஆண்டு, கொழும்பு, மட்டக்களப்பு, நுவரெலியா மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய நான்கு மாவட்டங்களில் நிலைத்திருக்கின்ற பால்நிலை அடிப்படையிலான நடத்தைப்பாங்குகள், நடைமுறைகள் மற்றும் வன்முறை தொடர்பாக Care International இனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையில், பால்நிலை சமத்துவம் என்பது மேலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதாவது, வன்முறைகளுக்கான துலங்கல்களை மேம்படுத்தல், அது தொடர்பான சேவைகளை மேம்படுத்தல், சட்டவாக்கங்கள் மற்றும் குற்றவியல் நீதி முறைமையினைப் பலப்படுத்தல் மற்றும் சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான அணுகுதலை உறுதிப்படுத்தல் ஆகியன மாத்திரம் பால்நிலை சமத்துவத்தினை அடைந்து கொள்வதற்கு போதுமானதல்ல, மாறாக, பால்நிலை சமத்துவமின்மையினைத் தோற்றுவிக்கின்ற அடிப்படை காரணிகளைக் கையாளுதலே உண்மையான பால்நிலை சமத்துவத்திற்கு வழிவகுக்கும் என வலியுறுத்தப்பட்டுள்ளது (DE Mel, Peiris, & Gomez, 2013). ''பொலிஸ் அதிகாரிகள் சமூக நியமங்களைப் பின்பற்றுபவர்களாக இருக்கின்றபட்சத்தில், பொலிஸ் நிலையங்களில் பெண்களுக்கான பிரிவொன்றினைத் தாபிப்பதனால் எவ்வித பயனுமில்லை'' என்ற நடைமுறை உதாரணம் (Birgitte, 1998), பால்நிலை சமத்துவமின்மையினைத் தோற்றுவிக்கின்ற அடிப்படைக் காரணிகளைக் கையாளுதலின் முக்கியத்துவத்தினை வெளிப்படையாக உணர்த்துகின்றது. ''பெண்கள் கல்விக்கான அணுகுதலை கொண்டிருத்தலை உண்மையான பால்நிலை சமத்துவமாகக் கருத முடியாது, மாறாக, கற்பதற்கான வாய்ப்பினை அவர்களுக்கு வழங்குவதற்கான உண்மையான நோக்கத்தினை ஆராய வேண்டும். ஆரம்பகாலங்களில், நல்ல வாழ்க்கைத்துணையினை அடைந்து கொள்ளும் நோக்கத்திற்காகவும், குடும்பங்களின் அந்தஸ்த்தினை உயர்த்திக் கொள்வதற்காகவுமே பெண்கள் கல்வி கற்பதற்கு அனுமதிக்கப்பட்டனர், மாறாக, அவர்களுடைய சுய வலுவூட்டலுக்காகவல்ல'' (Vithanage, 2015, p. 44) என வரலாற்று உதாரணங்களை சுட்டிக்காட்டி உண்மையான பால்நிலை சமத்துவத்தினை விளக்குவதற்கு Vithanage யும் முற்பட்டுள்ளார்.

சமூகத்தில் வேரூன்றியுள்ள பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் வன்முறைகளுக்கு வித்திடுவதனூடாக பால்நிலை சமத்துவத்தினை இல்லாதொழிக்கின்றன அல்லது பால்நிலை சமத்துவமின்மையினைத் தோற்றுவிக்கின்றன என்பதனை Care International இன் ஆய்வு தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது. இந்த ஆய்வு சமூகத்தில் இடம்பெறுகின்ற வன்முறைகளுக்கும் சமூக நியமங்களுக்குமானத் தொடர்பினை பங்குபற்றுகை ஆய்வுமுறையியலினூடாகத் தாபித்துள்ளது (DE Mel, Peiris, & Gomez, 2013). வன்முறையானது தனிநபர்களின் செயல்கள் மற்றும் எழுமாறான செயல்களில் தங்கியிருப்பதற்கு மாறாக, அவை பால்நிலை பாரபட்சமிக்க சமூகக் கட்டமைப்புக்களினாலேயே வடிவமைக்கப்படுகின்றன என பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களுக்கும் வன்முறைக்குமிடையிலான தொடர்பினை மற்றுமொரு ஆய்வு எடுத்துகாட்டுகின்றது. (Banu, 2016). ''இலங்கையின் கிராமிய சமுதாயங்களிலுள்ள பெண்களிடையே நிலைத்துள்ள பால்நிலை பாரபட்சமிக்க நியமங்களை மாற்றுவதற்கான சமுதாயம் சார்ந்த சுகாதார மேம்பாட்டுத் தலையீட்டின் விளைவு'' என்ற தலைப்பின்கீழ் இலங்கையில் அனுராதபுரத்திலுள்ள இரண்டு கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட பங்குபற்றுகை ஆய்வில், பெண்களினால் ஏற்றங்கீகரிக்கப்படுகின்ற பால்நிலை பாரபட்சமிக்க நியமங்களுக்கும் பெண்களுக்கெதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்குமிடையிலான தொடர்பு 'உறவுப் பாலம்' என்ற கருவியொன்றினூடாகத் தாபிக்கப்பட்டுள்ளது. இவ் உறவுப் பாலம் மூன்று அடுக்குகளைக் கொண்டுள்ளது.

---

*52* ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் பிரிவின் கருத்தேற்புகள் மற்றும் வரைவிலக்கணங்கள், <https://www.un. org/womenwatch/osagi/conceptsandefinitions.htm#:~:text=Equality%20between%20women%20and%20men,men%20and%20girls%20and%20boys.&text=Gender%20equality%20is%20not%20a,men%20as%20well%20as%20women> accessed on 18 May 2020.

இதில், மிக உச்சத்திலுள்ள அடுக்கானது வன்முறைச் சம்பவங்களையும், இடையில் உள்ள அடுக்கானது அவ்வன்முறைக்கான பால்நிலை அடிப்படையிலான காரணங்களையும், உறவுப் பாலத்திற்கு அடித்தளமாக விளங்குகின்ற கீழுள்ள அடுக்கானது பால்நிலை பாரபட்சமிக்க நியமங்களுக்குப் பெண்களால் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தினையும் குறித்துக் காட்டுகின்றது.

படம் 2.1

*உறவுப்பாலம்*




*மூலம்: இலங்கையின் கிராமிய சமுதாயங்களிலுள்ள பெண்களிடையே நிலைத்துள்ள பால்நிலை பாரபட்சமிக்க நியமங்களை மாற்றுவதற்கான சமுதாயம் சார்ந்த சுகாதார மேம்பாட்டுத் தலையீட்டின் விளைவு பற்றிய அறிக்கை*[53]

2019 ஆம் ஆண்டு OXFAM இனால் வெளியிடப்பட்ட 'இலங்கையில் பொதுப்போக்குவரத்தில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு வித்திடுகின்ற சமூக நியமங்களை மாற்றுதல்' என்ற பங்குபற்றுகை ஆய்வில், ''அதிகாரக் கட்டமைப்பு மற்றும் ஆணாதிக்கக் கட்டமைப்பில் வேரூன்றியுள்ள சமூக நியமங்கள், பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை நியாயப்படுத்துகின்றன அல்லது ஏற்றுக் கொள்ளச் செய்கின்றன என்பதுடன் அதனைப் புரிவோர் தண்டனையிலிருந்து விடுபடுகின்றதொரு கலாசாரம் தோன்றுவதற்கு மூல காரணியாய் அமைகின்றன'' என்ற விடயம் ஆழமாக வலியுறுத்தப்பட்டு சமூக நியமங்களுக்கும் வன்முறைகளுக்குமிடையிலான தொடர்பு தாபிக்கப்பட்டுள்ளது (Butt & Sharanya, 2019, p. 3). இத்தகைய வன்முறைகளை நியாயப்படுத்துகின்ற சமூக நியமங்களாக, 'பாலியல் வன்முறைகளைத் தவிர்ப்பதற்குப் பெண்கள் ஒழுக்கமாக ஆடை அணிய வேண்டும், இரவில் தனியாகப் பயணம் செய்யக்கூடாது மற்றும் பொது இடங்களில் பேசி சிரிக்கக் கூடாது' போன்றன அமைந்துள்ளனவாகவும், ஆய்வு முடிவுகளின்படி இவை மிக உறுதியாக நிலைத்துள்ள சமூக நியமங்களாக அடையாளங் காணப்பட்டுள்ளனவாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Butt & Sharanya, 2019).

### 2.1.4 சமூக நியமங்களின் தொடர்ச்சியான இருப்பிற்கான காரணங்கள்

சமூக நியமங்களின் தொடர்ச்சியான இருப்பிற்கு அவற்றோடு இணைந்துள்ள 'சமூக அங்கீகாரம்' மற்றும் 'சமூகப் புறக்கணிப்பு' என்பன பிரதான காரணங்களாக அமைந்துள்ளனவாக UNDP இன் ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. அதாவது, சமூக நியமங்களைப் பின்பற்றுகின்றபோது சமூக அங்கீகாரமும் அவற்றிலிருந்து பிறழ்வடைகின்றபோது சமூகப் புறக்கணிப்பும் விளைவாக அமைவதனால், சமூக அங்கீகாரத்தினிமித்தம் அச்சமூக நியமங்கள் தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. மேலும், தனிநபர்கள் சரியானத் தகவல்களை அணுகிக் கொள்வதிலுள்ள இடர்பாடுகள் மற்றும் வித்தியாசமாக சிந்திக்கும் ஆற்றலின்மை ஆகிய காரணிகளும் சமூக நியமங்களின் இருப்பிற்கு பங்களிப்பு செய்வதாக இவ் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது (UNDP, 2019).

53 T. Herath; D.Guruge; M.Fernando; S.Jayarathna & L.Senarathna, 'The effect of a community-based health promotion intervention to change gender norms among women in a rural community in Sri Lanka' (BMC Public Health, 2018) < https://bmcpublichealth.biomedcentral.com/articles/10.1186/s12889-018-5914-7#citeas> accessed 10 February 2021.

''சமூக நியமங்கள் சமூகத்தினால் வழங்கப்படுகின்றத் தண்டனைகளினாலும், அவற்றின் இருப்பினை வலியுறுத்துகின்ற குழுக்களினாலும் **(reference groups)** நிலைத்திருக்கின்றன'' (Butt & Sharanya, 2019) என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது. சமூக நியமங்களின் தொடர்ச்சியான இருப்பு பற்றிக் கலந்துரையாடுகின்றபோது, குடும்ப மட்டங்களில் பின்பற்றப்படுகின்ற சமூக நியமங்கள் உறுதி வாய்ந்தனவாகவும், நிலைத்திருக்கும் தன்மையினை அதிகமாகக் கொண்டனவாகவும் மற்றும் மாற்றுவதற்கு கடினமானவையாகவும் அமைந்திருக்கின்றன என UNDP ஆய்வு குறிப்பிடுகின்றது (UNDP, 2019).

சமூக நியமங்களின் இருப்பினைக் கல்வியின் மூலமாகக் கேள்விக்குட்படுத்த முடியுமென்ற கருத்தினை Goonesekere (Prof. Goonesekere, 2012) மற்றும் Vithanage (Vithanage, 2015) ஆகியோர் முன்வைத்துள்ளனர். இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட 'சுகாதாரம் மற்றும் கல்வி தொடர்பான சமூகக் கொள்கைகள் சமூக நியமங்களினால், குறிப்பாக ஆண் பிள்ளைக்கு முன்னுரிமை வழங்குதல் போன்ற சமூக நியமங்களினால் பெண் பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய பாரபட்சத்தினைத் தடுத்துள்ளன என Goonesekere எடுத்துக்காட்டியுள்ளார். (Prof. Goonesekere, 2012). மேலும், சமுதாயம் சார்ந்தத் தலையீடுகள் சமூக நியமங்களை சமூகத்திலிருந்து அப்புறப்படுத்தக்கூடிய வினைத்திறன்மிக்க முறையொன்றாகப் பங்குபற்றுகை ஆய்வுகளின்மூலம் கண்டறியப்பட்டுள்ளது (T.Herath & all, 2018).

## 2.2 சமூக நியமங்களும் பெண்களின் பால்நிலை வகிபாகமும்

சமூக நியமங்கள் பொதுவாகப் பாலினத்தை அடிப்படையாகக் கொண்டு பால்நிலை வகிபாகங்களை வரையறுக்கின்றபோதும், சமூக நியமங்களினால் வரையறுக்கப்படுகின்ற பால்நிலை வகிபாகங்களுக்கு இணங்கி ஒழுக வேண்டுமென்ற அழுத்தம் ஆண்களுக்கு அளிக்கப்படுவதில்லை, மாறாக, பெண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அத்தகைய பால்நிலை வகிபாகங்களுக்கு இணங்கி ஒழுக வேண்டியது சமூகத்தில் புறக்கணிக்கப்பட முடியாத கட்டாய விதியொன்றாக்கப்பட்டுள்ளது (Butt & Sharanya, 2019). பெண்கள் சமூக நியமங்களிலிருந்து பிறழ்வடைவதனைத் தவிர்க்கும்பொருட்டு இச்சமூகத்தில் பெண்களுக்கான பல்வேறு கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், இத்தகையக் கட்டுப்பாடுகள் ஆண்களுக்குக் காணப்படுவதில்லை (Vithanage, 2015). சமூகத்தில் பெண்களின் பால்நிலை வகிபாகங்கள் நெகிழ்வுத்தன்மையற்ற கடினமானக் கட்டமைப்பொன்றுக்குள் வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதுடன் பெண்கள் இவற்றிலிருந்து பிறழ்வடைய எத்தனிக்கின்றபோது அல்லது இக்கட்டமைப்பிலிருந்து வெளியேறுகின்றபோது, அதன் விளைவாக அல்லது அதற்கானத் தண்டனையாக வன்முறையினை எதிர்நோக்க வேண்டியேற்படுகின்றது (T.Herath & all, 2018). குடும்பங்களில் பெண்களுக்கு வழங்கப்படுகின்ற கீழ்நிலையானது சமூக நியமங்களின் நேரடி விளைவொன்றாகுமென்றும் இதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள் குறித்தும் Ayesha Banu விரிவாக ஆராய்ந்துள்ளார் (Banu 2016). பெண்களுக்கு வழங்கப்படுகின்ற இக்கீழ்நிலை வகிபாகமானது அவர்களுடைய பகிரங்க மற்றும் வணிக வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் தாக்கம் செலுத்துகின்றது (Vithanage, 2015). பெண்களுடைய விசேட கரிசனைகள் மற்றும் அவர்களுடைய தேவைகள் என்பன சமூக நியமங்களினால் வரையறுக்கப்பட்டுள்ள பெண்களுக்கான பால்நிலை வகிபாகங்களின் அடிப்படையிலேயே வடிவமைக்கப்படுகின்றன (Birgitte, 1998).

### 2.2.1 இனப்பெருக்கம் செய்பவர்களாகப் பெண்களின் பால்நிலை வகிபாகம்

இவ்விலக்கிய மீளாய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து ஆய்வுகள் மற்றும் அறிக்கைகள் மற்றும் நூல்களிலும் பெண்களுடைய பிரதான பால்நிலை வகிபாகமாக 'இனப்பெருக்கம் செய்தல்' பார்க்கப்படுகின்றது என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெண்கள் அவர்களுடைய உற்பத்தித் திறனைக் கொண்டு மதிப்பிடப்படுவதனைக்காட்டிலும், இனப்பெருக்கத்திறனை அடிப்படையாகக் கொண்டே மதிப்பிடப்படுகின்றார்கள் என்பதனை Ayesha Banu தனது ஆய்வில் சுட்டிக்காட்டியுள்ளார் (Banu 2016). பெண்களுடைய ஏனைய பால்நிலை வகிபாகங்களைக் காட்டிலும், ''தாய்'' என்ற வகிபாகத்திற்கு கூடுதல் அழுத்தம் வழங்கப்பட்டிருப்பதாக Vithanage எடுத்துக் காட்டியுள்ளார். குறிப்பாக இவர், ''மனைவி என்ற வகிபாகத்தினைவிட தாய் என்ற வகிபாகத்திற்கு கூடுதல் அழுத்தம் வழங்கப்பட்டுள்ளது'' என குறிப்பிடுகின்றார். இலங்கையில் எவ்வினத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், சமூகத்தில் எவ்வித அரசியல், சமூக மற்றும் கலாசார மாற்றம் ஏற்படினும், 'இனப்பெருக்கம்' தொடர்பாகப் பெண்களுக்குள்ள இப்பால்நிலை வகிபாகம் தொடர்பிலும், அதனைச் சூழவுள்ள

அம்சங்கள் தொடர்பிலும் எவ்வித மாற்றங்களும் ஏற்படுவதில்லை என்றும் இவர் அழுத்தமாகக் கூறியுள்ளார் (Vithanage 2015). இது தொடர்பாகக் கூறுகின்றபோது, சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களில் பெண்கள் பூப்படைகின்றபோது செய்யப்படுகின்ற சடங்கு சம்பிரதாயங்கள் பால்நிலை பாரபட்சமிக்கவையோ அல்லது குறிப்பான உரிமை மீறல்களை செய்கின்றனவோ அல்ல என்றபோதிலும், அவை பெண்களுக்கு இருக்க வேண்டிய இனப்பெருக்கத் திறனின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துவதாக அமைந்துள்ளன (Prof. Goonesekere, 2012) என Goonesekere சுட்டிக்காட்டுகின்றார். ஆணாதிக்கக் கட்டமைப்புடைய இலங்கை சமுதாயத்தில் இன்னும் 'தாய்மை' மற்றும் 'திருமணம்' ஆகிய விடயங்கள் சமூக நியமங்களினால் சூழப்பட்டனவாகவே காணப்படுகின்றன என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இச்சமூக நியமங்களிலிருந்து சிறிய அளவிலேனும் விலகிச் செல்லுதல் ஆண்களின் வன்முறைமிக்க நடத்தையினை விளைவாக்கக்கூடிய அளவிற்கு, இச்சமூக நியமங்கள் செல்வாக்கு பெற்றுள்ளன என்பது பங்குபற்றுகை ஆய்வுகளினூடாக நிரூபிக்கப்பட்டுள்ளது (T.Herath & all, 2018).

## 2.2.2 வீட்டுப் பராமரிப்பாளர்களாகப் பெண்களின் பால்நிலை வகிபாகம்

ஆணாதிக்கக் கட்டமைப்பு நிலவுகின்ற அனைத்து சமுதாயங்களிலும் பெண்களின் பால்நிலை வகிபாகமானது 'நல்ல மனைவி' மற்றும் 'நல்ல தாய்' என மட்டுப்படுத்தப்பட்ட குடும்பமென்ற அலகிற்குள் சுருக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன (Militzer, 2008). தெற்காசிய நாடுகளில், சிறுவயது முதலே எவ்வாறு ஒரு சிறந்த மனைவியாக மற்றும் தாயாக இருக்க வேண்டுமென்பது பெண் பிள்ளைகளுக்கு கற்பிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Banu, 2016). இவ்வாறு, பெண்களுடைய பால்நிலை வகிபாகங்களை வீட்டுப் பராமரிப்பாளர்களாக 'குடும்பம்' என்ற அலகிற்குள் மாத்திரம் மட்டுப்படுத்துவதனால், 'தலைவர்களாக' அல்லது 'அரசியல் பிரதிநிதிகளாக' அவர்களுடைய வகிபாகங்கள் கேள்விக்குறியாகின்றன (Vithanage, 2015). Care International இனால் செய்யப்பட்ட பங்குபற்றுகை ஆய்வில் பங்குபற்றியிருந்த அரைவாசிக்கும் மேற்பட்ட ஆய்வுப் பங்குபற்றுநர்கள் (பெண்கள் மற்றும் ஆண்கள்), ''பெண்களுடைய பிரதான வகிபாகம் குடும்பத்தைக் கவனிப்பதும் குடும்பத்திற்காக சமைப்பதுமே ஆகும்'' என்பதனை ஏற்றுக் கொண்டிருந்ததாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன (DE Mel, Peiris, & Gomez, 2013). ''குடும்பத்தின் உணவுத் தேவையினைக் கவனிப்பது பெண்களின் பிரதான கடமையாகும்'' என்ற நியமம் பெண்களிடையே அதிகளவில் நிலைத்திருப்பதாக மற்றுமொரு பங்குபற்றுகை ஆய்வும் சான்று பகர்கின்றது (T.Herath & all, 2018).

பொதுப்போக்குவரத்தில் பாலியல் மற்றும் பால்நிலை வன்முறையினை ஊக்குவிப்பதற்கு வித்திடுகின்ற சமூக நியமங்கள் தொடர்பாக செய்யப்பட்ட பங்குபற்றுகை ஆய்வொன்றில், பெண்களுடைய பால்நிலை வகிபாகமானது 'குடும்பமென்ற' அலகிற்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதனால் ஏற்படுகின்ற விளைவுகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன (Butt & Sharanya, 2019). அதாவது, பெண்கள் குடும்பப் பரப்பிற்குள் செயற்படுவதற்கு மாத்திரம் உரித்துடையவர்களாகப் பார்க்கப்படுவதனால், அவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அக்குடும்ப வட்டத்தினைவிட்டு வெளியேறி பகிரங்கப் பரப்பிற்குள் நுழைய முற்படுகின்றபோது, அவர்களை பாலியல் தொல்லைகளுக்குள்ளாக்குதல் நெறிமுறைத்தன்மை மிக்கதொரு செயலாக அல்லது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதொரு செயலாகப் பார்க்கப்படுகின்றது. வேறு வகையில் கூறின், பெண்கள் தங்களுக்குரிய மட்டுப்படுத்தப்பட்ட இடத்தினைவிட்டு ஆண்களுக்கு உரித்தான பகிரங்கப் பரப்பிற்குள் வருவது ஏற்றுக்கொள்ளப்படாததாகவும், அவ்வாறு செய்கின்ற பெண்களை தொல்லைக்குட்படுத்தல் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதொன்றாகவும் பார்க்கப்படுகின்றது. இந்த ஆய்விலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள, பங்களாதேஷில் OXFAM இனால் செய்யப்பட்டுள்ள மற்றுமொரு ஆய்வு முடிவுகளின்படி, சந்தைப்படுத்தல் மற்றும் களப் பணிகளில் ஈடுபடுகின்ற பெண்களை பாலியல் தொல்லை செய்தல் நெறிமுறையானதாகப் பார்க்கப்படுகின்றது. இதற்கான காரணம் யாதெனில், சந்தைப்படுத்தல் மற்றும் களப் பணிகள் ஆண்கள் செய்ய வேண்டிய பணிகளாகவும் அவற்றைப் பெண்கள் செய்தலானது ஏற்றுக் கொள்ளப்படாமையுமே ஆகும் (Butt & Sharanya, 2019).

இந்த ஆய்வு முடிவுகளின்படி, கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பெண்கள் பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்துவதற்கான ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய காரணங்களாக 'சந்தைக்குச் செல்தல்' மற்றும் 'பிள்ளைப் பராமரிப்பு பணிகளுக்காக வெளியே செல்தல்' போன்றன மட்டுமே குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன (Butt & Sharanya, 2019). இது பெண்களுடைய பால்நிலை வகிபாகம் குடும்ப சூழலுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனை நடைமுறையில்

எடுத்துக்காட்டக்கூடிய மிகச்சிறந்த உதாரணமாக அமைகின்றது. பெண்கள் தங்களுக்குரிய எல்லையினை விட்டு வெளியேறுகின்றமையினால்தான் பாலியல் தொந்தரவுகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர் என்ற சமூக நியமத்தின் இருப்பு காரணமாக, பாலியல் தொல்லைகளுக்கு ஆளாகாமல் இருக்க வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் பெண்கள் மீதே சுமத்தப்படுகின்றது என்பதனையும் இந்த ஆய்வு முடிவுகள் கண்டறிந்துள்ளன (Butt & Sharanya, 2019). இக்குறிப்பிட்ட சமூக நியமம் காரணமாக, பாலியல் தொந்தரவிற்கு ஆளாக்கப்படுகின்ற பெண்கள் 'நல்ல பெண்கள்' இல்லை என்ற நியமமும் வலுப் பெற்றுள்ளது. இந்நியமத்தினாலும், அதனைத் தொடர்ந்துள்ள சமூகக் களங்கத்தினாலும், பெண்கள் பாலியல் வன்முறைகள் மற்றும் தொந்தரவுகளுக்கு ஆளாகின்ற சந்தர்ப்பத்தில், அதனை அறிக்கையிடுகின்ற அல்லது முறைப்பாடு செய்கின்ற அளவு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது (Butt & Sharanya, 2019) & (DE Mel, Peiris, & Gomez, 2013). எவ்வாறெனினும், பெண்களுடைய பால்நிலை வகிபாகம் 'குடும்ப சூழலுக்கு' மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவது தொடர்பில் சில விதிவிலக்குகள் காணப்படுவதாக OXFAM இன் ஆய்வு குறிப்பிடுகின்றது. அதாவது, இயலாமைகளைக் கொண்டுள்ள பெண்கள், பணக்காரப் பெண்கள், குடும்பத் தலைமைத்துவத்தினை ஏற்றுள்ள பெண்கள் மற்றும் பெண் அரசியல் பிரதிநிதிகள் தங்களுடைய வகிபாகங்களை 'இக்குடும்ப சூழலுக்கு' மாத்திரம் மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதில்லை (Butt & Sharanya, 2019).

### 2.2.3 கலாசாரக் காவிகளாகப் பெண்களின் பால்நிலை வகிபாகம்

பெண்கள் சமுதாயத்தின் கலாசாரப் பாரம்பரியங்களை அடுத்தத் தலைமுறையினருக்கு கடத்த வேண்டிய காவிகளாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர் (Banu 2016). சமுதாயத்தின் பாரம்பரியங்கள் மற்றும் கலாசாரங்களைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பும் அழுத்தமும் பெரும்பாலும் பெண்கள் மீது மாத்திரமே சுமத்தப்படுவதனை Vithanage தனது ஆய்வில் வலியுறுத்திக் காட்டியுள்ளார் (Vithanage, 2015). இலங்கையில் நடைமுறையில் நிலைத்திருக்கின்ற பாரம்பரியங்கள் மற்றும் சமூக நியமங்களில் தென்னிந்தியாவின் இந்து மதம் கணிசமானளவு செல்வாக்கு செலுத்தியுள்ளது என ஏற்கனவே குறித்துக்காட்டப்பட்டது. அதனடிப்படையில், இந்தியாவில் நிலைத்துள்ள பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டுள்ள சில நூல்களை ஆராய்வது சாலப்பொருத்தமானது. இந்தியாவில், க.வி. இலக்கியா என்பவரால் எழுதப்பட்ட ''பெண் விடுதலை இன்று'' என்ற நூலில், பெண் பொருளாக்கம் (female objectification) என்ற கருத்தேற்பு விபரிக்கப்பட்டுள்ளது. அதாவது, பெண் பொருளாக்கம் என்பது ''பெண்களைப் பொருளாகவோ, சதையாகவோ, தங்களின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளப் பயன்படும் ஒரு கருவியாகவோ எண்ணி அவர்களுக்கானத் தனி ஆளுமையை மறுத்து அவர்களை சுதந்திரத்தன்மை அற்றவராகப் பார்ப்பதே'' ஆகும் என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. இலக்கியா, 'பெண் பொருளாக்கத்தினை', கலாசாரப் பொருளாக்கம், சுய பொருளாக்கம் மற்றும் பாலியல் பொருளாக்கம் என மூன்றாக வகைப்படுத்திக் காட்டியுள்ளார். கலாசாரப் பொருளாக்கம் எனப்படுவது கலாசாரத்தினை அல்லது கலாசாரம் என்றபேரில் சாதியக்கட்டமைப்புக்களைக் கட்டிக்காப்பதற்கான கருவிகளாகப் பெண்கள் பயன்படுத்தப்படுகின்றமை ஆகும். அதற்கமைய, கலாசாரத்தினைப் பேணிக்காக்க வேண்டிய கருவிகளாகவே பெண்கள் பார்க்கப்பட்டனர் என்ற கருத்தினை இலக்கியா மிக ஆழமாக முன்வைத்துள்ளார் (Elackia, 2016).

### 2.2.4 'சிறந்த பெண்' என்பவள் யார்?

பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் பெண்களுக்கான பால்நிலை வகிபாகங்களைக் கட்டமைத்து கூறுகின்றமைக்கு மேலதிகமாக, ஒரு 'சிறந்த பெண்ணிற்கான' இலட்சணங்களையும் வகுத்துக் கூறியுள்ளன. சிறந்த பெண் என்பவள் 'தூய்மை, இனப்பெருக்கத்திறன் மற்றும் கற்பு' ஆகிய இலட்சணங்களைக் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதாக Ayesha Banu சுட்டிக்காட்டியுள்ளார் (Banu 2016). Vithanage இது பற்றிக் கூறுகின்றபோது, பெரும்பாலும் இலங்கையிலுள்ள அனைத்து மத சமுதாயங்களிலும் சிறந்த பெண் என்பவள், 'கீழ்படிபவளாக, பணிவுள்ளவளாக மற்றும் கடுமையாகப் பணியாற்றக்கூடியவளாக' இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதாக சுட்டிக் காட்டுகின்றார் (Vithanage, 2015). ''பொதுவாக, தெற்காசியாவில் பெண் பிள்ளைகள் 'பணிவுள்ளவர்களாக, பராமரிப்பவர்களாக, கீழ்படிபவர்களாக' இருப்பதற்கு

பழக்கப்படுத்தப்படுகின்றனர்'' என Care International இன் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது (DE Mel, Peiris, & Gomez, 2013). பெண்கள் ஆணாதிக்கத்தினை ஏற்று அதற்கு கீழ்படிபவர்களாக, தூய்மையான நற்பெயருடையவர்களாக, கற்புள்ளவர்களாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் இவ் எதிர்பார்ப்பு மிக உறுதியானதாக நிலவுவதாகவும் OXFAM இன் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது (Butt & Sharanya, 2019).

**பெண்களும் கற்பும்**

கற்பு என்ற சொல்லினை வரைவிலக்கணப்படுத்தி, அதனோடு ஒன்றித்திருக்கின்ற பால்நிலை பாரபட்சத்தினைப் பெண் விடுதலைக்காக போராடிய பெரியார் மிக ஆழமாக விளக்கியுள்ளார். அதாவது, கற்பு என்பதற்கான சரியான ஆங்கிலப் பதம் Chastity என்றும், அதன் உண்மையான பொருள் Virginity என்றும், Virginity என்பதற்கான அர்த்தம் 'ஆணுக்கென்றோ பெண்ணுக்கென்றோ மட்டுப்படுத்தப்படாத, பொதுவாக ஆண், பெண் புணர்ச்சி சம்பந்தம் சிறிதும் இல்லாத பரிசுத்தத் தன்மை' (Periyar, 1942) ஆகுமென்றும் இவர் வாதிடுகின்றார். மேலும், ''புருஷர்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது பாஷைகளில் (தமிழில்) தனி வார்த்தைகளே காணாமல் மறைபட்டுக் கிடப்பதற்கு காரணம் ஆண்களின் ஆதிக்கமே தவிர வேறில்லை'' (Periyar, 1942) என சாடுவதனூடாக கற்பு என்ற கருத்தேற்போடு ஒன்றிருத்திருக்கின்ற பெண்களுக்கெதிரான பால்நிலை பாரபட்சத்தினை அழுத்தமாகக் கூறியுள்ளார். கற்பு குறித்து பேசுகின்றபோது, சாதியக் கட்டமைப்பு முறையினைத் தற்காத்துக் கொள்வதற்காகவே, கற்பு சார்ந்த தூய்மை ஒழுக்கம் பெண்களுக்கே உரித்தானது என்ற கருத்தியல் இந்திய சமூகத்தில் கடைபிடிக்கப்பட்டது என்பதனை இலக்கியா வலியுறுத்துகின்றார். மேலும், கற்பு சார்ந்தே ஒரு பெண்ணின் சமூக இருப்பு தீர்மானிக்கப்படுகின்ற போக்கு வளர்ந்துவரும் சமூகத்திற்குள் வலிய திணிக்கப்படுவதனையும் இவர் வலியுறுத்திக் காட்டியுள்ளார் (Elackia, 2016).

தெற்காசியாவைப் பொறுத்தவரையில் 'பெண்களும் அவர்களின் உடலும் கௌரவத்தின் சின்னமாகக்' கருதப்படுவதாகவும், ஒரு குடும்பத்தின் அல்லது சமுதாயத்தின் அந்தஸ்த்து அல்லது புகழினைக் காத்துக் கொள்வதற்கு பெண்களின் 'தூய்மை' மற்றும் 'ஒழுக்கத்தினைக்' காத்துக் கொள்வது மிக அவசியமெனக் கருதப்படுவதாகவும் Ayesha Banu சுட்டிக் காட்டியுள்ளார் (Banu, 2016).

## 2.3 பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களைக் கட்டிக்காப்பதிலும் கடத்துவதிலும் பெண்களின் வகிபாகம்

நடைமுறையிலிருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் அல்லது அதிகாரத் தொடர்புகள் பெண்களுக்கு ஊறு விளைவிக்கத்தக்கனவாக இருக்கின்றபோதிலும், அவற்றுக்கு இணங்கி ஒழுகுதல் அவசியமாகுமென பெண்கள் நம்புகின்றனர் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (Banu, 2016). இதற்கான நடைமுறை சான்றுகள் Care International இனால் செய்யப்பட்ட பங்குபற்றுகை ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ளன (DE Mel, Peiris, & Gomez 2013). இந்த ஆய்வின் சில முக்கிய முடிவுகளை கீழ்வருமாறு பட்டியலிடமுடியும்:

- பெண்கள் பாலியல் வன்புணர்விற்கு உள்ளாக்கப்படுகின்றபோது முதலில் பாதிக்கப்பட்டவர் ஒழுக்கமுள்ளவரா என்பதனை ஆராய வேண்டுமென்ற கருத்துடன் 67 வீதமான பெண்கள் (ஆய்வுப் பங்குபற்றுனர்கள்) இணங்கிக் கொண்டனர். ஆனால், 55 வீதமான ஆண்களே இக்கருத்துடன் இணங்கி ஒழுகியிருந்தனர்;

- சில பெண்களின் நடை, உடை, பாவனையின் காரணமாகவே அவர்கள் பாலியல் வன்புணர்விற்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்ற கருத்தினை 75 வீதமான பெண்கள் ஆதரித்திருந்தனர்;

- மூன்றில் இரண்டிற்கும் அதிகமான பெண்கள் 'ஒரு பெண் எச்சூழ்நிலையிலும் கணவனுடன் உடலுறவு வைத்துக்கொள்ள மறுக்கக்கூடாது' என்ற கருத்திற்கு ஆதரவளித்திருந்தனர்;

- 83 வீதமான பெண்கள் பிள்ளைகளுக்கு உணவளித்தல் மற்றும் அவர்களைப் பராமரித்தல் போன்றன தாயின் பொறுப்புக்கள் என்ற கருத்தினை ஏற்றுக்கொண்டிருந்தனர். எவ்வாறெனினும், இக்கருத்தினை 64 வீதமான ஆண்களே ஏற்றுக் கொண்டிருந்தனர்;

- அரைவாசிக்கும் மேற்பட்ட பெண்கள் குடும்பப் பராமரிப்பு மற்றும் சமையல் என்பனவே பெண்களின் பிரதான வகிபாகம் என்ற கருத்தினை ஏற்றுக்கொண்டிருந்தனர் (DE Mel, Peiris, & Gomez 2013).

பெண்கள் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களைக் கட்டிக்காப்பதற்கான அல்லது அடுத்தத் தலைமுறையினருக்கு கடத்துவதற்கான அடிப்படைக் காரணங்களை அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட சமூக நியமங்கள் தொடர்பான பங்குபற்றுகை ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது. அதாவது, பெண்களுக்கெதிரான வன்முறைக்கு அடிப்படையாக அமைகின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை அடுத்தத் தலைமுறைக்கு கடத்துகின்ற பிரதான நபர்களாகப் பெண்களே காணப்படுகின்றனர் என்பதனை வலியுறுத்துகின்ற இந்த ஆய்வு, இதற்கான காரணமாக, 'தெற்காசிய சமூகங்களில் பெண்கள் ஆண்களின்றி தங்களைப் பலமற்றவர்களாகக் கருதுவதுடன் ஆண்களே தங்களுடைய குடும்பங்களில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென விரும்புகின்றார்கள்' என்பதனை சுட்டிக்காட்டியுள்ளது. மேலும், இதற்கான மற்றுமொரு காரணமாக, 'அத்தகைய சமூக நியமங்களைப் பின்பற்றுகின்றமையானது தம்மை வன்முறைகளிலிருந்து பாதுகாப்பதுடன் தமது குடும்பங்களின் நற்பெயரினையும் பாதுகாக்குமென பெண்கள் நம்புகின்றார்கள்' என்பதனையும் இந்த ஆய்வு அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது (T.Herath & all, 2018).

இது பற்றி பெரியார் குறிப்பிடுகின்றபோது, ''அநேக வருடப் பழக்கங்களால் தாழ்ந்த சாதியார் எனப்படுவோர் எப்படித் தாங்கள் தாழ்ந்த வகுப்பார் என்பதையும் ஒப்புக் கொண்டு, தாமாகவே கீழ்ப்படியவும் ஒடுங்கவும் விலகவும் முந்துகின்றார்களோ, அதுபோலவே பெண்மக்களும் தாங்கள் ஆண்மக்களின் சொத்துக்களென்றும், அவர்களது கோபத்திற்கு ஆளாகக் கூடாதவர்கள் என்றும் நினைத்துக்கொண்டு சுதந்திரத்தில் கவலையற்று இருக்கிறார்கள்'' (Periyar, 1942) என கூறுகின்றார். பால்நிலை சமத்துவமின்மையுடைய இச்சமூகத்தில் பெண்கள் பாதிக்கப்பட்டவர்களாக அல்லது பாதிக்கப்படுபவர்களாக உள்ள அதேவேளை, இச்சமூக அமைப்பின் காப்பாளர்களாகவும் அவர்களே விளங்குகின்றனர் (Elackia, 2016) என இலக்கியா வலியுறுத்துகின்றார்.

## 2.4 யுத்தத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் சமூகங்களில் சமூக நியமங்களின் போக்கு

யுத்தத்திற்கு பின்னரான சமூகக் கட்டமைப்புக்களில் பால்நிலை வகிபாகங்கள் எவ்வாறு மீளக் கட்டமைக்கப்படுகின்றன என்பதனை ஆராய்கின்ற, Sorenson Birgette இனால் எழுதப்பட்டுள்ள அறிக்கையானது யுத்தத்திற்கு பின்னர் சமுதாயங்களில் சமூக நியமங்கள் எத்தகைய மாற்றங்களுக்கு அல்லது நெகிழ்வுத்தன்மைகளுக்கு உட்படுகின்றன என்பதனை விரிவாக ஆராய்ந்துள்ளது. அரசியல் மீள் கட்டமைப்பு, பொருளாதார மீள் கட்டமைப்பு மற்றும் சமூக மீள் கட்டமைப்பு ஆகிய மூன்று பிரிவுகளின்கீழ் இது ஆராயப்பட்டுள்ளது. யுத்தத்தின் விளைவுகளின் காரணமாக, யுத்தத்தின் பின்னர் பெண்கள் புதிய வகிபாகங்களை வகிக்க வேண்டிய நிலையேற்படுகின்றது. உதாரணமாக, யுத்தத்தில் கணவனை இழந்த பெண்கள் குடும்பத்தின் தலைமைத்துவப் பொறுப்பினையேற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இத்தகைய புதிய வகிபாகங்கள் சமூகத்திலுள்ள விழுமியங்கள் மற்றும் நியமங்களை நிலைமாற்றும் என Birgitte சுட்டிக்காட்டுகின்றார். யுத்தத்திற்கு முன்னர் பெண்கள் சில செயற்பாடுகளை செய்கின்றபோது அதனை ஏற்றுக்கொள்ளாத சமூகம், அதே செயற்பாடுகளை யுத்தத்தின் பின்னரான சூழ்நிலையில், புதிய வகிபாகங்களை வகிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள பெண்கள் புரிகின்றபோது, அதனை தயக்கத்துடனேனும் ஏற்றுக்கொள்ள முனைகின்றது என இதனை மேலும் விவரிக்கின்றார் (Birgitte, 1998). இதனை, Patti Petesch என்பவர் 'சமூக நியமங்களின் நிலைமாற்றம்' மற்றும் 'சமூக நியமங்களின் தளர்ச்சி' என இரு வேறு கருத்தியல்களை முன்வைத்து விளக்குகின்றார். அதாவது, சமூக நியமங்கள் தளவர்வடைகின்றபோது சமுதாய உறுப்பினர்கள் சமூக நியமங்களிலிருந்து பிறழ்வடைந்து செயற்படின் அது பொதுவான விதியாக சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாது, மாறாக அது விதிவிலக்காகக் கொள்ளப்படும். ஆனால், சமூக நியமங்கள் நிலைமாற்றமடைகின்றபோது புதிய விதிகள் விதிவிலக்குகளாக அன்றி பொது விதியாகவே ஏற்றுக் கொள்ளப்படும் என இவர் விளக்குகின்றார். அத்துடன், யுத்தத்தின் விளைவுகளினால் சமூக நியமங்கள் நிலைமாற்றமடைவதில்லை என்றும், மாறாக அவை தளர்வடைகின்றன என்றும் இவர் நிறுவுகின்றார் (Petesch, 2017). இக்கருத்தியலுடன் தொடர்புற்ற இலங்கை குறித்த பகுப்பாய்வினை அத்தியாயம் ஐந்தில் காண முடியும்.

மேலும், யுத்தத்தினை எதிர்கொண்டுள்ள நாடுகளில் மனிதவள விருத்திக்கானத் தேவை அதிகமாகக் காணப்படுகின்றபோது, பெண்கள் அவர்களுடைய பால்நிலை வகிபாகங்களுடன் முரண்படுகின்ற வேலைகளை செய்வதற்கு கூட ஊக்குவிக்கப்படுகின்றனர் என்பதனை சுட்டிக்காட்டி யுத்தத்தின் பின்னரான சமூகங்களில் சமூக நியமங்கள் நெகிழ்வடையும் போக்கினை Birgitte விளக்குகின்றார்.

யுத்தத்தின்போது மற்றும் யுத்தத்திற்கு உடனடி பின்பாக தொழிற்சந்தையில் பெண்களுடைய பங்கேற்பு அதிகரிக்கின்றது என்பதனை நிகழ்வுக் கற்கைகள் எடுத்துக்காட்டுகின்றன. யுத்தத்தின் விளைவொன்றாக பெண்களுடைய தொழிற் பங்குபற்றுகை அதிகரித்தபோதிலும், சம அளவான ஊதியத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாமை மற்றும் ஏற்கனவே காணப்பட்ட குடும்பப் பொறுப்புக்கள் அதேயளவில் தொடர்ந்திருத்தல், தொழிற் சுரண்டல்கள் போன்ற காரணங்களினால் பெண்கள் அதிகளவில் பாதிக்கப்படுபவர்களாகவே காணப்படுகின்றனர் என்பதனையும் இந்நிகழ்வுக் கற்கைகள் எடுத்துக் காட்டுகின்றன (Justino, 2012).

எவ்வாறெனினும், யுத்தத்திற்கு பின்னர் பாரம்பரியமான பால்நிலை வகிபாகங்கள் மீள அறிமுகப்படுத்தப்பட்டு, அவற்றுக்கு முரணான வகையில் பகிரங்க பரப்புக்களில் செயற்படுகின்ற பெண்கள் ஓரங்கட்டப்படுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு என்பதனை எடுத்துக்காட்டுவதற்கு Birgitte தவறவில்லை. பெண்கள் தாம் வகித்து வந்த மரபுரீதியான வகிபாகங்களிலிருந்து விடுபட்டு, குடும்பத் தலைவர்களாக, வருமானமீட்டுபவர்களாக, அரசியல் பிரதிநிதிகளாக புதிய வகிபாகங்களை வகிக்கின்றபோது, அவர்கள் பெரும்பாலும் எதிர்ப்புக்களுக்கும் ஓரங்கட்டல்களுக்கும் உள்ளாகின்றனர். பெண்கள் இவ்வகிபாகங்களை வகிக்க ஆரம்பித்தால் அவ்வகிபாகங்களுக்கான பிரத்தியேக உரிமையாளர்களாக இருக்கும் தங்களின் இருப்பு கேள்விக்குட்படுத்தப்படலாம் என ஆண்கள் மத்தியில் எழக்கூடிய பயம் இவ் எதிர்ப்புக்களுக்கான பிரதான காரணமொன்றாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Birgitte 2017).

யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களின் காரணமாக பெண்களின் பாரம்பரிய பால்நிலை வகிபாகங்கள் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளன மற்றும் சவாலுக்குட்பட்டு வருகின்றன என கூறுகின்ற Birgitte, சமூகங்கள் புதிய சூழ்நிலைக்கமைய பால்நிலை அடையாளங்களை புதிதாக வகுத்துக் கொள்வதற்கு போராடி வருவதாகவும், எவ்வாறெனினும், புதிய அடையாளங்களை வகுத்துக் கொள்வதற்கான இப்போராட்டமானது வளங்கள் மற்றும் அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டத்துடன் இணைவதனால் ''பால்நிலை வகிபாகங்களை'' மீளக்கட்டியமைத்தல் மிகவும் சிக்கலான விடயமொன்றாகவே உள்ளது என விபரிக்கின்றார் (Birgitte 1998).

இவ் அறிக்கையானது, பெண் போராளிகள், பெண்களினால் தலைமைதாங்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களின் முன்னெடுப்புக்கள், பெண்களினால் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் போன்ற இலங்கை யுத்தத்துடன் தொடர்புறுகின்ற சில அம்சங்கள் தொடர்பாக ஆராய்ந்திருந்தாலும், இது 1998 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட அறிக்கையொன்றாக அமைவதனால் இலங்கையில் யுத்தத்திற்கு பிற்பட்ட காலத்தில் யுத்தம் நடைபெற்ற இடங்களில் சமூக நியமங்களின் போக்கு எவ்வாறு அமைந்திருந்தது என்பதனை குறிப்பாக ஆராயவில்லை. இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான சமுதாயத்தில் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் எத்தகையத் தாக்கத்தினைக் கொண்டுள்ளன என்பதனை விரிவாக ஆராய்வதற்கான போதுமான ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை.

எவ்வாறெனினும், OXFAM இனால் செய்யப்பட்ட ஆய்வானது, இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தினை பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ள நியமங்களை நிலைமாற்றுகின்ற ஒரு காரணியாக அடையாளப்படுத்தியுள்ளது. குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இந்த ஆய்வில் பங்குபற்றியிருந்த பங்குபற்றுநர்கள், பெண் குடும்பத் தலைவர்கள் தொடர்பில் இப்பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் எவ்வாறு நெகிழ்வடைந்துள்ளன என்பதனை சுட்டிக்காட்டியிருந்தனர். எவ்வாறெனினும், யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வெளிவந்த தமிழ் மாத சஞ்சிகைகளில் எழுதப்பட்டுள்ள பெண்கள் மற்றும் யுத்தம் தொடர்பானக் கட்டுரைகள், அக்காலத்தில், குறிப்பாக, தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் காணப்பட்ட வடக்கு பிரதேசத்தில் பால்நிலை சமத்துவமின்மைகள் அதிகளவில் நிலவியதாக குறிப்பிட்டுக் காட்டுகின்றன. பெண்ணடிமைத்தனத்தினை ஒழிப்போமென தமிழீழ விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தியிருந்தபோதிலும் கூட, அவ்வியக்கத்தின் நடைமுறைகள் மற்றும் நிலைப்பாடுகள் முழுமையான பால்நிலை சமத்துவத்தினை அங்கீகரிக்கவில்லை என இக்கட்டுரைகள் விமர்சிக்கின்றன. குறிப்பாக, பெண்களுடைய கற்பு பற்றி இவ்வியக்கம் தூய்மைவாதப் போக்கினைக் கொண்டிருந்ததாகவும், பாலியல் வன்புணர்விற்குள்ளாக்கப்பட்டப் பெண்கள் 'வழிதவறிபோனவர்கள்' என விமர்சிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது (பாஞ்சாலி, கற்பென்று எதனைச் சொல்வீர் , 1991).

அத்துடன் இக்காலப்பகுதியில் கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்துக் கொள்கின்ற நடைமுறையும் கடுமையாக விமர்சிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (பாஞ்சாலி, யுத்தமும் பெண்களும், 1990). இவ்வாறு, யுத்தத்தினால் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பாக பல வேறுபட்டக் கருத்துக்கள் நிலவி வருகின்றன. எவ்வாறெனினும், இதனை ஆழமாக மற்றும் முறையாக ஆராய்வதற்கான அடிப்படைத் தேவையொன்று உள்ளமை கண்கூடு.

# அத்தியாயம் 3

# 3 ஆய்வு முறையியல்

## 3.1 அறிமுகம்

இந்த ஆய்வானது இலங்கையின் வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் மற்றும் அவைசார்ந்த கள மட்ட நடைமுறைகள் என்பனவற்றை அறிந்து கொள்வதனை நோக்கமாகக் கொண்டதாகும். ஆகவே, இந்த ஆய்விற்கான பிரதான முறையியல் அணுகுமுறையாக பங்குபற்றுகை அணுகுமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் ஒவ்வொரு படிமுறையின்போதும் சமுதாய அங்கத்தவர்கள் உள்வாங்கப்பட்டு, அவர்களது பங்களிப்பும் பங்கேற்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆய்வானது 'பால்நிலை சமத்துவம்' என்ற அடிப்படைக் கோட்பாட்டின்மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் விடயப்பொருளுடன் இணைந்திருக்கின்ற 'உணர்வுபூர்வத்தன்மை' காரணமாக, இந்த ஆய்வு நோக்கத்திற்காக 'நெறிசார் விதிமுறைக்கோவையொன்று'[54] விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதுடன் அதன் விதிகளுக்கு உட்பட்டு இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்நெறிசார் விதிமுறைக்கோவையானது சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (LST) இன் ஆய்வுக் குழுவினரால் தயாரிக்கப்பட்டு Chrysalis இன் அனுமதியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஆய்விற்கான விரிவானத் திட்டத்தினை[55] LST இன் ஆய்வுக்குழு வடிவமைத்திருந்தது என்பதுடன் அதனை செம்மைப்படுத்துவதற்கான பின்னூட்டங்களையும் அதற்கான அனுமதியினையும் Chrysalis வழங்கியிருந்தது.

இந்த ஆய்வானது, 'இலங்கையின் வடக்குப் பிரதேசத்தில் பெண்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மேம்படுத்தும்பொருட்டு பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை நிலைமாற்றம் செய்ய எத்தனிக்கின்ற' TRANSFORM நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்படுகின்ற ஒரு செயற்பாடாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி இலக்கு, 'பால்நிலை சமத்துவம், மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் நீதியினை மேம்படுத்துவதனூடாக மற்றும் பாதுகாப்பதனூடாக இலங்கையின் வடக்குப் பிரதேசத்தில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல்' ஆகும். இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதியுதவி ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, இந்த ஆய்வானது Chrysalis இனால் வழங்கப்படுகின்ற ஒழுங்கமைப்பிற்கான ஆதரவுடன் LST இனால் மேற்கொள்ளப்பட்டது.

## 3.2 ஆய்வுக் குறிக்கோள்கள்

இப்பங்குபற்றுகை ஆய்வானது, பாரபட்சமிக்க சமூக நியமங்கள் மற்றும் அவை கொண்டிருக்கக்கூடிய பால்நிலை சார்ந்தத் தாக்கங்கள் மற்றும் அத்தாக்கங்கள் பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் தாக்கம் செலுத்துகின்ற பாங்கு என்பனவற்றை ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஆய்வின் குறிப்பான குறிக்கோள்களாக பின்வருவன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன:

1. சமூகத்தில் (வட மாகாணத்தில்) நிலைத்திருக்கின்ற சமூக நியமங்களையும், அவை பெண்கள் மீது கொண்டுள்ள பால்நிலை சார்ந்த தாக்கங்களையும், அவை எவ்வாறு பெண்கள் அவர்களது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்து கொள்வதற்குத் தடை விதிக்கின்றன என்பதனையும் அறிந்து கொள்ளுதல்.
2. மோதல் காலப்பகுதியில் மற்றும் மோதலுக்குப் பிற்பட்ட காலப்பகுதிகளில் சமூக நியமங்கள் எத்தகைய மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன என்பதனையும் அச்சமூக நியமங்களின் தாக்கங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காக பெண்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த உபாயப் பொறிமுறைகளையும் கண்டறிதல்.

---

*54* பின்னிணைப்பு *1*
*55* பின்னிணைப்பு *2*

3. பால்நிலை பாரபட்சமிக்க தேசிய எடுத்துரைப்புக்கள் எவ்வாறு பெண்கள் அவர்களது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்து கொள்வதில் தாக்கம் செலுத்துகின்றன என்பதனை ஆராய்தல்.

## 3.3 ஆய்வு நெறிமுறைகள்

இந்த ஆய்வின் விடயப்பொருளுடன் ஒன்றித்திருக்கின்ற கூருணர்தன்மையினைக் கருத்திற்கொண்டு, இந்த ஆய்வின் தரவு சேகரிப்பு செயன்முறையினை ஒழுங்குபடுத்துகின்ற விசேட நோக்கத்திற்காக 'நெறிசார் விதிமுறைக்கோவையொன்று' உருவாக்கப்பட்டது. ஆய்வு நெறிமுறைகள் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச நியமங்களைக் கருத்திற்கொண்டு இவ்விதிமுறைக்கோவை ஆக்கப்பட்டுள்ளது. இவ்விதிமுறைக்கோவை எட்டு (8) பிரதான அடிப்படை வழிகாட்டல் கோட்பாடுகளைக் கொண்டமைந்திருந்தது. அவையாவன:

**1. ஆய்வுப் பங்குபற்றுநர்களின் கௌரவம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்**

தரவு சேகரிப்பாளர்கள் தரவு சேகரிப்பிற்காக ஆய்வுப் பங்குபற்றுநர்களை அணுகுகின்றபோது அவர்களது கௌரவம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் அத்தியாவசியமானதாகும். ஆய்வு செய்கின்ற நிறுவனங்கள், ஆய்வின் நோக்கம் என்பனவற்றை முறையாக அறிமுகப்படுத்தல், முன் அனுமதியுடன் அணுகல், உணர்வுபூர்வமான விடயங்களை மிகக் கவனமாகக் கையாளுதல், பதிலளிப்பதற்கு போதியளவு நேரம் வழங்கல் மற்றும் தரவு சேகரிக்கின்ற சூழல் பாதுகாப்பானது என்பதனை உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்கள் இதன்கீழ் உள்ளடக்கப்படுகின்றன.

**2. அறிந்து வழங்கப்படுகின்ற இணக்கம்**

ஆய்வுப் பங்குபற்றுநர்கள் உள்ளடங்கலாக இந்த ஆய்விற்கானத் தகவல்களை வழங்குகின்ற அனைத்து தரப்பினரிடமிருந்தும், அவர்களால் வழங்கப்படுகின்றத் தகவல்களை ஆய்வு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கான அவர்களது முன்கூட்டிய சம்மதத்தை எழுத்துவடிவில் பெற்ற பின்னரே தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டும். இச் சம்மதமானது ஆய்வு பற்றிய தகவல்களை அவர்களுக்கு நன்கு விளக்கிக்கூறியதன் பின்னர் பெறப்பட வேண்டும்.

**3. சான்றுப்படுத்தல்**

தரவு சேகரிப்பாளர்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான உத்தியோகபூர்வ ஆவணங்கள் அவர்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன், ஆய்வுப் பங்குபற்றுநர்கள் கோரிக்கை விடுக்கின்றபட்சத்தில் அவற்றை அவர்களுக்குக் காண்பிக்க வேண்டுமென்றும் தரவு சேகரிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

**4. பெயர் குறிப்பிடாமை மற்றும் இரகசியத்தன்மை**

ஆய்வு செயன்முறையின் அனைத்துக் கட்டங்களிலும் ஆய்வுப் பங்குபற்றுநர்களின் அந்தரங்கத்திற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். சேகரிக்கப்படுகின்றத் தரவுகள் இரகசியமாகப் பேணப்பட வேண்டும். ஆய்வுப் பங்குபற்றுநர்களுக்கு தங்களது அடையாளத்தை வெளிப்படுத்தாமலிருப்பதற்கான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். இந்த ஆய்வில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆய்வுப் பங்குபற்றுநர்களின் புகைப்படங்கள் மற்றும் அவர்களது பெயர்கள் என்பன அவர்களின் சுய இணக்கத்தின் அடிப்படையிலேயே இணைக்கப்பட்டுள்ளன.

**5. இடைவிலகலுக்கான ஆய்வுப் பங்குபற்றுநர்களின் உரிமை**

ஏதேனும் காரணங்களினிமித்தம் அல்லது எவ்வித காரணங்களுமின்றி இந்த ஆய்வுச் செயன்முறையிலிருந்து இடைவிலகுவதற்கான உரிமை ஆய்வுப் பங்குபற்றுநர்களுக்கு உண்டு.

**6. சிறுவர்களிடமிருந்து தரவுகளைச் சேகரித்தல்**

18 வயதிற்குக் கீழ்ப்பட்ட நபர்களிடமிருந்து தரவுகளை சேகரிக்கின்ற சந்தர்ப்பங்களில் அவர்களது பெற்றோர்களின் அல்லது பாதுகாவலரின் எழுத்துமூலமான சம்மதம் பெறப்பட வேண்டும்.

**7. ஆய்வுப் பங்குபற்றுநர்களுக்கான நன்மைகள்**

தரவு சேகரிப்பின்போது இந்த ஆய்வினூடாக ஆய்வுப் பங்குபற்றுநர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியமான நன்மைகள் குறித்த விளக்கம் தரவு சேகரிப்பாளர்களால் ஆய்வுப் பங்குபற்றுநர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

**8. கொவிட்-19 இற்கான பாதுகாப்பு வழிகாட்டல்கள்**

முகக் கவசமணிதல், கிருமி நீக்கிகளின் பாவனை போன்றன உள்ளடங்கலாக கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து தரவு சேகரிப்பாளர்கள், ஆய்வுப் பங்குபற்றுநர்கள் மற்றும் ஏனைய அனைவரையும் பாதுகாத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு வழிமுறைகள் தரவு சேகரிப்பின்போது பின்பற்றப்பட வேண்டும். ஆய்வுக்குழு தரவு சேகரிப்பாளர்களுக்கு அவசியமான சுகாதார உபகரணங்களை வழங்குதல் வேண்டும்.

## 3.4 தரவு சேகரிப்பு முறைகள்

**உரு 3.1**

*தரவு சேகரிப்பு முறைகள்*



ஆய்விற்கானத் தரவுகளைத் திரட்டுவதற்குரிய தரவு சேகரிப்புக் கருவி (வினாக்கொத்து) LST இன் ஆய்வுக் குழுவினரால் தயாரிக்கப்பட்டது. இவ்வினாக்கொத்தின் உருவாக்கத்தில் சமுதாய உறுப்பினர்களின் பங்களிப்பு பல்வேறு உத்திகளினூடாக உறுதி செய்யப்பட்டது. வினாக்கொத்தினை வடிவமைப்பதன் முதற் கட்டமாக, வட மாகாணத்தில் நிலைத்துள்ள பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பாக இலக்கிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. இலக்கிய மீளாய்வின் அடிப்படையில், குறிப்பிட்ட எண்ணிக்கையான சமூக நியமங்கள் ஆய்வுக் குழுவினரால் பட்டியற்படுத்தப்பட்டன. எவ்வாறெனினும், இத்தகைய சமூக நியமங்கள் தற்காலத்தில் எந்தளவிற்கு சமூகத்தில் நிலைத் -துள்ளன என்பதனை அறிந்துக் கொள்கின்ற முயற்சியின் முதற்கட்டமாக, வட மாகாணத்திலுள்ள இளைஞர்களுடன் நிகழ்நிலைக் கலந்துரையாடலொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.[56] இக் கலந்துரையாடலினூடாக வடமாகாணத்தில் நிலைத்திருக்கின்ற சமூக நியமங்கள் தொடர்பான ஒரு ஆரம்பநிலை அறிவினைக் கட்டியெழுப்பக்கூடியதாக இருந்தது.

அவ் ஆரம்பநிலை அறிவினை மையமாகக் கொண்டு, தரவு சேகரிப்பாளர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சிகள் நிகழ்நிலையில் ஒழுங்கு செய்யப்பட்டன.[57] இத் திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சிகளின் போது ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த தரவு சேகரிப்பாளர்கள் தத்தமது மாவட்டங்களில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை அடையாளப்படுத்தியிருந்தனர். பெரும்பாலான சமூக நியமங்கள் வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிலும் காணப்பட்டபோதிலும், அவை நிலைத்திருக்கின்ற அளவு வேறுபட்டு இருந்ததனைக் காணக்கூடியதாக இருந்தது. இலக்கிய மீளாய்வு, இளைஞர்களுடனான கலந்து -ரையாடல் மற்றும் தரவு சேகரிப்பாளர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சிகள் ஆகியவற்றினூடாக அடையாளப்படுத்தப்பட்ட பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்கொத்து வடிவமைக்கப்பட்டது. இவ்வினாக்கொத்து பின்னிணைப்பொன்றாக இணைக்கப்பட்டுள்ளது.[58]

படம் 3.1

வடக்கில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பாக இளைஞர்களுடனான இணையவழி கலந்து -ரையாடல்



படம் 3.2 மற்றும் 3.3

தரவு சேகரிப்பாளர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சியின்போது எடுக்கப்பட்டவை






56 2021 பெப்பிரவரி மாதம் 4 ஆம் திகதி zoom தளம் வாயிலாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

57 இத்திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சிகள் பெப்ரவரி மாதம் 08 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தினைச் சேர்ந்த தரவு சேகரிப்பாளர்களுக்கும், 09 ஆம் திகதி கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த தரவு சேகரிப்பாளர்களுக்கும், 17 ஆம் திகதி மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த தரவு சேகரிப்பாளர்களுக்கும் இடம்பெற்றது.

58 பின்னிணைப்பு 3

**CARE இன் SNAP கட்டமைப்பு (சமூக நியமங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கான கட்டமைப்பு)**

இந்த ஆய்விலே ஆராயப்படவுள்ள பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் 'சமூக நியமங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கான தளக் கட்டமைப்புக் கருவியினைப்' (SNAP கட்டமைப்புக் கருவி) பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு, தரவு சேகரிப்பிற்கான வினாக்கொத்தானது SNAP கட்டமைப்புக் கருவியினூடாக பகுப்பாய்வு செய்யப்படக்கூடியவகையில் தயாரிக்கப்பட்டது. SNAP கட்டமைப்பானது சமூக நியமங்களின் ஐந்து கூறுகள் தொடர்பாக ஆராய்வதற்கேற்றவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1**

*SNAP கட்டமைப்பு*[59]

| சமூக நியமமொன்றின் ஆக்கக்கூறுகள் | விளக்கம் |
|---|---|
| நடைமுறை எதிர்பார்ப்புக்கள் | ஏனையோர் என்ன செய்கின்றனர் என நான் நினைக்கின்றேன் |
| விதிமுறை எதிர்பார்ப்புக்கள் | நான் செய்ய வேண்டுமென ஏனையோர் எதிர்பார்ப்பதாக நான் கருதும் விடயங்கள் |
| சமூகத் துலங்கல் (அனுமதி/தண்டனைகள்) | குறிப்பிட்ட எனது நடத்தை தொடர்பாக ஏனையோரது துலங்கல் |
| அனுமதி/தண்டனைகளுக்கு துலங்குமளவு | சமூகத் துலங்கலுக்கேற்ப நடத்தையினை மாற்றிக்கொள்கின்ற அளவு |
| விதிவிலக்குகள் | குறிப்பிட்ட சமூக நியமத்திலிருந்து பிறழ்வடையக்கூடிய அனுமதிக்கப்பட்ட ஏதேனும் சந்தர்ப்பங்கள் உள்ளனவா? |

சமூக நியமங்களை மதிப்பீடு செய்வதற்கான இந்த SNAP கட்டமைப்பானது, சமூக எதிர்பார்ப்புக்களை (நடைமுறை எதிர்பார்ப்புக்கள் மற்றும் விதிமுறை எதிர்பார்ப்புக்கள்) பகுப்பாய்வு செய்வதனூடாக நிலைத்திருக்கின்ற சமூக நியமமொன்றின் பலத்தினை மதிப்பிட்டுக் கொள்வதற்காக விருத்தி செய்யப்பட்டுள்ளது. சமூக எதிர்பார்ப்புக்கள் இருவகைப்படும்.

**உரு 3.2**




அத்துடன், இந்த கட்டமைப்பானது குறிப்பிட்ட நியமமொன்றினைப் பின்பற்றாது விடுகின்றமையினால் ஏற்படுகின்ற விளைவுகள் மற்றும் அவை எவ்வாறு குறிப்பிட்ட நியமமொன்றினைப் பின்பற்றுவதற்கான அழுத்தத்தினை வழங்குகின்றன என்பதனை அறிந்து கொள்வதற்கும் உதவுகின்றது. மேலும், இக்கட்டமைப்பானது, குறிப்பிட்ட சமூக நியமம் நிலைத்திருப்பதில் செல்வாக்கு செலுத்துகின்ற நபர்கள் மற்றும் குறிப்பிட்ட சமூக நியமம் பிறழ்வடைவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் என்பவற்றை அடையாளப்படுத்துவதனூடாக, அச்சமூக நியமங்களை நிலைமாற்றுவதற்கானத் தலையீடுகளை விருத்தி செய்து கொள்வதற்கும் உதவுகின்றது.

59 Ben Cislaghi and Lori Heise. 2016. Measuring Gender-related Social Norms: Report of a Meeting, Baltimore Maryland, June 14-15, 2016. Learning Group on Social Norms and Gender-based Violence of the London School of Hygiene and Tropical Medicine

அத்துடன் இக்கட்டமைப்பானது, குறிப்பிட்ட சமூக நியமத்தின் பலம் (உறுதித்தன்மை) வேறுபட்ட காலப்பகுதிகளில் மாற்றமடைந்துள்ளதா என்பதனை ஒப்பிட்டு ஆராய்வதற்கும் உதவி செய்யும். இந்த ஆய்வினைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படவிருக்கின்ற தலையீடுகளின் விளைவாக இச்சமூக நியமங்களின் பலம் எந்தளவிற்கு மாற்றமடைந்துள்ளது என்பதனைக் கணிப்பதற்கு இக்கட்டமைப்பினை நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## 3.5 ஆய்வுப் பங்குபற்றுநர்களின் தெரிவு

இந்த ஆய்வின் மிக முக்கிய பங்குதாரர்களாக ஆய்வுப் பங்குபற்றுநர்கள் காணப்படுகின்றனர். வட மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலுமுள்ள சமுதாய உறுப்பினர்களே ஆய்வுப் பங்குபற்றுநர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். Chrysalis ஆனது TRANSFORM நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஏற்கனேவே சுமார் 500 பயனாளிகளைத் தெரிவு செய்து வைத்திருந்தது. அவர்களுள் சுமார் 400 பேர் இந்த ஆய்வின் பங்குபற்றுநர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். எவ்வாறெனினும், தெரிவு செய்யப்பட்ட அவ் 400 ஆய்வுப் பங்குபற்றுநர்களின் பின்னணியினை ஆராய்ந்து பார்க்கின்றபோது, அவர்களுள் பெரும்பாலானோர் சிவில் சமுதாய செயற்பாடுகள் மற்றும் மனித உரிமை செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களாகவும், அரசியல் பிரதிநிதிகளாகவும் காணப்பட்டனர். இத்தகையதொரு பின்புலத்தினைக் கொண்டுள்ள ஆய்வுப் பங்குபற்றுநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பதில்கள் அவர்களுடைய பொது/ அரசியல் வாழ்வின் ஈடுபாடு காரணமாக சிலவேளைகளில் ஒரேமாதிரியானதாக இருக்கலாம் என்ற கரிசனையினாலும், இந்த ஆய்வில் பொது வாழ்வில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளாது குடும்ப வாழ்க்கைக்குள் மாத்திரம் தங்களை மட்டுப்படுத்திக் கொள்கின்ற பெண்களுடைய கருத்துக்களை உள்ளீர்த்துக் கொள்வது இன்றியமையாதது என்ற கரிசனையினாலும், ஆய்வுக்குழுவானது, மேலும் சில சமுதாய உறுப்பினர்களை இந்த ஆய்வின் பங்குபற்றுநர்களாக இணைத்துக் கொள்ள விரும்பியது. அதனடிப்படையில், Chrysalis இன் பயனாளிகள் பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 300 பேர் மற்றும் ஏனைய சமுதாய உறுப்பினர்கள் 250 பேர் உள்ளடங்கலாக மொத்தமாக 550 ஆய்வுப் பங்குபற்றுநர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். எவ்வாறெனினும், தவிர்க்கமுடியாத சில காரணங்களினால் அவர்களுள் 532 பேரிடமிருந்து மட்டுமே எம்மால் ஆய்விற்கானத் தகவல்களைத் திரட்டக் கூடியதாக இருந்தது.[60]

**அட்டவணை 3.2**

*மாவட்டம் மற்றும் பாலின அடிப்படையில் ஆய்வுப் பங்குபற்றுநர்களின் வகைப்பாடு*

| மாவட்டம் | பெண்கள் | ஆண்கள் | திருநர் | திருநங்கைகள் | ஏனையோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 86 | 24 | - | 01 | 01 | 112 |
| கிளிநொச்சி | 52 | 36 | - | - | 03 | 91 |
| முல்லைத்தீவு | 41 | 19 | - | - | 03 | 63 |
| வவுனியா | 107 | 59 | - | - | 06 | 172 |
| மன்னார் | 82 | 12 | - | - | - | 94 |
| **மொத்தம்** | | | | | | 532 |

**அட்டவணை 3.3**

*வயது அடிப்படையில் ஆய்வுப் பங்குபற்றுநர்களின் வகைப்பாடு*

| வயது | பெண் | % | ஆண் | % | ஏனையோர் | % |
|---|---|---|---|---|---|---|
| 18 இற்கு கீழ் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 19-30 | 70 | 13.3 | 38 | 7.2 | 7 | 1.3 |
| 31-40 | 125 | 23.8 | 39 | 7.4 | 1 | 0.2 |
| 41-50 | 101 | 19.2 | 41 | 7.8 | 2 | 0.4 |
| 51-60 | 45 | 8.6 | 17 | 3.2 | 2 | 0.4 |
| 61 இற்கு மேல் | 23 | 4.4 | 14 | 2.7 | 1 | 0.2 |

**அட்டவணை 3.4**

*மத அடிப்படையில் ஆய்வுப் பங்குபற்றுநர்களின் வகைப்பாடு*

| மதம் | பெண் | % | ஆண் | % | ஏனையோர் | % |
|---|---|---|---|---|---|---|
| இந்து | 194 | 36.5 | 84 | 15.8 | 9 | 1.7 |
| கிறிஸ்தவம் | 56 | 10.5 | 11 | 2.1 | 3 | 0.6 |
| றோமன் கத்தோலிக்கம் | 42 | 7.9 | 12 | 2.3 | 0 | 0 |
| இஸ்லாம் | 26 | 4.9 | 13 | 2.5 | 1 | 0.2 |
| பௌத்தம் | 48 | 9.0 | 30 | 5.7 | 0 | 0 |
| ஏனையவை | 2 | 0.4 | 0 | 0 | 1 | 0.2 |

60 சிலர் தனிமைப்படுத்தபட்டிருந்தனர், சிலர் தொலைபேசி அழைப்புக்களுக்கு பதிலளிக்கவில்லை, சிலரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை

அட்டவணை 3.5

*கல்வி அடிப்படையில் ஆய்வுப் பங்குபற்றுநர்களின் வகைப்பாடு*

| கல்வி மட்டம் | பெண் | % | ஆண் | % | ஏனையோர் | % |
|---|---|---|---|---|---|---|
| எழுத வாசிக்கத் தெரியும், ஆனால் முறையான கல்வியின்மை | 6 | 1.1 | 4 | 0.8 | 0 | 0 |
| எழுத வாசிக்கத் தெரியாது | 4 | 0.8 | 1 | 0.2 | 0 | 0 |
| 5 ஆம் தரம் வரையில் | 2 | 0.4 | 3 | 0.6 | 1 | 0.2 |
| 6-9 ஆம் தரங்களுக்கிடையில் | 30 | 5.6 | 9 | 1.7 | 1 | 0.2 |
| 9- க.பொ.த. (சா.த) வரையில் | 173 | 32.5 | 46 | 8.6 | 8 | 1.5 |
| க.பொ.த (உ.த) வரையில் | 115 | 21.6 | 54 | 10.2 | 2 | 0.4 |
| கல்வியியற் கல்லூரி | 6 | 1.12 | 3 | 0.6 | 0 | 0 |
| டிப்ளோமா | 19 | 3.6 | 9 | 1.7 | 1 | 0.2 |
| இளமானி | 11 | 2.1 | 20 | 3.8 | 1 | 0.2 |
| முதுமானி | 0 | 0 | 1 | 0.2 | 0 | 0 |
| ஏனையவை | 2 | 0.4 | 0 | 0 | 0 | 0 |

## 3.6 தரவு சேகரிப்பாளர்கள்

மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன்படி, இந்த ஆய்விற்கானத் தரவு சேகரிப்பு பணியில் சமுதாய உறுப்பினர்களே ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலுமுள்ள 51 பேர் இந்த ஆய்விலே தரவு சேகரிப்பாளர்களாக எம்முடன் இணைந்து கொண்டனர். ஆய்வில் சமுதாய உறுப்பினர்களின் பங்களிப்பினை உறுதிப்படுத்தும் நோக்கத்துடனும், ஆய்வு விடயப்பொருளுடன் ஒன்றித்திருக்கின்ற கலாசார மற்றும் பாரம்பரிய அம்சங்களைக் கருத்திற்கொண்டும், வினைத்திறனான மற்றும் சுமூகமானத் தரவு சேகரிப்பினை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக, சமுதாய உறுப்பினர்களே தரவு சேகரிப்பாளர்களாக ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களது பணியின் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு அவர்கள் இந்த ஆய்வின் ''சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்'' என்ற பதவிநிலையின்கீழ் இந்த ஆய்விற்குள் உள்வாங்கப்பட்டிருந்தனர். சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களின் பெயர்ப்பட்டியலினை பின்னிணைப்பில் காணலாம்.[61]

இவ் 51 உறுப்பினர்களும் Chrysalis இன் பயனாளிப் பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆவார். 500 பேரை உள்ளடக்கிய பயனாளிகள் பட்டியலிலிருந்து 51 பேரைத் தெரிவு செய்யும் நோக்கத்திற்காக ஆய்வுக் குழு தெரிவுக் கருவியொன்றினை ஆக்கியிருந்தது. வதியும் மாவட்டம், இனம், மதம், வயது மற்றும் பகிரங்க வாழ்விலுள்ள ஈடுபாடு ஆகிய காரணிகள் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களைத் தெரிவு செய்வதில் செல்வாக்கு செலுத்தியிருந்தன.

**சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களுக்கானப் பயிலமர்வுகள்**

ஆய்விற்குரிய விடயப் பொருளுடன் ஒன்றித்திருக்கின்ற உணர்வுபூர்வத் தன்மையினைக் கருத்திற்கொண்டு, சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் ஆய்வுப் பங்குபற்றுநர்களை அணுகித் தரவுகளை சேகரிப்பதற்கேற்றவகையில் அவர்களைத் தயார்படுத்த வேண்டிய தேவை இருப்பதனை ஆய்வுக்குழு இனங்கண்டு கொண்டது. அதனடிப்படையில், அவர்களுக்கான இரண்டு நாள் பயிற்றுனர்களுக்கான பயிலமர்வொன்று நடத்தப்பட்டது.[62]

அட்டவணை 3.6

*மாவட்டம் மற்றும் பாலின அடிப்படையில் தரவுசேகரிப்பாளர்களை வகைப்படுத்தல்*

| மாவட்டம் | பெண் | % | ஆண் | % |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 10 | 19.6 | 1 | 1.9 |
| கிளிநொச்சி | 7 | 13.7 | 3 | 5.9 |
| முல்லைத்தீவு | 4 | 7.8 | 2 | 3.9 |
| வவுனியா | 8 | 15.7 | 7 | 13.7 |
| மன்னார் | 6 | 11.8 | 3 | 5.9 |
| **மொத்தம்** | | | | 51 |

61 *பின்னிணைப்பு 4*

62 *2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16,17,18 மற்றும் 19 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண சர்வோதய மண்டபத்தில் இப்பயிலமர்வுகள் நடத்தப்பட்டன.*

படம் 3.4 மற்றும் 3.5

*தரவு சேகரிப்பாளர்களுக்கான பயிற்றுநர்களுக்கான பயிலமர்வின்போது எடுக்கப்பட்டவை*



**பயிலமர்வின் குறிக்கோள்கள்**

1. சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை அடையாளங்காண உதவுதல்.
2. அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அறிந்து கொள்ள உதவுதல்.
3. பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பான சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களின் சுய இணக்கத்தினை மாற்றுவதற்கு உதவுதல்.
4. பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் பெண்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மீது எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதனை விளங்கிக் கொள்ள உதவுதல்.
5. தரவு சேகரிப்பு தொடர்பான உத்திகள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பாக பயிற்சியளித்தல்.

பயிலமர்வின் குறிக்கோள்கள் எந்தளவிற்கு எய்தப்பட்டுள்ளன என்பதனை அறிந்து கொள்ளும் பொருட்டு, ஆய்வுப் பங்குபற்றுநர்கள் பயிலமர்விற்கு முன்னர் மற்றும் பின்னர் மதிப்பீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அம்மதிப்பீட்டுப் படிவங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, பயிலமர்வின் குறிக்கோள்கள் எதிர்பார்க்கப்பட்ட நியாயமான அளவிற்கு எய்தப்பட்டுள்ளன என்பதனை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. எவ்வாறெனினும், சில சமூக நியமங்களை சமூகத்திலிருந்து அகற்றுவதற்கு கடும் பிரயத்தனம் அவசியம் என்பதனையும் அம்முடிவுகள் வெளிக்காட்டின.

**மதிப்பீட்டு முடிவுகள்**

வரைபு 3.1

*சமூக நியமங்கள் பற்றிய பங்குபற்றுநர்களின் புரிந்துணர்வு*



A-1: *பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் எமது சமுதாயத்தின் கலாசாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கில் முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்டவை ஆகும்.*

A-2: *எமது கலாசரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் சமூகத்தில் பேணப்பட வேண்டும்.*

A-3: *பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் பாலினத்தின் அடிப்படையில் தனிநபர்களின் வகிபாகங்களை வரையறுக்கின்றன.*

A-4: *பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமஙகள் சமூகத்தில் நன்மையளிக்கக்கூடியத் தாக்கங்களை மாத்திரமே கொண்டுள்ளன.*

A-5: *பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் சமூகத்தில் சாதகமானத் தாக்கங்களையும், அதேவேளை பாதகமானத் தாக்கங்களையும் கொண்டுள்ளன.*

A-6: *பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் குறிப்பாகப் பெண்களை எதிர்மறையாகப் பாதிக்கின்றன.*

A-7: *பால்நிலை சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் நிலைமாற்றம் செய்யப்பட வேண்டும்.*

*பயிலமர்விற்கு முன்னர் ''பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் கலாசாரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு தொடர்ச்சியாகப் பேணப்படவேண்டியவை'' என்ற கருத்தினை* 61.7% *ஆனோர் கொண்டிருந்தபோதும், பயிலமர்வின் முடிவில்* 38.2% *ஆனோரே இக்கருத்தினைக் கொண்டிருந்தனர். ''பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் குறிப்பாக பெண்கள் மீது எதிர்மறையானத் தாக்கத்தினைக் கொண்டுள்ளன'' என்ற கருத்தினை பயிலமர்விற்கு முன்னர்* 38.5% *ஆனோர் மாத்திரமே ஏற்றுக் கொண்டிருந்தனர். எனினும், பயிலமர்வின் முடிவில்* 61.5 % *ஆனோர் இக்கருத்தினை ஏற்றுக் கொண்டிருந்தனர். குறிப்பாக, ''பால்நிலை சமத்துவத்தினை அடைந்துக் கொள்வதற்கு பால்நிலை பாரபட்ச மிக்க சமூக நியமங்கள் நிலைமாற்றம் செய்யப்பட வேண்டும்'' என்ற கருத்தினைப் பயிலமர்விற்கு முன்னர்* 41.5 % *ஆனோர் மாத்திரமே ஏற்றுக்கொண்டனர், ஆனால் பயிலமர்வின் பின்னர் இதனை* 58.5 % *ஆனோர் ஏற்றுக் கொண்டனர்.*

**வரைபு 3.2**

*பால்நிலை சமத்துவம் பற்றிய பங்குபற்றுநர்களின் புரிந்துணர்வு*




A-1: *பால்நிலை சமத்துவமென்பது எமது கலாசாரத்திற்கு எதிரான கருத்தேற்பாகும்.*

A-2: *பால்நிலை சமத்துவமென்பது எமது மதத்திற்கு எதிரான கருத்தேற்பாகும்.*

A-3: *பால்நிலை சமத்துவமென்பது பெண்களைத் தவறாக வழிநடத்துகின்ற கருத்தேற்பாகும்.*

A-4: *பால்நிலை சமத்துவமென்பது ஆண்கள் மற்றும் பெண்களை அனைத்து சூழ்நிலைகளிலும் சமமாக நடத்துதல் ஆகும்.*

A-5: *பால்நிலை சமத்துவமென்பது எந்தவொரு நபரையும் பாலின் அடிப்படையில் பாரபட்சப்படுத்தாமலிருத்தல் ஆகும்.*

A-6: *பால்நிலை சமத்துவம் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.*

A-7: *பால்நிலை சமத்துவம் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்படவில்லை.*

A-8: *சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பால்நிலை சமத்துவம் இன்றியமையாததாகும்.*

*பால்நிலை சமத்துவமென்பது கலாசாரம் மற்றும் மதத்திற்கு எதிரான கருத்தேற்பு என்கிற கருத்து பயிலமர்விற்கு முன்னர் காணப்பட்ட அளவினைவிட பயிலமர்விற்கு பின்னர் அதிகரித்திருப்பதாக மதிப்பீடுகள் கூறுகின்றன. இதனை இரு கோணங்களில் பகுப்பாய்வு செய்து பார்க்க முடியும். பயிலமர்வின்போது கூறப்பட்ட ''ஆணும் பெண்ணும் சரிநிகர் சமன்'' போன்ற பால்நிலை சமத்துவக் கோட்பாடுகளை, ''மனைவி கணவனுக்கு அடிபணிந்து நடக்க வேண்டும்'' என்பது போன்ற மத மற்றும் கலாசாரக் கோட்பாடுகளுடன் தொடர்புறுத்திப் பார்த்து சாதகமானதொரு மனநிலையில் இத்தகைய முடிவிற்கு வந்திருக்கலாம். மறுதலையாக, பயிலமர்வின்போது, சக பங்குபற்றுநர்களிடையே தோன்றிய 'கடவுளைத் தரிசிப்பதற்கு மாதவிடாய் உண்மையில் ஒரு தடையா?' 'இஸ்லாம் மதம் பெண்களைப் பாரபட்சப்படுத்துகின்றது' போன்ற மத உணர்வுப்பாங்கு மிக்க விவாதங்களின் விளைவாக, மதம் மற்றும் கலாசாரத்திற்கான அச்சுறுத்தலாகப் பால்நிலை சமத்துவத்தினைப் பார்க்கின்றதொரு மனநிலையில் பங்குபற்றுநர்கள் இத்தகையதொரு முடிவிற்கு வந்திருக்கலாம்.*

*எவ்வாறெனினும், சமூக முன்னேற்றத்திற்கு பால்நிலை சமத்துவம் இன்றியமையாதது என்பதனை பயிலமர்விற்கு முன்னர் 21 பேரும் பயிலமர்விற்கு பின்னர் 28 பேரும் அங்கீகரித்துள்ளனர் என்ற விடயமானது மாற்றத்திற்கான சாத்தியப்பாட்டுத்தன்மையினை உறுதிப்படுத்துகின்றது.*

*சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களுக்கான இரண்டு நாள் பயிலமர்வின் பின்னர் அவர்கள் தரவு சேகரிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். பயிலமர்வின்போது, தரவுகளை சேகரிக்க வேண்டிய ஆய்வுப் பங்குபற்றுநர்களின் பெயர்ப் பட்டியல், ஆய்வுப் பங்குபற்றுநர்களின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்வதற்கான இணக்கப்படிவங்கள், ஆய்வுத் திட்டம், நெறிசார் விதிமுறைக்கோவை ஆகிய ஆவணங்களை உள்ளடக்கிய ஆவணத்தொகுதியொன்று ஒவ்வொரு சமுதாய மட்டக் கள ஆய்வாளருக்கும் தனித்தனியாக வழங்கப்பட்டது.*

**குவிமையக் குழுக் கலந்துரையாடல்கள்**

*பால்நிலை அடையாளங்களாவன இயலாமை, கணவனை இழந்துள்ள நிலை, கணவனைப் பிரிந்து வாழும் நிலை போன்ற ஏனைய இலகுவில் பாதிப்புக்குள்ளாக்கக்கூடிய அடையாளங்களுடன் இணைகின்றபோது தனித்துவமான பாதக நிலைகளையும் பாரபட்சமிக்க நடத்துகையினையும் தோற்றுவிக்கின்றது. அதனடிப்படையில், இத்தகைய இலகுவில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய நிலைகளில் வாழ்கின்ற பெண்கள் மீது பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் எவ்வகையானத் தாக்கத்தினைச் செலுத்துகின்றன என்பதனை அறிந்து கொள்ளும் பொருட்டு, அத்தகைய குழுக்களுடனான குவிமையக் குழுக் கலந்துரையாடல்களினூடாக தகவல்கள் திரட்டப்பட்டன.*

அட்டவணை 3.7

*குவிமையக் குழுக் கலந்துரையாடல்களின் விபரம்*

| மாவட்டம் | குழு | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் | 3 |
| | முன்னாள் பெண் போராளிகள் | 3 |
| கிளிநொச்சி | பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் | 3 |
| | முன்னாள் பெண் போராளிகள் | 3 |
| | இயலாமைகளையுடைய பெண்கள் | 3 |
| முல்லைத்தீவு | பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் | 3 |
| | முன்னாள் பெண் போராளிகள் | 3 |
| | இயலாமைகளையுடைய பெண்கள் | 3 |
| வவுனியா | பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் | 3 |
| | முன்னாள் பெண் போராளிகள் | 3 |
| மன்னார் | சிறு வயது திருமணத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் | 3 |
| | பால்நிலை மற்றும் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் | 1 |
| | பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் | 2 |
| | இயலாமைகளையுடைய பெண்கள் | 1 |

**நேர்காணல்கள்**

இந்த ஆய்வின் நோக்கங்களுக்காக மதத் தலைவர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டளார்களிடம் நேர்காணல்கள் செய்யப்பட்டன. நாட்டில் நிலவுகின்ற கொவிட் - 19 நோய்த்தொற்று நிலை காரணமாக சில நேர்காணல்கள் நிகழ்நிலையில் மேற்கொள்ளப்பட்டன.

படம் 3.6, 3.7 மற்றும் 3.8

*யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னாரில் இடம்பெற்ற குவிமையக் குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் நேர்காணல்களின்போது*





## 3.7 தரவுப் பகுப்பாய்வு

சேகரிக்கப்பட்டத் தரவுகள் ஆறு பேரைக் கொண்ட குழுவொன்றினால்[63] ஆய்வுக் குழுவின் கண்காணிப்புடன் பதிவு செய்யப்பட்டன. பதிவு செய்யப்பட்டத் தரவுகள் **'Statistical Package for the Social Sciences (SPSS)'**இன் வாயிலாக பொருட்கோடல் செய்யப்பட்டன. அதன்பின்னர் இத்தரவுகள் ஆய்வுக்குழுவினரால் ஆய்வு நோக்கங்களினை அடைந்துகொள்ளும் வகையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. மாவட்டம், வயது, கல்வியறிவு மற்றும் மதம் போன்ற காரணிகளின் அடிப்படையில் தரவுகள் வெவ்வேறாகப் பதிவு செய்யப்பட்டு அட்டவணைகளாக மற்றும் வரைபடங்களாக வடிவமைக்கப்பட்டன.

63 பின்னிணைப்பு *5*

## 3.8 தரவுகளைச் சரிபார்த்தல்

பதிவு செய்யப்பட்டத் தரவுகள் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டங்களின்போது[64] மிக எளிமையான வடிவங்களில் அவர்களிடையே பகிரப்பட்டு, அது தொடர்பான அவர்களுடைய கருத்துக்கள், அபிப்பிராயங்கள் மற்றும் விமர்சனங்கள் கேட்டறியப்பட்டன. கேட்டறியப்பட்ட சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களின் கருத்துக்களின் அடிப்படையில் சேகரிக்கப்பட்டத் தரவுகள் உறுதிப்படுத்தப்பட்டன மற்றும் சில சந்தர்ப்பங்களில் தரவுகளின் பின்னணியிலுள்ள காரணங்கள் கண்டறியப்பட்டன.

ஆய்வின் முடிவுகளைத் தரவு சேகரிப்பாளர்களுள் பெரும்பான்மையானோர் ஏற்றுக் கொண்டனர். சிலர் அடையாளப்படுத்தப்பட்ட சில சமூக நியமங்கள் தங்களது சமுதாயங்களில் காணப்படவில்லை என்ற கருத்தினைத் தெரிவித்திருந்தனர். எவ்வாறெனினும், பெரும்பான்மையானோரின் கருத்துக்கள் கவனத்திலெடுக்கப்பட்டு, அதனடிப்படையில் ஆய்வின் முடிவுகள் உறுதிப்படுத்தப்பட்டன.

**படம் 3.9, மற்றும் 3.10**

*தரவுகளை சரிபார்க்கின்ற இணையவழிக் கலந்தாலோசனைக் கூட்டங்கள்*





## 3.9 இறுதி ஆய்வறிக்கையினை எழுதுதல்

முதனிலை மூலங்கள் மற்றும் இரண்டாம்நிலை மூலங்கள் என்பவற்றினூடாக சேகரிக்கப்பட்டத் தரவுகளை மையமாகக் கொண்டு இறுதி ஆய்வறிக்கை எழுதப்பட்டது. இந்த ஆய்வின் நோக்கத்திற்காக செய்யப்பட்ட நிகழ்நிலைக் கலந்துரையாடல்கள், குவிமையக் குழுக் கலந்துரையாடல்கள், நேர்காணல்கள் என்பவற்றினூடாக சேகரிக்கப்பட்டத் தரவுகளும் இந்த ஆய்வில் உட்சேர்க்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வு நோக்கத்திற்காக செய்யப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் நேர்காணல்களின் பட்டியலைப் பின்னிணைப்பில் காணலாம்.[65] பெரும்பான்மையான ஆய்வுப் பங்குபற்றுநர்கள் தமிழ் மொழி பேசுபவர்களென்ற காரணத்தினாலும், ஆய்வுப் பிரதேசத்தில் வசிக்கும் பெரும்பான்மையானோர் தமிழ்மொழி பேசுபவர்களென்ற காரணத்தினாலும், இறுதி ஆய்வறிக்கை தமிழில் எழுதப்பட்டு, சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

---

64 கலந்தாலோசனைக் கூட்டங்கள் 2021, ஆகஸ்ட் மாதம் 4 மற்றும் 5 ஆகிய திகதிகளில் இடம்பெற்றன.

65 பின்னிணைப்பு 6

# அத்தியாயம் 4

## 4 ஆய்வு முடிவுகள்- பகுதி 1

### 4.1 அறிமுகம்

இந்த ஆய்வின் முடிவுகள் இலங்கையின் வட மாகாணத்தில் வசிக்கின்ற சுமார் 532 ஆய்வுப் பங்குபற்றுநர்களினால் வழங்கப்பட்டத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். அத்துடன் ஆய்வுக் குழுவினரால் நடத்தப்பட்ட கல்வியியலாளர்கள் மற்றும் மதத் தலைவர்கள் போன்றவர்களுடனான நேர்காணல்கள், இலகுவில் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய பெண்கள் குழுக்களுடன் நடத்தப்பட்ட குவிமையக் குழுக் கலந்துரையாடல்கள் என்பவற்றினூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்டத் தரவுகளும் இந்த ஆய்வு முடிவுகளை அடைவதற்கு உதவி புரிந்துள்ளன.

மேலும், ஆய்வுப் பங்குபற்றுநர்களினால் வழங்கப்பட்டத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வட மாகாணத்தில் காணப்படுகின்ற பிரதானமாகப் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை அடையாளங்காண்பதற்கும், அவற்றை மதிப்பீடு செய்வதற்கும் SNAP கட்டமைப்பு பயன்படுத்தப்பட்டு அதனூடாக இந்த ஆய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இந்த SNAP கட்டமைப்பு தொடர்பில் முன்னைய அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

### 4.2 வட மாகாணத்தில் பிரதானமாக நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள்

ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்தில் மொத்தமாக 49 பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இச்சமூக நியமங்களுள் தற்காலத்தில் சமூகத்தில் மிக அதிகமாக நிலைத்திருக்கின்ற சமூக நியமங்கள் எவை மற்றும் அவை பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்து கொள்வதில் எத்தகையத் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பதனை அறிந்து கொள்ளுதல் இந்த ஆய்வின் பிரதான குறிக்கோள்களுள் ஒன்றாகும். அவ்வகையில், இச்சமூக நியமங்கள் தொடர்பானத் தகவல்கள் மாவட்ட அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. பெரும்பாலும் ஒரே மாதிரியான சமூக நியமங்களே வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் நிலைத்திருக்கின்றபோதும், சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன என்பதனை ஆய்வு முடிவுகள் வெளிக்காட்டுகின்றன. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படுகின்ற சமூக நியமங்கள் அவை நிலைத்திருக்கின்ற அளவிற்கேற்ப தரவரிசைப்படுத்தப்பட்டு, முதற் பத்து சமூக நியமங்களும் அட்டவணை வடிவில் வழங்கப்பட்டுள்ளன.

## 4.2.1 மாவட்ட அடிப்படையில்

யாழ்ப்பாண மாவட்டம்

அட்டவணை 4.1

| இல | கூற்றுக்கள் | காணப்படுகின்றது | | காணப்படுகின்றது (%) | காணப்படவில்லை | | காணப்படவில்லை (%) | தெரியாது |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மிக அதிகமாகக் காணப்படுகின்றது | ஓரளவு காணப்படுகின்றது | | குறைவாகக் காணப்படுகின்றது | காணப்படவில்லை | | |
| 1 | சமையல், வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | 61 | 28 | 79.46% | 10 | 8 | 16.07% | 0 |
| | | 89 | | | 18 | | | |
| 2 | உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் | 48 | 36 | 75.00% | 14 | 8 | 19.64% | 1 |
| | | 84 | | | 22 | | | |
| 3 | பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | 54 | 29 | 74.11% | 15 | 8 | 20.54% | 1 |
| | | 83 | | | 23 | | | |
| 4 | பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராக புகாரளிப்பதை அவர்களின் குடும்பத்தினர் தடுக்கின்றனர் | 37 | 46 | 74.11% | 10 | 13 | 20.54% | 1 |
| | | 83 | | | 23 | | | |
| 5 | மனைவி என்பவள் எந்த சந்தர்ப்பத்திலும் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் | 40 | 40 | 71.43% | 21 | 7 | 25.00% | 0 |
| | | 80 | | | 28 | | | |
| 6 | பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராக புகாரளிக்கத் தயங்குகின்றனர் | 36 | 40 | 67.86% | 25 | 6 | 27.68% | 2 |
| | | 76 | | | 31 | | | |
| 7 | பெண்கள்/பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது | 21 | 52 | 65.18% | 30 | 8 | 33.93% | 0 |
| | | 73 | | | 38 | | | |
| 8 | பெண்கள்/பெண் பிள்ளைகள் இரவு நேரப் பணியினை ஏற்கக்கூடாது | 30 | 42 | 64.29% | 24 | 11 | 31.25% | 0 |
| | | 72 | | | 35 | | | |
| 9 | பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தவிர்ந்த ஏனைய குடும்பங்களில் ஆண்களே பிரதான வருமானம் ஈட்டுபவராயிருக்க வேண்டும் | 30 | 42 | 64.29% | 17 | 14 | 27.68% | 1 |
| | | 72 | | | 31 | | | |
| 10 | கணவர்மார்களுக்கெதிராகப் பொலிஸ் நிலையத்தில் புகாரளிக்கும் பெண்கள் விமர்சிக்கப்படுகின்றனர் | 30 | 41 | 63.39% | 31 | 3 | 30.36% | 3 |
| | | 71 | | | 34 | | | |

வவுனியா மாவட்டம்

அட்டவணை 4.2

| இல | கூற்றுக்கள் | காணப்படுகின்றது | | காணப்படுகின்றது (%) | காணப்படவில்லை | | காணப்படவில்லை (%) | தெரியாது |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மிக அதிகமாகக் காணப்படுகின்றது | ஓரளவு காணப்படுகின்றது | | குறைவாகக் காணப்படுகின்றது | காணப்படவில்லை | | |
| 1 | மனைவி என்பவள் எந்த சந்தர்ப்பத்திலும் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் | 94 | 52 | 82.95% | 18 | 9 | 15.34% | 2 |
| | | 146 | | | 27 | | | |
| 2 | பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | 102 | 40 | 80.68% | 10 | 13 | 13.07% | 3 |
| | | 142 | | | 23 | | | |
| 3 | பெண்கள்/பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது | 56 | 77 | 75.57% | 31 | 7 | 21.59% | 0 |
| | | 133 | | | 38 | | | |
| 4 | சமையல், வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | 84 | 44 | 72.73% | 20 | 18 | 21.59% | 3 |
| | | 128 | | | 38 | | | |
| 5 | உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் | 73 | 52 | 71.02% | 26 | 12 | 21.59% | 3 |
| | | 125 | | | 38 | | | |
| 6 | பாலியல் வன்முறைகள்/பாலியல் வன்புணர்விற்குள்ளான பெண்கள் கற்பிழந்தோராகக் கருதப்படுகின்றனர் | 87 | 33 | 68.18% | 18 | 15 | 18.75% | 6 |
| | | 120 | | | 33 | | | |
| 7 | பெண்கள்/பெண் பிள்ளைகள் ஆண்கள் செய்யும் அதே வேலையை செய்தாலும், சம அளவான ஊதியம் பெற உரித்துடையவர்கள் அல்ல | 66 | 50 | 65.91% | 13 | 29 | 23.86% | 3 |
| | | 116 | | | 42 | | | |
| 8 | பெண்கள் இரவு நேரங்களில் தனியாகப் பிரயாணிக்கக் கூடாது | 70 | 44 | 64.77% | 30 | 15 | 25.57% | 4 |
| | | 114 | | | 45 | | | |
| 9 | பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தவிர்ந்த ஏனைய குடும்பங்களில் ஆண்களே பிரதான வருமானம் ஈட்டுபவராயிருக்க வேண்டும் | 64 | 49 | 64.20% | 22 | 22 | 25.00% | 1 |
| | | 113 | | | 44 | | | |
| 10 | பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராக புகாரளிக்கத் தயங்குகின்றனர் | 55 | 58 | 64.20% | 37 | 10 | 26.70% | 3 |
| | | 113 | | | 47 | | | |

கிளிநொச்சி மாவட்டம்

அட்டவணை 4.3

| இல | கூற்றுக்கள் | காணப்படுகின்றது | | காணப்படுகின்றது (%) | காணப்படவில்லை | | காணப்படவில்லை (%) | தெரியாது |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மிக அதிகமாகக் காணப்படுகின்றது | ஓரளவு காணப்படுகின்றது | | குறைவாகக் காணப்படுகின்றது | காணப்படவில்லை | | |
| 1 | சமையல், வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | 51 | 27 | 85.71% | 10 | 3 | 14.29% | 0 |
| | | 78 | | | 13 | | | |
| 2 | பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | 48 | 30 | 85.71% | 9 | 0 | 9.89% | 0 |
| | | 78 | | | 9 | | | |
| 3 | உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும் | 53 | 22 | 82.42% | 10 | 2 | 13.19% | 0 |
| | | 75 | | | 12 | | | |
| 4 | மனைவி என்பவள் எந்த சந்தர்ப்பத்திலும் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் | 48 | 21 | 75.82% | 19 | 0 | 20.88% | 2 |
| | | 69 | | | 19 | | | |
| 5 | பொலிஸ் நிலையத்துக்கு போகும் பெண்கள் விமர்சிக்கப்படுகின்றனர் | 39 | 28 | 73.63% | 12 | 9 | 23.08% | 0 |
| | | 67 | | | 21 | | | |
| 6 | கணவர்மார்களுக்கெதிராகப் பொலிஸ் நிலையத்தில் புகாரளிக்கும் பெண்கள் விமர்சிக்கப்படுகின்றனர் | 34 | 33 | 73.63% | 19 | 3 | 24.18% | 0 |
| | | 67 | | | 22 | | | |
| 7 | பாலியல் வன்முறைகள்/பாலியல் வன்புணர்விற்குள்ளான பெண்கள் கற்பிழந்தோராகக் கருதப்படுகின்றனர் | 42 | 22 | 70.33% | 11 | 12 | 25.27% | 0 |
| | | 64 | | | 23 | | | |
| 8 | பெண்கள் இரவு நேரங்களில் தனியாகப் பிரயாணிக்கக் கூடாது | 34 | 30 | 70.33% | 17 | 6 | 25.27% | 0 |
| | | 64 | | | 23 | | | |
| 9 | பெண்கள்/பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது | 21 | 43 | 70.33% | 20 | 5 | 27.47% | 1 |
| | | 64 | | | 25 | | | |
| 10 | பெண்கள்/பெண் பிள்ளைகள் ஆண்கள் செய்யும் அதே வேலையை செய்தாலும், சம அளவான ஊதியம் பெற உரித்துடையவர்கள் அல்ல. | 37 | 26 | 69.23% | 15 | 12 | 29.67% | 0 |
| | | 63 | | | 27 | | | |

முல்லைத்தீவு மாவட்டம்

**அட்டவணை 4.4**

| இல | கூற்றுக்கள் | காணப்படுகின்றது: மிக அதிகமாகக் காணப்படுகின்றது | காணப்படுகின்றது: ஓரளவு காணப்படுகின்றது | காணப்படுகின்றது (%) | காணப்படவில்லை: குறைவாகக் காணப்படுகின்றது | காணப்படவில்லை: காணப்படவில்லை | காணப்படவில்லை (%) | தெரியாது |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | 30 | 21 | 80.95% | 7 | 4 | 17.46% | 0 |
| | | 51 | | | 11 | | | |
| 2 | உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் | 39 | 11 | 79.37% | 6 | 3 | 14.29% | 1 |
| | | 50 | | | 9 | | | |
| 3 | சமையல், வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | 38 | 12 | 79.37% | 7 | 4 | 17.46% | 0 |
| | | 50 | | | 11 | | | |
| 4 | மனைவி என்பவள் எந்த சந்தர்ப்பத்திலும் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் | 31 | 18 | 77.78% | 11 | 2 | 20.63% | 0 |
| | | 49 | | | 13 | | | |
| 5 | பாலியல் வன்முறைகள்/பாலியல் வன்புணர்விற்குள்ளான பெண்கள் கற்பிழந்தோராகக் கருதப்படுகின்றனர் | 36 | 12 | 76.19% | 5 | 6 | 17.46% | 2 |
| | | 48 | | | 11 | | | |
| 6 | பொலிஸ் நிலையத்துக்கு போகும் பெண்கள் விமர்சிக்கப்படுகின்றனர் | 28 | 20 | 76.19% | 8 | 3 | 17.46% | 1 |
| | | 48 | | | 11 | | | |
| 7 | பெண்கள்/பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது | 16 | 31 | 74.60% | 13 | 2 | 23.81% | 0 |
| | | 47 | | | 15 | | | |
| 8 | கணவனை இழந்த பெண் அபசகுனமாகக் கருதப்படுவார் | 31 | 15 | 73.02% | 7 | 6 | 20.63% | 1 |
| | | 46 | | | 13 | | | |
| 9 | பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதை அவர்களின் குடும்பத்தினர் தடுக்கின்றனர் | 29 | 17 | 73.02% | 6 | 8 | 22.22% | 0 |
| | | 46 | | | 14 | | | |
| 10 | பெண்கள்/பெண் பிள்ளைகள் மாதவிடாய்க் காலங்களில் கோயிலுக்குப் போக மாட்டார்கள் | 43 | 2 | 71.43% | 1 | 4 | 7.94% | 2 |
| | | 45 | | | 5 | | | |

அட்டவணை 4.5

| இல | கூற்றுக்கள் | காணப்படுகின்றது: மிக அதிகமாகக் காணப்படுகின்றது | காணப்படுகின்றது: ஓரளவு காணப்படுகின்றது | காணப்படுகின்றது (%) | காணப்படவில்லை: குறைவாகக் காணப்படுகின்றது | காணப்படவில்லை: காணப்படவில்லை | காணப்படவில்லை (%) | தெரியாது |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | 47 | 30 | 81.91% | 9 | 3 | 12.77% | 0 |
| | | 77 | | | 12 | | | |
| 2 | உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் | 52 | 23 | 79.79% | 8 | 7 | 15.96% | 2 |
| | | 75 | | | 15 | | | |
| 3 | கணவர்மார்களுக்கெதிராகப் பொலிஸ் நிலையத்தில் புகாரளிக்கும் பெண்கள் விமர்சிக்கப்படுகின்றனர் | 41 | 31 | 76.60% | 14 | 5 | 20.21% | 0 |
| | | 72 | | | 19 | | | |
| 4 | மனைவி என்பவள் எந்த சந்தர்ப்பத்திலும் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் | 47 | 24 | 75.53% | 8 | 8 | 17.02% | 1 |
| | | 71 | | | 16 | | | |
| 5 | பெண்கள்/பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது | 33 | 36 | 73.40% | 14 | 11 | 26.60% | 0 |
| | | 69 | | | 25 | | | |
| 6 | சமையல், வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | 48 | 20 | 72.34% | 14 | 7 | 22.34% | 0 |
| | | 68 | | | 21 | | | |
| 7 | பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதை அவர்களின் குடும்பத்தினர் தடுக்கின்றனர் | 46 | 21 | 71.28% | 12 | 9 | 22.34% | 2 |
| | | 67 | | | 21 | | | |
| 8 | பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கத் தயங்குகின்றனர் | 43 | 24 | 71.28% | 8 | 14 | 23.40% | 2 |
| | | 67 | | | 22 | | | |
| 9 | பெண்கள் இரவு நேரங்களில் தனியாகப் பிரயாணிக்கக் கூடாது | 47 | 18 | 69.15% | 19 | 5 | 25.53% | 1 |
| | | 65 | | | 24 | | | |
| 10 | பொலிஸ் நிலையத்துக்கு போகும் பெண்கள் விமர்சிக்கப்படுகின்றனர் | 36 | 28 | 68.09% | 22 | 4 | 27.66% | 1 |
| | | 64 | | | 26 | | | |

## 4.2.2 வட மாகாணம் முழுவதிலும் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க பிரதான சமூக நியமங்கள்

மாவட்ட அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வட மாகாணம் முழுவதிலும் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க 20 சமூக நியமங்கள் அவை நிலைத்திருக்கின்ற அளவிற்கேற்ப பின்வருமாறு தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் ஐந்து இடங்களையும் பிடித்துள்ள சமூக நியமங்கள் ''பிரதானமாக நிலைத்திருக்கின்ற சமூக நியமங்களாக'' அடையாளப்படுத்தப்படுகின்றன. எவ்வாறெனினும், இந்த ஆய்விலே, முதற் பத்து இடங்களையும் பிடித்துள்ள சமூக நியமங்கள் தொடர்பாகப் பகுப்பாய்வு செய்யப்படவுள்ளது.

அட்டவணை 4.6

| இல | கூற்றுக்கள் | காணப்படுகின்றது | | காணப்படுகின்றது (%) | காணப்படவில்லை | | காணப்படவில்லை (%) | தெரியாது |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மிக அதிகமாகக் காணப்படுகின்றது | ஓரளவு காணப்படுகின்றது | | குறைவாகக் காணப்படுகின்றது | காணப்படவில்லை | | |
| 1 | பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | 281 | 150 | 81.02% | 50 | 28 | 14.66% | 4 |
| | | 431 | | | 78 | | | |
| 2 | மனைவி என்பவள் எந்த சந்தர்ப்பத்திலும் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் | 260 | 155 | 78.01% | 77 | 26 | 19.36% | 5 |
| | | 415 | | | 103 | | | |
| 3 | சமையல், வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | 282 | 131 | 77.63% | 61 | 40 | 18.98% | 3 |
| | | 413 | | | 101 | | | |
| 4 | உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் | 265 | 144 | 76.88% | 64 | 32 | 18.05% | 7 |
| | | 409 | | | 96 | | | |
| 5 | பெண்கள்/பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது | 147 | 239 | 72.56% | 108 | 33 | 26.50% | 1 |
| | | 386 | | | 141 | | | |
| 6 | பாலியல் வன்முறைகள்/பாலியல் வன்புணர்விற்குள்ளான பெண்கள் கற்பிழந்தோராகக் கருதப்படுகின்றனர் | 255 | 109 | 68.42% | 70 | 57 | 23.87% | 15 |
| | | 364 | | | 127 | | | |
| 7 | பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கத் தயங்குகின்றனர் | 205 | 157 | 68.05% | 96 | 41 | 25.75% | 9 |
| | | 362 | | | 137 | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதை அவர்களின் குடும்பத்தினர் தடுக்கின்றனர் | 197 | 164 | 67.86% | 85 | 54 | 26.13% | 10 |
| | | 361 | | | 139 | | | |
| 9 | பொலிஸ் நிலையத்துக்கு போகும் பெண்கள் விமர்சிக்கப்படுகின்றனர் | 196 | 159 | 66.73% | 101 | 41 | 26.69% | 9 |
| | | 355 | | | 142 | | | |
| 10 | கணவர்மார்களுக்கெதிராகப் பொலிஸ் நிலையத்தில் புகாரளிக்கும் பெண்கள் விமர்சிக்கப்படுகின்றனர் | 195 | 159 | 66.54% | 111 | 39 | 28.20% | 8 |
| | | 354 | | | 150 | | | |
| 11 | பெண்கள் இரவு நேரங்களில் தனியாகப் பிரயாணிக்கக் கூடாது | 203 | 144 | 65.23% | 109 | 44 | 28.76% | 7 |
| | | 347 | | | 153 | | | |
| 12 | பெண்கள்/பெண் பிள்ளைகள் பொது இடங்களில் சத்தமாகச் சிரிக்கக் கூடாது | 154 | 191 | 64.85% | 117 | 54 | 32.14% | 5 |
| | | 345 | | | 171 | | | |
| 13 | பெண்கள்/பெண் பிள்ளைகள் இரவு நேரப் பணியினை ஏற்கக்கூடாது | 169 | 169 | 63.53% | 119 | 52 | 32.14% | 6 |
| | | 338 | | | 171 | | | |
| 14 | பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தவிர்ந்த ஏனைய குடும்பங்களில் ஆண்களே பிரதான வருமானத்தை ஈட்டுபவராயிருக்க வேண்டும் | 183 | 151 | 62.78% | 86 | 72 | 29.70% | 6 |
| | | 334 | | | 158 | | | |
| 15 | பெண்கள்/பெண் பிள்ளைகள் வெளி இடங்களில் தங்கி வேலை செய்யக் கூடாது | 143 | 186 | 61.84% | 125 | 52 | 33.27% | 8 |
| | | 329 | | | 177 | | | |
| 16 | பெண்கள்/பெண் பிள்ளைகள் ஆண்கள் செய்யும் அதே வேலையை செய்தாலும், சம அளவான ஊதியம் பெற உரித்துடையவர்கள் அல்ல | 194 | 133 | 61.47% | 95 | 80 | 32.89% | 7 |
| | | 327 | | | 175 | | | |
| 17 | மனைவிமார்கள் தமது கணவர்மார்களோடு வாக்குவாதம் செய்யக் கூடாது | 126 | 196 | 60.53% | 133 | 39 | 32.33% | 0 |
| | | 322 | | | 172 | | | |
| 18 | பிள்ளைப் பேறற்ற பெண்கள் அபசகுனமாகக் கருதப்படுவர் | 186 | 127 | 58.83% | 91 | 82 | 32.52% | 15 |
| | | 313 | | | 173 | | | |
| 19 | கணவர்மார்களிடம் அடி வாங்கினால் கூட அவர்களைப்பற்றி மனைவிமார்கள் புகார் சொல்லக் கூடாது | 144 | 161 | 57.33% | 148 | 56 | 38.35% | 3 |
| | | 305 | | | 204 | | | |
| 20 | கணவனை இழந்தப் பெண் அபசகுனமாகக் கருதப்படுவார் | 190 | 113 | 56.95% | 102 | 79 | 34.02% | 13 |
| | | 303 | | | 181 | | | |

### பிரதான முடிவுகள்

- **பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்கள்/பெண் பிள்ளைகளின் வேலைகள், மனைவிமார்கள் எந்த சந்தர்ப்பத்திலும் குடும்ப வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும், சமையல், வீட்டு வேலைகள் பிரதானமாகப் பெண்கள்/பெண் பிள்ளைகளின் வேலைகள் மற்றும் உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மாத்திரமே ஈடுபடுத்தப்பட வேண்டும்** ஆகிய நான்கு சமூக நியமங்களும் ஐந்து மாவட்டங்களிலும் மிக அதிகமாக நிலைத்துள்ளன. ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த 70 % இற்கும் அதிகமான ஆய்வுப் பங்குபற்றுநர்கள் இச்சமூக நியமங்கள் தங்களது சமுதாயங்களில் அதிகளவில் நிலைத்திருப்பதாக/நிலைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள்.

- **பெண்கள்/பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாக பேசக் கூடாது** என்ற சமூக நியமும் வடமாகாணத்தில் நிலைத்திருக்கின்றமை ஆய்வுப் பங்குபற்றுநர்களால் வழங்கப்பட்டத் தரவுகளினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இச்சமூக நியமம் நிலைத்திருப்பதாக ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த ஆய்வுப் பங்குபற்றுநர்களுள் 72.56% ஆனோரும், இச்சமூக நியமம் காணப்படவில்லை என 26.5 % ஆனோரும் தெரிவித்துள்ளார்கள். யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த ஆய்வுப் பங்குபற்றுநர்களுள் 70 % இற்கு அதிகமானோரும், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆய்வுப்பங்குபற்றுநர்களுள் 65 % இற்கு அதிகமானோரும் இச்சமூக நியமம் தமது மாவட்டங்களில் நிலைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

- **கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கும் பெண்கள் விமர்சிக்கப்படுகின்றமை மற்றும் பொலிஸ் நிலையத்திற்கு போகும் பெண்கள்/பெண் பிள்ளைகள் விமர்சிக்கப்படுகின்றமை** ஆகிய சமூக நியமங்கள் ஐந்து மாவட்டங்களிலும் அதிகளவில் நிலைத்துள்ளன. ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த அண்ணளவாக 60 % ஆன அல்லது அதற்கும் அதிகமான ஆய்வுப் பங்குபற்றுநர்கள் இச்சமூக நியமங்கள் தங்களது சமுதாயங்களில் அதிகளவில் நிலைத்திருப்பதாக/நிலைத்திருப்பதாகதத் தெரிவித்துள்ளனர். எவ்வாறெனினும், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பங்குபற்றுநர்களில் 58.04 % ஆனோரே 'பெண்கள்/பெண் பிள்ளைகள் பொலிஸ் நிலையத்திற்கு போகக்கூடாது' என்ற சமூக நியமம் தமது மாவட்டத்தில் நிலைத்திருப்பதாகத் தெரிவித்திருந்தனர்.

- **பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டப் பெண்கள்/பெண் பிள்ளைகள் கற்பிழந்தோராகக் கருதப்படுதல், பெண்கள்/பெண் பிள்ளைகள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கத் தயங்குதல் மற்றும் பெண்கள்/பெண் பிள்ளைகள் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளித்தலை குடும்பத்தினர் தடுத்தல்** ஆகிய சமூக நியமங்கள் தங்களது சமுதாயங்களில் நிலைத்திருப்பதாக ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த 60 % ஆன அல்லது அதற்கும் அதிகமான ஆய்வுப் பங்குபற்றுநர்கள் தெரிவித்துள்ளனர். எவ்வாறெனினும், குறிப்பிடத்தக்கவகையில், 'பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளித்தலை குடும்பத்தினர் தடுத்தல்' என்ற சமூக நியமம் வவுனியாவில் குறைந்த அளவிலேயே காணப்படுவதாக ஆய்வுப் பங்குபற்றுநர்களின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. 33 % இற்கும் குறைவான ஆய்வுப் பங்குபற்றுநர்களே இச்சமூக நியமம் தங்களது மாவட்டத்தில் காணப்படுவதாகப் பதிலளித்துள்ளனர்.

## 4.3 வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற பிரதான பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பான வகைப்படுத்தப்பட்டத் தரவுகள்

### 4.3.1 பாலின அடிப்படையில்

வட மாகாணத்தில் மிக அதிகளவில் நிலைத்திருப்பதாக அடையாளங்காணப்பட்ட பிரதான சமூக நியமங்கள் பெண்கள் மற்றும் ஆண்களிடையே[66] நிலைத்துள்ளப் பாங்கினை அறிந்து கொள்வதற்காக பாலின அடிப்படையில் இத்தரவுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆய்விற்கு பின்னர், சமூக நியமங்களை நிலைமாற்றம் செய்வதற்கானத் தலையீடுகளைத் திட்டமிட்டுக் கொள்ளும்பொருட்டு அத்தரவுகள் மாவட்ட அடிப்படையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

66 பிற பாலினத்தவர்களிடம் தரவுகளை சேகரிக்க முயற்சித்தபோதும் அவர்கள் தமது பாலின அடையாளம் மற்றும் தனிப்பட்ட அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்கு விரும்பவில்லை.

## அட்டவணை 4.7 [67]

| இல | கூற்றுக்கள் | ஏற்றுக்கொள்வோரின் எண்ணிக்கை மற்றும் சதவீதம் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெண்கள் | | | | | | ஆண்கள் | | | | | |
| | | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | வவுனியா | வட மாகாணம் முழுதும் | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | வவுனியா | வட மாகாணம் முழுதும் |
| 1 | பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | 28 (32.5%) | 12 (23%) | 10 (27.0%) | 23 (28.7%) | 45 (44.1%) | 118 (33%) | 7 (29.1%) | 10 (31.2%) | 5 (27.7%) | 2 (15.8%) | 17 (29.3%) | 41 (28.6%) |
| 2 | மனைவி என்பவள் எந்த சந்தர்ப்பத்திலும் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது திருமண/ குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் | 38 (58.7%) | 20 (38.4%) | 13 (35.1%) | 37 (46.8%) | 35 (35.3%) | 143 (42.1%) | 9 (52.9%) | 7 (22.5%) | 7 (38.8%) | 3 (27.2%) | 24 (42.1%) | 50 (37.3%) |
| 3 | சமையல், வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | 26 (30.2%) | 16 (30.7%) | 6 (15.7%) | 23 (29.1%) | 37 (36.2%) | 108 (30.2%) | 7 (30.4%) | 6 (18.7%) | 4 (22.2%) | 3 (27.2%) | 22 (37.9%) | 42 (29.5%) |
| 4 | உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் | 43 (51.1%) | 23 (44.2%) | 9 (25%) | 45 (56.9%) | 41 (44.5%) | 161 (46.9%) | 14 (58.3%) | 14 (42.4%) | 10 (55.5%) | 3 (27.2%) | 31 (56.3%) | 72 (51%) |
| 5 | பெண்கள்/ பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது | 23 (27%) | 6 (11.5%) | 13 (31.7%) | 31 (38.2%) | 39 (36.7%) | 112 (30.6%) | 8 (33.3%) | 10 (29.4%) | 5 (27.7%) | 3 (25%) | 27 (48.2%) | 53 (36.8%) |
| 6 | பாலியல் வன்முறை / பாலியல் வன்புணர்விற்குள்ளான பெண்கள் கற்பிழந்தவர்கள் | 9 (10.8%) | 7 (14%) | 9 (25%) | 23 (29.4%) | 19 (21.1%) | 67 (19.8%) | 1 (4.3%) | 4 (12.9%) | 5 (27.7%) | 2 (18.1%) | 16 (30.1%) | 28 (20.5%) |
| 7 | பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது | 7 (8.6%) | 3 (5.7%) | 5 (13.5%) | 9 (11.3%) | 13 (13.5%) | 37 (10.2%) | 3 (13.6%) | 2 (6.2%) | 3 (16.6%) | 1 (9%) | 9 (16.1%) | 18 (13%) |
| 8 | பெண்கள் தமக்கு இழைக்கப்படுகின்ற பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதை அவர்களின் குடும்பத்தினர் அங்கீகரிக்கக் கூடாது | 10 (12.3%) | 8 (15.6%) | 8 (22.2%) | 11 (14.4%) | 8 (8.3%) | 45 (13.2%) | 3 (13%) | 2 (6.2%) | 2 (11.1%) | 1 (9%) | 11 (20%) | 19 (13.6%) |
| 9 | பெண்கள் பொலிஸ் நிலையத்திற்கு செல்லக் கூடாது | 9 (10.8%) | 7 (13.4%) | 5 (13.5%) | 16 (20.7%) | 13 (13.5%) | 50 (14.4%) | 3 (12.5%) | 5 (15.6%) | 4 (22.2%) | 2 (18.1%) | 10 (17.5%) | 24 (16.9%) |
| 10 | பெண்கள் தமது கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது | 10 (12.0%) | 7 (13.4%) | 6 (14.2%) | 13 (17.1%) | 11 (11.8%) | 47 (13.7%) | 3 (12.5%) | 2 (6.2%) | 4 (22.2%) | 0 | 8 (11.2%) | 17 (12%) |

*67* ஒவ்வொரு சமூக நியமம் தொடர்பாகவும் தங்களது தனிப்பட்ட அபிப்பிராயங்களைத் தெரிவித்தவர்களின் எண்ணிக்கை வேறுபட்டுக் காணப்படுகின்றது என்பதுடன் அவ்வாறு பதிலளித்த மொத்த ஆண்கள் மற்றும் மொத்த பெண்களின் எண்ணிக்கையிலிருந்து மேற்குறிப்பிட்ட சதவீத அளவு பெறப்பட்டுள்ளது.

## பிரதான முடிவுகள்

- **பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை, சமையல் மற்றும் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலை, பெண்கள் பொது இடங்களில் அதிகம் பேசக்கூடாது** *மற்றும்* **பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது** *ஆகிய சமூக நியமங்கள் வவுனியா மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய பெண் ஆய்வு பங்குபற்றுநர்களிடையே அதிகம் காணப்பட்டன.*
- **மனைவிமார்கள் எச்சந்தர்ப்பத்திலும் குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்** *மற்றும்* **பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராக புகாரளிப்பதனை குடும்பத்தினர் அனுமதிக்கக்கூடாது** *ஆகிய சமூக நியமங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய பெண் ஆய்வுப் பங்குபற்றுநர்களிடையே அதிகம் காணப்பட்டன.*
- **உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும், பாலியல் வன்முறைகளுக்குள்ளான பெண்கள் கற்பிழந்தோர், பெண்கள் பொலிஸ் நிலையங்களுக்கு செல்லக்கூடாது** *மற்றும்* **கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது** *ஆகிய சமூக நியமங்கள் மன்னார் மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய பெண் ஆய்வுப் பங்குபற்றுநர்களிடையே அதிகம் காணப்பட்டன.*
- **சமையல் மற்றும் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலை, பாலியல் வன்முறைகளுக்குள்ளான பெண்கள் கற்பிழந்தோர், பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதனை குடும்பத்தினர் அனுமதிக்கக்கூடாது மற்றும் பெண்கள் பொது இடங்களில் அதிகம் பேசக்கூடாது** *ஆகிய சமூக நியமங்கள் வவுனியா மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய ஆண் ஆய்வுப் பங்குபற்றுநர்களிடையே அதிகம் காணப்பட்டன.*
- **பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது, பெண்கள் பொலிஸ் நிலையங்களுக்கு செல்லக்கூடாது மற்றும் கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது** *ஆகிய சமூக நியமங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய ஆண் ஆய்வுப் பங்குபற்றுநர்களிடையே அதிகம் காணப்பட்டன.*
- **மனைவிமார் எத்துன்பத்தைத் தாங்கியேனும் குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்** *மற்றும்* **உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும்** *ஆகிய சமூக நியமங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய ஆண் ஆய்வுப் பங்குபற்றுநர்களிடையே அதிகம் காணப்பட்டன.*
- **பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை** *என்ற சமூக நியமம் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய ஆண் ஆய்வுப் பங்குபற்றுநர்களிடையே அதிகம் காணப்பட்டது.*
- *வடமாகாணம் முழுவதிலுமிருந்து பதிலளித்திருந்த பெண் மற்றும் ஆண் பங்குபற்றுநர்களின் பதில்களை சதவீத அடிப்படையில் பகுப்பாய்வு செய்கின்றபோது:*

  - **பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை, சமையல் மற்றும் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலை, மனைவிமார்கள் எச்சந்தர்ப்பத்திலும் குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்** *மற்றும்* **பெண்கள் கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது** *ஆகிய சமூக நியமங்கள் ஆண்களை விடப் பெண்களிடம் அதிகமாக நிலைத்துள்ளன.*
  - **உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும், பாலியல் வன்முறைகளுக்குள்ளான பெண்கள் கற்பிழந்தோர், பெண்கள் பொலிஸ் நிலையங்களுக்கு செல்லக்கூடாது, பெண்கள் பொது இடங்களில் அதிகம் பேசக்கூடாது** *மற்றும்* **பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது** *ஆகிய சமூக நியமங்கள் பெண்களை விட ஆண்களிடம் அதிகமாக நிலைத்துள்ளன.*
- *ஆகவே, சமூக நியமங்களை நிலைமாற்றம் செய்வதற்கான எந்தவொரு தலையீடும் மேற்குறித்த ஆய்வு முடிவுகளைக் கவனத்திற்கொண்டு, பெண்கள் மற்றும் ஆண்கள் என இரு சாராரையும் தக்கவிதத்தில் மையப்படுத்தியவாறு மேற்கொள்ளப்பட வேண்டும்.*

## 4.3.2 மத அடிப்படையில்[68]

### அட்டவணை 4.8

| இல. | கூற்றுக்கள் | உடன்படுவோர் எண்ணிக்கை | | | | | உடன்படாதோர் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | இந்து | கிறிஸ்தவம் | கத்தோலிக்கம் | இஸ்லாம் | பௌத்தம் | இந்து | கிறிஸ்தவம் | கத்தோலிக்கம் | இஸ்லாம் | பௌத்தம் |
| 1 | பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | 85 (31.25%) | 19 (27.14%) | 15 (28.84%) | 10 (25.00%) | 31 (40.79%) | 187 (68.75%) | 51 (72.86%) | 37 (71.16%) | 30 (75.00%) | 45 (59.21%) |
| | | 160 (31.37%) | | | | | 350 (68.63%) | | | | |
| 2 | மனைவி என்பவள் எந்த சந்தர்ப்பத்திலும் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் | 105 (41.67%) | 32 (45.71%) | 20 (40.00%) | 19 (47.50%) | 22 (30.56%) | 147 (58.33%) | 38 (54.29%) | 30 (60.00%) | 21 (52.50%) | 50 (69.44%) |
| | | 198 (40.91%) | | | | | 286 (59.09%) | | | | |
| 3 | சமையல், வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | 73 (26.74%) | 20 (28.17%) | 13 (25.00%) | 19 (50.00%) | 30 (39.47%) | 200 (73.26%) | 51 (71.83%) | 39 (75.00%) | 19 (50.00%) | 46 (60.53%) |
| | | 155 (30.39%) | | | | | 256 (51.72%) | | | | |
| 4 | உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் | 129 (47.96%) | 29 (43.94%) | 24 (48.00%) | 22 (55.00%) | 35 (50.00%) | 140 (52.04%) | 37 (56.06%) | 26 (52.00%) | 18 (45.00%) | 35 (50.00%) |
| | | 239 (48.28%) | | | | | 256 (51.72%) | | | | |
| 5 | பெண்கள்/ பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது | 63 (22.42%) | 25 (36.23%) | 14 (26.92%) | 20 (50.00%) | 44 (57.14%) | 218 (77.58%) | 44 (63.77%) | 38 (73.08%) | 20 (50.00%) | 33 (42.86%) |
| | | 166 (31.98%) | | | | | 353 (68.02%) | | | | |
| 6 | பாலியல் வன்முறை/ பாலியல் வன்புணர்விற்குள்ளான பெண்கள் கற்பிழந்தவர்கள் | 48 (18.18%) | 17 (25.37%) | 11 (22.00%) | 11 (30.56%) | 11 (16.67%) | 216 (81.82%) | 50 (74.63%) | 39 (78.00%) | 25 (69.44%) | 55 (83.33%) |
| | | 98 (20.29%) | | | | | 385 (79.71%) | | | | |
| 7 | பெண்கள் தமக்கு இழைக்கப்படுகின்ற பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதை அவர்களின் குடும்பத்தினர் அங்கீகரிக்கக் கூடாது | 27 (10.23%) | 11 (16.18%) | 5 (9.62%) | 4 (10.53%) | 9 (12.68%) | 237 (89.77%) | 57 (83.82%) | 47 (90.38%) | 34 (89.47%) | 62 (87.32%) |
| | | 56 (11.36%) | | | | | 437 (88.64%) | | | | |
| 8 | பெண்கள் தமக்கு இழைக்கப்படுகின்ற பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதை அவர்களின் குடும்பத்தினர் அங்கீகரிக்கக் கூடாது | 33 (12.60%) | 13 (19.40%) | 8 (15.69%) | 6 (15.79%) | 7 (9.86%) | 229 (87.40%) | 54 (80.60%) | 43 (84.31%) | 32 (84.21%) | 64 (90.14%) |
| | | 67 (13.70%) | | | | | 422 (86.30%) | | | | |
| 9 | பெண்கள் பொலிஸ் நிலையத்துக்கு போகக் கூடாது | 36 (13.38%) | 10 (14.71%) | 7 (13.46%) | 12 (31.58%) | 10 (14.29%) | 233 (86.62%) | 58 (85.29%) | 45 (86.54%) | 26 (68.42%) | 60 (85.71%) |
| | | 75 (15.09%) | | | | | 422 (84.91%) | | | | |
| 10 | பெண்கள் தமது கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது | 38 (14.29%) | 9 (13.43%) | 9 (18.00%) | 7 (17.95%) | 4 (5.71%) | 228 (85.74%) | 58 (86.57%) | 41 (82.00%) | 32 (82.05%) | 66 (94.29%) |
| | | 67 (13.62%) | | | | | 425 (86.38%) | | | | |

68 ஆய்வுப் பங்குபற்றுநர்கள் சிலர் தங்களது பாலினம் அல்லது மதம் அல்லது வயது அல்லது கல்வி மட்டம் என்பனவற்றை வெளிப்படுத்தியிருக்காமையினால், ஒரே சமூக நியமம் தொடர்பில் பதிலளித்துள்ள ஆய்வுப் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை, பாலினம், மதம், வயது மற்றும் கல்வி மட்டம் என வெவ்வேறு கூறுகளின் கீழ் பகுப்பாய்வு செய்கின்றபோது சிறியளவில் வேறுபட்டுக் காணப்படுகின்றது.

**பிரதான முடிவுகள்**

- *கிடைக்கப்பெற்றுள்ளத் தரவுகளின் அடிப்படையில் பார்க்கின்றபோது,* ***உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும், பாலியல் வன்முறைகளுக்குள்ளான பெண்கள் கற்பிழந்தோர், பெண்கள் பொலிஸ் நிலையங்களுக்கு செல்லக்கூடாது, சமையல் மற்றும் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலை மற்றும் மனைவிமார்கள் எத்துன்பத்தைத் தாங்கியேனும் குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்*** *ஆகிய சமூக நியமங்கள் ஏனைய அனைத்து மத சமுதாயங்களைவிட இஸ்லாமிய சமூகத்தில் அதிகமாக நிலைத்திருக்கின்றன.*

- ***பெண்கள் பொது இடங்களில் அதிகம் பேசக்கூடாது*** *மற்றும்* ***பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை*** *ஆகிய சமூக நியமங்கள் ஏனைய அனைத்து மத சமுதாயங்களைவிட பௌத்தமத சமுதாயத்தில் அதிகமாக நிலைத்திருக்கின்றன.*

- ***பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது*** *மற்றும்* ***பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதனை குடும்பத்தினர் அனுமதிக்கக்கூடாது*** *ஆகிய சமூக நியமங்கள் ஏனைய அனைத்து மத சமுதாயங்களைவிட கிறிஸ்தவ மத சமுதாயத்தில் அதிகமாக நிலவுகின்றது.*

- ***பெண்கள் கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது*** *என்ற சமூக நியமம் ஏனைய அனைத்து மத சமுதாயங்களைவிட கத்தோலிக்க மத சமுதாயத்தில் அதிகமாக நிலவுகின்றது.*

- ***உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும், பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை*** *மற்றும்* ***மனைவிமார்கள் எத்துன்பத்தைத் தாங்கியேனும் குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்*** *ஆகிய சமூக நியமங்கள் இந்து மத சமுதாயத்திலும் குறிப்பிடத்தக்களவு நிலைத்திருப்பதனைக் காண முடிகின்றது.*

### 4.3.3 வயது அடிப்படையில்

**அட்டவணை 4.9**

| இல. | கூற்றுக்கள் | ஏற்கின்றேன் | | | | | ஏற்கவில்லை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 21-30 | 31-40 | 41-50 | 51-60 | 61 அல்லது அதற்கு மேல் | 21-30 | 31-40 | 41-50 | 51-60 | 61 அல்லது அதற்கு மேல் |
| 1 | பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | 38 (33.63%) | 49 (30.81%) | 37 (27.40%) | 23 (36.50%) | 15 (39.47%) | 75 (66.37%) | 110 (69.19%) | 98 (72.60%) | 40 (63.5%) | 23 (60.53%) |
| | | 162 (31.89%) | | | | | 346 (68.11%) | | | | |
| 2 | மனைவி என்பவள் எந்த சந்தர்ப்பத்திலும் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் | 37 (34.91%) | 66 (43.14%) | 42 (32.81%) | 26 (43.33%) | 27 (77.14%) | 69 (65.09%) | 87 (56.86%) | 86 (67.19%) | 34 (56.67%) | 8 (22.86%) |
| | | 198 (41.08%) | | | | | 284 (58.92%) | | | | |
| 3 | சமையல், வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | 44 (39.64%) | 47 (29.38%) | 33 (24.44%) | 15 (23.44%) | 15 (39.47%) | 67 (60.36%) | 113 (70.62%) | 102 (75.56%) | 49 (76.56%) | 23 (60.53%) |
| | | 154 (30.31%) | | | | | 354 (69.69%) | | | | |
| 4 | உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் | 57 (51.82%) | 70 (44.87%) | 62 (48.06%) | 28 (45.16%) | 20 (57.14%) | 53 (48.18%) | 86 (55.13%) | 67 (51.94%) | 34 (54.84%) | 15 (42.86%) |
| | | 237 (48.17%) | | | | | 353 (68.28%) | | | | |
| 5 | பெண்கள்/பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது | 47 (40.87%) | 49 (30.25%) | 43 (30.50%) | 14 (22.95%) | 11 (28.95%) | 68 (59.13%) | 113 (69.75%) | 98 (69.50%) | 47 (77.05%) | 47 (71.05%) |
| | | 164 (31.72%) | | | | | 353 (68.02%) | | | | |
| 6 | பாலியல் வன்முறை/ பாலியல் வன்புணர்விற்குள்ளான பெண்கள் கற்பிழந்தவர்கள் | 22 (20.75%) | 31 (20.67%) | 26 (20.31%) | 11 (17.74%) | 8 (22.22%) | 84 (79.25%) | 119 (79.33%) | 102 (79.69%) | 51 (82.26%) | 28 (77.78%) |
| | | 98 (20.33%) | | | | | 384 (79.67%) | | | | |
| 7 | பெண்கள் தமக்கு இழைக்கப்படுகின்ற பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது | 11 (10.00%) | 25 (16.34%) | 7 (5.30%) | 7 (11.67%) | 6 (16.67%) | 99 (90.00%) | 128 (83.66%) | 125 (94.70%) | 53 (88.33%) | 30 (83.33%) |
| | | 56 (11.41%) | | | | | 435 (88.59%) | | | | |
| 8 | பெண்கள் தமக்கு இழைக்கப்படுகின்ற பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதை அவர்களின் குடும்பத்தினர் அங்கீகரிக்கக் கூடாது | 14 (12.61%) | 24 (16.11%) | 16 (12.21%) | 8 (12.90%) | 5 (14.29%) | 97 (87.39%) | 125 (82.24%) | 115 (87.79%) | 54 (87.10%) | 30 (85.71%) |
| | | 67 (13.73%) | | | | | 421 (86.27%) | | | | |
| 9 | பெண்கள் பொலிஸ் நிலையத்துக்கு போகக் கூடாது | 14 (12.61%) | 27 (17.76%) | 19 (14.39%) | 8 (12.70%) | 6 (16.22%) | 97 (87.39%) | 125 (82.24%) | 113 (85.61%) | 55 (87.30%) | 31 (83.78%) |
| | | 74 (14.95%) | | | | | 421 (85.05%) | | | | |
| 10 | பெண்கள் தமது கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது | 12 (11.11%) | 27 (17.76%) | 16 (12.03%) | 7 (11.48%) | 6 (16.22%) | 96 (88.89%) | 125 (82.24%) | 117 (87.97%) | 54 (88.52%) | 31 (83.78%) |
| | | 68 (13.85%) | | | | | 423 (86.15%) | | | | |

**பிரதான முடிவுகள்**

- ***பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை, சமையல் மற்றும் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலை, பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது, மனைவிமார்கள் எத்துன்பத்தைத் தாங்கியேனும் குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும், பாலியல் வன்முறைகளுக்குள்ளான பெண்கள் கற்பிழந்தோர் மற்றும் உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும்*** *ஆகிய ஆறு சமூக நியமங்களும் 61 வயதிற்கு மேற்பட்ட ஆய்வுப் பங்குபற்றுநர்களிடையே அதிகம் காணப்பட்டது.*

- ***பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதனை குடும்பத்தினர் அனுமதிக்கக் கூடாது, பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது, பெண்கள் பொலிஸ் நிலையங்களுக்கு செல்லக்கூடாது*** *மற்றும்* ***கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது*** *ஆகிய சமூக நியமங்கள் 31-40 வரையான வயதுக் குழுவினரிடத்தில் அதிகம் காணப்பட்டது. புகாரளித்தல் தொடர்பான இச்சமூக நியமங்கள் குறித்த இவ்வயதுக் குழுவினரிடையே அதிகமாக காணப்படுவதாக இந்த ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்ற அதேவேளை, இலங்கையில் 2020 ஆம் ஆண்டு பெண்களின் நலன் தொடர்பாக செய்யப்பட்டதொரு ஆய்வில்,[69] ''35-54 வயதுக் குழுவினரிடையே தான் அதிகமான குடும்ப வன்முறைகள் (உடற்சார் மற்றும் பாலியல்சார் வன்முறைகள்) இடம்பெறுவதாக'' கண்டறியப்பட்டுள்ளது.*

- ***சமையல் மற்றும் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலை*** *மற்றும்* ***பெண்கள் பொது இடங்களில் அதிகம் பேசக்கூடாது*** *ஆகிய சமூக நியமங்கள் 21-30 வரையான வயதுக் குழுவினரிடத்தில் அதிகம் காணப்பட்டது.*

***69*** Women's Wellbeing Survey – 2019, Findings from Sri Lanka's first dedicated National Survey on Violence against Women and Girls Final Report, (Department of Census and Statistics, Sri Lanka, October 2020) available at: http://www.statistics.gov.lk/Resource/refference/WWS_2019_Final_Report accessed 12 August 2021

## 4.3.4 கல்விமட்ட அடிப்படையில்

அட்டவணை 4.10

| இல. | கூற்றுக்கள் | ஏற்கின்றேன் | | | | | | | | | | ஏற்கவில்லை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எழுத்தறிவு உண்டு, ஆனால் முறையான கல்வி இல்லை | எழுத்தறிவு இல்லை | தரம் 5 வரை | தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை | தரம் 9 தொடக்கம் ஓ:டு வரை | A/L வரை | கல்வியியற் கல்லூரி | டிப்ளோமா | இளமானி பட்டப்படிப்பு | முதுமானி பட்டப்படிப்பு | எழுத்தறிவு உண்டு, ஆனால் முறையான கல்வி இல்லை | எழுத்தறிவு இல்லை | தரம் 5 வரை | தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை | தரம் 9 தொடக்கம் ஓ:டு வரை | A/L வரை | கல்வியியற் கல்லூரி | டிப்ளோமா | இளமானி பட்டப்படிப்பு | முதுமானி பட்டப்படிப்பு |
| 1 | பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | 3 (30.00%) | 2 (40.00%) | 3 (50.00%) | 12 (30.00%) | 70 (33.33%) | 50 (29.41%) | 1 (11.11%) | 9 (32.14%) | 10 (31.25%) | 1 (100.00%) | 7 (70.00%) | 3 (60.00%) | 3 (50.00%) | 28 (70.00%) | 140 (66.67%) | 120 (70.59%) | 8 (88.89%) | 19 (67.86%) | 22 (68.75%) | 0 (0.00%) |
| | | 161 (31.51%) | | | | | | | | | | 350 (68.49%) | | | | | | | | | |
| 2 | மனைவி என்பவள் எந்த சந்தர்ப்பத்திலும் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் | 3 (33.33%) | 1 (33.33%) | 2 (40.00%) | 15 (39.47%) | 88 (43.35%) | 71 (44.38%) | 3 (33.33%) | 9 (33.33%) | 6 (20.00%) | 1 (100.00%) | 6 (66.67%) | 2 (66.67%) | 3 (60.00%) | 23 (60.53%) | 115 (56.65%) | 89 (55.62%) | 6 (66.67%) | 18 (66.67%) | 24 (80.00%) | 0 (0.00%) |
| | | 199 (41.03%) | | | | | | | | | | 286 (58.97%) | | | | | | | | | |
| 3 | சமையல், வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | 4 (40.00%) | 1 (20.00%) | 2 (33.33%) | 12 (30.00%) | 73 (34.43%) | 47 (27.81%) | 1 (11.11%) | 7 (25.00%) | 8 (25.81%) | 1 (100.00%) | 6 (60.00%) | 4 (80.00%) | 4 (66.67%) | 28 (70.00%) | 139 (65.57%) | 122 (72.19%) | 8 (88.89%) | 21 (75.00%) | 23 (74.19%) | 0 (0.00%) |
| | | 156 (30.53%) | | | | | | | | | | 355 (69.47%) | | | | | | | | | |
| 4 | உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்ம் | 3 (30.00%) | 3 (75.00%) | 3 (60.00%) | 21 (56.76%) | 98 (47.80%) | 80 (48.78%) | 2 (22.22%) | 13 (46.43%) | 13 (40.63%) | 1 (100.00%) | 7 (70.00%) | 1 (25.00%) | 2 (40.00%) | 16 (43.24%) | 107 (52.20%) | 84 (51.22%) | 7 (77.78%) | 15 (53.57%) | 19 (59.37%) | 0 (0.00%) |
| | | 237 (47.88%) | | | | | | | | | | 258 (52.12%) | | | | | | | | | |
| 5 | பெண்கள்/பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது | 3 (30.00%) | 1 (20.00%) | 1 (16.67%) | 15 (38.46%) | 76 (34.55%) | 48 (28.24%) | 1 (11.11%) | 6 (21.43%) | 13 (40.63%) | 1 (100.00%) | 7 (70.00%) | 4 (80.00%) | 5 (83.33%) | 24 (61.54%) | 144 (65.45%) | 122 (71.76%) | 8 (88.89%) | 22 (78.57%) | 19 (59.37%) | 0 (0.00%) |
| | | 165 (31.73%) | | | | | | | | | | 387 (79.79%) | | | | | | | | | |

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | பாலியல் வன்முறை / பாலியல் வன்புணர்விற்குள்ளான பெண்கள் கற்பிழந்தவர்கள் | 3 (30.00%) | 0 (0.00%) | 0 (0.00%) | 12 (30.00%) | 44 (22.34%) | 28 (17.07%) | 4 (44.44%) | 4 (16.00%) | 3 (9.68%) | 0 (0.00%) | 7 (70.00%) | 3 (100.00%) | 5 (100.00%) | 28 (70.00%) | 153 (77.66%) | 136 (82.93%) | 4 (44.44%) | 4 (16.00%) | 3 (9.68%) | 0 (0.00%) |
| | | 98 (20.21%) | | | | | | | | | | 387 (79.79%) | | | | | | | | | |
| 7 | பெண்கள் தமக்கு இழைக்கப்படுகின்ற பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது | 2 (20.00%) | 1 (25.00%) | 1 (25.00%) | 6 (14.63%) | 23 (11.27%) | 19 (11.59%) | 0 (0.00%) | 3 (10.71%) | 1 (3.33%) | 0 (0.00%) | 8 (80.00%) | 3 (75.00%) | 3 (75.00%) | 35 (85.37%) | 181 (88.73%) | 145 (88.41%) | 9 (100.00%) | 25 (89.29%) | 29 (96.67%) | 1 (100.00%) |
| | | 56 (11.31%) | | | | | | | | | | 439 (88.69%) | | | | | | | | | |
| 8 | பெண்கள் தமக்கு இழைக்கப்படுகின்ற பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதை அவர்களின் குடும்பத்தினர் அங்கீகரிக்கக் கூடாது | 3 (30.00%) | 0 (0.00%) | 0 (0.00%) | 8 (20.51%) | 26 (12.87%) | 25 (15.34%) | 0 (0.00%) | 3 (10.71%) | 1 (3.23%) | 0 (0.00%) | 7 (70.00%) | 3 (100.00%) | 5 (100.00%) | 31 (79.49%) | 176 (87.13%) | 138 (84.66%) | 9 (100.00%) | 25 (89.29%) | 30 (67.77%) | 30 (67.77%) |
| | | 66 (13.44%) | | | | | | | | | | 425 (86.56%) | | | | | | | | | |
| 9 | பெண்கள் பொலிஸ் நிலையத்துக்கு போகக் கூடாது | 2 (20.00%) | 0 (0.00%) | 1 (20.00%) | 8 (20.51%) | 38 (18.45%) | 18 (10.84%) | 0 (0.00%) | 7 (25.00%) | 0 (0.00%) | 1 (100.00%) | 8 (80.00%) | 4 (100.00%) | 4 (100.00%) | 31 (79.49%) | 168 (81.55%) | 148 (89.16%) | 9 (100.00%) | 21 (75.00%) | 31 (100.00%) | 0 (0.00%) |
| | | 75 (15.03%) | | | | | | | | | | 424 (84.97%) | | | | | | | | | |
| 10 | பெண்கள் தமது கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது | 1 (11.11%) | 0 (0.00%) | 0 (0.00%) | 5 (12.82%) | 34 (16.43%) | 22 (13.50%) | 0 (0.00%) | 4 (14.29%) | 2 (6.67%) | 0 (0.00%) | 8 (88.89%) | 3 (100.00%) | 5 (100.00%) | 34 (87.18%) | 173 (83.57%) | 141 (86.50%) | 9 (100.00%) | 24 (85.71%) | 28 (93.33%) | 1 (100.00%) |
| | | 68 (13.77%) | | | | | | | | | | 426 (86.23%) | | | | | | | | | |

**பிரதான முடிவுகள்**

- பொதுவாகப் பார்க்கின்றபோது, இச்சமூக நியமங்கள் கல்வியியற் கல்லூரி, டிப்ளோமா அல்லது இளமானிக் கல்வியினைப் பெற்றுள்ளவர்கள் மத்தியில் குறைவாகக் காணப்படுகின்றன.
- எவ்வாறெனினும், பெண்கள் தமது கணவர்மாருக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது மற்றும் பெண்கள் பொலிஸ் நிலையத்திற்கு போகக் கூடாது ஆகிய சமூக நியமங்கள் டிப்ளோமா படிப்பினை நிறைவு செய்தவர்களிடையே குறிப்பிடத்தக்களவு அதிகமாகக் காணப்படுகின்றன.
- இளமானிக் கல்வியினைப் பெற்றுள்ளவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, க.பொ.சாதாரண தரம் அல்லது அதற்கு குறைவான கல்வி அடைவுகளைக் கொண்டுள்ளோரிடையே பொதுவாக அனைத்து சமூக நியமங்களும் குறிப்பிடத்தக்களவு அதிகமாகவே காணப்படுகின்றன.

## 4.4 அடையாளப்படுத்தப்பட்ட பால்நிலை பாரபட்சமிக்க பிரதான சமூக நியமங்களை SNAP கட்டமைப்பினூடாக மதிப்பீடு செய்தல் [70]

### 4.4.1 சமூக நியமங்கள் தொடர்பான சமூக எதிர்பார்ப்புக்கள்

**மற்றையவர்கள் என்ன செய்கிறார்கள் என நான் நினைக்கின்றேன்?** (Empirical Expectations)

**அட்டவணை 4.11**

| இல | கூற்று | ஆய்வுப் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | ஏற்கிறேன் | ஏற்கவில்லை |
| 1 | பெண்களே பிரதானமாகப் பிள்ளை பராமரிப்பு பணியில் ஈடுபடுகின்றனர் | 370 | 95 |
| 2 | மனைவிமார்கள் எந்த சந்தர்ப்பத்திலும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையைத் தக்கவைத்துக்கொள்ள முற்படுகின்றனர் | 367 | 100 |
| 3 | பெண்களே பிரதானமாகச் சமையல், வீட்டு வேலைகள் என்பனவற்றைச் செய்கின்றனர் | 352 | 119 |
| 4 | உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்படுகின்றனர் | 355 | 102 |
| 5 | பெண்கள்/பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசுவதில்லை | 340 | 134 |
| 6 | பாலியல் வன்முறைகளுக்குள்ளான பெண்களைக் கற்பிழந்தோராகக் கருதுகின்றனர் | 277 | 161 |
| 7 | பெரும்பாலும் பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கத் தயங்குகின்றனர் | 329 | 113 |
| 8 | பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதை அவர்களின் குடும்பத்தினர் தடுக்கின்றனர் | 330 | 100 |
| 9 | பெரும்பாலும் பெண்கள் பொலிஸ் நிலையத்துக்கு செல்வதில்லை | 321 | 125 |
| 10 | பெண்கள் பெரும்பாலும் தமது கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிப்பதில்லை | 313 | 138 |

*70* SNAP கட்டமைப்பு தொடர்பான விளக்கத்திற்கு அத்தியாயம் *3* இனைப் பார்க்கவும்.

வரைபு 4.1

*நடைமுறை எதிர்பார்ப்புக்கள்* (Empirical Expectations)




**நான் என்ன செய்ய வேண்டுமென மற்றையவர்கள் எதிர்பார்ப்பதாக நான் நினைக்கின்றேன்?** (Normative Expectations)

அட்டவணை 4.12

| இல | கூற்று | ஆய்வுப் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | ஆம் | இல்லை |
| 1 | பெண்களே பிரதானமாகப் பிள்ளைப் பராமரிப்பு பணியில் ஈடுபட வேண்டுமென பிறர் எதிர்பார்க்கின்றனர் | 325 | 100 |
| 2 | மனைவிமார்கள் எந்த சந்தர்ப்பத்திலும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென பிறர் எதிர்பார்க்கின்றனர் | 346 | 78 |
| 3 | பெண்களே பிரதானமாகச் சமையல், வீட்டு வேலைகள் என்பனவற்றைச் செய்ய வேண்டுமென பிறர் எதிர்பார்க்கின்றனர் | 303 | 106 |
| 4 | உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டுமென பிறர் எதிர்பார்க்கின்றனர் | 346 | 80 |
| 5 | பெண்கள்/ பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக்கூடாது என பிறர் எதிர்பார்க்கின்றனர் | 395 | 44 |
| 6 | பாலியல் வன்முறைகளுக்குள்ளான பெண்கள் கற்பிழந்தோரென பிறர் கருதுகின்றனர் | 308 | 106 |
| 7 | பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாதென பிறர் எதிர்பார்க்கின்றனர் | 249 | 153 |
| 8 | பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதை அவர்களின் குடும்பத்தினர் அனுமதிக்கக்கூடாதென பிறர் எதிர்பார்க்கின்றனர் | 279 | 133 |
| 9 | பெண்கள் பொலிஸ் நிலையத்துக்கு செல்லக்கூடாதென பிறர் எதிர்பார்க்கின்றனர் | 296 | 112 |
| 10 | பெண்கள் தமது கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாதென பிறர் எதிர்பார்க்கின்றனர் | 297 | 112 |

**வரைபு 4.2**

*விதிமுறை எதிர்பார்ப்புக்கள்* (Normative Expectations)




### பிரதான முடிவுகள்

➤ *அடையாளப்படுத்தப்பட்ட சமூக நியமங்களின் பலமானது நடைமுறை எதிர்பார்ப்புக்கள் மற்றும் விதிமுறை எதிர்பார்ப்புக்கள் ஆகிய சமூக எதிர்பார்ப்புக்களின் இரு கூறுகளையும் பகுப்பாய்வு செய்ததனூடாக மதிப்பிடப்பட்டுள்ளது. எச்சமூக நியமம் தொடர்பில் அதிகளவான சமூக எதிர்பார்ப்புக்கள் நிலைத்திருக்கின்றனவோ, அது பலம் பொருந்திய சமூக நியமமாக அடையாளங்காணப்பட்டது. அதற்கமைய,* **பலத்தின்** *அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டிருக்கும் சமூக நியமங்களின் பட்டியலைக் கீழே காண முடியும்:*

1. **பெண்கள் பொது இடங்களில் அதிகம் பேசக் கூடாது**
2. **மனைவிமார்கள் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது குடும்ப வாழ்வினைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்**
3. **உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும்**
4. **பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை**
5. **சமையல் மற்றும் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள்**
6. **பெண்கள் பொலிஸ் நிலையத்திற்கு செல்லக் கூடாது**
7. **பெண்கள் கணவர்மாருக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது**
8. **பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதனை அவர்கள் குடும்பத்தினர் அனுமதிக்கக் கூடாது**
9. **பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட பெண்கள் கற்பிழந்தோர்**
10. **பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது**

➤ நிலைத்திருக்கின்ற அளவிற்கேற்ப சமூக நியமங்களைத் தரவரிசைப்படுத்துகின்றபோதும், பலத்திற்கேற்ப அவற்றைத் தரவரிசைப்படுத்துகின்றபோதும் முதல் ஐந்து இடங்களையும் ஒரே சமூக நியமங்களே பிடித்துக் கொள்கின்றன. ஆகவே, இவையே இந்த ஆய்வினால் அடையாளப்படுத்தப்படுகின்ற வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க ''மிக முக்கிய சமூக நியமங்களாக'' அமைகின்றன.

### 4.4.2 சமூகத் துலங்கல்- சமூக அங்கீகரிப்பு மற்றும் புறக்கணிப்பு

**அட்டவணை 4.13**

<table>
<tr><th rowspan="3">இல</th><th rowspan="3">செயல்<br>(சமூக நியமமொன்று மீறப்படுகின்றபோது)</th><th colspan="5">சமூகத்தின் துலங்கல்</th></tr>
<tr><th>சமூக அங்கீகரிப்பு</th><th colspan="2">சமூக புறக்கணிப்பு</th><th rowspan="2">துலங்கல் எதுவும் இல்லை</th><th rowspan="2">தெரியவில்லை</th></tr>
<tr><th>நேர்மறை</th><th>எதிர்மறை</th><th>மாற்றுவதற்காக எதிர்மறையாகத் தலையிடும்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">ஒரு ஆண் தனது பிள்ளைகளைப் பராமரித்தால்</td><td rowspan="2">164<br>(39.0%)</td><td>159<br>(37.8%)</td><td>31<br>(7.3%)</td><td rowspan="2">57<br>(13.5%)</td><td rowspan="2">9<br>(2.1%)</td></tr>
<tr><td colspan="2">190<br>(45.2%)</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">ஒரு பெண் தனது திருமண/குடும்ப வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்ளாவிட்டால்</td><td rowspan="2">80<br>(17.6%)</td><td>238<br>(52.5%)</td><td>84<br>(18.5%)</td><td rowspan="2">36<br>(7.9%)</td><td rowspan="2">15<br>(3.3%)</td></tr>
<tr><td colspan="2">322<br>(71%)</td></tr>
<tr><td rowspan="2">3</td><td rowspan="2">ஒரு பெண் வீட்டு வேலைகளை மற்றும் சமையலை செய்யாவிட்டால்</td><td rowspan="2">61<br>(13.6%)</td><td>268<br>(59.9%)</td><td>73<br>(16.3%)</td><td rowspan="2">37<br>(8.2%)</td><td rowspan="2">8<br>(1.7%)</td></tr>
<tr><td colspan="2">341<br>(76.2%)</td></tr>
<tr><td rowspan="2">4</td><td rowspan="2">ஒரு பெண் உடல் வலு அதிகம் தேவைப்படுகின்ற வேலைகளைச் செய்தால்</td><td rowspan="2">50<br>(11.8%)</td><td>265<br>(62.9%)</td><td>56<br>(13.3%)</td><td rowspan="2">40<br>(9.5%)</td><td rowspan="2">10<br>(2.3%)</td></tr>
<tr><td colspan="2">321<br>(76.2%)</td></tr>
<tr><td rowspan="2">5</td><td rowspan="2">ஒரு பெண்/பெண் பிள்ளை பொது இடங்களில் அதிகமாகப் பேசினால்</td><td rowspan="2">84<br>(18%)</td><td>272<br>(58.4%)</td><td>62<br>(13.3%)</td><td rowspan="2">41<br>(8.8%)</td><td rowspan="2">6<br>(1.2%)</td></tr>
<tr><td colspan="2">334<br>(71.8%)</td></tr>
<tr><td rowspan="2">6</td><td rowspan="2">பாலியல் வன்முறைகளுக்குள்ளான பெண்கள்/ பெண் பிள்ளைகள் பற்றிய சமூகப் பார்வை</td><td rowspan="2">56<br>(12.3%)</td><td>284<br>(62.8%)</td><td>71<br>(15.7%)</td><td rowspan="2">34<br>(7.5%)</td><td rowspan="2">7<br>(1.5%)</td></tr>
<tr><td colspan="2">355<br>(78.5%)</td></tr>
<tr><td rowspan="2">7</td><td rowspan="2">ஒரு பெண்/பெண் பிள்ளை பாலியல் வன்முறைக்கெதிராகப் புகார் செய்தால்</td><td rowspan="2">114<br>(25.2%)</td><td>207<br>(45.7%)</td><td>84<br>(18.5%)</td><td rowspan="2">35<br>(7.7%)</td><td rowspan="2">12<br>(2.6%)</td></tr>
<tr><td colspan="2">291<br>(64.3%)</td></tr>
<tr><td rowspan="2">8</td><td rowspan="2">ஒரு பெண்/பெண் பிள்ளை பாலியல் வன்முறைக்கெதிராகப் புகார் செய்வதற்கு அவரது குடும்பம் ஒத்துழைத்தால்</td><td rowspan="2">65<br>(14.6%)</td><td>267<br>(60.2%)</td><td>68<br>(15.3%)</td><td rowspan="2">34<br>(7.6%)</td><td rowspan="2">9<br>(2.0%)</td></tr>
<tr><td colspan="2">335<br>(75.6%)</td></tr>
<tr><td rowspan="2">9</td><td rowspan="2">ஒரு பெண்/பெண் பிள்ளை பொலிஸ் நிலையத்திற்கு சென்றால்</td><td rowspan="2">69<br>(15.4%)</td><td>262<br>(58.7%)</td><td>72<br>(16.1%)</td><td rowspan="2">35<br>(7.8%)</td><td rowspan="2">8<br>(1.7%)</td></tr>
<tr><td colspan="2">334<br>(74.8%)</td></tr>
<tr><td rowspan="2">10</td><td rowspan="2">ஒரு பெண் தனது கணவருக்கெதிராக பொலிஸ் நிலையத்தில் புகார் செய்தால்</td><td rowspan="2">79<br>(17.2%)</td><td>261<br>(57.1%)</td><td>72<br>(15.7%)</td><td rowspan="2">35<br>(7.6%)</td><td rowspan="2">10<br>(2.1%)</td></tr>
<tr><td colspan="2">333<br>(72.8%)</td></tr>
</table>

### பிரதான முடிவுகள்

- ***'பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட பெண்கள்'*** தொடர்பாக சமூகம் எதிர்மறையானத் துலங்கலை வெளிப்படுத்துவதாக 78.5% ஆய்வுப் பங்குபற்றுநர்கள் பதிலளித்திருந்தனர். அதனடிப்படையில், வட மாகாணத்தில் இந்நியமம் தொடர்பிலேயே அதிகளவான சமூக புறக்கணிப்பு காணப்படுகின்றது.

- ***'சமையல், வீட்டு வேலைகள் பிரதானமாகப் பெண்களின் வேலை', 'பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்படுகின்ற பெண்கள் புகாரளிப்பதற்கு குடும்பத்தினர் அனுமதிக்கக்கூடாது',*** மற்றும் ***'உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும்'*** ஆகிய சமூக நியமங்களை மீறி செயற்படுகின்றபோது சமூகம் எதிர்மறையானத் துலங்கலை வெளிப்படுத்துவதாக 75% இற்கும் அதிகமான ஆய்வுப் பங்குபற்றுநர்கள் தெரிவித்திருந்தனர்.

- ***'பெண்கள் பொலிஸ் நிலையத்திற்கு செல்லக்கூடாது', 'பெண்கள் கணவர்மார்களுக்கெதிராக புகாரளிக்கக்கூடாது', 'பெண்கள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக்கூடாது'*** மற்றும் ***'பெண்கள் எத்துன்பத்தைத் தாங்கியேனும் குடும்ப வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்'*** ஆகிய சமூக நியமங்கள் மீறப்படுகின்றபோது சமூகம் எதிர்மறையானத் துலங்கலை வெளிப்படுத்துவதாக 70% இற்கும் அதிகமான ஆய்வுப் பங்குபற்றுநர்கள் தெரிவித்திருந்தனர்.

- ***'பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கின்றபோது'*** சமூகம் எதிர்மறையானத் துலங்கலை வெளிப்படுத்துவதாக 64.3% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் தெரிவித்திருந்தனர்.

- எவ்வாறெனினும், 45.2% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்களே ***'ஆண்கள் பிள்ளைப் பராமரிப்பில் ஈடுபடுகின்றபோது'*** சமூகம் எதிர்மறையானத் துலங்கலை வெளிப்படுத்துவதாகத் தெரிவித்திருந்தனர். இவ்விடயம் தரவுகளைச் சரிபார்ப்பதற்கான சந்திப்பின்போது தரவு சேகரிப்பாளர்களுடன் கலந்துரையாடப்பட்டது. தற்காலத்தில், கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் வேலைக்கு செல்வதால் ஆண்களும் பிள்ளைப் பராமரிப்பில் ஈடுபடுவதாகவும், அது தற்போது சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது. எவ்வாறெனினும், ***'பிள்ளைப் பராமரிப்பு பெண்களின் வேலையே'*** என்ற நியமம் சமூகத்தில் நிலைத்திருப்பதாக 81.02% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் கூறியுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும்.

## 4.4.3 சமூகத் துலங்கலின் தாக்கம்

ஆய்வுப் பங்குபற்றுநர்களுள் 60% இற்கும் அதிகமானோர், அடையாளப்படுத்தப்பட்டுள்ள இச்சமூக நியமங்களைப் பின்பற்றாத சந்தர்ப்பங்களில் எதிர்கொள்ள வேண்டிய சமூக புறக்கணிப்பு, சமூக ஒதுக்கம் மற்றும் சமூக விமர்சனங்கள் என்பவற்றிற்கு அஞ்சியே இச்சமூக நியமங்களைப் பின்பற்றுவதாகத் தெரிவிக்கின்றனர். இதனடிப்படையில் பார்க்கின்றபோது, சமூகத் துலங்கல்கள் சமூக நியமங்களின் நிலைத்திருப்பில் பிரதான தாக்கம் செலுத்துகின்றன என்ற முடிவிற்கு வர முடியும்.

### பிரதான முடிவுகள்

- ***60% இற்கும் அதிகமான ஆய்வுப் பங்குபற்றுநர்கள் சமூகத் தண்டனைகளுக்கு அஞ்சியே சமூக நியமங்களைப் பின்பற்றுவதாகக் கூறியிருந்தனர்.***

## 4.4.4 விதிவிலக்குகள்

அட்டவணை 4.14

| சமூக நியமம் | விதிவிலக்குகள் (குறிப்பிட்ட சமூக நியமத்திலிருந்து பிறழ்வடையக்கூடிய அனுமதிக்கப்பட்ட ஏதேனும் சந்தர்ப்பங்கள்) |
|---|---|
| பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | ❖ மனைவி சுகவீனமுற்றிருக்கும் சந்தர்ப்பங்களில் கணவன் செய்யலாம்<br>❖ மனைவியும் தொழிலுக்கு செல்லும் சந்தர்ப்பங்களில் கணவன் செய்யலாம் |
| மனைவிமார்கள் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது குடும்ப வாழ்வினைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் | ❖ கணவன் தொடர்ச்சியாக உடல்ரீதியாக கொடுமைப்படுத்துகின்றபோது பிரியலாம்<br>❖ கணவன் துரோகம் செய்கின்றபோது பிரியலாம் |
| சமையல் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | ❖ மனைவி சுகவீனமுற்றிருக்கும் சந்தர்ப்பங்களில் கணவன் செய்யலாம்<br>❖ மனைவியும் தொழிலுக்கு செல்லும் சந்தர்ப்பங்களில் கணவன் செய்யலாம் |
| உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும் | ❖ கணவனை இழந்த பெண்கள் வருமானத்திற்காக இத்தகைய வேலைகளை செய்யலாம்<br>❖ பெண்களுக்கு உடல் வலு மற்றும் வேலை செய்வதற்கானத் தேவை இருக்கும்போது செய்யலாம் |
| பெண்கள் பொது இடங்களில் அதிகம் பேசக் கூடாது | ❖ உரிமைக்காகக் கதைக்கலாம் |
| பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட பெண்கள் கற்பிழந்தோர் | ❖ ஒழுக்கமாக இருந்தும் வலுக்கட்டாயத்தினால் பாலியல் வன்புணர்விற்குட்பட்டால் இவ்வாறு கருதக்கூடாது |
| பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது | ❖ இரகசியமாகப் புகாரளிக்க முடியுமெனின் புகாரளிக்கலாம் |
| பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதனை அவர்கள் குடும்பத்தினர் அனுமதிக்கக் கூடாது | ❖ இரகசியமாகப் புகாரளிக்க முடியுமெனின் புகாரளிக்கலாம் |
| பெண்கள் பொலிஸ் நிலையத்திற்கு செல்லக் கூடாது | ❖ துணைக்கு யாருமில்லாத அவசர சந்தர்ப்பத்தில் செல்லலாம்<br>❖ பாதுகாப்போடு செல்வதாயின் செல்லலாம் |
| பெண்கள் கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது | ❖ கணவன் தொடர்ச்சியாக உடல்ரீதியாக கொடுமைப்படுத்துகின்றபோது புகாரளிக்கலாம் |

## 4.4.5 செல்வாக்கு செலுத்தும் நபர்கள் (Reference groups)

குறிப்பிட்ட சமூக நியமமொன்றின் நிலைத்திருப்பில் செல்வாக்கு செலுத்துகின்ற நபர்களை அறிந்து கொள்ளுதலானது, அச்சமூக நியமங்களை நிலைமாற்றம் செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற தலையீடுகளை வடிவமைத்துக் கொள்வதற்கு அத்தியாவசியமானதாகும். அவ்வகையில், அடையாளப்படுத்தப்பட்டுள்ள பத்து சமூக நியமங்களிலும் செல்வாக்கு செலுத்தும் நபர்கள் தொடர்பான மதிப்பீட்டினை கீழுள்ள அட்டவணையினூடாகக் காணலாம்.

அட்டவணை 4.15

| சமூக நியமம் | தாய் | தந்தை | பெண் குடும்ப அங்கத்தவர் | ஆண் குடும்ப அங்கத்-தவர் | மதத் தலைவர்கள் | அயலவர்கள் | ஒட்டுமொத்த சமூகம் |
|---|---|---|---|---|---|---|---|
| பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | 13.05% | 11.45% | 12.05% | 12.25% | 2.61% | 14.66% | 33.94% |
| மனைவிமார்கள் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது குடும்ப வாழ்வினைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் | 17.32% | 13.24% | 12.58% | 11.93% | 5.39% | 11.93% | 27.61% |
| சமையல் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | 10.72% | 10.26% | 12.59% | 13.05% | 2.56% | 13.29% | 37.53% |
| உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும் | 6.78% | 6.07% | 10.28% | 9.58% | 2.34% | 13.79% | 51.17% |
| பெண்கள் பொது இடங்களில் அதிகம் பேசக் கூடாது | 17.89% | 14.09% | 13.01% | 12.47% | 5.01% | 12.33% | 25.20% |
| பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட பெண்கள் கற்பிழந்தோர் | 4.28% | 5.08% | 7.22% | 6.95% | 3.21% | 20.32% | 52.94% |
| பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது | 11.34% | 10.05% | 15.46% | 15.21% | 2.06% | 14.43% | 31.44% |
| பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதனை அவர்கள் குடும்பத்தினர் அனுமதிக்கக் கூடாது | 11.81% | 11.56% | 11.56% | 12.06% | 3.52% | 18.09% | 31.41% |
| பெண்கள் பொலிஸ் நிலையத்திற்கு செல்லக் கூடாது | 11.73% | 10.62% | 10.84% | 11.50% | 3.98% | 15.71% | 35.62% |
| பெண்கள் கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக்கூடாது | 13.79% | 11.73% | 13.58% | 13.79% | 3.50% | 14.61% | 29.01% |

**பிரதான முடிவுகள்**

- சமூக நியமங்களின் நிலைத்திருப்பில் மதத் தலைவர்களின் செல்வாக்கு மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.
- சமூக நியமங்களின் நிலைத்திருப்பில் ஒட்டு மொத்த சமூகத்தினதும் செல்வாக்கு மிக அதிகமாகக் காணப்படுகின்றது.
- **பெண்கள் பொது இடங்களில் அதிகம் பேசக்கூடாது** மற்றும் **பெண்கள் எத்துன்பத்தைத் தாங்கியேனும் குடும்ப வாழ்வினைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்** ஆகிய சமூக நியமங்களின் நிலைத்திருப்பிற்கு தாய்மார்கள் கணிசமானளவு பங்களிப்பு வகிக்கின்றனர்.
- சமூக நியமங்களின் நிலைத்திருப்பிற்கு தந்தைமார்களால் செய்யப்படுகின்ற பங்களிப்பின் அளவினை விட தாய்மார்களினால் செய்யப்படுகின்ற பங்களிப்பின் அளவு சிறியளவில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

## 4.5 அடையாளப்படுத்தப்பட்ட பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களின் நிலைத்திருப்பிற்கான காரணங்கள்

நிலைத்திருக்கும் அளவு மற்றும் உறுதித் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ள முதற் பத்து சமூக நியமங்களும் நிலைத்திருக்கின்றமைக்கான காரணங்கள், ஆய்வுப் பங்குபற்றுநர்களினால் வழங்கப்பட்டத் தரவுகளின் அடிப்படையில் கீழ்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்றத் தரவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு, இக்காரணங்கள் கீழ் வழங்கப்பட்டுள்ள ஒழுங்கில் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக 'பண்புசார் உள்ளடக்கப் பகுப்பாய்வு' முறை (Qualitative Content Analysis) பயன்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.16**

| சமூக நியமம் | நிகழ்வுசார் காரணங்கள்/உடனடிக் காரணங்கள் | உணர்வுசார் நியாயம் | மூல காரணம் |
|---|---|---|---|
| பெண்கள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது | அதிகமாகப் பேசுகின்றப் பெண்களை சமூகம் விமர்சிக்கும்.பெரும்பாலும், சமூக விமர்சிப்பிற்கு 'வாய்க்காரி', 'வாயாடி', 'அடக்கமற்றவள்' என்ற சொற்பிரயோகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. | பெண்களுக்கு அடக்கம் அத்தியாவசியம் என்ற எண்ணம். | தமிழர் கலாசாரத்தில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன பெண்களுக்குரிய நாற்குணங்களென்றும் அவை பின்பற்றப்பட வேண்டுமென்றும் நம்பப்படுகின்றது. |
| | பெண் பிள்ளைகள் அதிகம் பேசக்கூடாதென்ற பெற்றோரின் கட்டுப்பாடு. பெரும்பாலும், இது தாயின் வழிகாட்டலொன்றாக அமைகின்றது. | பெண் பிள்ளைகள் அதிகம் பேசினால் குடும்ப கௌரவம் குறைந்துவிடும் என்ற எண்ணம். | கலாசாரம் மற்றும் மரபுகளுக்கமைய, அமைதியாக இருத்தல் பெண்களுக்கே உரிய ஒழுக்கமாகக் கருதப்படுகின்றது.<br><br>பெண்கள் அடக்கமாக மற்றும் அமைதியாக இருக்க ண்டுமென முன்னோர்கள் கூறியுள்ளனர். |
| | அதிகமாகப் பேசுகின்ற பெண்களுக்கு திருமணம் நடைபெறாது/ நல்ல வரன் அமையாது. | அதிகமாகப் பேசுகின்ற பெண்கள் தவறான நடத்தையுள்ளவர்கள் என்ற சமூக எண்ணம். | பெண்கள் பகிரங்கப்பரப்பில் செயற்படுவதனை ஆண்கள் பெரும்பாலும் விரும்புவதில்லை. |
| | பெண்கள் பொது இடங்களில் பேசுவதனை குறிப்பாக ஆண்கள் அனுமதிப்பதில்லை. பகிரங்கப் பரப்புக்களில் ஆண்கள் அதிகமாக செல்வாக்கு செலுத்துகின்றமையினால் பெண்களுக்கு தங்களது கருத்துக்களை சொல்வதற்கான வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| மனைவிமார்கள் எத்துன்பத்தைத் தாங்கியேனும் தமது குடும்ப வாழ்வினைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் | பிள்ளைகளின் மனநல ஆரோக்கியம் மற்றும் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை, திருமண வாழ்க்கையினைக் கருத்திற் கொள்ளல். | பிள்ளைகளுக்காக எத்துன்பத்தையும் சகிக்கும் தாய்மைக் குணம் பெண்களிடம் இருக்க வேண்டும்/ காணப்படுகின்றது என்ற எண்ணம். | கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் அடிப்படையில் பெண் இப்படி இருக்க வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றாள்.<br><br>துன்பத்தைச் சகிக்கும் குணம் பெண்களுக்கான பெருமைகளுள் ஒன்றென கலாசார மற்றும் பாரம்பரியக் கதைகள் எடுத்துக்காட்டுகின்றன.<br><br>கலாசார மரபுகளின்படி பெண்களே குடும்பப் பிரச்சினைகளை அனுசரித்து வாழ வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளனர். |
| | மனைவிமார்கள் அப்படி இருக்க வேண்டுமென சமூகம் எதிர்பார்க்கின்றது. மீறினால் சமூக விமர்சனத்திற்கும் சமூகத்தின் புறக்கணிப்பிற்கும் ஆளாக நேரிடும். பெரும்பாலும், கணவர்மார்களைப் பிரிந்து வாழும் பெண்கள் ‘வாழாவெட்டி’ மற்றும் ‘ஆடுகாளி’ போன்ற சொற்களினால் விமர்சிக்கப்படுகின்றனர். | சமூகப் புறக்கணிப்பினால் சமூகப் பாதுகாப்பினை இழக்க நேரிடும் என்ற அச்சம். அதாவது, தனக்கு ஒரு பிரச்சினை வருகின்ற போது சமூகத்திலுள்ளவர்கள் உதவ மாட்டார்கள் என்ற பயம். | |
| | குடும்பப் பிரச்சினை வெளியே தெரியக் கூடாது என எண்ணுதல் | குடும்பப் பிரச்சினை பிறருக்கு தெரிந்தால் குறித்த பெண்ணின் கௌரவம்தான் பாதிக்கப்படும் என்ற எண்ணம். | |
| | பிரிந்து வாழ்ந்தால் பெண்ணிற்கு பொருளாதார சிக்கல்கள் ஏற்படும். பெண்களுக்கு பொருளாதார சுயாதீனமின்மையினால் கணவனின் பொருளாதார ஆதரவு எப்போதும் தேவைப்படுகின்றது.<br><br>பிரிந்து வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவனிடமிருந்து தனக்கான மற்றும் பிள்ளைகளுக்கான பொருளாதார ஆதரவினைப் (பராமரிப்பு பணம்) பெற்றுக் கொள்வதற்கான சட்ட ஏற்பாடுகள் (பராமரிப்பு பணம்) கடினமானவையாக உள்ளன. | பெண்களுடைய பொருளாதார சுயாதீனம் அத்தியாவசியமற்ற ஒன்றாகப் பார்க்கப்படுகின்றமை. | பெண்கள் வேலைக்கு செல்லக் கூடாது, வீட்டைப் பராமரித்தல் போதுமானது என்ற மரபுசார் நியமங்கள். |
| | பிரிந்து வாழ்ந்தால் பெண்ணிற்கு பாதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் ஏற்படும். சமூகத்தின் ஏனைய நபர்களிடமிருந்து குறித்த பெண் மற்றும் அவளது பிள்ளைகளுக்கு பாலியல் தொந்தரவுகள் ஏற்படலாம். | கணவர்மார்களோடு வாழாத பெண்கள் இலகுவில் பாலியல் இச்சைகளுக்கு உள்ளாகக் கூடியவர்கள் என்ற எண்ணம் | பெண்களின் பாதுகாவலர்களாக ஆண் சித்தரிக்கப்படுகின்ற மரபு. தகப்பன், சகோதரன், கணவன் மற்றும் மகன் என பெண்கள் எப்போதும் ஆண்களின் பாதுகாப்பில் இருக்க வேண்டுமென்ற நியமம். |

| | | | |
|---|---|---|---|
| உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும் | பெண்கள் உடல்வலுக் குறைந்தவர்கள் எனக் கருதப்படுதல் மற்றும் கர்ப்பகாலம் மற்றும் மாதவிடாய்க்காலங்களில் பெண்களால் கடினமான வேலைகளை செய்ய இயலாமை/ செய்வதற்கு சிரமப்படல் | உயிரியல்ரீதியான காரணங்களின் அடிப்படையில் பெண்கள் மென்மையானவர்கள் எனப்படுதல். | மென்மை பெண்களுக்குரிய குணவியல்புகளுள் ஒன்றாகப் பார்க்கப்படுகின்ற கலாசாரம் மற்றும் மரபு |
| | சமூக விமர்சனம் குறித்த அச்சம். பொதுவாக, கடினமான வேலைகளில் ஈடுபடும் பெண்கள் “ஆம்பள மாதிரி” என விமர்சிக்கப்படுகின்றனர். | | |
| பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை | பெண்கள் பிள்ளைகளைப் பராமரித்தலே பிள்ளைகளின் சிறப்பு நலனிற்கு உகந்ததாகும். | பிள்ளைப் பராமரிப்பிற்குரிய குணங்கள்/ஆற்றல்கள் (பாலூட்டும் தன்மை, பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம்) பெண்களிடமே காணப்படுகின்றது என்ற அடிப்படையில் பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களுக்குரிய பணியாகப் பார்க்கப்படுகின்றது. | கலாசாரம் மற்றும் பாரம்பரியப் பழக்கத்தின்படி பிள்ளைப் பெற்றுக்கொள்வதும் (தாய்மை அடைவதும்), அவர்களை வளர்ப்பதுமே பெண்களுக்குரிய (பெண்மைக்குரிய) அடையாளமாகக் கருதப்படல். |
| | பிள்ளைப் பராமரிப்பிற்கான நேரம் பெண்களுக்கே காணப்படுகின்றது. பெண்கள் வேலைக்கு செல்லாதபோது அவர்களுக்கு அதிகளவில் நேரம் கிடைக்கும். ஆகவே, பிள்ளைகளைப் பராமரிக்கலாம். | பெண்களுடைய பொருளாதார சுயாதீனம் அத்தியாவசியமற்ற ஒன்றாகப் பார்க்கப்படுகின்றமை. | பெண்கள் வேலைக்கு செல்லக் கூடாது, வீட்டைப் பராமரித்தல் போதுமானது என்ற மரபுசார் நியமங்கள். |
| | பிள்ளைகளின் (குறிப்பாகப் பெண் பிள்ளைகளின்) பாதுகாப்பு கருதி பெண்களே பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும். | ஆண்கள் மீதான சந்தேக எண்ணம். பெண் பிள்ளைகளைப் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கக்கூடுமென்ற அச்சம். அதிகரித்து வருகின்ற போதைப் பொருள் பாவனையும் இவ் அச்சத்தினை அதிகரிக்கின்ற காரணங்களுள் ஒன்றாக அமைந்துள்ளது. | பிள்ளைகள் தமது தந்தைமார்கள் மற்றும் நெருங்கிய ஆண் உறவினர்களினாலேயே பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்ற சமூக வன்முறை அதிகரித்-துள்ளமை. |

| | | | |
|---|---|---|---|
| சமையல் மற்றும் வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலைகள் | இச்சமூகக் கட்டமைப்பின் பிரகாரம் பெண்களே சமையல் மற்றும் வீட்டு வேலைகளை செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. | 'பெண்கள் வீட்டில் இருப்பவர்கள், ஆண்கள் உழைப்பவர்கள்' என்ற எண்ணம் வேரூன்றப்பட்டுள்ளமை. | அந்தஸ்த்தில் ஆண்கள் உயர்ந்தவர்களாகவும் பெண்கள் இரண்டாம்நிலை வகிப்பவர்களாகவும் கருதப்படுதல் **(பெட்டைக்கோழி கூவி பொழுது விடியாது - பழமொழி).**<br><br>சமையல் மற்றும் வீட்டு வேலைகள் என்பன ஏளனத்திற்குரிய அல்லது குறைவான வேலைகளாகப் பார்க்கப்படுதல். |
| | பெண்ணே சிறப்பாக சமைப்பாள். | சமையலுக்குரிய குணவியல்புகள் (பொறுமை மற்றும் பக்குவம் போன்றன) பெண்களிடமே உள்ளன. | பெண்கள் சமையல் செய்வது பாரம்பரியப் பழக்கமொன்றாகியுள்ளது. |
| | சமையல் மற்றும் வீட்டு வேலைகளுக்குரிய நேரம் பெண்களுக்கே காணப்படுகின்றது. பெண்கள் வேலைக்கு செல்லாதபோது அவர்களுக்கு அதிகளவில் நேரம் கிடைக்கும். ஆகவே, சமையல்/ விட்டு வேலைகளை செய்ய முடியும் | பெண்களுடைய பொருளாதார சுயாதீனம் அத்தியாவசியமற்ற ஒன்றாகப் பார்க்கப்படுகின்றமை. | பெண்கள் வேலைக்கு செல்லக் கூடாது, வீட்டைப் பராமரித்தல் போதுமானது என்ற மரபுசார் நியமங்கள். **(உத்தியோகம் புருஷ லட்சணம்- பழமொழி)** |
| பெண்கள் பொலிஸ் நிலையத்திற்கு செல்லக் கூடாது | பொலிஸ் நிலையம் செல்லும் பெண்கள் சமூகத்தால் விமர்சிக்கப்படுதல் மற்றும் அவமதிக்கப்படுதல். | பெண்கள் பொலிஸ் நிலையம் சென்றால் சமூக கௌரவம் பாதிக்கப்படுமென்ற எண்ணம்.<br><br>தவறான பெண்களே பொலிஸ் நிலையம் செல்வார்கள் என்ற எண்ணம். | பெண்கள் பொலிஸ் நிலையம் செல்கின்றமை கலாசாரத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமை.<br><br>பொலிஸ் நிலையம் செல்கின்ற பெண் 'சிறந்த பெண் அல்ல' என்ற மரபு. |
| | பொலிஸ் நிலையம் செல்லக்கூடாதென்ற பெற்றோரின் கட்டுப்பாடு/ வழிநடத்தல். | குடும்ப கௌரவம் பாதிக்கப்படும் என்ற எண்ணம்<br><br>அடிக்கடி பொலிஸ் நிலையம் செல்லும் பெண்களுக்கு நல்ல வரன் அமையாது. | |
| | பாதுகாப்பு தொடர்பானப் பிரச்சினைகள். | பொலிஸாரினால் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படலாம் என்ற அச்சம். | யுத்தகாலத்தில் காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட சட்டமுரணான கைதுகள், பாலியல் சித்திரவதைகள் என்பனவற்றின் தாக்கம்.<br><br>பெண்களிடம் குறிப்பாக தனித்துவாழும் பெண்களிடம் / இயலாமைகளை உடைய பெண்களிடம் பொலிஸ் அதிகாரிகள் பாலியல் சுரண்டல்களில் ஈடுபடுகின்ற போக்கு. |

<table>
<tr>
<td rowspan="4">பெண்கள் கனவர்மார்களுக்கு எதிராகப் புகாரளிக்கக் கூடாது</td>
<td>சமூக புறக்கணிப்பு மற்றும் சமூக விமர்சனத்திற்கு ஆளாக வேண்டியேற்படும்.</td>
<td>சமூகத்தின் பாதுகாப்பினை இழந்து விட நேரிடுமென்ற அச்சம்.</td>
<td rowspan="4">சிறந்த பெண் கணவன் என்ன செய்தாலும் கணவனை எதிர்க்க மாட்டாள் என்ற கலாசார விழுமியம் மற்றும் பாரம்பரியப் பழக்கம் (கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்)<br><br>கணவனுக்கு பணிந்து நடப்பவளே சிறந்த பெண் என்ற கலாசார விழுமம் மற்றும் பாரம்பரியப் பழக்கம் (கணவனே கண்கண்ட தெய்வம்)</td>
</tr>
<tr>
<td>குடும்பக் கட்டுப்பாடு அல்லது பெற்றோர்களின் கட்டுப்பாடு/ வழிநடத்தல்.</td>
<td>குடும்ப கௌரவம் போய்விடுமென்ற பயம். கணவருக்கெதிராக புகாரளித்தலை தீயப் பழக்கமொன்றாகக் கருதுதல்.</td>
</tr>
<tr>
<td>குடும்ப ஒற்றுமை சீரழிந்துவிடும். கணவன் மனைவி நிரந்தரமாகப் பிரியும் சூழ்நிலை உருவாகும்.</td>
<td rowspan="2">மனைவிமார் தமக்கெதிராகப் பொலிஸில் முறைப்பாடு செய்வதனை ஆண்கள் மிகப் பெரிய குற்றமாகக் கருதுதல். தாம் என்ன செய்தாலும் பொறுத்துக் கொள்பவளே சிறந்த மனைவி என்ற ஆண்களின் மனோபாவம்.</td>
</tr>
<tr>
<td>கணவரால் துன்புறுத்தல்கள் அல்லது உயிராபத்து ஏற்படுமென்ற அச்சம்.</td>
</tr>
<tr>
<td rowspan="3">பெண்கள் பாலியல் வன்முறைகளுக் கெதிராகப் புகாரளிப்பதனை அவர்கள் குடும்பத்தினர் அனுமதிப்பதில்லை</td>
<td>சமூகம் விமர்சிக்கும்/ இழிவுபடுத்தும் மற்றும் சமூகம் புறக்கணிக்கும்.</td>
<td>குடும்ப கௌரவம் போய்விடும்.</td>
<td rowspan="3">குடும்பத்தினுடைய கௌரவம் அக்குடும்பப் பெண்களுடைய ‘கற்பில்’ தங்கியுள்ளதென்ற கலாசார விழுமியம்.<br><br>பாலியல் வன்புணர்விற்குள்ளானப் பெண்கள் தூய்மையானவர்கள் அல்ல அல்லது கற்பிழந்தவர்கள் அல்லது மாசு பட்டவர்கள் போன்ற கலாசாரக் கருத்தேற்புக்களின் தாக்கம் (இராமயனத்தில், இராவணனிடம் சிறைபிடிக்கப்பட்டு மீண்டு வந்த சீதை கற்புடையவள் என்பதனை நிரூபிப்பதற்காக இராமன் அவளைத் தீக்குளிக்கச் சொன்னமை).<br><br>பாலியல் வன்புணர்வு என்பதனை உடற்சார் பாதிப்பொன்றொக மட்டும் கருதாது அதனை ‘ஒழுக்கம்சார்’ விடயமொன்றாகப் பார்க்கின்ற கலாசாரப் போக்கு.</td>
</tr>
<tr>
<td>திருமணமான பெண்களாயின், இல்லற வாழ்க்கையில் பிரிவுகள்/ பிரச்சினைகள் ஏற்படும்.</td>
<td rowspan="2">பாலியல் வன்புணர்விற்குள்ளானப் பெண்களை வாழ்க்கைத் துணையாக தக்கவைத்துக்கொள்ள/ ஏற்றுக்கொள்ள ஆண்கள் அல்லது அவர்களின் குடும்பங்கள் விரும்புவதில்லை.</td>
</tr>
<tr>
<td>திருமணமாகாதப் பெண்களாயின் அவர்களது திருமண வாழ்க்கையில் தடைகளை ஏற்படுத்தும்/ நல்ல வரன் அமையாது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td rowspan="5">பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது</td>
<td>சமூகம் விமர்சிக்கும் /இழிவுபடுத்தும் மற்றும் சமூகம் புறக்கணிக்கும்.</td>
<td>மானம் போய் விடுமென்ற அச்சம்.</td>
<td rowspan="3">ஒரு குடும்பத்தினுடைய கௌரவம் அக்குடும்பப் பெண்களுடைய ‘கற்பில்’ தங்கியிள்ளதென்ற கலாசார விழுமம்.<br><br>பாலியல் வன்புணர்விற்குள்ளானப் பெண்கள் தூய்மையானவர்கள் அல்ல அல்லது கற்பிழந்தவர்கள் அல்லது மாசு பட்டவர்கள் போன்ற கலாசாரக் கருத்தேற்புக்களின் தாக்கம் (இராமயனத்தில், இராவணனிடம் சிறைபிடிக்கப்பட்டு மீண்டு வந்த சீதை கற்புடையவள் என்பதனை நிரூபிப்பதற்காக இராமன் அவளைத் தீக்குளிக்கச் சொன்னமை).<br><br>பாலியல் வன்புணர்வு என்பதனை உடற்சார் பாதிப்பொன்றொக மட்டும் கருதாது அதனை ‘ஒழுக்கம்சார்’ விடயமொன்றாகப் பார்க்கின்ற கலாசாரப் போக்கு.</td>
</tr>
<tr>
<td>திருமணமானப் பெண்களாயின், இல்லற வாழ்க்கையில் பிரிவுகள்/ பிரச்சினைகள் ஏற்படும்.</td>
<td rowspan="2">பாலியல் வன்புணர்விற்குள்ளானப் பெண்களை வாழ்க்கைத் துணையாக தக்கவைத்துக்கொள்ள/ ஏற்றுக்கொள்ள ஆண்கள் அல்லது அவர்களின் குடும்பங்கள் விரும்புவதில்லை.</td>
</tr>
<tr>
<td>திருமணமாகாதப் பெண்களாயின் அவர்களது திருமண வாழ்க்கையில் தடைகளை ஏற்படுத்தும்/ நல்ல வரன் அமையாது.</td>
</tr>
<tr>
<td>நீதி கிடைக்குமென்ற நம்பிக்கையின்மை.</td>
<td>நீதியில் ஏற்படுகின்ற தாமதங்கள்.</td>
<td rowspan="2">குற்றவியல் நீதி செயன்முறையில் உள்ள குறைபாடுகள் மற்றும் இடைவெளிகள்.</td>
</tr>
<tr>
<td>சட்ட செயன்முறைகள் பாதிக்கப்பட்டவர்களை மேலும் பாதிப்பிற்குள்ளாக்குதல்.</td>
<td>சட்ட அமுலாக்க அதிகாரிகள் இத்தகைய வழக்குகளைப் பால்நிலை கூர்திறனுடன் அணுகாமை.</td>
</tr>
<tr>
<td>பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட பெண்கள் கற்பிழந்தோர்</td>
<td>கன்னித்தன்மை இழக்கப்படுதல்.<br><br>சமூகம் ‘கற்பிழந்தவள்’ என்றுதான் கூறுகின்றது.</td>
<td>ஒரு பெண் கணவனைத் தவிர வேறொரு ஆணால் கன்னித்தன்மையினை இழந்தால் அப்பெண் கற்பிழந்தவளாகக் கருதப்படுவாள்.</td>
<td>பாலியல் வன்புணர்விற்குள்ளானப் பெண்கள் தூய்மையானவர்கள் அல்ல அல்லது கற்பிழந்தவர்கள் அல்லது மாசு பட்டவர்கள் போன்ற கலாசாரக் கருத்தேற்புக்களின் தாக்கம் (இராமயனத்தில், இராவணனிடம் சிறைபிடிக்கப்பட்டு மீண்டு வந்த சீதை கற்புடையவள் என்பதனை நிரூபிப்பதற்காக இராமன் அவளைத் தீக்குளிக்கச் சொன்னமை)<br><br>பாலியல் வன்புணர்வு என்பதனை உடற்சார் பாதிப்பொன்றொக மட்டும் கருதாது அதனை ‘ஒழுக்கம்சார்’ விடயமொன்றாகப் பார்க்கின்ற கலாசாரப் போக்கு.</td>
</tr>
</table>

**பிரதான முடிவுகள்**

- *பெரும்பாலான சமூக நியமங்கள் நிலைத்திருப்பதற்கான பிரதான நிகழ்வுசார் காரணங்களாக சமூக புறக்கணிப்பு மற்றும் சமூக விமர்சனம் என்பன அமைகின்றன. இச்சமூக புறக்கணிப்பு/சமூக விமர்சனம் தற்போது பெரும்பாலும் சமூக ஊடகங்களின் வாயிலாகவும் பரிமாறப்படுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்க மற்றுமொரு முக்கிய அம்சமாகும்.*

- *அடுத்ததாக குடும்பத்தினரின் கட்டுப்பாடு மற்றும் பெற்றோர்களின் வழிநடத்தல் என்பனவும் பெரும்பாலான சமூக நியமங்கள் நிலைத்திருப்பதற்கான மற்றுமொரு பிரதான நிகழ்வுசார் காரணமாக அமைந்துள்ளது.*

- *உணர்வுசார் நியாயங்களுள் மிக முக்கிய நியாயமொன்றாக பெண்களின் குணவியல்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமையினைக் காண முடிகின்றது. அதாவது, பெண்தான் பொறுமையானவள், அன்பு மிக்கவள் மற்றும் சகிப்புத்தன்மையுடையவள் போன்ற குணவியல்புகள் சுட்டிக்காட்டப்பட்டு, அதனடிப்படையில் குறிப்பிட்ட சமூக நியமங்கள் நியாயப்படுத்தப்படுகின்றன. எவ்வாறெனினும், பெண்களுக்கு பொறுமை, பக்குவம் ஆகிய குணவியல்புகள் இருப்பதாக சொல்லப்படுகின்றமைக்கோ அல்லது அத்தகைய குணவியல்புகள் ஆண்களிடம் இல்லை அல்லது குறைவாகவே காணப்படுகின்றன என சொல்லப்படுவதற்கோ எவ்விதமான உயிரியல் காரணங்களும் இல்லை. இக்குணவியல்புகள் யாவும் தந்தைவழிச் சமூகத்தினால் பல்வேறு நோக்கங்களுக்காக செயற்கையாகக் கட்டமைக்கப்பட்டப் பாலினப் பண்புகளே ஆகும்.*[71]

- *நிகழ்வுசார் காரணமொன்றாகவும், அதேவேளை உணர்வுசார் நியாயமொன்றாகவும் அமைந்துள்ளவொரு காரணம் 'திருமண வாழ்க்கை தடைபடும்' என்பதாகும். குறிப்பிட்ட சமூக நியமங்களிலிருந்து பிறழ்வடைகின்றமையானது திருமண வாழ்க்கையினை கேள்விக்குறியாக்குகின்ற நிலை காணப்படுகின்றது என்பதனை இக்காரணங்களை பகுப்பாய்வு செய்யம்போது அறிய முடிகின்றது. இது, 'பெண் என்பவள் எப்படி இருக்க வேண்டும்' என்ற ஆண்களின் மனோபாவம் கலாசார விழுமியங்கள் மற்றும் பாரம்பரிய மரபுகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருப்பதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. பெண்களுக்கெதிரான பால்நிலை பாரபட்சமிக்க இச்சமூக நியமங்களின் நிலைத்திருப்பிற்கு ஆண்களின் இத்தகைய மனோபாவம் 'திருமணத் தடை' என்ற வடிவில் பங்களிப்பு செய்கின்றமையினைக் காணக்கூடியதாக உள்ளது.*

- *பெரும்பாலான நிகழ்வுசார் காரணங்கள் மற்றும் உணர்வுசார் நியாயங்களுக்கான மூலமாக **'பெண் என்பவள் எப்படி இருக்க வேண்டும்'** என்பதனைக் கூறுகின்ற கலாசார விழுமியங்களும் பாரம்பரிய மரபுகளும் அமைந்துள்ளன.*

- *குற்றவியல் நீதி முறைமையிலுள்ள இடைவெளிகள் மற்றும் குறைபாடுகள், அரசாங்க நிறுவனக் கட்டமைப்புக்கள் மற்றும் முறைகளிலுள்ள பிரச்சினைகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் பால்நிலை கூர்திறனற்ற போக்கு என்பனவும் சில சமூக நியமங்கள் நிலைத்திருக்கின்றமைக்கான அடிப்படைக் காரணங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.*

***71*** Vithanage, 'Understanding the Nature and Scope of Patriarchy in Sri Lanka: How Does it Operate in the Institution of Marriage?' (2015) available at: https://repository.stcloudstate.edu/socresp_etds/3/ accessed 3 January 2021

## 4.6 அடையாளப்படுத்தப்பட்ட பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் தாக்கம் செலுத்தும் பாங்கு - தர்க்கரீதியான பகுப்பாய்வு

மேலே அடையாளப்படுத்தப்பட்டுள்ள பால்நிலை பாரபட்சமிக்க பிரதான சமூக நியமங்கள் தற்காலத்தில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுடைய வாழ்க்கையில் எத்தகையத் தாக்கத்தினைச் செலுத்துகின்றன மற்றும் அவை எவ்வாறு பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் அவர்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்து கொள்வதற்கும், வாழ்க்கையில் பல்வேறு அம்சங்களில் முன்னேறிச் செல்வதற்கும் தடை விதிக்கின்றன என்பதனை தர்க்கரீதியாகப் பகுப்பாய்வு செய்வதே இப்பகுதியின் நோக்கமாக அமைந்துள்ளது. அதற்கமைய, அடையாளப்படுத்தப்பட்டுள்ள இப்பிரதானச் சமூக நியமங்களினால் பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் ஏற்படுகின்ற தாக்கத்தினை ஆராயும்பொருட்டு, இவை இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றன:

1. பெண்களது வகிபாகங்களைக் குடும்பச் சுழலுக்கு மாத்திரமாக மட்டுப்படுத்துகின்ற சமூக நியமங்கள்

2. 'நல்ல பெண்' மற்றும் 'கற்புள்ள பெண்' ஆகிய கருத்தேற்புக்களை அடிப்படையாகக் கொண்டு பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மட்டுப்படுத்துகின்ற சமூக நியமங்கள்

இப்பிரதான சமூக நியமங்கள் தவிர்ந்த, குறிப்பாக பெண்களுடைய தொழில் சுதந்திரம் மற்றும் மத சுதந்திரம் என்பனவற்றினை மட்டுப்படுத்துகின்ற சமூகத்தில் நிலைத்திருக்கின்ற ஏனைய சமூக நியமங்கள் மற்றும் அவற்றினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

3. பெண்களுடைய தொழில் உரிமைகளை மட்டுப்படுத்துகின்ற நடைமுறைகள் / சமூக நியமங்கள்

4. பெண்களுடைய மத சுதந்திரத்தினை மட்டுப்படுத்துகின்ற நடைமுறைகள் / சமூக நியமங்கள்

### 4.6.1 பெண்களது வகிபாகங்களைக் குடும்பச் சுழலுக்கு மாத்திரமாக மட்டுப்படுத்துகின்ற சமூக நியமங்கள்

''சில நேரங்களில் சிந்தித்துப்பார்க்கின்ற போது, என்னுடைய வாழ்க்கை முழுவதையும் சமையலறையிலேயே கழித்துவிட்டேனோ என்ற எண்ணம் எழுகின்றது. என்னுடைய கணவர் வீட்டு வேலைகளில் எனக்கு கொஞ்சம் உதவியிருந்தால் என்னால் வேறு பல விடயங்களையும் செய்திருக்க முடியுமெனத் தோன்றுகின்றது.'' - ஆய்வு பங்குபற்றுநர், கிளிநொச்சி மாவட்டம்

அடையாளப்படுத்தப்பட்டுள்ள பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களுள் கீழ்வருவன பெண்களது வகிபாகங்களைக் குடும்பச் சூழலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

- பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை
- சமையல், வீட்டு வேலைகள் என்பன பிரதானமாகப் பெண்களின் வேலை

பிள்ளைப் பராமரிப்பு மற்றும் சமையல் வேலைகள் என்பன பிரமானமாகப் பெண்களின் வேலைகளே என்ற சமூக நியமத்தின் இருப்பானது பெண்களையும் அவர்களது வகிபாகத்தினையும் குடும்ப சூழலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துகின்றது. இவ்வாறு பெண்களின் வகிபாகத்தினைக் குடும்ப சூழலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துகின்றமையினால் அவர்களது உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் பாதிக்கப்படுகின்ற விதத்தினை நாம் கீழ்வருமாறு வகைப்படுத்தி நோக்க இயலும்:

## ➤ பெண்களின் பொருளாதார சுயாதீனம் மறுக்கப்படுகின்றது

*''எனது பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டுமென்பதற்காக நான் எனது தொழிலை இராஜினாமா செய்து விட்டேன், அதன்பிறகு எல்லாவற்றிற்கும் என்னுடைய கணவரையே எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. என்னுடைய பெற்றோருக்கு ஏதாவது செய்ய வேண்டுமென ஆசைப்பட்டாலும், கணவரிடம் கேட்பதற்கு தயக்கமாக இருக்கும். இது மிகவும் வேதனையானது.'' - ஆய்வுப் பங்குபற்றுநர், மன்னார் மாவட்டம்*

திருமணத்திற்கு பின்னர் குடும்பப் பொறுப்பு மற்றும் பிள்ளைப் பராமரிப்பு போன்ற காரணங்களினால் தொழிலை இராஜினாமா செய்துள்ள பல பெண்கள் பொருளாதாரரீதியாக ஊறுபடத்தகு நிலையினை அடைந்துள்ளதாகத் தெரிவித்திருந்தனர். பெண்களது பொருளாதார சுயாதீனம் என்பது அவர்களது ஏனைய அனைத்து உரிமைகளையும் அடைந்து கொள்வதற்கு அடிப்படையானதொன்றாக அமைகின்றது. உதாரணமாகக் கூறின், பொருளாதார வசதிகளின்மை காரணமாகப் பல பெண்கள் தங்களுக்கெதிராக இடம்பெற்றுள்ள வன்முறைகளுக்கு எதிராக வழக்குத் தொடர்வதனைத் தவிர்க்கின்றனர் என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.[72] இவ்வாறு வழக்குத் தொடர்வதற்கான நிதி வசதியற்ற பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவி செய்வதற்கான அதிகாரத்தினை சட்ட உதவி ஆணைக்குழு கொண்டிருந்தபோதிலும், அச்சேவையினை தேவையுள்ள அனைத்துப் பெண்களினாலும் பெற்றுக் கொள்ள முடிவதில்லை.

*''அவர் என்னை அடிக்கின்றபோதும் நான் பொலிசுக்கு செல்வதில்லை. அவரைக் கைது செய்து விட்டால் எனக்கும் என் பிள்ளைகளுக்கும் யார் உணவளிப்பது?''- ஆய்வுப் பங்குபற்றுநர், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுடனான குவிமையக் குழுக் கலந்துரையாடல்[73]*

மேலும், பொருளாதார சுயாதீனமற்று கணவனில்/ வீட்டாரில் தங்கி வாழ்கின்றப் பெண்கள் கணவர் துஷ்பிரயோகம் செய்கின்றபோதும் அதனை சகித்து வாழ வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பொருளாதாரரீதியாக பெண்கள் சுயாதீனமற்றுக் காணப்படுகின்றபோது, அங்கு வீட்டு வன்முறைகள் நிகழ்வதற்கான சாத்தியப்பாடுகள் அதிகளவில் உள்ளதாக குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான குவிமையக் குழுக் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த பெண்கள் தெரிவித்திருந்தனர். அத்துடன், பெண்களுக்கான பொருளாதார சுயாதீனம் மறுக்கப்படுகின்றபோது, அரசியலமைப்பிலே உறுப்புரை 14[74] இல் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமை உள்ளடங்கலாக அவர்களுக்கான கல்வி உரிமை (உயர்கல்வி அல்லது தொழிற்கல்வி) மற்றும் அவர்களுடைய திறமைகளை வெளிப்படுத்துவதற்கான உரிமை என்பனவும் மறுக்கப்படுகின்றன.

## ➤ பெண்களுக்கெதிரான வன்முறைக்கு வித்திடுகின்றது

*''அரசியலில் ஈடுபடும் பெண்களுடைய நடத்தை தொடர்பில் எப்போதும் எதிர்மறையான விமர்சனங்களே முன்வைக்கப்படுகின்றன''- பெண் உறுப்பினர், உள்ளூரதிகார சபை, பயிற்றுனர்களுக்கான பயிலமர்வு[75]*

பிள்ளைப் பராமரிப்பு மற்றும் சமையல்/வீட்டு வேலைகளே பெண்களின் பிரதான வேலை என்ற நியமமானது, பெண்கள் குடும்பச் சூழலுக்கு உரித்துடையவர்கள் மற்றும் பெண்கள் குடும்பம் எனும் வட்டத்தினைத் தாண்டி வெளியே வரக்கூடாது அல்லது குடும்பம் எனும் பரப்பிற்கு அப்பால் வந்து பகிரங்கப் பரப்பில் செயற்படுகின்ற பெண்கள் நல்ல பெண்கள் அல்ல என்ற தவறான கருத்தேற்புக்கள் சமூகத்தில் தோன்றுவதற்கு வித்திடுகின்றது. பெண்கள் குடும்பப் பரப்பிற்குள் செயற்படுவதற்கு மாத்திரம் உரித்துடையவர்களாகப் பார்க்கப்படுகின்றமையினால், அவர்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள அக்குடும்ப வட்டத்தினைவிட்டு வெளியேறி பகிரங்க பரப்பிற்குள் வருவது ஏற்றுக்கொள்ளப்படாததாகவும், அவ்வாறு செய்கின்ற பெண்களை வன்முறைகளுக்குள்ளாக்குதல் நெறிமுறைத்தன்மையானதாகவும் பார்க்கப்படுகின்றது.[76] பகிரங்கப் பரப்பில் செயற்படுகின்ற

---

**72** Women Action Network, 'Women's Access to Justice in the North and East in Sri Lanka' CEDAW Shadow Report, (August 2016) <https://tbinternet. ohchr.org/Treaties/CEDAW/Shared%20Documents/LKA/INT_CEDAW_NGO_LKA_25964_E.pdf> accessed 21 November 2020.

**73** *23.03.2021 அன்று மன்னாரில் உள்ள பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் மண்டபத்தில் இடம்பெற்றது.*

**74** உறுப்புரை 14 (1)(எ) ஒவ்வொரு பிரஜையும் ஏதேனும் சட்டமுறையான முயற்சியில், உயர்தொழிலில், வியாபாரத்தில் அல்லது தொழிலில் அல்லது தொழில் முயற்சியில் தானாகவோ அல்லது ஏனையோருடன் சேர்ந்தோ ஈடுபடுவதற்கான சுதந்திரம்

**75** *17.03.2021 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வதோய மண்டபத்தில் இடம்பெற்றது.*

**76** OXFAM, 'Smashing Spatial Patriachy: Shifting social norms driving sexual and gender based violence on public transport in Sri Lanka' (OXFAM) available at: https://policy-practice.oxfam.org/resources/smashing-spatial-patriarchy-shifting-gender-based-norms-driving-sexual-and-gend-620845/ accessed 02 January 2021

பெண்களுக்கெதிராகப் புரியப்படுகின்ற வன்முறைகள், தங்களது சிந்தனை மற்றும் மனசாட்சியின் அடிப்படையில் செயற்படுவதற்கான பெண்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளில் தலையீடு செய்கின்றதுடன், ஆர்வம் மற்றும் விருப்பம் காணப்படுகின்றபோதிலும் அவர்கள் தம்மைத்தாமே வீட்டிற்குள் முடக்கிக் கொள்கின்றதொரு நிலையினையும் உருவாக்குகின்றது.

இலங்கையில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துவருகின்ற இவ்வேளையில், வன்முறைகளுக்கு வித்திடக்கூடிய இத்தகைய சமூக நியமங்களை ஆழமாக ஆராய்வதும், அவற்றை சமூகத்திலிருந்து ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதும் அத்தியாவசியமாகும்.

- **பெண்களுடைய திறன்கள் மற்றும் அறிவு முடக்கப்படுகின்றன**

''அதிகம் படித்தால் திருமணத்திற்கு மாப்பிள்ளை கிடைக்காது என என் பெற்றோர் அடிக்கடி கூறுவார்கள். நான் திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்று வாழ வேண்டுமென்பதே அவர்களின் ஒரே எதிர்பார்ப்பு. என்னுடைய திறமைகளை மற்றும் இலட்சியங்களை அவர்கள் பொருட்படுத்துவதில்லை''- பங்குபற்றுநர், பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பான இளைஞர்களுடனான இணையவழிக் கலந்துரையாடல்[77]

பெண் பிள்ளைகள் பருவமடைவதற்கு முன்பிருந்தே அவர்கள் பின்பற்ற வேண்டிய விதிகள் மற்றும் நியதிகள் அவர்களுக்கு பெற்றோர்களால் மற்றும் குடும்ப அங்கத்தவர்களால் கற்பிக்கப்படுகின்றன. பெரும்பாலும், 'எவ்வாறு குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து நடப்பது', 'வீட்டை சுத்தம் செய்வது', 'சுவையாக சமைப்பது' மற்றும் 'குழந்தைகளைப் பராமரிப்பது' போன்ற விடயங்கள் பெண் பிள்ளைகளுக்கு குடும்ப மட்டத்திலேயே கற்பிக்கப்படுகின்றன. சில குடும்பங்களில், திருமணம் செய்துக் கொள்ளலும், பிள்ளைப் பெற்றுக் கொள்ளலுமே பெண்மையின் பூரணத்துவமாகும் என்ற விடயம் சிறுவயதிலேயே பெண் பிள்ளைகளுக்கு கற்பிக்கப்படுகின்றது. அத்துடன், குடும்பம், பாடசாலை மற்றும் வழிபாட்டிடங்கள் உள்ளிட்ட சமூக நிறுவனங்களும் குடும்ப சூழலுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படுகின்ற பெண்களின் பால்நிலை வகிபாகத்தினை வலியுறுத்துகின்ற பல செயற்பாடுகள் மற்றும் போதனைகளை முன்னெடுக்கின்றன. இவை அனைத்தும் ஒன்றிணைந்து பெண் பிள்ளைகளுடைய சிந்தனைகளையும் அவர்களின் இலக்குகளையும் மட்டுப்படுத்துகின்றன.

- **பெண்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது**

''வேலைக்குச் செல்லும் ஆண்களுக்கு எட்டு மணி நேரம்தான் வேலை. ஆனால், வீட்டிலுள்ள பெண்களுக்கு எந்நேரமுமே வேலைதான். எங்களுக்கு ஓய்வே இல்லை''- பங்குபற்றுநர்- கணவன் மற்றும் மனைவியின் பால்நிலை வகிபாகம் தொடர்பான இணையவழிக் கலந்துரையாடல்[78]

பெரும்பாலும், கணவன்மார்கள் தொழிலுக்கு செல்கின்ற குடும்பங்களில் வீட்டு வேலைகள், சமையல் வேலைகள் மற்றும் பிள்ளைப் பராமரிப்பு என அனைத்தையும் மனைவியே செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கணவனுடைய வகிபாகம் குடும்பத்திற்காக வருமானம் ஈட்டுதலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படுகின்றது. இதனால், வீட்டிலுள்ள ஏனைய அனைத்து வேலைகளையும் பெண்களே செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது பல சமயங்களில் அவர்களுக்கான போதுமான ஓய்வினைக் குறைத்து, அவர்களுக்கு உடல்நலக் குறைவும் ஆரோக்கியக் கேடும் ஏற்படுவதற்கு வித்திடுகின்றது. இது, ஆரோக்கியமான வாழ்விற்கான பெண்களது உரிமைகளை அவர்கள் அடைந்து கொள்வதற்கு தடை விதிக்கின்றது.

அனைத்திற்கும் மேலாக, பெண்களுடைய வகிபாகத்தினை குடும்பச் சூழலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துகின்றமையால், பகிரங்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான அவர்களது உரிமை உள்ளடங்கலாக ஒன்று கூடுவதற்கு மற்றும் ஒருங்கு சேர்வதற்கு அவர்களுக்குள்ள அடிப்படை உரிமைகள்[79] மீறப்படுகின்றன. அத்துடன், இது அரசியலமைப்பின் உறுப்புரை 12(2)[80] இல் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள சமத்துவத்திற்கான உரிமையினையும் மீறுகின்றது.

---

77 02.06.2021 அன்று Zoom தளத்தினூடாக இடம்பெற்ற இணையவழிக் கலந்துரையாடல்

78 03.07.2021 அன்று Zoom தளத்தினூடாக இடம்பெற்ற இணையவழிக் கலந்துரையாடல்

79 இவ் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பின் அத்தியாயம் 14 (1) (ஆ) மற்றும் (இ) இல் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன.

80 "இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தவொரு பிரஜையும் ஓரங்கட்டப்படலாகாது."

## 4.6.2 'நல்ல பெண்' மற்றும் 'கற்புள்ள பெண்' ஆகிய கருத்தேற்புக்களை அடிப்படையாகக் கொண்டு பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மட்டுப்படுத்துகின்ற சமூக நியமங்கள்

*''பெண்கள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டுமென்பதற்கு சில நியதிகள் உள்ளன. அந்நியதிகள் எமது உரிமைகளைப் பறிக்கின்றபோதும், அதனை நாங்கள் மீறக்கூடாது. அதிலுள்ள எதனையாவது நாம் மீறி செயற்பட்டால் எம்மை இந்த சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை'' - பங்குபற்றுநர், பெண்களை பின்னடையச் செய்வது எது?- என்ற தலைப்பிலான இணையவழிக் கலந்துரையாடல்*[81]

*அடையாளப்படுத்தப்பட்டுள்ள பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களுள் கீழ்வருவன 'நல்ல பெண்' மற்றும் 'கற்புள்ள பெண்' ஆகிய கருத்தேற்புக்களை அடிப்படையாகக் கொண்டு பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மட்டுப்படுத்துகின்ற சமூக நியமங்களாகப் பார்க்கப்படுகின்றன:*

- *மனைவிமார்கள் எந்த சந்தர்ப்பத்திலும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையினைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.*
- *பெண்கள்/ பெண் பிள்ளைகள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது.*
- *பெண்கள்/ பெண் பிள்ளைகள் பொலிஸ் நிலையத்துக்கு போகக் கூடாது.*
- *பெண்கள் கணவர்மார்களுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது.*
- *பாலியல் வன்முறைகளுக்குள்ளான பெண்கள் கற்பிழந்தோர் ஆவர்.*
- *பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கத் தயங்குதல்.*
- *பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிப்பதனைக் குடும்பத்தினர் தடுத்தல்.*

*நடைமுறையில் நிலைத்திருக்கின்ற இத்தகைய சமூக நியமங்கள் அல்லது வழக்கங்களினால் பெண்களது எத்தகைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மீறப்படுகின்றன என்பதனை நாம் கீழ்வருமாறு வகைப்படுத்தி நோக்க இயலும்:*

- **நீதியை அணுகுவதற்கான சுதந்திரம்**

*''என்னைத் துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றே நான் வழக்குத் தொடர்ந்தேன். ஆனால், என்னுடைய குடும்பத்தார் அவ்வழக்கினை மீளப் பெற்றுக்கொள்ளும்படி என்னை வற்புறுத்தினார்கள். அவ்வழக்கினால் குடும்ப கௌரவம் சிதையும் என என்னை ஏசினார்கள். அதனால் நான் வழக்கினை மீளப் பெற்றுக் கொண்டேன்.''- பங்குபற்றுநர், பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுடனான குவிமையக் குழுக் கலந்துரையாடல்*

*பெண்கள்/ பெண் பிள்ளைகள் பொலிஸ் நிலையத்திற்கு செல்லக்கூடாது, பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கக் கூடாது மற்றும் அவ்வாறு பாலியல் வன்முறைகளுக்கெதிராகப் புகாரளிக்கப்படுதலை குடும்பத்தினர் தடுத்தல் ஆகிய சமூக நியமங்கள்/ நடைமுறைகள் நீதியினை அணுகுவதற்கான பெண்களது சுதந்திரத்தைப் பெருமளவில் பாதிக்கின்றன. பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறை அல்லது துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்படுகின்ற பெரும்பாலான பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் இத்தகைய சமூக நியமங்களுக்கும் அதனை மீறி செயற்படுகின்றமையால் விளைவுகளாக சந்திக்க நேரிடுகின்ற சமூகக் களங்கம், சமூக புறக்கணிப்பு மற்றும் சமூக விமர்சனத்திற்கும் அஞ்சி தமக்குரிய நீதியினை நாடுவதற்கு தயங்குகின்றனர்.*

*''**அனைவரும் நீதியை அணுகக்கூடியதாக இருத்தல் வேண்டும்**'' என்பது சட்டவாட்சி மற்றும் ஜனநாயகக் கோட்பாடுகளின் பிரதானக் கூறொன்றாகும். அவ்வகையில், பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் தங்களுக்கான நீதியினை அணுகிக் கொள்வதற்கு தடை ஏற்படுத்துகின்ற இத்தகைய பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் மற்றும் நடைமுறைகள் என்பன நாட்டின் சட்டவாட்சி மற்றும் ஜனநாயகம் என்பவற்றைக் கேள்விக்குட்படுத்துகின்றன.*

81 04.02.2021 அன்று Zoom தளத்தினூடாக இடம்பெற்ற இணையவழிக் கலந்துரையாடல்

> **சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்கான சுதந்திரம்**

*''என்னுடைய கணவர் அடித்து என் கண்கள் வீங்கிவிட்டன. தலையிலும் வீக்கம். நான் அம்மா வீட்டிற்கு சென்றேன். பெண் என்றால் பொறுத்துபோக வேண்டும் என்றுதான் அம்மா சொன்னார். பொலிஸ் நிலையம் சென்றபோது, அங்குள்ள பெண் பொலிஸ் அதிகாரியும் இவையெல்லாம் கணவன் மனைவிக்குள் சகஜம்தான் என்றார்.'' - பங்குபற்றுநர், வீட்டு வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுடனான குவிமையக் குழுக் கலந்துரையாடல்*

அரசியலமைப்பின் உறுப்புரை 11 ஆனது 'எந்தவொரு நபரும் சித்திரவதைக்கோ, கொடூரமான அல்லது மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகைக்கோ அல்லது தண்டனைக்கோ உட்படுத்தப்படலாகாது' என கூறுகின்றது. அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் நிறைவேற்றுத்துறை அல்லது நிர்வாகத்துறையினரால் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே அது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகளுக்கான மனுவொன்றினைத் தாக்கல் செய்து நிவாரணத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.[82] இவ் உரிமைகளை, நிறைவேற்றுத்துறை அல்லது நிர்வாகத்துறை சாராத வேறு நபர்கள் (உதாரணமாக: குடும்ப உறுப்பினர்கள்) மீறுகின்றபோது அது அடிப்படை உரிமை மீறலொன்றாகப் பார்க்கப்படாது என்பதுடன் அதன் தன்மையினைப் பொறுத்து அது வீட்டு வன்முறையாக அல்லது குற்றவியல் குற்றமொன்றாகக் கருதப்படும். குடும்பங்களில் கணவனால் மனைவி தாக்கப்படுகின்றபோது அல்லது வாய்மொழி வாயிலாக துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்றபோது, அது பெரும்பாலும் வீட்டு வன்முறையாகவே கருதப்படுகின்றது. இலங்கையில் வீட்டு வன்முறைகள் தொடர்பான சட்டம்[83] 2005 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, தற்போது நடைமுறையிலுள்ளபோதிலும், அதன் வினைத்திறனாந்தன்மை கேள்விக்குரியதே.[84] இங்கு எழுகின்ற மற்றுமொரு பிரச்சினை, குடும்ப சூழலில் கணவனால் சித்திரவதைக்குள்ளாகும் ஒரு பெண் தனக்குரிய நீதியானத் தீர்வினைப் பெற்றுக் கொள்வதில் கட்டமைப்புரீதியாகக் காணப்படுகின்ற தடைகளாகும்.

முதலாவதாக, கணவனுக்கெதிராகப் புகாரளிக்கின்றப் பெண்கள் சமூகத்தினால் புறக்க ணிக்கப்படுகின்ற அல்லது விமரச்சிக்கப்படுகின்றபோக்கு வட மாகாணத்தில் காணப்படுவதாக 66.54% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் குறிப்பிட்டுள்ளனர். அச்சமூக எதிர்ப்புக்களைக் கடந்து ஒரு பெண் கணவனுக்கெதிராகப் புகாரளிப்பதற்கு பொலிஸ் நிலையம் செல்கின்றபோது, கடமையிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் 'மனைவிமார்கள் எந்த சந்தர்ப்பத்திலும் தமது திருமண/குடும்ப வாழ்க்கையினைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்' போன்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை எடுத்துக்காட்டி, பாதிக்கப்பட்ட பெண்ணை இணக்கமுறச் செய்வதற்கு அல்லது புகாரளிப்பதிலிருந்து தடுப்பதற்கே முயற்சி செய்கின்றனர்.[85] இவ்வாறாக, சமூகத்தில் மற்றும் சமூக நிறுவனங்களில் ஆழப்பொதிந்துள்ள பால்நிலை பாரபட்சமிக்க இச்சமூக நியமங்கள் மற்றும் நடைமுறைகளின் விளைவாகப் பெண்கள் குடும்ப சூழலில் தமக்கு இழைக்கப்படுகின்ற சித்திரவதைகள் மற்றும் துஷ்பிரயோகங்களைச் சகித்துக் கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

> **சிந்தனை செய்வதற்கான மற்றும் மனசாட்சியைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம்**

*''பெண்ணாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்தினால் எமக்கு நியாயமெனத் தோன்றுகின்ற விடயங்களைச் செய்வதற்கும் நாம் பல எதிர்ப்புக்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.''- பங்குபற்றுநர், 'பெண்களைப் பின்னடையச் செய்வது எது?' என்ற தலைப்பிலான இணையவழிக் கலந்துரையாடல்.*

தமக்கு இழைக்கப்படுகின்ற அநீதிக்கெதிராக நீதியினை நாட முடியாதவண்ணம் பெண்களைக் கட்டுப்படுத்துதல் அல்லது எச்சூழ்நிலையிலும் திருமண பந்தத்தினைக் காப்பதற்காக துன்புறுத்தல்களை சகித்துக் கொண்டு வாழ வேண்டுமென பெண்களைத் தேவைப்படுத்தல் என்பன அவர்களுடைய சிந்தனை செய்வதற்கான மற்றும் மனசாட்சியைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்தினையும்[86] கேள்விக்குட்படுத்துகின்றன.

---

**82** *அரசியலமைப்பின் உறுப்புரை 17 மற்றும 26*

**83** *2005 ஆம் ஆண்டு, 34 ஆம் இலக்க, குடும்ப வன்முறைகளைத் தடுப்பதற்கான சட்டம்*

**84** CPA, 'Legal Reform to Combat Sexual and Gender Based vIolence- Part 1' (CPA, November 2020) available at: https://www.cpalanka.org/wp-content/uploads/2020/11/Law-Reform-to-combat-SGBV-PART-1-General-Centre-for-Policy-Alternatives.pdf accessed 20 August 2021

**85** *குடும்ப வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுடனான குவிமையக் குழுக் கலந்துரையாடல்*

**86** *அரசியலமைப்பின் உறுப்புரை 10*

➤ **சுதந்திரமாக நடமாடுவதற்கான சுதந்திரம்**

*''அந்த கொடூரமான சம்பவத்திற்கு பிறகு நான் வெளியே செல்வதை முடியுமானளவு தவிர்த்துக் கொள்கிறேன். ஏனையோருடைய குத்தல் பார்வைகளையும், விமர்சனப் பேச்சுக்களையும் என்னால் எதிர்கொள்ள முடியவில்லை.'' - பங்குபற்றுநர், பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுடனான குவிமையக் குழுக் கலந்துரையாடல்*[87]

பாலியல் வன்புணர்வினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் மீது சுமத்தப்படுகின்ற சமூகக் களங்கமானது அவர்களது சுதந்திரமான நடமாட்டத்திற்கு தடைவிதித்து அவர்களை ஒரு குறுகலான வட்டத்திற்குள் முடக்குகின்றது. ஒரு பெண்ணுடைய கௌரவம் மற்றும் அவளது குடும்பத்தின் கௌரவம் என்பன அவளது உடலில் மற்றும் உடல்ரீதியான பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது என்ற கலாசார விழுமியமே, பாலியல் வன்புணர்வினால் பாதிக்கப்படுகின்ற பெண்கள் மீது சுமத்தப்படுகின்ற சமூகக் களங்கத்திற்கான அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. இச்சமூகக் களங்கத்தினை எதிர்கொள்ள முடியாத பல பெண்கள் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக குவிமையக் குழுக் கலந்துரையாடல்களில் கலந்துக் கொண்ட பங்குபற்றுநர்கள் தெரிவித்திருந்தனர்.[88] கற்பு, கௌரவம் மற்றும் பெண்கள் என்பன தவிர்க்கமுடியாதவகையில் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைக்கப்பட்டிருக்கும் விதம் இந்த ஆய்வின் இலக்கிய மீளாய்வில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்போது, பெண்கள் இரவில் தனியாக பயணம் செய்யக்கூடாது என்ற சமூக நியமம் நிலைத்திருப்பதாக 65.23% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் தெரிவித்திருந்தனர். யுத்தத்திற்கு பின்னரான இராணுவமயமாக்கப்பட்டுள்ள சூழல் மற்றும் போதைப் பொருள் பாவனையின் அதிகரிப்பு போன்ற பாதுகாப்பு காரணங்களினால் பெண்கள் இரவில் தனியாக பயணம் செய்யக்கூடாது என்ற நியதி நிலவி வருகின்றதென பங்குபற்றுநர்களில் ஒருசாரார் தெரிவித்திருந்தபோதிலும், 'நேரத்திற்கும் பெண்களின் நடத்தைக்கும் அல்லது ஒழுக்கத்திற்கும்' இடையில் காணப்படுவதாக காலங்காலமாக சொல்லப்பட்டு வருகின்ற தொடர்பும் இந்நியதி நிலைத்திருப்பதற்கான ஒரு காரணமாகும். தினமும் நேரங்கடந்து வீட்டிற்கு வருகின்ற ஒரு பெண்/பெண் பிள்ளையின் பாதுகாப்பு குறித்து குடும்ப உறுப்பினர்கள் கரிசனைக் கொள்கின்றபோதும், ஏனைய நபர்கள் அப்பிள்ளை வீட்டிற்கு வருகின்ற நேரத்தினை அடிப்படையாகக் கொண்டு அப்பிள்ளையின் நடத்தையினை விமர்சிப்பதனை பல இடங்களில் பார்க்க முடியுமென்பதனை ஆய்வுப் பங்குபற்றுநர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

➤ **பேச்சு சுதந்திரம்**

*''வீட்டில் முக்கியத் தீர்மானங்களை எடுக்கும்போது எங்களது கருத்துக்களை சொல்ல முயற்சிக்கின்றபோதே, ''பொட்டைக்கோழி கூவி பொழுது விடியாது'' என்பார்கள். பொது இடங்களில் பெண்கள் பேசுவதனை இச்சமூகம் பெரும்பாலும் விரும்புவதில்லை. அவர்களுக்கு வாயாடி என முத்திரை குத்துகின்றது. வாயாடிக்குரிய சரியான ஆண் பால் சொல் என்ன என்று நான் பல தடவை யோசித்திருக்கிறேன்.''- பங்குபற்றுநர்- பயிற்றுநர்களுக்கான பயிலமர்வு*[89]

பெண்கள் பொது இடங்களில் அதிகமாகப் பேசக் கூடாது என்ற சமூக நியமம் நிலைத்திருப்பதாக 72.56% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் கூறியிருந்தனர். எவ்வாறெனினும், குவிமையக் குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் தரவுகளைச் சரிபார்ப்பதற்கான சந்திப்புக்களின்போது, இச்சமூக நியமம் தற்போது ஓரளவிற்கு குறைந்து வருவதாகவே பங்குபற்றுநர்கள் தெரிவித்திருந்தனர். இதற்கு உதாரணமாக, தற்போது, அரசியல் கூட்டங்கள், சமுர்த்தி கூட்டங்கள் மற்றும் பல்வேறுபட்ட பொது கூட்டங்களில் பெண்களே அதிகளவில் கருத்துக்களைத் தெரிவிப்பதாகத் தெரிவித்திருந்தனர். பேச்சு சுதந்திரம் என்பது அரசியலமைப்பின் உறுப்புரை 14 (அ) இனால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமையொன்றாகும் என்பதுடன், பெண்கள் உள்ளடங்கலாக அனைத்து பிரஜைகளும் இவ் உரிமையினை அனுபவிப்பதற்கு உரித்துடையவர் ஆவார். பெண்களுடைய பேச்சு சுதந்திரம் தடுக்கப்படுகின்றபோது, அங்கு மிக வெளிப்படையாகவே, சமூகத்தின் முன்னேற்றமும் தடுக்கப்படுகின்றது என்பதனையும் நாம் இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும்.

---

**87** 23.03.2021 அன்று மன்னாரில் உள்ள பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் மண்டபத்தில் இடம்பெற்றது.

**88** பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுடனான மையக்குழுக் கலந்துரையாடல், 23.03.2021 அன்று மன்னாரில் உள்ள பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் மண்டபத்தில் இடம்பெற்றது.

**89** 18.03.2021 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வதோய மண்டபத்தில் இடம்பெற்றது.

## 4.6.3 பெண்களுடைய தொழில் உரிமைகளை மட்டுப்படுத்துகின்ற நடைமுறைகள்/ சமூக நியமங்கள்

தங்களுடைய சமுதாயங்களில் நிலைத்திருப்பதாக ஆய்வுப் பங்குபற்றுநர்களினால் அடையாளப் -படுத்தப்பட்ட சமூக நியமங்களுள்/ நடைமுறைகளுள் கீழ்வருவன பெண்களுடைய தொழில் உரிமைகளை மற்றும் தொழில் புரிவதற்கான சுதந்திரங்களை மட்டுப்படுத்துவனவாக அமைந்துள்ளன. இவற்றுள் முதலாவது, நிலைத்திருக்கும் அளவினடிப்படையில் பட்டியற் -படுத்தப்பட்டுள்ள சமூக நியமங்களின் பட்டியலில் முதற் பத்து சமூக நியமங்களுக்குள்ளும், ஏனைய மூன்றும் முதல் இருபது சமூக நியமங்களுக்குள்ளும் உள்ளடங்குகின்றன.

- உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும் (இச்சமூக நியமம் நிலைத்திருப்பதாக 76.8% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் கூறியுள்ளனர்).
- பெண்கள்/ பெண் பிள்ளைகள் பணியில் இரவு நேரக் கடமைகளை ஏற்கக் கூடாது (இச்சமூக நியமம் நிலைத்திருப்பதாக 63.5% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் கூறியுள்ளனர்).
- பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தவிர்ந்த ஏனைய குடும்பங்களில் ஆண்களே பிரதான வருமானத்தை ஈட்டுபவராயிருக்க வேண்டும் (இச்சமூக நியமம் நிலைத்திருப்பதாக 62.7% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் கூறியுள்ளனர்).
- பெண்கள்/பெண் பிள்ளைகள் ஆண்கள் செய்யும் அதே வேலையை செய்தாலும் சம அளவான ஊதியம் பெற உரித்துடையவர்களல்ல (இச்சமூக நியமம் நிலைத்திருப்பதாக 61.4% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் கூறியுள்ளனர்).

இச்சமூக நியமங்கள் பெண்களுடைய கீழ்வரும் தொழில் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைக் குறிப்பாக மட்டுப்படுத்துகின்றன:

### ➤ விரும்பிய தொழில் புரிவதற்கான உரிமை

*''என்னுடைய கணவர் உடல் இயலாமையினை உடைய ஒரு நபர். அதனால் அவருக்கு உடல்நிலை சரியில்லாத நாட்களில் அவருடைய முச்சக்கரவண்டியினை நான் ஓட்டுவேன். ஆனால், நான் முச்சக்கர வண்டியினை ஓட்டி செல்கின்றபோது என்னை சமூகத்திலுள்ளோர் விமர்சனரீதியாகவே பார்க்கின்றனர்.''- பங்குபற்றுநர், உடல் இயலாமைகளையுடைய நபர்களுடனான குவிமையக் குழுக் கலந்துரையாடல்*[90]

இலங்கையின் அரசியலமைப்பானது தாம் விரும்பிய தொழிலைப் புரிவதற்கான உரிமையினை பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் உத்தரவாதப்படுத்துகின்றது.[91] எவ்வாறெனினும், 'உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும்' என்ற சமூக நியமமானது, அவ்வாறு உடல் உழைப்பு அதிகம் தேவைப்படுத்தப்படுகின்ற வேலைகளில் பெண்கள் ஈடுபடுவதனைத் தடுக்கின்றது. இந்நியமம் நிலைத்திருப்பதற்கான காரணங்களாக, ஆண்களே உடற்பலம் மிக்கவர்கள் மற்றும் பெண்களால் கடின வேலைகளை செய்ய முடியாது போன்றன ஆய்வுப் பங்குபற்றுநர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் தற்போது பெண்கள் உடல்வலு அதிகம் தேவைப்படுகின்ற வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான வேலைகளில் ஈடுபடுகின்ற பெண்கள் மீதான சமூகத்தின் விமர்சனப் பார்வை அத்தொழிலை அவர்கள் தொடர்ச்சியாக புரிவதற்கு தடையேற்படுத்துகின்றது.

---

**90** *21.03.2021* அன்று கிளிநொச்சி கனகபுரத்திலுள்ள கிராமிய அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.
**91** அரசியலமைப்பின் உறுப்புரை *14(1)(எ)*

படம் 4.1

### அ. செல்வநாயகி -பள்ளிமுனை-மன்னார்

“நான் அளவில் பெரிதான, பொதுவாக ஆண்கள் மாத்திரமே ஓட்டுகின்ற மோட்டார் சைக்கிளை வாங்கி ஓட்டினேன். இதனை அவதானித்த போக்குவரத்து பொலிஸ் அதிகாரி ஒருவர் ‘நான் அதனை ஓட்டக்கூடாது, அது ஆண்கள் ஓட்டும் வண்டி’ என எச்சரித்தார். சமூகத்திலுள்ளோரும் நான் ஆண்கள் ஓட்டும் வண்டியினை ஓட்டுவதாக விமர்சித்தனர். நான் போக்குவரத்து பிரிவின் உயர் அதிகாரியைச் சந்தித்து அவ்வண்டியினை ஓட்டுவதற்கான அனுமதியினைப் பெற்றுக் கொண்டேன்.”



படம் 4.2

### ச. புவனேஸ்வரி -பூநகரி-கிளிநொச்சி

“நான் என்னுடைய வருமானத்திற்காக பெரிய டிராக்டர் வாகனங்களை ஓட்டுகின்றேன். மரங்களில் ஏறி தேங்காய்களைப் பறிக்கின்றேன். எவ்வாறெனினும், சமூகத்தில் பலர் இதனை ஆண்களின் வேலையாகப் பார்ப்பதனால், என்னை விமர்சிக்கின்றார்கள். அது எனக்கு சிறிது வேதனை அளித்தாலும், நான் எனது வருமானத்திற்காக இவற்றைத் தொடர்ந்து செய்து வருகின்றேன்.”



பெண்கள்/ பெண் பிள்ளைகள் பணிகளில் இரவு நேரக் கடமைகளை ஏற்கக் கூடாது என்ற நியதியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமானத் தொழிலைத் தெரிவு செய்வதனைத் தடை செய்கின்றது. இதற்கான பிரதான காரணங்களுள் ஒன்றாக பாதுகாப்பு குறிப்பிடப்பட்டபோதும், நேரம் மற்றும் பெண்ணின் நடத்தையினை தொடர்புபடுத்திப் பார்க்கின்ற பாரம்பரிய பழக்கங்கள் மற்றும் மரபுகள் என்பன தான் இந்நியதி அதிகளவில் நிலைத்திருப்பதற்கான பிரதான காரணங்களாய் அமைகின்றன என்பது சேகரிக்கப்பட்டத் தரவுகளினூடாகக் கண்டறியப்பட்டது.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தவிர்ந்த ஏனைய குடும்பங்களில் ஆண்களே பிரதான வருமானம் ஈட்டுபவராக இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு அல்லது சமூக வழக்கம் 'உத்தியோகம் புருஷ லட்சணம்' என்ற பழமையான நியதியினைத் தழுவியதாகும். இது ஆண்கள் கட்டாயம் உழைத்தே ஆக வேண்டுமென்ற கட்டாயத்தினை ஆண்கள் மீது சுமத்துகின்றது. அத்துடன், குழந்தை பராமரிப்பு அல்லது பணி இடமாற்றம் போன்ற ஏதேனுமொரு காரணத்தினால் கணவன் மற்றும் மனைவி இருவரில் ஒருவர் மாத்திரமே பணிபுரிய முடியும் என்ற நிலையேற்படுகின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும், மனைவிமார்களே தங்களது பணியினை துறக்க வேண்டிய நிர்ப்பந்தத்தினையும் இந்நடைமுறை ஏற்படுத்துகின்றது. இதுவும், பெண்களுடைய தொழில் புரிவதற்கான உரிமையினை மட்டுப்படுத்துகின்றது.

- **சம அளவான ஊதியத்தினைப் பெற்றுக் கொள்கின்ற உரிமை**

''ஆண்கள் செய்கின்ற அதே வேலையைத்தான் நாங்களும் செய்கின்றோம். ஆனால், எங்களுக்கு குறைவான சம்பளமே வழங்கப்படுகின்றது. இது என்ன நியாயம்?''- ஆய்வு பங்குபற்றுநர்- முல்லைத்தீவு மாவட்டம்

இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 12 (2) ஆனது எந்தவொரு நபரும் பால் அடிப்படையில் பாரபட்சத்திற்குட்படுத்தப்பட கூடாது என கூறுகின்றது. எவ்வாறெனினும், பெரும்பாலும் விவசாய வேலைகளில் ஈடுபடுகின்ற ஆண்கள் மற்றும் பெண்கள் ஒரே மாதிரியானப் பணிகளைச் செய்கின்றபோதும், பெண்களுக்கு ஆண்களைவிட குறைவான ஊதியமே வழங்கப்படுகின்றது. இப்போக்கு, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அதிகமாகக் காணப்படுவதாக ஆய்வுப் பங்குபற்றுநர்கள் கூறியிருந்தனர். பெண்கள் ஆண்களைவிட பலவீனமானவர்கள் என்ற நிலையான உள எண்ணமே இவ்வேதன வேறுபாட்டிற்கான அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. அத்துடன், ஆண்களே உத்தியோகம் பார்ப்பதற்கு தகுதியுடையவர்கள், பெண்களின் பணி குடும்பத்தினைப் பராமரிப்பதே போன்ற பால்நிலை பாரபட்சமிக்க நியமங்களும் இவ்வேதன வேறுபாட்டிற்கான மூல காரணங்களாக அமைந்துள்ளன.

## 4.6.4 பெண்களுடைய மத சுதந்திரத்தினை மட்டுப்படுத்துகின்ற நடைமுறைகள்/ சமூக நியமங்கள்

**இந்து மதம் சார்ந்தவை**

- பெண்கள்/ பெண் பிள்ளைகள் மாதவிடாய்க் காலங்களில் கோயிலுக்குப் போகக் கூடாது

''மாதவிடாய் காரணமாக என்னால் கடந்த வருடம் நடைபெற்ற வருடாந்தத் தேர்த்திருவிழாவிற்கு போக முடியவில்லை. இது எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. மாதவிடாய் இயற்கையான நிகழ்வென்றால் நான் ஏன் ஆலயத்திற்கு செல்லக் கூடாது?''- பங்குபற்றுநர், பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பான இளைஞர்களுடனான இணையவழிக் கலந்துரையாடல்[92]

இச்சமூக நியமமானது/ நடைமுறையானது 86% இற்கும் அதிகமான இந்துக்களினால் பின்பற்றப்பட்டு வருகின்றது என ஆய்வுப் பங்குபற்றுநர்கள் தெரிவித்துள்ளனர். 65.1% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் இதனை ஒரு மத நம்பிக்கையாகவும் வழக்கமாகவும் பார்க்கின்ற அதேவேளை, 34.8% ஆன பங்குபற்றுநர்கள் இதனை ஒரு கலாசாரப் பழக்கவழக்கமாக அல்லது மூட நம்பிக்கையாகப் பார்க்கின்றனர். இது தொடர்பாகக் கூறுகின்றபோது:

92 02.06.2021 அன்று Zoom தளத்தினூடாக இடம்பெற்ற இணையவழிக் கலந்துரையாடல்

***இந்து மதத் தலைவரும், வட்டுக்கோட்டை வீரபத்திர ஆலயத்தின் தலைமை குருக்களும், சங்கராத்து சின்னம்மா வித்தியாலய அதிபருமான சிவஸ்ரீ த. சிவலோகநாத குருக்கள்*** *பின்வருமாறு பதிலளித்திருந்தார்:*

*''மாதவிடாய் காலத்தில் பெண்கள் ஓய்வெடுக்க வேண்டுமென்பதற்காகவே இந்நியதி காணப்படுகின்றது. ஆகவே, மாதவிடாய் துடக்கு என்பது சுகாதாரத்துடன் தொடர்புடையதாகும். இது பால்நிலை பாரபட்சமிக்க விடயமொன்றல்ல.''*

*மாதவிடாய் காலத்தின்போது பெண்கள்/ பெண் பிள்ளைகள் கோயிலுக்கு செல்லக்கூடாது என்பது மத நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆகம விதியாகும் என்ற கருத்துக்களும் மதத் தலைவர்களால் முன்வைக்கப்பட்டது.[93] இந்த ஆய்வின் நோக்கம், பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை குறித்து ஆராய்வதே ஆகும் என்பதுடன், சமூக நியமம் மற்றும் மதக் கோட்பாடுகளுக்கிடையிலான வேறுபாடு இலக்கிய மீளாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வகையில், குறித்த இவ்வழக்கம் வெறுமனே கலாசாரம் மற்றும் பண்பாடுகளைத் தழுவிய நியமமொன்றா அல்லது ஆகம விதியொன்றா என்ற ஐயப்பாடு முழுவதுமாகத் தீர்க்கப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. எவ்வாறெனினும், இவ்வழக்கமானது மத வழிபாடுகளை முன்னெடுப்பதற்கான பெண்களுடைய சுதந்திரங்களை மட்டுப்படுத்துகின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்தியாவில் பல பிரதேசங்களில், மாதவிடாய் இயற்கையான நிகழ்வாகக் கருதப்பட்டு மாதவிடாய் காலத்திலும் பெண்களை உள்ளே அனுமதிக்கின்ற பல ஆலயங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக,*

- *மேல்மருவத்தூர் அம்மன் ஆலயம்- சென்னையில் இருந்து திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் 92 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. பெண்கள் கருவறைக்குள் சென்று அர்ச்சனை செய்வதோ அல்லது மாதவிலக்கு காலத்தில் கோயிலுக்கு வருவதோ தடை செய்யப்படவில்லை.*
- *கோயம்புத்தூர் மா லிங்க பைரவி ஆலயம் - பெண்கள் கருவறைக்குள் சென்று அர்ச்சனை செய்வதோ அல்லது மாதவிலக்கு காலத்தில் கோயிலுக்கு வருவதோ தடை செய்யப்படவில்லை.*

- *பெண்கள்/பெண் பிள்ளைகள் மங்கள வாத்தியங்களை இசைக்கக் கூடாது*

*''பெண்கள் மங்கள வாத்தியங்களை வாசிக்கின்ற நடைமுறை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.''- பங்குபற்றுநர்- பயிற்றுநர்களுக்கான பயிலமர்வு*

*இச்சமூக நியமமானது தங்களது சமுதாயங்களில் நிலைத்திருப்பதாக 64% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் தெரிவித்திருந்தனர். எவ்வாறெனினும், 82.7% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் பெண்கள் மங்கள வாத்தியங்களை இசைக்கலாம் என்ற கருத்தினைக் கொண்டிருந்தனர். இது தொடர்பாக,*

***யாழ்ப்பாண மாவட்ட அகில இலங்கை சைவ குருமார் அர்ச்சகர் சபையினைச் சேர்ந்த கிருபானந்த குருக்கள்*** *பின்வருமாறு கூறினார்.*

*''பெண்கள் மங்கள வாத்தியங்களை இசைக்க முடியும். யாழ்ப்பாண மாவட்டத்தில் கள்ளியங்காடு பிரதேசத்தில் மங்கள வாத்தியங்களை இசைக்கின்ற பெண்கள் அதிகமானோர் வசிக்கின்றனர்.''*

- *பெண்கள்/பெண் பிள்ளைகள் கோயில்களில் குருக்கள் பதவியினை வகிக்கக் கூடாது*

*''குருத்துவம் ஆண்களுக்கானது என சிவாகமங்களில் சொல்லப்பட்டுள்ளது''*– ***கிருபானந்த குருக்கள்***

*இது ஒரு ஆகம விதியாகவே காணப்படுகின்றது என இந்து மதத் தலைவர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது. 52.4% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் இதனை ஒரு ஆகம விதியாக எண்ணி ஏற்றுக் கொள்கின்ற அதேவேளை, 47.5% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் இந்நியதி பெண்களுக்கான மத சுதந்திரத்தை பறிக்கின்றதென்ற அடிப்படையில் இதனை ஏற்க மறுத்துள்ளனர். இந்நடைமுறை, சமூக நியமமாக இருப்பினும் அல்லது ஆகம விதியாக இருப்பினும், அது மத வழிபாடு தொடர்பாகப் பெண்களுக்குள்ள சம உரிமையினை மறுக்கின்றது என்பது நிதர்சனமான உண்மை ஆகும்.*

---

*93* இந்து மதத் தலைவர்களுடனான நேர்காணல்

**கிறிஸ்தவ / கத்தோலிக்க மதம் சார்ந்தவை**

- *கன்னியாஸ்திரிகள் ஆராதனைக் கூட்டங்களை நடத்தக்கூடாது*

*''குருத்துவம் ஆண்களுக்கே உரித்தானது என வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது''- டொன் பொஸ்கோவின் சிகேஷிய சகோதரி அகதா*

*இது ஒரு ஆகம விதியாகவே காணப்படுகின்றது என மதத் தலைவர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது. எவ்வாறெனினும், 72.8% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் இதனை ஏற்றுக் கொள்ளாத அதேவேளை, கன்னியாஸ்திரிகளுக்கும் ஆராதனைக் கூட்டங்களை நடத்துவதற்கான உரிமை காணப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தனர். அதேவேளை, கன்னியாஸ்திரிகள் ஆராதனைக் கூட்டங்களை நடத்துவதில்லை என்ற நடைமுறை தமது சமுதாயங்களில் காணப்படுவதாக 60.8% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் பதிலளித்திருந்தனர். இந்நடைமுறை மத வழிபாடுகளை முன்னெடுப்பதற்கான பெண்களுடைய உரிமையினை மட்டுப்படுத்துகின்றது.*

- *கன்னியாஸ்திரிகள் ஞானஸ்நானம் வழங்கக்கூடாது*

*கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்களுள் சிலர் பெண்கள் ஞானஸ்நானம் வழங்குவதில் எவ்விதத் தடைகளும் இல்லை என குறிப்பிட்டிருந்த அதேவேளை, சிலர் அவசர சந்தர்ப்பங்களின்போது மாத்திரமே பெண்கள் ஞானஸ்நானம் வழங்கலாம் என குறிப்பிட்டிருந்தனர். கன்னியாஸ்திரிகள் ஞானஸ்நானம் வழங்குவதில்லை என்ற நடைமுறை தமது சமுதாயங்களில் காணப்படுவதாக 61.6% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் பதிலளித்திருந்தனர். அதேவேளை, 42.5% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் இதனை ஒரு ஆகம விதியாக எண்ணி ஏற்றுக் கொள்கின்ற அதேவேளை, 57.4% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் இந்நியதி பெண்களுக்கான மத சுதந்திரத்தை பறிக்கின்றதென்ற அடிப்படையில் இதனை ஏற்க மறுத்துள்ளனர்.*

**இஸ்லாம் மதம் சார்ந்தவை**

- *பெண்கள்/பெண் பிள்ளைகள் மாதவிடாய்க் காலங்களில் தொழுகைகளில் ஈடுபடக்கூடாது*

*''இது மதம் சார்ந்த விதியொன்றாகும்''- இஸ்லாமிய மதத் தலைவர் ஒருவர் (பெயர் குறிப்பிட விரும்பவில்லை).*

*இஸ்லாமிய மதத் தலைவர்கள் இதனை ஒரு ஆகம விதியென வலியுறுத்தியிருந்த அதேவேளை, 67.2% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் இவை தமது சமுதாயங்களில் நிலைத்திருப்பதாக கூறியிருந்தனர். அத்துடன், 60.7% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் இதனை ஒரு ஆகம விதியாக எண்ணி ஏற்றுக் கொள்கின்ற அதேவேளை, 39.2% ஆன ஆய்வுப் பங்குபற்றுநர்கள் இந்நியதி பெண்களுக்கான மத சுதந்திரத்தை பறிக்கின்றதென்ற அடிப்படையில் இதனை ஏற்க மறுத்துள்ளனர்.*

**பௌத்த மதம் சார்ந்தவை**

- *பெண்கள்/பெண் பிள்ளைகள் மாதவிடாய் காலப்பகுதியின்போது பௌத்த விகாரைகளுக்கு செல்லக் கூடாது*

*பௌத்த மதத்தைச் சேர்ந்த அனைத்து ஆய்வுப் பங்குபற்றுநர்களும் வவுனியா மாவட்டத்தினைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். (ஏனைய மாவட்டங்களில் பௌத்த மதத்தினைச் சேர்ந்தோர் மிக சொற்ப அளவிலேயே வசிக்கின்றனர்). இந்த ஆய்வுப் பங்குபற்றுநர்களுள் 69.6% ஆனோர் இச்சமூக நியமம் தங்களுடைய சமூகத்தில் நிலைத்திருப்பதாகப் பதிலளித்திருந்தனர். அத்துடன், 47.1% ஆனோர், தங்களுடைய தனிப்பட்ட அபிப்பிராயத்தின்படி இந்நியதியினை ஆகமக் கோட்பாடுகளுக்கு அடிபணிந்து ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருந்த அதேவேளை, 52.8% ஆனோர் இந்நியதியினை தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என பதிலளித்திருந்தனர்.*

- பௌத்த விகாரைகளுக்கு செல்கின்ற பெண்கள் மதகுருமாரின் கால்களைத் தொடக்கூடாது

  ஆய்வுப் பங்குபற்றுநர்களுள் 58.2% ஆனோர் இச்சமூக நியமம் தங்களுடைய சமூகத்தில் நிலைத்திருப்பதாக பதிலளித்திருந்தனர். அத்துடன், 64.2% ஆனோர், தங்களுடைய தனிப்பட்ட அபிப்பிராயத்தின்படி இந்நியதியினை ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருந்த அதேவேளை, 35.7% ஆனோர் இந்நியதியினை தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என பதிலளித்திருந்தனர். இதனை ஏற்றுக் கொள்வதாகப் பதிலளித்தவர்களுள் பெரும்பான்மையானோர் இது ஒரு மத நம்பிக்கை என்பதனால் இதனை ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருந்தனர்.

- சில பௌத்த புனிதாலயங்களுக்குள் (ஸ்ரீ மஹாபோதியின் மேல்தளம், புனித தாது வைக்கப்பட்டிருக்கும் இடம்) செல்வதற்கு பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை

  ஆய்வுப் பங்குபற்றுநர்களுள் 61.1% ஆனோர் இச்சமூக நியமம் தங்களுடைய சமூகத்தில் நிலைத்திருப்பதாகக் பதிலளித்திருந்தனர். அத்துடன், 60.8% ஆனோர், தங்களுடைய தனிப்பட்ட அபிப்பிராயத்தின்படி இந்நியதியினை ஏற்றுக்கொள்வதாகக் கூறியிருந்த அதேவேளை, 39.1% ஆனோர் இந்நியதியினை தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என பதிலளித்திருந்தனர். இதனை ஏற்றுக்கொள்வதாகப் பதிலளித்தவர்களுள் பெரும்பான்மையானோர் இது ஒரு மத நம்பிக்கை என்பதனால் இதனை ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருந்தனர்.

- பெண்கள் பௌத்த விகாரைகளுக்கு செல்கின்றபோது தனது உடலை முழுவதுமாய் மறைக்க வேண்டும்

  ஆய்வுப் பங்குபற்றுநர்களுள் 88.8% ஆனோர் இச்சமூக நியமம் தங்களுடைய சமூகத்தில் நிலைத்திருப்பதாகப் பதிலளித்திருந்தனர். அத்துடன், 73.9% ஆனோர், தங்களுடைய தனிப்பட்ட அபிப்பிராயத்தின்படி இந்நியதியினை ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருந்த அதேவேளை, 26% ஆனோர் இந்நியதியினை தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என பதிலளித்திருந்தனர். இதனை ஏற்றுக் கொள்வதாகப் பதிலளித்தவர்களுள் பெரும்பான்மையானோர் இது எமது ஒழுக்கக் கலாசாரம் என்ற அடிப்படையில் இதனை ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருந்தனர்.

  இவ் அனைத்து நடைமுறைகளும், அவை சமூக நியமங்களாக இருப்பினும் அல்லது மத கோட்பாடுகள் அல்லது நம்பிக்கைகளாக இருப்பினும், அவை பெண்களுடைய மத வழிபாட்டிற்கான உரிமைகளையும் சுதந்திரங்களையும் குறிப்பிடத்தக்களவில் மட்டுப்படுத்துகின்றன.

# அத்தியாயம் 5

# 5 ஆய்வு முடிவுகள்- பகுதி 2

## 5.1 பால்நிலை பாரபட்சமிக்க தேசிய எடுத்துரைப்புக்களும் அவை பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் ஏற்படுத்துகின்றத் தாக்கமும்

### 5.1.1 அறிமுகம்

''நாளாந்த கலந்துரையாடல்களில் காணப்படக்கூடிய தேசிய எடுத்துரைப்புக்கள் பலம் பொருந்தியனவாகக் கருதப்படுகின்றன'' என Somers குறிப்பிட்டுள்ளார்.[94] தேசிய எடுத்துரைப்புக்கள் கொள்கையாக்கம் மற்றும் சட்டவாக்கங்களிலும் மற்றும் அவற்றின் அமுலாக்கத்திலும் கூட ஆதிக்கம் செலுத்தத்தக்கவை ஆகும்.[95] இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, தேசிய எடுத்துரைப்புக்கள் என்பது, பாட நூல்கள் மற்றும் செய்திப் பத்திரிகைகள் உள்ளடங்கலாக தேசிய மட்டத்திலே வெளியிடப்படுகின்ற அல்லது பிரசுரிக்கப்படுகின்ற ஆவணங்கள் மற்றும் தேசிய மட்டத்தில் இடம்பெறுகின்ற கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தாடல்களில் இடம்பெறுகின்ற கருத்துப் பதிவுகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றது.

பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயத்தினை எவ்வித ஒதுக்கீடுகளுமின்றி ஏற்று அங்கீகரித்துள்ளதன் வாயிலாக, இலங்கை அரசாங்கமானது பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பினையும் கடப்பாட்டினையும் வலியுறுத்தியுள்ளது. அதற்கமைய, இலங்கையில் பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளை அடுத்தடுத்து ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் முன்னெடுத்து வந்துள்ளன.[96] எவ்வாறெனினும், இலங்கையில் பால்நிலை சமத்துவம் என்பது இன்னும் கேள்விக்குறியானதாகவே இருந்து வருகின்றது என்பது இந்த ஆய்வின் அத்தியாயம் 1 இல் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இதற்கு பல காரணங்கள் காணப்படுகின்றபோதிலும், பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களும், தேசிய எடுத்துரைப்புக்களும் பால்நிலை சமத்துவமின்மைக்கு கணிசமானளவு பங்களித்து வருகின்றன. இவற்றுள், பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற அளவு, அவற்றின் பலம் மற்றும் அவை பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் ஏற்படுத்துகின்ற தாக்கம் என்பன குறித்து முன்னைய அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இவ் அத்தியாயமானது, இலங்கையில் பால்நிலை பாரபட்சமிக்க தேசிய எடுத்துரைப்புக்களின் நிலைப்பாடு மற்றும் அவை எவ்வாறு பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பது தொடர்பில் ஆராய்கின்றது.

அதற்கமைய, பால்நிலை பாரபட்சமிக்க தேசிய எடுத்துரைப்புக்களை ஆராயும்பொருட்டு, இலங்கையில் வெளிவருகின்ற மும்மொழி செய்திப் பத்திரிகைகள், பாடசாலை பாடநூல்கள், தொலைக்காட்சி விளம்பரங்கள் மற்றும் சமூக ஊடகப் பதிவுகள் என்பன கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், இப்பால்நிலை பாரபட்சமிக்க தேசிய எடுத்துரைப்புக்கள் பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் ஏற்படுத்துகின்ற தாக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு, அவை இரு பகுதிகளாக ஆராயப்பட்டுள்ளன.

---

*94* Somers, M. 'The narrative construction of identity: A relational and network approach', (Theory and Society, 1994) p. 614

*95* Mariola, A. 'The power of narratives: Explaining inaction on gender mainstreaming in Uganda's climate change policy', (Development Policy R view, 2000) p. 555- 574

*96* உள்ளூரதிகார சபைகளில் பெண் பிரதிநிதித்துவத்திற்கான ஆசன ஒதுக்கீடு, பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினை ஒழிப்பதற்கான தேசிய செயற்திட்டம், வீட்டு வன்முறைகளைத் தடுப்பதற்கான சட்டவாக்கம் என்பன குறிப்பிட்டு கூறத்தக்க முயற்சிகளாகும்.

## 5.1.2 'பிள்ளைப் பராமரிப்பு பெண்களுக்கானது' என்பதனை வலியுறுத்துகின்ற தேசிய எடுத்துரைப்புக்கள்

முன்னைய அத்தியாயத்தில் பிள்ளைப் பராமரிப்பு பிரதானமாகப் பெண்களின் வேலை என்ற சமூக நியமம் வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற, பலம் பொருந்திய மிக முக்கிய சமூக நியமமொன்றாக அடையாளங் காணப்பட்டிருந்தது. குழந்தைப் பெற்றுக் கொள்கின்ற, பாலூட்டுகின்ற இயலுமை பெண்களிடம் காணப்படுவது இயற்கை. இவ் இயற்கையினை அடிப்படையாகக் கொண்டு, பிள்ளைப் பராமரிப்பு என்பது பெண்களுக்கு மாத்திரமே உரித்தானது என்ற ஒரு மாயை உருவாக்கப்பட்டு அது சமூகத்தில் வேரூன்றச் செய்யப்பட்டுள்ளது. இம் மாயையை எடுத்தெறிவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 'தாய்மை பெண்ணிற்குரியது', 'தாய்மையே பெண்ணின் பரிபூரணம்' போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு அம்முயற்சிகள் தகர்த்தெறியப்படுகின்றன. பெண்கள்தான் பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும் என்பது கட்டாய நியதியாக சமூகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்நியதி குடும்பங்களில், பாடசாலை மற்றும் ஆலயம் போன்ற சமூக நிறுவனங்களில் பல்வேறு வழிகளினூடாக மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது. தாய் மற்றும் தந்தை ஆகிய இருவருமே பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான தார்மீக மற்றும் சட்டக் கடப்பாட்டினைக் கொண்டுள்ளனர். எவ்வாறெனினும், இப்பொறுப்பினைத் தனித்து பெண்ணில் மாத்திரம் சுமத்துகின்றமையானது, சில சந்தர்ப்பங்களில் அவளது உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மட்டுப்படுத்துவதற்கு வழிகோலுகின்றது. இது குறித்து முன்னைய அத்தியாயத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ் அத்தியாயத்தில், தேசிய எடுத்துரைப்புக்கள் எவ்வாறு பால்நிலை பாரபட்சமிக்க இந்நியமத்தினை வலியுறுத்துகின்றன அல்லது பலப்படுத்துகின்றன என்பது தொடர்பில் பார்ப்போம்.

முதலாவதாக, பாடசாலை பாடநூல்களை எடுத்துக் கொண்டோமானால், குழந்தை பராமரிப்பு தொடர்பாக பாடநூல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எந்தவொரு படத்திலும், ஒரு பெண்/ பெண் பிள்ளை (தாய் அல்லது தமக்கை) குழந்தையைப் பராமரிக்கின்ற காட்சியே பெரும்பாலும் உள்ளடக்கப்படுகின்றது.

அடுத்ததாக, செய்திப் பத்திரிகைகளில் வெளிவருகின்ற செய்திகள் மற்றும் கட்டுரைகளை ஆராய்கின்றபோது, பிள்ளைப் பராமரிப்பு தொடர்பான எந்தவொரு விடயத்தினை எழுதுகின்றபோதும் பிரதான பிள்ளைப் பராமரிப்பாளர்களாகப் பெண்களே சுட்டிக் காட்டப்படுகின்றனர். அத்துடன், பெண்களுடைய மேம்பாடு அல்லது அவர்களுக்கான வலுவூட்டல் தொடர்பாக எழுதுகின்றபோதும், அவர்களை பெண்கள் என்ற ஒரு பாலினமாகக் கருதுகின்ற போக்கினைவிட, அவர்கள் 'தாய்மார்கள்' என்ற கண்ணோட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுதுகின்ற போக்கே அதிகளவில் காணப்படுகின்றது. இதற்கான ஒரு உதாரணத்தினைப் பார்ப்போமாயின், பெண்களுடைய அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பாக எழுதப்படுகின்ற பெரும்பாலான ஆக்கங்களில், அதிகளவானப் பெண்கள் அரசியலில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றபோது பிள்ளைப் பராமரிப்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்ள முடியும் மற்றும் பிள்ளைகளுக்கான போஷாக்கினை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் போன்ற விடயங்களே முதன்மையானவையாக அடிக்கோடிட்டுக் காட்டப்படுகின்றன.[97] பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பல்வேறு நன்மைகளை விளைவாக்கக்கூடியது. அவற்றை வெறுமனே பிள்ளைகளின் நலன் மற்றும் பிள்ளைப் பராமரிப்பு தொடர்பான விடயங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துதலானது, தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம், சமாதானம், தேசிய உற்பத்தி போன்ற பிற முக்கிய விடயங்களில் பங்களிப்பதற்கு பெண் அரசியல் பிரதிநிதிகள் பொருத்தமானவர்கள் அல்ல என்ற கருத்தினை உட்கிடையாகக் கூறுகின்றது.

## 5.1.3 'சமையல் மற்றும் வீட்டு வேலைகள் பெண்களுக்கானவை' என்பதனை வலியுறுத்துகின்ற தேசிய எடுத்துரைப்புக்கள்

சமையல் மற்றும் வீட்டு வேலைகள் பிரதானமாகப் பெண்களின் வேலைகள் என்பதும் 'மிக முக்கிய சமூக நியமமாக' முன்னைய அத்தியாயத்தில் அடையாளம் காணப்பட்ட ஒரு சமூக நியமமாகும். அத்துடன், இச்சமூக நியமத்தினை ஆண்களைவிட பெண்கள் அதிகமாக ஏற்றுக் கொள்கின்றனர் என்பதுவும் ஆய்வு முடிவொன்றாகப் பெறப்பட்டிருந்தது. பெண் பிள்ளைகளின் சிறு பராயத்திலேயே, வீட்டு வேலைகளைக் கவனிக்க வேண்டியது அவர்களின் பொறுப்பு என்பது தாய்மார்களால் அவர்களுக்கு

97 பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தனவுடனான நேர்காணல், (Daily News, 01.08.2020) p. 14, available at:https://mcusercontent.com/b574ca75594e494e783c0ecc6/images/93338583-9695-4873-b032-7dc768107836.jpg accessed 02 August 2021

புகட்டப்படுவதாக குவிமையக் குழு கலந்துரையாடல்களில் பங்குபற்றியவர்களால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. குடும்பம் என்ற சமூக அலகிற்கு அடுத்தபடியாக பிள்ளைகள் ஊடாடலை ஏற்படுத்திக் கொள்கின்ற இரண்டாவது சமூக நிறுவனம் பாடசாலை ஆகும். அவ்வகையில், ஒரு பிள்ளை தனது ஐந்தாவது வயது முதல் சுமார் பதினாறாம் வயது வரையில் பாடசாலையுடன் இணைந்து செயற்படுகின்றது. அதனால், பாடசாலைகளினால் கற்பிக்கப்படுகின்ற விடயங்கள் பிள்ளைகளில் ஆழமாகப் பதிந்துவிடுகின்றன என்பதுடன், துரதிஷ்டவசமாக, இலங்கையில், சமையல் மற்றும் வீட்டு வேலைகள் பெண்களுக்கானவை என்ற சமூக நியமத்தினை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு உறுதியானதாகவும் தொடர்ச்சியாகவும் கடத்துகின்ற ஊடகமாக பாடசாலை பாடநூல்கள் காணப்படுகின்றன. கீழே உள்ள படங்கள் இதற்கான சில உதாரணங்களாகும்:

படம் 5.1



மூலம்: தரம் 1, சைவநெறி பாடநூல்

படம் 5.2



மூலம்: தரம் 1, கத்தோலிக்க பாடநூல்

படம் 5.3




மூலம்: தரம் 1, இஸ்லாம் பாடநூல்

படம் 5.4




மூலம்: தரம் 1, சைவநெறி பாடநூல்

சமையல் அல்லது துப்பரவாக்கல் பணிகள் காண்பிக்கப்படுகின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவற்றை செய்கின்ற நபர் பெண்ணொருவராக (தாயாக) அல்லது பெண் பிள்ளையொருவராகவே (மகளாக) இருக்கின்றார். அப்பணிகளில் ஆண்கள் அல்லது ஆண் பிள்ளைகளும் ஈடுபடுவதாக காட்டப்படுகின்ற படங்களிலும்கூட, தண்ணீர் தூக்குதல், மேசைகளை இழுத்தல் மற்றும் கடைக்கு செல்தல் போன்ற வேலைகளை ஆண் பிள்ளைகள் செய்வதாகவும், பாத்திரங்களைக் கழுவுதல், வீடு கூட்டுதல் போன்ற வேலைகளை பெண்கள்/ பெண் பிள்ளைகள் செய்வதாகவுமே காண்பிக்கப்படுகின்றன. இப்படங்கள் மத விழுமியங்களைப் போதிக்கின்ற மத பாடநூல்களில் உள்ளடக்கப்பட்டிருப்பமையானது குறிப்பிடத்தக்கது. இது பெண்கள்/ பெண் பிள்ளைகள் சமையல் அல்லது வீட்டு வேலைகளுக்கு பொறுப்பானவர்கள் என்பதனை மதம் சார்ந்த விழுமியமொன்றாகப் பிள்ளைகள் புரிந்துக் கொள்வதற்கு வழிகோலுகின்றது.

முதனிலை வகுப்புக்களில் மாத்திரமல்லாது, இரண்டாம்நிலை வகுப்புக்களுக்கான பாட புத்தகங்களிலும் இத்தகைய பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை வலியுறுத்துகின்ற படங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

படம் 5.5



மூலம்: தரம் 6, செயன்முறைத் தொழிநுட்பவியல்

படம் 5.6



மூலம்: தரம் 10, சுகாதாரம்

படம் 5.7



மூலம்: தரம் 7, சிங்கள மொழி

பாடசாலை பாடநூல்களில் மாத்திரமல்லாது, தொலைக்காட்சிகளில் ஒலிபரப்பப்படுகின்ற விளம்பரங்களிலும் சமையல் மற்றும் வீட்டு வேலைகளுக்கான பொறுப்பு தனித்து பெண்களுக்கானதே என்பதனை வலியுறுத்துகின்ற வகையிலேயே காட்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சவர்க்காரம், சலவைத்தூள் உள்ளடங்கலாக ஆடை இயந்திரம் மற்றும் அரைக்கும் இயந்திரம் வரையில், சமையல் மற்றும் வீட்டு வேலைகளுக்கு அவசியமான பொருட்களுக்கான விளம்பரங்களில் பெண்களே நடிக்கின்றனர். வாகன விற்பனை, வீடு கொள்வனவு, வீடு கட்டுவதற்கான பொருட்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய விளம்பரங்களில் பெரும்பாலும் ஆண்களே நடிக்கின்றனர்.

படம் 5.8




மூலம்: இணையம்

படம் 5.9




மூலம்: இணையம்

படம் 5.10



மூலம்: இணையம்

அத்துடன், பத்திரிகைகளில் மற்றும் வலையொளி தளங்களில் சமையல் குறிப்புக்களை வெளியிடுகின்ற போது அவற்றை பெண்களுக்கான பக்கத்தில் பிரசுரித்தல் அல்லது அவற்றுக்கு 'பெண்களுக்கான சமையல் குறிப்புக்கள்' எனத் தலைப்பிடுதல் போன்ற விடயங்களும் சமையல் என்பது பெண்களுடைய வேலையே என்பதனை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

படம் 5.11




மூலம்: இணையம்

படம் 5.12




மூலம்: இணையம்

### 5.1.4 'பெண்கள் மென்மையானவர்கள்' என்பதனை வலியுறுத்துகின்ற தேசிய எடுத்துரைப்புக்கள்

பாடசாலை பாடநூல்களில் பல்வேறு இடங்களில் பெண்கள் மற்றும் ஆண்களின் குணவியல்புகள் குறிப்பிட்டுக் காட்டப்படுகின்றன. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியன பெண்ணிற்கான நாற்குணங்கள் என மனனம் செய்யுமாறு பாடசாலை மாணவர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனர்.[98] இவ்வாறான போக்கு சமூகத்தில் பால்நிலை சமத்துவமின்மைகள் உறுதியாக வேரூன்றுவதற்கு வழிவகுக்கின்றன.

படம் 5.13



இப்படத்தில் உடல் வலு குறைவாகத் தேவைப்படுகின்ற ஓலை பின்னுதலைப் பெண்களும், உடல் வலு அதிகமாகத் தேவைப்படுகின்ற விளையாட்டுக்களை ஆண்களும் செய்வதனைக் காணக் கூடியதாக உள்ளது. பெண் பிள்ளைகளும் விளையாட்டுக்களில் ஈடுபட வேண்டும் என ஊக்குவிக்க வேண்டிய பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற பாடநூல்களில் இத்தகைய பால்நிலை பாரபட்சமிக்க படங்களை உள்ளடக்குதல் சமூகத்தில் நிலைத்திருக்கின்ற பாரபட்சமிக்க சமூக நியமங்களை மேலும் வலுப்படுத்தும். பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பாக இளைஞர்களுடன் செய்யப்பட்ட இணையவழிக் கலந்துரையாடலின்போது, பெண்கள் விளையாட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவதனை பெரும்பாலான பெற்றோர்கள் விரும்புவதில்லை என்ற கருத்து ஆழமாக முன்வைக்கப்பட்டிருந்தது.[99]

98 பால்நிலை பாரபட்சம்மிக்க சமூக நியமங்கள் தொடர்பாக இளைஞர்களுடனான இணையவழிக் கலந்துரையாடல், 02.06.2021 அன்று Zoom தளத்தினூடாக இடம்பெற்றது.

99 02.06.2021 அன்று Zoom தளத்தினூடாக இடம்பெற்ற இணையவழிக் கலந்துரையாடல்

### 5.1.5 ‘பெண்களே மத வழக்கங்களைப் பேண வேண்டியவர்கள்’ என வலியுறுத்துகின்ற தேசிய எடுத்துரைப்புக்கள்

*மத வழக்கங்கள் மற்றும் சடங்குகளைக் கட்டிக் காக்க வேண்டிய பாரிய பொறுப்புமிக்கவர்களாகவே பெண்கள் சித்தரிக்கப்படுகின்றனர். சமூகத்தில் ஆண் ஒரு தவறினைப் புரிகின்றபோது, அது தனிநபரொருவரால் புரியப்படுகின்றத் தவறொன்றாகக் கருதப்படுகின்ற அதேவேளை, பெண் ஒரு தவறினை புரிகின்றபோது அது கலாசார சீர்கேட்டிற்கான அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது.[100] கலாசாரம் என்பது தனித்து பெண்கள் சார்ந்த ஒரு விடயமாகக் கருதப்படுதலும், பெண்களுக்கு கலாசாரக் காவிகள் என்ற அடையாளத்தினை இச்சமூகம் வழங்கியுள்ளமையுமே இதற்கான காரணங்களாகும். தங்களது மத வழக்கங்கள், கலாசார நடைமுறைகள் மற்றும் சம்பிரதாயங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென பெண்களுக்கு சிறுவயது முதலே கற்பிக்கப்படுகின்றது. இதில் குடும்பம், பாடசாலை ஆகிய சமூக நிறுவனங்கள் பாரிய பங்களிப்பு செய்கின்றன.*

படம் 5.14



*மூலம்: தரம் 10, சைவநெறி*

படம் 5.15




*மூலம்: தரம் 8, சைவநெறி*

*பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயமானது பால்நிலை பாரபட்சமிக்க அனைத்து வகையான பிரதிகள் மற்றும் படங்களையும் பாடநூல்களிலிருந்து நீக்குமாறு வலியுறுத்துகின்றது. இலங்கை 1981 ஆம் ஆண்டு இச்சமவாயத்தினை எவ்வித ஒதுக்கீடுகளுமின்றி ஏற்றங்கீகரித்துக் கொண்டபோதும், இதுவரையில் பாடநூல்களிலுள்ள பால்நிலை பாரபட்சமிக்க பகுதிகள், படங்கள் மற்றும் பிரதிகளை நீக்கவில்லை.[101]*

## 5.2 யுத்தத்தின் விளைவால் சமூக நியமங்களின் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

### 5.2.1 அறிமுகம்

*இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்ட வட மாகாணமானது 1983 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை, சுமார் 30 வருட காலமாக யுத்தத்தினை சந்தித்த ஒரு மாகாணமாகும். 2009 இல் ஏற்பட்ட இராணுவ வெற்றியுடன், இவ் யுத்தம் முடிவுற்றபோதிலும்கூட, யுத்தத்தின் விளைவுகள் இன்று வரையில் இச்சமுதாயத்தில் நிலைத்துள்ளன. பாலின பேதமெதுவுமின்றி யுத்தம் அனைவரது வாழ்க்கையிலும் பாரதூரமானத் தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தபோதிலும், யுத்தத்தினால் பெண்கள் எதிர்கொண்ட மற்றும் எதிர்கொள்கின்றப் பிரச்சினைகள் தனித்துவமானவையும் பாரதூரமானவையுமாகும். யுத்தத்தில் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை பிரதான ஆயுதமாகப் பாவிக்கப்பட்டமை, ஆண்கள் கணிசமானளவு கொல்லப்பட்டமை மற்றும் காணாமலாக்கப்பட்டமை மற்றும் தொடர்ச்சியான இராணுவக் கண்காணிப்பு போன்றவற்றை இத்தகைய பிரச்சினைகளுள் சிலவாக சுட்டிக்காட்ட இயலும்.*

**100** *19.03.2021* அன்று யாழ்ப்பாணத்திலுள்ள சர்வோதய மண்டபத்தில் இடம்பெற்ற தரவு சேகரிப்பாளர்களுக்கான பயிலமர்வு
**101** பெண்களுக்கெதிராக அனைத்து வகையான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயம், உறுப்புரை *10(இ)*

இலங்கையில் பொதுவாக அனைத்து சமுதாயங்களிலும் பால்நிலை சமத்துவமின்மை காணப்படுகின்றது என்பதுடன் அது பெண்களுடைய சுதந்திரமான வாழ்வில் குறிப்பிடத்தக்கத் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பதுடன் அவர்களை இலகுவில் பாதிக்கப்படக்கூடிய குழுமமாய் மாற்றுகின்றது. இத்தகைய பின்னணியில், யுத்தத்தின் பாதிப்புக்கள் பெண்களை மேலும் ஊறுபடத்தக்கவர்களாய் மாற்றியுள்ளது.

யுத்தமானது ஒரு சமூகத்தின் சுமூகமான சமூக, பொருளாதார மற்றும் கலாசார வாழ்வினை முற்றிலுமாக மாற்றியமைக்கின்றது. யுத்தத்திற்குப் பின்னர் ஒரு சமுதாயம் மீளக் கட்டமைக்கப்படுகின்றபோது, நடைபெற்று முடிந்த யுத்தத்தின் விளைவாக அச்சமூகத்தில் பல மாற்றங்கள் ஏற்படும். இவை சாதகமான மாற்றங்களாகவும் அமையலாம் அல்லது பாதகமான மாற்றங்களாகவும் அமையலாம். அவ்வகையில், இலங்கையில் வட மாகாணத்தில் ஏற்பட்டிருந்த 30 வருட கால யுத்தத்தின் விளைவாக 'சமூக நியமங்களின் போக்கில்' ஏற்பட்டுள்ள மாற்றங்களை அறிந்துக்கொள்வது இப்பகுதியின் நோக்கமாக அமைந்துள்ளது.

### 5.2.2 யுத்த காலப்பகுதியின்போது சமூக நியமங்களின் போக்கு

*''தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்பட்ட காலத்தில் பெண்களுக்கு பாரபட்சம் காணப்படவில்லை. பெண்கள் ஆண்களுக்கு நிகராக மதிக்கப்பட்டனர். சாதிய ஒடுக்குமுறைகள் காணப்படவில்லை. அனைவரும் சமம் என்ற நிலை காணப்பட்டது.''- பங்குபற்றுநர், முன்னாள் பெண் போராளிகளுடனான குவிமையக் குழுக் கலந்துரையாடல்*[102]

குவிமையக் குழு கலந்துரையாடல்களில் பங்குபற்றியிருந்த குறிப்பிட்ட எண்ணிக்கையிலான முன்னாள் பெண் போராளிகள், பெண்களைப் பாரபட்சப்படுத்துகின்ற எவ்வித சமூக நியமங்களும் யுத்த காலப்பகுதியில் நடைமுறையில் காணப்படவில்லை எனக் குறிப்பிட்டிருந்தனர்.[103] குறிப்பாக, யுத்த போராளிகளாக பெண்களும் இணைத்துக் கொள்ளப்பட்டமையினூடாக, பெண் மென்மையானவள், பயந்த சுபாவமுடையவள், பலவீனமானவள் போன்ற குணவியல்புகளைக் கொண்டு பெண்களை மதிப்பிடுகின்ற கலாசாரம் முற்றாக ஒழிந்து போயிருந்தது. பெண்களும் ஆண்களுக்கு நிகராக கனரக வாகனங்களை ஓட்டினார்கள், துப்பாக்கிப் பயிற்சி பெற்றார்கள் மற்றும் இறுதி யுத்தத்திலும் பங்கேற்றார்கள்.[104]

தொன்றுதொட்டு, பெண்களைக் கலாசாரக் காப்பாளர்களாகவும் இல்லத்தரசிகளாகவும் மட்டுமே பார்த்துவந்த தமிழ்ச்சமூகம் யுத்த காலப்பகுதியின்போது, அவர்களை துப்பாக்கியேந்தி யுத்தம் புரிகின்ற போராளிகளாக ஏற்றுக் கொண்டது. இச்சமூக மாற்றம் குறுகியதொரு காலப்பகுதியிலேயே நிகழ்ந்தது. இது தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர், **கலாநிதி பகீரதி ஜீவேஸ்வரா ராசனன்** பின்வருமாறு குறிப்பிட்டார்:

*''அசாதாரண சூழலொன்றுக்கு முகங்கொடுக்க நேர்கையில் மனிதர்கள் தப்பிப்பிழைத்து வாழ்கின்ற பொறிமுறைகளைக் கைக்கொள்வார்கள்.''*

யுத்தம் நிலவுகின்ற ஒரு அசாதாரண சூழலில் தேவைகருதி பெண்கள் போராளிகளாக இணைத்துக் கொள்ளப்பட்டனர். அதனைத்தொடர்ந்து, பெண்களை வீட்டிற்குள் முடக்குகின்ற அல்லது அவர்களுடைய செயற்திறன்களை முடக்குகின்ற சமூக நியமங்களும் சமூகத்திலிருந்து வழக்கொழிந்தன. யுத்தகாலப் பகுதியில் பொது மக்கள் பாலின பேதமின்றி அனைத்து போராளிகளுக்கும் தகுந்த மரியாதை அளித்தனரென்பதுடன் அவர்களை மாவீரர்களாகப் போற்றினார்கள்.[105] பெண் போராளிகள் உட்பட அனைத்து போராளிகளுக்கும் பொது மக்களே உணவளித்தனர். கலப்புத்திருமணம் மற்றும் இரண்டாம் திருமணம் என்பனவற்றை விமர்சனங்களின்றி அங்கீகரித்துக் கொண்டனர்.[106] அதற்கமைய, யுத்தகாலத்தின்போது, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு சமூக மாற்றத்திற்கான கூட்டான நிறுவனமொன்றாக செயற்பட்டதுடன், முன்னாள் பெண் போராளிகள் சமூக மாற்றத்திற்கான முகவர்களாக செயற்பட்டிருந்தனர்.[107]

---

**102** 21.03.2021 அன்று கிளிநொச்சி கனகபுரத்திலுள்ள கிராமிய அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

**103** 21.03.2021 அன்று கிளிநொச்சி கனகபுரத்திலுள்ள கிராமிய அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இடம்பெற்றது

**104** வெற்றிச்செல்வி, 'ஈழப்போரின் இறுதி நாட்கள்' (மலர்முகம், 2012)

**105** வெற்றிச்செல்வி, 'ஈழப்போரின் இறுதி நாட்கள்' (மலர்முகம், 2012)

**106** முன்னாள் பெண் போராளிகளுடனான கலந்துரையாடல், 20.03.2021 அன்று யாழ்ப்பாணத்திலுள்ள சர்வோதய மண்டபத்தில் இடம்பெற்றது.

**107** **கலாநிதி பகீரதி ஜீவேஸ்வரா ராசனன்** உடனான நேர்காணல், 07.02.2021 அன்று Zoom தளம் வாயிலாக இடம்பெற்றது.

## 5.2.3 யுத்தத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் சமூக நியமங்களின் போக்கில் ஏற்பட்ட மாற்றம்

*யுத்தகாலத்தின்போது பால்நிலை சமத்துவம் தொடர்பில் ஆரோக்கியமான பல மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும், இவை தற்காலிகப் பிரதிபலிப்புக்களாகவே அமைந்தன. அசாதாரண சூழலொன்றில் தப்பிப்பிழைத்து வாழ்வதற்கான உத்தியொன்றாகவே சமூகம் பால்நிலை சமத்துவத்தினை அங்கீகரித்து, பெண்களுக்கு சம உரிமைகளை வழங்கியிருந்தது. யுத்தத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் சமூகம் சாதாரண சூழலுக்குத் திரும்பியபோது, சமூகத்தில் ஆரம்பத்தில் நிலைத்திருந்த பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் மீண்டும் வலுப்பெறத் தொடங்கின. அதன் ஒரு விளைவாக, முன்னாள் பெண் போராளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் அளவு அல்லது மதிப்பு குறைக்கப்பட்டு, அவர்களை விமர்சிக்கின்ற ஒரு போக்கு ஏற்பட்டது.*[108]

*இதனை அறிதிற உளவியல்* (Cognitive psychology) *பற்றிய கருத்தேற்பினூடாக விளக்கலாம். மனித மூளையின் வன்பகுதியில் பதிந்த விடயங்களை/ ஞாபகங்களை/ சிந்தனைகளை மாற்றுவது மிகக் கடினமாகுமென்பதே இக்கருத்தேற்பாகும். அதற்கமைய, அசாதாரண சூழலிலிருந்து சாதாரண சூழலிற்குத் திரும்பிய மக்கள், சிறுவயது முதல் தாங்கள் கடைப்பிடித்து வந்த நியமங்கள் மற்றும் நடைமுறைகளை மீண்டும் பின்பற்றத் தொடங்கினர்.*[109]

*யுத்தத்தின் பின்னரான சூழ்நிலையில் பால்நிலை சமத்துவத்திற்கு ஏற்பட்ட மற்றுமொரு சவால், யுத்தத்தினால் பல பெண்கள்/ பெண் பிள்ளைகள் உடல் இயலாமைகளுடையவர்களாக ஆக்கப்பட்டமை ஆகும். 'பெண்' என்ற தங்களது 'பாலின' அடையாளத்தின் காரணமாக பாரபட்சங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருந்த பெண்கள், 'இயலாமை' என்ற புதிய அடையாளத்தினாலும் பல்வேறு பாரபட்சங்களை எதிர்கொண்டு வருகின்றனர். 'பெண்' மற்றும் 'இயலாமை' ஆகிய இரு அடையாளங்களும் இடைவெட்டிக்கொள்கின்றபோது, அதன்விளைவாக, பெண்கள் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாய் ஆகின்றனர். இயலாமைகளைக் கொண்டுள்ள பெண்கள் தொடர்பில் சமூக ஒதுக்கம் காணப்படவில்லை என்பதனை அப்பெண்கள் குழுவினர் உறுதிப்படுத்தியிருந்தபோதும், ஏனைய பெண்கள் அனுபவிக்கின்ற சாதாரண உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைத் தம்மால் அனுபவிக்க முடிவதில்லை என்று கூறியிருந்தனர்.*[110] *உதாரணமாக, பொது இடங்கள் மற்றும் கட்டிடங்களை அணுகுகின்ற வசதி இல்லாமை, அரச கட்டிடங்களில் மின்தூக்கி இல்லாமை போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் தங்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைக் கேள்விக்குட்படுத்துவதாகக் கூறியிருந்தனர்.*[111]

*சில சந்தர்ப்பங்களில், யுத்தத்தின் விளைவுகள் சில பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களின் இருப்பிற்குப் பொருத்தமான சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளமையினைக் காண முடிகின்றது. குறிப்பாக, பெண்கள் இரவு நேரங்களில் தனியாகச் செல்லக் கூடாது மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு செல்லக் கூடாது போன்ற சமூக நியமங்களைக் குறிப்பிட முடியும். யுத்தகாலத்தின்போதும் அதற்கு பிற்பட்ட காலத்திலும், இராணுவத்தினரால் மற்றும் பொலிஸாரினால் வட மாகாண மக்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் மற்றும் அவர்கள் தொடர்பில் நிலைத்திருக்கின்ற பயம் என்பன காரணமாகவே இந்நியமங்கள் பின்பற்றப்படுவதாகப் பங்குபற்றுநர்கள் தெரிவித்திருந்தனர்.*[112] *வடக்கில் தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற இராணுவமயமாக்கமும் பாதுகாப்பு தொடர்பான கரிசனையினை எழுப்பியுள்ளது. கலாசாரத்தின் அடிப்படையில் சொல்லப்படினும் அல்லது பாதுகாப்பு கரிசனைகளுக்காக சொல்லப்படினும், பெண்கள் இரவு நேரங்களில் தனியாகச் செல்லக் கூடாது மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு செல்லக் கூடாது போன்ற நியதிகள் பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மட்டுப்படுத்துகின்றன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.*

---

**108** *முன்னாள் பெண் போராளிகளுடனான கலந்துரையாடல், 20.03.2021 அன்று யாழ்ப்பாணத்திலுள்ள சர்வோதய மண்டபத்தில் இடம்பெற்றது.*

**109** ***கலாநிதி பகீரதி ஜீவேஸ்வரா ராசனன்*** *உடனான நேர்காணல், 07.02.2021 அன்று* Zoom *தளம் வாயிலாக இடம்பெற்றது.*

**110** *இயலாமைகளை உடைய பெண்களுடனான கலந்துரையாடல், 20.03.2021 அன்று யாழ்ப்பாணத்திலுள்ள சர்வோதய மண்டபத்தில் இடம்பெற்றது.*

**111** *இயலாமைகளை உடைய பெண்களுடனான கலந்துரையாடல், 21.03.2021 அன்று கிளிநொச்சி கனகபுரத்திலுள்ள கிராமிய அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.*

**112** *தரவுகளைச் சரிபார்க்கின்ற செயலமர்வு, 04.08.2021 மற்றும் 05.08.2021 ஆகிய தினங்களில்* Zoom *தளம் வாயிலாக இடம்பெற்றது.*

எவ்வாறெனினும், யுத்தத்தின் விளைவுகள் சமுதாயத்தில் சமூக நியமங்கள் தொடர்பாக சில ஆரோக்கியமான நிலைமாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளது. அவற்றுள் மிகப் பிரதானமான ஒன்று, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு கிடைக்கப்பெற்றிருக்கும் அங்கீகாரம்தான். ஆண்களே குடும்பத் தலைவராக இருக்க வேண்டும், ஆண்களே பிரதான வருமானம் ஈட்டுபவராக இருக்க வேண்டும், பெண்கள் கடினமான வேலைகளில் அல்லது வியாபாரங்களில் ஈடுபடக்கூடாது போன்ற சமூக நியமங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தொடர்பில் தளர்த்தப்பட்டுள்ளமையினைக் காணமுடிகின்றது. இச்சமூக நியமங்களைவிட்டு பிறழ்வடைவதற்கான விதிவிலக்கான சந்தர்ப்பமாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுகின்றன. இதற்கான காரணம், 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது அதிகளவான ஆண்கள் கொல்லப்பட்டமை மற்றும் காணாமலாக்கப்பட்டமையும், 2009 இற்கு பிற்பட்ட வருடங்களிலும் காணாமலாக்கப்படுதல்களும் வெள்ளைவேன் கடத்தல்களும் தொடர்ந்தமையுமே ஆகும். நீதிக்கு புறம்பான இக்கொலைகள் மற்றும் காணாமலாக்கப்படுதல்கள், பல பெண்கள் தங்களுடைய கணவன்மார்களை இழப்பதற்கு வழிவகுத்தது. அதுவரைகாலமும், கணவனின் வருமானத்தை நம்பி, கவனிப்பு பொருளாதாரத்தை மட்டுமே நடைமுறைப்படுத்திய பெண்கள், வருமானம் ஈட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டனர். இது அவர்களுடைய பொருளாதார சுயாதீனத்தை உறுதிப்படுத்தியது. குடும்பத்தின் தலைமைப்பதவி மற்றும் பொருளாதார சுயாதீனம் என்பன இப்பெண்களுக்கான அதிகாரத்தை வழங்கியது. இவ்வாறாக, யுத்தத்தின் பின்னரான நிலைமாற்றத்தில், சமூகத்தில் நிலவிய அதிகார இயங்காற்றலில் ஒரு ஆரோக்கியமான மாற்றம் ஏற்பட்டது.

யுத்தத்திற்கு பின்னரான நிலைமாற்றத்தில் ஏற்பட்ட மற்றுமொரு ஆரோக்கியமான மாற்றம், கணவனை இழந்த பெண்களை அபசகுனமாகக் கருதுகின்ற பழக்கம் குறைந்தமை ஆகும். முன்னைய அத்தியாயத்தில், வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற சமூக நியமங்களை நிலைத்திருக்கின்ற அளவிற்கேற்ப தரவரிசைப்படுத்தியபோது 'கணவனை இழந்த பெண்களை அபசகுனமாகக் கருதுகின்ற நியமம்' 20 ஆவது இடத்தினைப் பிடித்திருந்தது. யுத்தத்தினைத் தொடர்ந்து, முன்னெப்போதுமில்லாதவகையில் கணவனை இழந்த பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும், அத்துன்பத்தின் வலியினைப் பெரும்பான்மையானோர் ஒரே தருணத்தில் உணரக்கூடியதாக இருந்தமையும், இச்சமூக நியமத்தின் நிலைத்திருப்பினை கேள்விக்குறியாக்கியுள்ளது எனலாம். எவ்வாறெனினும், கணவனை இழந்த பெண்கள் தாமாகவே சுப காரியங்களிலிருந்து விலகிக் கொள்கின்றப் போக்கினை மிக அதிகமாகக் காணமுடிந்தது. கணவனை இழந்த பெண்களுடனான குவிமையக் குழுக் கலந்துரையாடல்களில் கலந்துகொண்ட பெரும்பான்மையான பெண்கள், தாங்களாகவே சுப காரியங்களிலிருந்து ஒதுங்கிக் கொள்வதாகக் கூறியிருந்தனர்.[113]

**''என்னுடைய மகளுக்கு தாலி கட்டப்பட்ட நேரத்தில் நான் மண்டபத்தில் இருக்கவில்லை. மகளுடைய வாழ்வில் எந்தப் பிரச்சினையும் வரக்கூடாது என நானாகவே ஒதுங்கிக் கொண்டேன்.''**- பங்குபற்றுநர், கணவனை இழந்த பெண்களுடனான குவிமையக் குழுக் கலந்துரையாடல்[114]

அத்துடன், யுத்தத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலையீடுகள் மற்றும் சேவைகள் வட மாகாணத்தில் அதிகரித்தமையானது, பெண்களுடைய திறன்கள் மற்றும் தலைமைத்துவப் பண்புகளில் ஆரோக்கியமான பல மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன், அரச சார்பற்ற நிறுவனங்களினூடாகப் பெண்களுக்கு வழங்கப்பட்ட சுய வாழ்வாதாரத் திட்டங்கள் மற்றும் தொழிற்பயிற்சிகள் என்பன அவர்களுடைய பொருளாதார சுயாதீனத்தினை உறுதிப்படுத்தியுள்ளது. அரச சார்பற்ற அமைப்புக்களினால் ஏற்படுத்தப்பட்ட இத்தகைய ஆரோக்கியமான மாற்றங்கள் பெண்களுக்கெதிரான பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை எதிர்த்து நிற்பதற்கான சக்தியினை பெண்களுக்கு அளித்துள்ளன.

---

113 கணவனை இழந்த பெண்களுடனான கலந்துரையாடல், 21.03.2021 அன்று கிளிநொச்சி கனகபுரத்திலுள்ள கிராமிய அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

114 கணவனை இழந்த பெண்களுடனான கலந்துரையாடல், 20.03.2021 அன்று யாழ்ப்பாணத்திலுள்ள சர்வோதய மண்டபத்தில் இடம்பெற்றது.

**பிரதான முடிவுகள்**

- *யுத்தகாலப்பகுதியில் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் சமூகத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தன. பால்நிலை சமத்துவம் உயரிய அளவில் பேணப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தில் பெண்களை இணைத்துக்கொள்ள வேண்டிய தேவையே இப்பால்நிலை சமத்துவத்திற்கான அடிப்படைப் பின்புலமாக அமைந்திருந்தது.*

- *பெரும்பாலும் மக்கள் அசாதாரண சூழல்களில் சமூக நியமங்களிலிருந்து பிறழ்வடைகின்றார்கள். சமூக நியமங்களிலிருந்து பிறழ்வடைதலானது தப்பிப்பிழைத்து வாழ்வதற்கான உத்தியொன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.*

- *யுத்தம் மற்றும் அதன் விளைவுகள் என்பன, கணவனை இழந்த பெண்கள் தொடர்பாக சமூகத்தில் காணப்பட்ட நியமங்களை (விதவைகளை அபசகுணமாகக் கருதுதல், சுப காரியங்களிலிருந்து ஒதுக்கி வைத்தல் போன்றன) சமூகத்திலிருந்து குறிப்பிட்ட அளவிற்கு இல்லாதொழித்துள்ளது.*

- *குடும்பத்தின் தலைமைப் பொறுப்பு ஆண்களிடமே காணப்பட வேண்டுமென்ற சமூக நியமமும் யுத்தத்தின் விளைவொன்றாகியுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் தோற்றத்தினால் வழக்கொழிந்து போயுள்ளது.*

- *யுத்தத்தின் விளைவுகளால் ஏற்பட்ட மற்றுமொரு ஆரோக்கியமான மாற்றம் சிவில் சமூக அமைப்புக்களின் தலையீடும், அதனூடாகப் பெண்கள் பொருளாதாரரீதியாக மற்றும் தகைமைரீதியாக வலுவூட்டப்பட்டமையும் ஆகும். பெண்களுடைய வலுவூட்டல் பாரபட்சமிக்க சமூக நியமங்களை எதிர்ப்பதற்கான அவர்களது ஆற்றலையும் வலுப்படுத்தியுள்ளது. எவ்வாறெனினும், யுத்தத்தின் விளைவுகளினால் இயலாமைகளைக் கொண்டுள்ள பெண்களின் எண்ணிக்கை வடமாகாணத்தில் அதிகரிக்கப்பட்டமை பால்நிலை சமத்துவத்திற்கு விடுக்கப்பட்ட மற்றுமொரு சவாலாகும்.*

- *இயலாமையின் அடிப்படையில் பெண்களைப் பாரபட்சப்படுத்துகின்ற சமூக நியமங்கள் நடைமுறையில் இல்லாதபோதும், அவர்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அனுபவிப்பதற்கான முறையான வசதிகள் செய்துக் கொடுக்கப்படாமை அவர்கள் தங்களது உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை இழப்பதற்கு வழிவகுக்கின்றது.*

- *யுத்தத்தின் விளைவுகள் சமூக நியமங்கள் உள்ளடங்கலாக சமூகத்தின் கட்டமைப்பில் பல பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தன. ஆகவே, யுத்தத்தின்பின் சமாதானத்தை நோக்கி நகர்கின்ற இந்நிலைமாற்றக் காலப்பகுதியில் சமூகம் தனது கட்டமைப்பினை மீள வடிவமைத்துக் கொள்ள முற்படுகின்றது. சமூகக் கட்டமைப்பின் மீளுருவாக்கம் இடம்பெறுகின்ற இக்காலப்பகுதியில் முன்னெடுக்கப்படுகின்ற பால்நிலை பாரபட்சங்களுக்கெதிரான நியாயப் பிரச்சாரங்கள் சமூகக் கட்டமைப்பின் மீளுருவாக்கத்தில் ஆரோக்கியமான முறையில் செல்வாக்கு செலுத்தும்.*

# அத்தியாயம் 6

## 6 முடிவும் பரிந்துரைகளும்

### 6.1 முடிவு

பால்நிலை சமத்துவமின்மை என்பது நீண்ட காலமாக இலங்கை முகங்கொடுத்துவருகின்ற சவாலாகும். பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களின் இருப்பானது, பால்நிலை சமத்துவமின்மைக்கான முக்கிய காரணங்களுள் ஒன்றாகும். சமூக நியமங்களின் தன்மை காரணமாக அவற்றை அவதானித்தல் மற்றும் மதிப்பிடுதல் என்பன சிக்கலான செயற்பாடுகளாகின்றன. எவ்வாறெனினும், பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு, சமூகத்தில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை நிலைமாற்றம் செய்வது அத்தியாவசியமானதாகும். அவ்வகையில், முப்பது வருட காலமாக யுத்தம் இடம்பெற்ற வட மாகாணத்தில் இச்சமூக நியமங்களை நிலைமாற்றம் செய்வதற்கானத் தேவை அதிகரித்தளவில் காணப்படுகின்றது. யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், இன்று வரையில் சமூகத்தில் நிலைத்திருக்கின்ற யுத்தத்தின் விளைவுகள் மற்றும் பாதிப்புக்கள் பெண்களுடைய வாழ்க்கையிலும், அவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களிலும் பாரியளவானத் தாக்கங்களைச் செலுத்துகின்றமையே இதற்கான காரணமாகும். அவ்வகையில், இலங்கையில் வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற பிரதான பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை அடையாளங்காணுதல், அவற்றை மதிப்பீடு செய்தல், அவற்றினால் பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் ஏற்படுத்தப்படுகின்ற தாக்கத்தினை அறிந்து கொள்ளுதல் என்பன இந்த ஆய்வின் பிரதான குறிக்கோள்களாக அமைந்துள்ளன. அத்துடன், பால்நிலை பாரபட்சமிக்க தேசிய எடுத்துரைப்புக்களை அடையாளங்காணுதல் மற்றும் யுத்தத்தின் விளைவினால் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களின் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து கொள்ளுதல் என்பனவும் இந்த ஆய்வின் குறிக்கோள்களாக அமைந்துள்ளன.

ஆய்விலிருந்து பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில், வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க பத்து பிரதான சமூக நியமங்கள் அடையாளங் காணப்பட்டதுடன் அவை பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் செல்வாக்கு செலுத்துகின்ற விதமும் தர்க்கரீதியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அத்தகைய பிரதான சமூக நியமங்கள் பெரும்பாலும் பெண்களுடைய வகிபாகத்தினை குடும்பச் சூழலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துவனவாகவும், 'நல்ல பெண்' மற்றும் 'கற்பு' ஆகிய கருத்தேற்புக்களுடன் தொடர்புறுவனவாகவும் அமைந்திருந்தன. அதேபோல, பால்நிலை பாரபட்சத்தினை ஊக்குவிக்கின்ற பாடசாலை பாடநூல்கள், விளம்பரங்கள் மற்றும் செய்திப் பத்திரிகை ஆக்கங்கள் போன்ற தேசிய எடுத்துரைப்புக்கள் தொடர்பிலும் இந்த ஆய்வில் ஆராயப்பட்டிருந்தன. யுத்தகாலத்தின்போதும், யுத்தத்தின் பின்னரான சூழ்நிலையிலும் இச்சமூக நியமங்களின் போக்கு மாற்றமடைந்த விதம் பற்றியும் இந்த ஆய்வில் ஆராயப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் இலக்கிய மீளாய்வுப் பகுதியானது, குறித்த விடயப்பொருள் தொடர்பான தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச ஆய்வுகள் பற்றிய விரிவான பகுப்பாய்வொன்றினை உள்ளடக்கியுள்ளது. இலங்கையில், யுத்தம் இடம்பெற்ற சூழமைவில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களைப் பங்குபற்றுகை ஆய்வு முறையினூடாக விரிவாக ஆராய்ந்துள்ள ஆய்வென்றரீதியில் இந்த ஆய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த ஆய்வின் மூலமாகக் கண்டறியப்பட்டுள்ள தரவுகளும், அவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ள பிரதான முடிவுகளும் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை நிலைமாற்றம் செய்வதற்கான வினைத்திறனானத் தலையீடுகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு உதவும்.

## 6.2 பரிந்துந்துரைகள்

இந்த ஆய்வின் முடிவுகளாவன வட மாகாணத்தில் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் குறிப்பிடத்தக்களவில் நிலைத்திருக்கின்றன என்பதனையும் அவை பெண்கள் அவர்களது உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அனுபவிப்பதில் எதிர்மறையாகத் தாக்கம் செலுத்துகின்றன என்பதனையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. சமுதாயத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள பால்நிலை பாரபட்ச மிக்க இச்சமூக நியமங்கள் பால்நிலை சமத்துவத்திற்கான பெரிய சவாலாக அமைந்துள்ளன. இச்ச வாலை வெற்றிகரமாக எதிர்கொண்டு பெண் - ஆண் சமத்துவத்தினை சமூகத்தில் உறுதி செய்ய வேண்டுமாயின், சமுதாய உறுப்பினர்களிடையே காணப்படும் மரபு சார்ந்த வாழ்க்கைக் கண்ணோட்டம் மாற வேண்டும். மரபுசார் அம்சங்கள் அகற்றப்படுவதனூடாக மாத்திரமே மக்களுடைய நடத்தை மற்றும் மனோபாவத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். விதிமுறைக்குட்பட்ட மரபுசார்ந்த வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுகின்றபோது, அதன் விளைவாக பெண் - ஆண் சமத்துவம் உறுதி செய்யப்படும். எவ்வாறெனினும், இத்தகையதொரு நிலைமாற்றம் ஒரே இரவில் நடந்து விடக்கூடியதல்ல. இந்நிலைமாற்றத்தினை உறுதிப்படுத்துவதற்கு நன்கு திட்டமிடப்பட்ட நீண்ட காலத் தலையீடுகள் அவசியமாகும். அத்தகைய சில தலையீடுகள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன:

### 6.2.1 சட்ட சீர்திருத்தத்திற்கானப் பரிந்துந்துரைகள்

சட்டங்கள் மற்றும் சமூக நியமங்கள் என்பவற்றுக்கிடையில் நெருக்கமானத் தொடர்புகள் காணப்படுகின்றன என்பதுடன் அவை ஒன்றிலொன்று செல்வாக்கு செலுத்துவதாக அமைந்துள்ளன. பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை ஆதரிக்கின்றவகையில் காணப்படுகின்ற சட்டங்கள் அல்லது பால்நிலை பாரபட்சங்களை தோற்றுவிக்கின்ற சட்டங்கள், பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களின் வலுத்தன்மையினை மேலும் உறுதியானதாக்கும். ஆகவே, இத்தகைய சட்டங்கள் திருத்தப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும். அவ்வாறு திருத்தப்பட வேண்டிய சில சட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

- *தண்டனை சட்டக் கோவையிலுள்ள பாலியல் வன்புணர்வு தொடர்பான ஏற்பாடுகளைத் திருத்துதல்*
  - திருமணத்திற்குள்ளான பாலியல் வன்புணர்வினை குற்றமொன்றாக உள்ளடக்குதல்
- *சான்றுக் கட்டளைச் சட்டத்திலுள்ள பால்நிலை பாரபட்சமிக்க ஏற்பாடுகளைத் திருத்துதல்*
  - சான்றுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 155 (ஈ) இல், ''பாலியல் வன்புணர்வு செய்ததாக அல்லது செய்ய எத்தனித்ததாக ஒருவருக்கெதிராக வழக்குத் தொடரப்படும்பொழுது வழக்குத் தொடர்ந்தவள் பொதுவாகவே ஒழுக்கம் கெட்டவளாகக் காணப்படலாம்'' என கூறுகின்றது. இப்பிரிவு, 'பாலியல் வன்புணர்வு' தொடர்பாக நிலைத்திருக்கின்ற சமூக நியமங்களின் நிலைத் திருப்பிற்கும், பாலியல் வன்புணர்வு தொடர்பில் காணப்படுகின்ற சமூகக் களங்கத்திற்கும் வழிகோலுவதாய் அமைந்துள்ளது. ஆகவே, இப்பிரிவு நீக்கப்படுதல் வேண்டும்.
- *தேசவழமைச் சட்டத்திலுள்ள பால்நிலை பாரபட்சமிக்க ஏற்பாடுகளை நீக்குதல்*
  - தேசவழமைச் சட்டமானது பெண்களுடைய ஆதன உரிமை தொடர்பில் பாரபட்சமான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. இவ் ஏற்பாடுகள், பெண்கள் தங்களது அசையாத ஆதனங்களை விற்பதற்கு கணவனின் எழுத்துமூல சம்மதத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென தேவைப்படுத்துகின்றன. இவ் ஏற்பாடுகள் பெண்களின் பொருளாதார சுயாதீனத்திற்கானத் தடையாக அமைவதுடன், மிக நெருக்கமாக சமூக நியமங்களுடன் தொடர்புற்றுள்ளன.
- *நடைமுறையிலுள்ள ஏனைய சட்டங்கள் மற்றும் கொள்கைகளிலுள்ள பால்நிலை பாரபட்சமிக்க ஏற்பாடுகளை நீக்குதல்/ திருத்துதல்*
  - உதாரணமாக, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டம் மற்றும் 1935 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்

- பாலியல் வன்புணர்வு தொடர்பான வழக்கு விசாரணைக்கான நடபடிமுறைகளை (Proceedings) பால்நிலைத் துலங்கல் மிக்கதாக மாற்றியமைக்கும் பொருட்டு, அது தொடர்பாகப் புதிய சட்டங்களை உருவாக்குதல்.

### 6.2.2 நீதித்துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களுக்கானப் பரிந்துரைகள்

- பெண்களுக்கெதிரான பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கின்றபோது தனிப்பட்ட விளக்கங்களை அனுமதித்தல் (மூடிய நீதிமன்ற அறையில் வழக்கினை விசாரித்தல்).

- பெண்களுக்கெதிரான பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான தனியான விசேட நீதிமன்றமொன்றினை ஸ்தாபித்தல்.

- பெண்களுக்கெதிரான பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பான வழக்குகளின் தீர்ப்புக்களில் பாதிக்கப்பட்டவரின் பெயர் மற்றும் ஏனைய தனிப்பட்ட விபரங்களை உள்ளடக்குதலைத் தவிர்த்தல்.

### 6.1.3 அரச செயற்பாட்டாளர்களுக்கானப் பரிந்துரைகள்

- பால்நிலை பாரபட்சமிக்க பிரதிகள், படங்கள், கதைகள் மற்றும் எடுத்துக்காட்டுக்களை நீக்கும்பொருட்டு, முதலாம் வகுப்பு தொடக்கம் உயர்நிலை வகுப்பு வரையில் உள்ள அனைத்துப் பாட நூல்களையும் மீளாய்வு செய்து, பால்நிலை பாரபட்சமிக்க அம்சங்களை நீக்குதல். பாடநூல்களில் பால்நிலை சமத்துவத்தினை உறுதி செய்கின்ற அம்சங்களை உள்ளடக்குதல்.

- பாடசாலைகளில் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் ஊக்குவிக்கப்படுகின்றமையினைத் தடுக்கும்பொருட்டு, ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் ஏனைய கல்வி அதிகாரிகளுக்கு பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் மற்றும் அவற்றின் தாக்கம் தொடர்பான விசேட பயிற்சிகளை அளித்தல்.

- பெண்கள் பொருளாதாரரீதியாக சுயாதீனமுடையவர்களாய் இருக்க வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் பெண்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் குறித்த விடயங்களைப் பாடசாலைப் பாடத்திட்டங்களில் உட்சேர்த்துக் கொள்தல்.

- பாடசாலைகளில் பெண்களுக்கான தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்வதற்கான புதிய திட்டங்களை வகுத்து அமுல்படுத்தல்.

- சமையல், வீட்டு வேலைகள் போன்ற விடயப்பொருட்களை உள்ளடக்கியுள்ள செயன்முறைத் தொழிநுட்பவியல் பாடத்தினை, தரம் ஆறிற்குப் பிறகான ஏதேனுமொரு தரத்தில் கட்டாயப் பாடமொன்றாக்குதல்.

- உடல்ரீதியான வன்முறைகள் தவிர்க்கப்பட வேண்டியவை மற்றும் எதிர்க்கப்பட வேண்டியவை என்ற கருத்தினைப் பாடசாலை மாணவர்களிடையே வேரூன்றச்செய்யும்பொருட்டு, வன்முறைகளுக்கெதிராக குரல் கொடுப்பதற்குப் பாடசாலை மாணவர்களை பயிற்றுவித்தல்.

  - அண்மையில் இலங்கையில் அதிக கவனத்தினை ஈர்த்திருந்த ஹிஷாலினியின் மரணத்தினைத் தொடர்ந்து (ஜூலை 15, 2021), அவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டமையினை எதிர்த்து நாடளாவியரீதியில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, குறித்த ஒரு பாடசாலையின் மாணவர்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்திருந்தனர். **‘பாடசாலைப் பருவம் முதலே வன்முறைகளுக்கெதிராகக் குரல் கொடுப்பதற்கு மாணவர்களைப் பழக்க வேண்டுமென்பதற்காக மாணவர்கள் தலைமையிலான ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டதாக’** அப்பாடசாலை அதிபர் தெரிவித்திருந்தார். இது சிறந்ததொரு முன்னுதாரணமாகும்.

- அனைத்து அரசாங்க அதிகாரிகளுக்கும் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பான விழிப்புணர்வினை வழங்குதல். அரசாங்க அதிகாரிகள் தங்களுடைய பணிகளில் பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துகின்றனர் என்பதனைக் கண்காணிப்பதற்கான பொறிமுறையொன்றினை நிறுவனமட்டத்தில் ஸ்தாபித்தல்.

- தேசிய செயற்பாட்டுத் திட்டங்களை ஆக்குகின்றபோது, பால்நிலை சார்ந்த அம்சங்களைக் கவனத்திற்கெடுத்தல் மற்றும் அனைத்துச் செயற்பாடுகளிலும் பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்தல்.

### 6.2.4 சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கானப் பரிந்துரைகள்

- குடும்ப உறவிற்குள் பால்நிலை சமத்துவத்தினை உறுதி செய்து கொள்வது தொடர்பான விழிப்புணர்வு பயிலமர்வுகளை நடத்துதல். குறிப்பாக, 30 - 50 வரையான வயதுக் குழுவினைச் சேர்ந்த தம்பதிகளுக்கு இப்பயிலமர்வுகளை நடத்துதல்.

- பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களினால் பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக பரந்தளவிலான கருத்தாடல்கள், கருத்தரங்குகள் மற்றும் ஆதரித்து வாதாடுவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளல்.

- பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள், அவற்றின் விளைவுகள் தொடர்பான வீதி நாடகங்கள், திரைப்படங்களைத் தயாரித்தல் மற்றும் பொது அரங்குகளில் அவற்றைக் காட்சிப்படுத்தல்.

- பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களினால் பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகப் பதிவு செய்வதற்கும், அது தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் சமூக ஊடகத் தளங்களைப் பயன்படுத்தல்.

- பெண்களுடைய பொருளாதார சுயாதீனத்தை உறுதிப்படுத்தும்பொருட்டு, அவர்களுக்கான தொழில் முயற்சிகளை, சுய தொழில் வாய்ப்புக்களை சாத்தியப்படுத்தல்.

- விவசாய மாவட்டங்களில் ஆண்களும் பெண்களும் ஒரேமாதிரியான வேலைகளை செய்யும்போது அவர்களுக்கு சம அளவான ஊதியம் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தும்பொருட்டு, ஆதரித்து வாதாடுகின்ற முன்னெடுப்பொன்றினை மேற்கொள்ளல்.

- சம அளவான ஊதியத்திற்கான பெண்களது உரிமை உள்ளடங்கலாக பெண்களின் தொழில் உரிமை தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.

- ஆண்கள் சமையல் வேலைகள் மற்றும் பிள்ளைப் பராமரிப்பு வேலைகளில் ஈடுபடுவதனை ஊக்குவிக்கின்றதான புத்தாக்கமான உத்திகளை அடையாளங்கண்டு நடைமுறைப்படுத்தல். உதாரணமாக, ஆண்கள் சமைப்பது போன்ற புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பதிவிடுகின்ற ஒரு சமூக ஊடக பிரச்சாரமொன்றினை முன்னெடுக்கலாம்.

**மேலதிக ஆய்விற்கானப் பரிந்துரைகள்**

- வீட்டு வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த பெண்களுடனான கலந்துரையாடலின்போது, காதி நீதிமன்றங்களில் பின்பற்றப்படுகின்ற நடைமுறைகளினால் பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் என்பன பாரியளவில் மீறப்படுவதாகக் குறிப்பிடப்பட்டது. காதி நீதிமன்றங்கள் அரச நிறுவனங்களாக இருக்கின்றபோதிலும், அந்நீதிமன்றங்களில் ஆண்கள் மாத்திரமே நீதிபதியாக இருக்க முடியும் என்ற நடைமுறை காணப்படுகின்றது. இத்தகைய பின்னணியில், காதி நீதிபதிகள் ஆண்களுக்கு பக்கச் சார்பாக நடந்து கொள்வதாகப் பங்குபற்றுநர்கள் கூறியிருந்தனர். இது பற்றிய நிலைப்பாட்டினை அறிந்துக் கொள்வதற்கான குறிப்பான கேள்விகள் வினாக்கொத்தில் உள்ளடக்கப்பட்டபோதும், காதி நீதிமன்றங்களில் பால்நிலை பாரபட்சமிக்க நடைமுறைகள் காணப்படுவதாகக் குறைந்தளவான ஆய்வுப் பங்குபற்றுநர்களே பதிலளித்திருந்தனர். எவ்வாறெனினும், பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பொருத்தமான அதிகாரிகளுடனான மேலதிக மற்றும் விரிவான கலந்துரையாடல்களினூடாக இதன் உண்மைத்தன்மை உறுதி செய்யப்படுதல் வேண்டும். இந்த ஆய்வின் நோக்கம், அதிகமாக நிலைத்துள்ள சமூக நியமங்களை அடையாளம் காணுதலே என்பதாலும், எந்தவொரு குறிப்பான சமூக நடைமுறை தொடர்பிலும் ஆழமாக ஆராய்வதற்கானப் பரப்பு இந்த ஆய்வுக் கட்டமைப்பிற்குள் காணப்படாமையினாலும், இதனைச் செய்தல் இந்த ஆய்வில் சாத்தியமானதாய் அமையவில்லை. எவ்வாறாயினும் பாதிக்கப்பட்ட பெண்களுடனான கலந்துரையாடல்களில் பகிரப்பட்ட விடயங்கள் முஸ்லிம் சமுதாயத்தில் நிலவுகின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை மட்டும் முன்னிலைப்படுத்தி ஆய்வு செய்வதற்கானத் தேவை இருப்பதனை வலியுறுத்துகின்றன.

  இந்த ஆய்விற்கானத் தரவுகளைத் திரட்டுவதற்காக முதனிலை மற்றும் இரண்டாம்நிலை தரவுகளைச் சேகரித்தபோது பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களின் இருப்பு பெருந்தோட்டப் பகுதிகளில் அதிகளவில் காணப்படுகின்றமையினை அறியக் கூடியதாக இருந்தது. குறிப்பாக, இப்பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் பெண் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் அதிகளவானத் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. பெருந்தோட்டப் பகுதிகளில் நிலைத்திருக்கின்ற இப்பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள், கல்வியறிவின்மை, வறுமை மற்றும் வீட்டு வசதியின்மை போன்ற ஏனைய காரணிகளுடன் இணைகின்றபோது அவற்றின் தாக்கம் பாரதூரமானதாகின்றது. எவ்வாறெனினும், இந்த ஆய்வின் நோக்கமும் குறிக்கோள்களும் வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை ஆராய்வதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினால், பெருந்தோட்டப்பகுதிகளில் நிலவுகின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் மற்றும் அவற்றினால் பெண்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் பாதிக்கப்படும் விதம் குறித்து ஆராய்வதற்கான சாத்தியப்பாடு காணப்படவில்லை. எவ்வாறெனினும், அத்தகைய ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதன் அவசியத்தினை இந்த ஆய்வு எடுத்து காட்டுகின்றது.

## பின்னிணைப்பு 1

TRANSFORM

### நெறிசார் விதிமுறைக்கோவை

இலங்கையின் வடக்குப் பகுதியில் பெண்களின் உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் மேம்படுத்தும்பொருட்டு சமூக நியமங்களை நிலைமாற்றுதல் (TRANSFORM)

## அறிமுகமும் பிரயோகமும்

*டிரான்ஸ்போம் (TRANSFORM) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செய்யப்படவுள்ள பங்குபற்றுகை ஆய்வுக்கு வழிகாட்டும் பிரத்தியேக நோக்கத்திற்காகவே இந்த நெறிசார் விதிமுறைக்கோவை தயாரிக்கப்பட்டுள்ளது. பால்நிலைச் சமத்துவம், மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் மற்றும் நீதி ஆகியவற்றினை மேம்படுத்திப் பாதுகாப்பதன் மூலம் இலங்கையின் வடக்கு பிரதேசத்தில் ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் மேம்படுத்துவதே டிரான்ஸ்போம் நிகழ்ச்சித்திட்டத்தின நோக்கமாகும்.*

*நடைமுறையிலுள்ள பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் மற்றும் தேசிய எடுத்துரைப்புக்கள் பற்றியும் அவை எவ்வாறு பெண்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் தாக்கம் செலுத்துகின்றன என்பது பற்றியும் ஆராய்வதே இப்பங்குபற்றுகை ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது. இந்த ஆய்வின் ஆய்வுப் பொருளுடன் ஒன்றித்திருக்கின்ற கூருணர்தன்மை காரணமாக இந்த ஆய்வினை வழிநடத்துகின்ற பிரத்தியேக நோக்கத்திற்காக இவ்விதிமுறைக்கோவை ஆக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது ஐரோப்பிய ஒன்றிய தின் நிதியுதவியுடனும், கிறிசலிஸ் நிறுவனத்தினரின் (Chrysalis) ஒழுங்கமைவிற்கான ஆதரவுடனும் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்தினால் (Law and Society Trust) முன்னெடுக்கப்படுகின்றது.*

*இந்நெறிசார் விதிமுறைக்கோவையானது ஆய்வினை வழிநடத்துவதற்கான 'அடிப்படைக் கோட்பாடுகளை' மையமாகக் கொண்டு வழிகாட்டல்களை வழங்குகின்றது. இந்த ஆய்வில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினராலும் ஆய்வின் சகல கட்டங்களிலும் இந்த வழிகாட்டல்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும். 'தரப்பினர்' என்ற வகைப்பாட்டிற்குள், LST இன் பணியாளர்கள், Chrysalis இன் பணியாளர்கள், ஆய்வுக்குழு உறுப்பினர்கள், வளவாளர்கள் மற்றும் சமுதாய மட்ட களக் ஆய்வாளர்கள் ஆகியோர் உள்ளடக்கப்படுவர் என்பதுடன் இப்பட்டியல் இவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல.*

#### வரைவிலக்கணங்கள்

#### அ) சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்

*சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் என்போர் ஆய்வின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக LST இனால் தயாரிக்கப்பட்ட தெரிவுக் கருவியின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட நபர்களாவர். சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் சமுதாயத்தில் இருந்து தரவுகளைச் சேகரிப்பதற்கு அவசியமானப் போதியப் பயிற்சியினைப் பெற்றுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும்பொருட்டு அவர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.*

**ஆ) ஆய்வுப் பங்குபற்றுநர்கள்**

*வட மாகாணத்தைச் சேர்ந்த சமூக உறுப்பினர்களே இந்த ஆய்வின் ஆய்வுப் பங்குபற்றுநர்களாவர். ஆய்வுப் பங்குபற்றுநர்களினால் வழங்கப்படுகின்றத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆய்வின் முடிவுகள் கட்டியெழுப்பப்படவுள்ளன. இந்த ஆய்வின் நோக்கத்திற்காக* Chrysalis *இனால் பரிந்துரைக்கப்பட்டுள்ள* 300 *சமூக உறுப்பினர்களும், எழுமாறாகத் தெரிவு செய்யப்படவுள்ள ஏனைய* 250 *சமூக உறுப்பினர்களும் மற்றும் சமூகத்திலுள்ள கல்வியியலாளர்கள், தொழில்வல்லுநர்கள், செயற்பாட்டாளர்கள், முன்னாள் பெண் போராளிகள், குடும்பத் தலைமைத்துவத்தினை ஏற்றுள்ள பெண்கள், இயலாமைகளைக் கொண்டுள்ள பெண்கள், பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் மற்றும் மதத் தலைவர்கள் போன்ற சிலரும் ஆய்வுப் பங்குபற்றுநர்களாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.*

*அடிப்படை வழிகாட்டல் கோட்பாடுகள்*

**1. ஆய்வுப் பங்குபற்றுநர்களின் கௌரவம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்**

**அ)** *ஆய்வுப் பங்குபற்றுநர்களுடன் தொடர்பு கொள்கின்றபோது மிக ஆரம்பத்திலேயே சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ ஆய்வுக்குழு உறுப்பினர்கள் தம்மையும் ஆய்வினை நடத்தும் நிறுவனங்களையும்* (LST *மற்றும்* Chrysalis) *அறிமுகப்படுத்த வேண்டும்.*

**ஆ)** *சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் / ஆய்வுக்குழு உறுப்பினர்கள் ஆய்வுப் பங்குபற்றுநர்களுடைய நேர முன்னுரிமை தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டும். ஆய்வுப் பங்குபற்றுநர்களுடன் கலந்துரையாடி நேரத்தினை முன்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளல் விரும்பத்தக்கது.*

**இ)** *ஆய்வின் குறிக்கோள்களையும் தரவுச் சேகரிப்புக் கருவியின் நோக்கத்தினையும் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களும் ஆய்வுக்குழு உறுப்பினர்களும் ஆய்வுப் பங்குபற்றுநர்களுக்கு விளக்கவேண்டும். குறிப்பாக, சேகரிக்கப்படுகின்றத் தரவுகளின் இரகசியத்தன்மை பற்றி விளக்கிக் கூறுதல் வேண்டும்.*

**ஈ)** *சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் / ஆய்வுக்குழு உறுப்பினர்கள் சகல சந்தர்ப்பங்களிலும் தரவுகளை மரியாதையுடனும் பொறுப்புடனும் சேகரிக்கவேண்டும். மேலும் சகல சந்தர்ப்பங்களிலும் தமது துலங்கல்களை கூருணர்வுடன் செய்தல் வேண்டும். அவர்கள் நடுநிலைமைக்கான தொழில்வாண்மைத் தராதரத்தினைப் பேணவேண்டும் என்பதுடன் இழிவுபடுத்துகின்ற சொற்களைப் பயன்படுத்துவதில் இருந்தும் தம்மைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். நேர்மையான மற்றும் செல்வாக்கிற்குட்படாத பதில்களை சாத்தியப்படுத்தும் நோக்கத்திற்காக, சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் / ஆய்வுக்குழு உறுப்பினர்கள் தமது சொந்த அனுபவங்களைப் பற்றிய கருத்துக்களைக் கூறுவதன் மூலம் அல்லது பகிர்வதன் மூலம் அல்லது தமது முடிவுகளை ஆலோசனையாக வழங்குவதன் மூலம் ஆய்வுப் பங்குபற்றுநர்களில் செல்வாக்குச் செலுத்துவதில் இருந்தும் தம்மைத் தவிர்த்து கொள்ளவேண்டும்.*

**உ)** *ஆய்வுப் பங்குபற்றுநர்கள் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு / பொருத்தமானத் தரவுகளை வழங்குவதற்கு அவர்களுக்குப் போதிய நேரம் வழங்கப்படுகின்றது என்பதைச் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ ஆய்வுக்குழு உறுப்பினர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.*

**எ)** *கேள்விகளுக்கு பதிலளிப்பதனால் ஆய்வுப் பங்குபற்றுநர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் / ஆய்வுக்குழு உறுப்பினர்கள் கருதுகின்ற சந்தர்ப்பத்தில், அவ் அபாயநேர்வு குறித்து ஆய்வுப் பங்குபற்றுநர்களுக்குத் தெளிவாகத் தெரியப்படுத்த வேண்டும் என்பதுடன் அபாயநேர்வு ஏற்படுவதற்கான நியாயமான ஆதாரத்தின் அடிப்படையில் அல்லது புலனுணர்வின் அடிப்படையில் அவ்வாறான ஆய்வுப் பங்குபற்றுநரை நேர்காண்பதைச் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் / ஆய்வுக்குழு உறுப்பினர்கள் தவிர்க்கலாம்.*

**2. அறிந்து வழங்கப்படுகின்ற இணக்கம்**

**அ)** *சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் /ஆய்வுக்குழு உறுப்பினர்கள் தரவுகளைச் சேகரிப்பதற்காக ஆய்வுப் பங்குபற்றுநர்களுடன் சேர்ந்து செயற்படுகின்றனர். அவ்வாறு செயற்படுவதற்கு முன்னர், 'இணக்கப் படிவம் II' இல் ஒப்பமிடுமாறு ஆய்வுப் பங்குபற்றுநர்களை அவர்கள் வேண்டவேண்டும். ஆய்வுப் பங்குபற்றுநர்கள் ஆய்வினில் தன்னிச்சையாகவும் அறிந்து வழங்கப்படுகின்ற இணக்கத்துடனும் பங்குபற்றுகின்றனர் என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.*

**ஆ)** *தரவு சேகரிப்புச் செயன்முறையில் பங்குபற்றுமாறு கோரி ஆய்வுப் பங்குபற்றுநர்களை எவ்விதத்திலும் பலவந்தப்படுத்துவதிலிருந்தும் அல்லது அழுத்தம் வழங்குவதிலிருந்தும் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ ஆய்வுக்குழு உறுப்பினர்கள் தம்மைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.*

**இ)** *ஆய்வுப் பங்குபற்றுநரினால் வாசிக்க முடியாத சந்தர்ப்பங்களில், சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ ஆய்வுக்குழு உறுப்பினர்கள் இணக்கப் படிவத்தின் உள்ளடக்கத்தினை அவருக்கு வாசித்துக் காட்டி அவரின் ஒப்பத்தினைப் பெறவேண்டும். ஆய்வுப் பங்குபற்றுநரினால் ஒப்பமிட முடியாத சந்தர்ப்பத்தில் அவர் தனது வலதுகை பெருவிரல் அடையாளத்தினை இட முடியும்.*

**3. சான்றுப்படுத்தல்**

**அ)** *தரவுச் சேகரிப்பினை மேற்கொள்வதற்கான சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களின் அல்லது ஆய்வுக்குழு உறுப்பினர்களின் அதிகாரத்தினை உறுதிப்படுத்தும்பொருட்டு LST உடனான அவர்களின் ஒப்பந்தத்தினை ஆய்வுப் பங்குபற்றுநர்கள் வேண்டும் பட்சத்தில் அதனை ஆய்வுப் பங்குபற்றுநர்களுக்கு புரியும் மொழியில் சமர்ப்பிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.*

**ஆ)** *ஆய்வுப் பங்குபற்றுநர்கள் வேண்டுகோள் விடுக்கும் சந்தர்ப்பத்தில் ஆய்வுக் குறிக்கோள்கள், ஆய்வு முறையியல் மற்றும் ஆய்வுச் செயன்முறை என்பன விவரிக்கப்பட்டுள்ள விரிவான ஆய்வுத் திட்டத்தினை ஆய்வுப் பங்குபற்றுநர்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் சமர்ப்பிக்க வேண்டும்.*

**4. பெயர் குறிப்பிடாமை மற்றும் இரகசியத்தன்மை**

**அ)** *தரவு சேகரிப்பு, களஞ்சியப்படுத்தல், பகுப்பாய்வு உள்ளடங்கலாக ஆய்வின் அனைத்து கட்டங்களிலும் அனைத்துத் தரப்பினராலும் ஆய்வுப் பங்குபற்றுநர்களின் அந்தரங்கத்துக்கான உரிமை மதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படவேண்டும்.*

**ஆ)** *சேகரிக்கப்பட்ட தரவுகள் சகல சந்தர்ப்பங்களிலும் இரகசியமாகப் பேணப்படும். ஆய்வுப் பங்குபற்றுநர்கள் தங்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் இருக்க முடியும் என்பதுடன் அவ்வாறு பெயர் குறிப்பிடாமல் இருப்பதற்கான தெரிவு பற்றித் தரவுச் சேகரிப்பின் ஆரம்பத்திலேயே அவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.*

**இ)** *இந்த ஆய்வின் போது மற்றும் இந்த ஆய்வுக்காகச் சேகரிக்கப்பட்ட தரவுகளையோ அல்லது ஏதேனும் தகவல்களையோ சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ ஆய்வுக்குழு உறுப்பினர்கள் வேறு நபர்களுடன் அல்லது நிறுவனத்துடன் எச்சந்தர்ப்பத்திலும் பகிர்ந்து கொள்ளக்கூடாது.*

**ஈ)** *சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ ஆய்வுக்குழு உறுப்பினர்கள் சேகரிக்கப்பட்டத் தரவுகள் அல்லது தகவல்களைத் தற்போதைய ஆய்வு/ நிகழ்ச்சித்திட்டம் தவிர்ந்த வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாகாது.*

**5. இடைவிலகலுக்கான உரிமை**

**அ)** காரணங்களுடனோ அல்லது காரணங்களின்றியோ எந்நேரத்திலும் ஆய்வில் இருந்து விலகுவதற்கான உரிமையினை ஆய்வுப் பங்குபற்றுநர்கள் கொண்டுள்ளனர். ஆய்வுப் பங்குபற்றுநர்களுடனான இடையீட்டின் ஆரம்பத்திலேயே சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ ஆய்வுக்குழு உறுப்பினர்கள் இதனை அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

**ஆ)** எந்த ஒரு கேள்விக்கும் பதிலளிக்காது விட்டுச் செல்வதற்கான திட்டவட்டமான உரிமையினை ஆய்வுப் பங்குபற்றுநர்கள் கொண்டுள்ளனர் என்பதைச் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் / ஆய்வுக்குழு உறுப்பினர்கள் அங்கீகரிக்கவேண்டும் என்பதுடன் கேள்விகளுக்கு பதிலளிக்குமாறு யாரையும் வற்புறுத்த கூடாது.

**இ)** ஆய்வுப் பங்குபற்றுநர்கள் தரவுகளை வழங்குவதற்கும் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்குமான சூழல் நட்புமிக்கதாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்கின்றது என்பதைச் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ ஆய்வுக்குழு உறுப்பினர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**6. பராயமடையாதவர்களிடம் இருந்து தரவுகளைச் சேகரித்தல்**

**அ)** 18 வயதுக்குக் குறைந்த நபரிடமிருந்து தரவுகளைச் சேகரிக்கையில் பெற்றோர் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஒப்பமிடப்பட்ட இணக்கப் படிவம் III இன் மூலம் தாம் அனுமதியினைப் பெறுகின்றனர் என்பதைச் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ ஆய்வுக்குழு உறுப்பினர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**ஆ)** 18 வயதுக்குக் குறைந்த நபரிடமிருந்து தரவுகளைச் சேகரிக்க முன்னர் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ ஆய்வுக்குழு உறுப்பினர்கள் அதனைப் பற்றி LST இற்கு எழுத்து மூலமாக அறிவிக்கவேண்டும்.

**இ)** மேற்குறிப்பிட்ட விதிகளை மீறுவதனால் ஏற்படும் எந்த விளைவுகளுக்கும் LST பொறுப்பேற்காது.

**7. ஆய்வுப் பங்குபற்றுநர்களுக்கான நன்மைகள்**

**அ)** ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படவுள்ள எளிமையாக விளங்கிக் கொள்ளக்கூடியவாறானப் பட விளக்கங்களினூடாக ஆய்வினால் கண்டறியப்பட்டவைகள் ஆய்வுப் பங்குபற்றுனர்களுடன் பகிரந்து கொள்ளப்படும். மேலும் இறுதி ஆய்வு அறிக்கை வட மாகாணத்தின் சகல நூலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

**ஆ)** ஆய்வில் இருந்து கண்டறியப்பட்டவைகள் தேசிய மட்டத்திலும் பிராந்திய மட்டத்திலும் நடத்தப்படும் ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்படும். ஆய்வுப் பங்குபற்றுநர்கள் ஆய்வரங்கிற்கு, குறிப்பாகப் பிராந்திய மட்டத்தில் இடம்பெறவுள்ள ஆய்வரங்கிற்கு அழைக்கப்படுவர்.

**8. கொவிட் 19 முற்பாதுகாப்பு வழிகாட்டல்கள்**

**அ)** சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ ஆய்வுக்குழு உறுப்பினர்கள் கொவிட் 19 தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட சகல விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் இங்கே குறித்துரைக்கப்பட்டுள்ள விதிகளுடன் சேர்த்துப் பின்பற்றவேண்டும்.

**ஆ)** ஆய்வுப் பங்குபற்றுநர்களுடனும் / LST பணியாளர்களுடனும்/ Chrysalis பணியாளர்களுடனும்/ ஏனையோருடனும் நேரடித் தொடர்பாடலினை மேற்கொள்ளும் சகல சந்தர்ப்பங்களிலும் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ஆய்வுக்குழு உறுப்பினர்கள் முகக்கவசம் அணியவேண்டும்.

**இ)** தரவுச் சேகரிப்புச் செயன்முறை உள்ளடங்கலாக ஆய்வுப் பங்குபற்றுநர்களுடனும், ஏனைய சமுதாய உறுப்பினர்களுடனும், ஆய்வின் ஏனைய தரப்பினர்களுடனும் தொடர்பாடலினை மேற்கொள்ளும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ஆய்வுக்குழு உறுப்பினர்கள் அவர்களின் கைகளைக் கழுவவேண்டும் / கைகளைக் கிருமி நீக்கம் செய்யவேண்டும்.

**ஈ)** தரவு சேகரிப்பு செயன்முறை உள்ளடங்கலாக ஆய்வுச் செயன்முறை முழுவதும் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ஆய்வுக்குழு உறுப்பினர்கள் ஆய்வுப் பங்குபற்றுநர்களுடனும் ஏனைய சமுதாய உறுப்பினர்களுடனும், ஆய்வின் ஏனைய தரப்புக்களுடனும் நேரடித் தொடர்பாடலினை மேற்கொள்கின்றவேளையில் ஏனையோருக்கு இடையில் குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளியினைப் பேண வேண்டும்.

**உ)** தரவு சேகரிப்பு செயன்முறை உள்ளடங்கலாக ஆய்வுச் செயன்முறை முழுவதும் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ஆய்வுக்குழு உறுப்பினர்கள் ஆய்வுப் பங்குபற்றுநர்களுடனும் ஏனைய சமுதாய உறுப்பினர்களுடனும், ஆய்வின் ஏனைய தரப்புக்களுடனும் நேரடித் தொடர்பாடலினை மேற்கொள்கின்றவேளையில் உடல் ரீதியானத் தொடுகையினைத் தவிர்க்கவேண்டும்.

**ஊ)** தரவுச் சேகரிப்புச் செயன்முறையின் போது சமுதாயத்தினைச் சேர்ந்த மக்கள் (ஆய்வுப் பங்குபற்றுநர்கள்) ஒரே இடத்தில் பெருமளவில் கூடவில்லை என்பதைச் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ ஆய்வுக்குழு உறுப்பினர்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

**எ)** தரவு சேகரிப்புச் செயன்முறையின் போது சாத்தியமான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ஆய்வுக்குழு உறுப்பினர்கள் சிறுவர்களைத் தொடர்புகொள்வதைத் தவிர்க்கவேண்டும்.

**ஏ)** சுகவீனமுற்றிருக்கையில் அல்லது காய்ச்சல், வறட்டு இருமல், வலிகள் மற்றும் நோ போன்ற நோய்க்குறிகளைக் கொண்டிருக்கையில் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ஆய்வுக்குழு உறுப்பினர்கள் தரவுச் சேகரிப்பு உள்ளிட்ட ஆய்வுச் செயற்பாடுகளுக்காக ஆய்வுப் பங்குபற்றுநர்கள்/ சமுதாய உறுப்பினர்கள்/ ஆய்வின் ஏனைய தரப்பினரரைச் சந்திப்பதைத் தவிர்க்கவேண்டும்.

**ஐ)** ஆய்வுச் செயற்பாடுகளின் நோக்கங்களுக்காகத் தனிமைப்படுத்தப்பட்ட/ முடக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு செல்வது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. தரவு சேகரிப்பு உள்ளடங்கலாக ஆய்வுச் செயற்பாட்டு நோக்கங்களுக்காகத் தனிமைப்படுத்தப்பட்ட/ முடக்கப்பட்டுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த எந்தவொரு நபரையும் எந்தவொரு இடத்திற்கும் வருமாறு சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ஆய்வுக்குழு உறுப்பினர்கள் அழைக்கக்கூடாது. இதனை மீறுவதால் ஏற்படும் எந்தவொரு விளைவுக்குமானப் பொறுப்பினை LST/ Chrysalis ஏற்காது.

**ஒ)** ஆய்வுப் பங்குபற்றுநர்கள்/ சமுதாய உறுப்பினர்கள்/ ஆய்வின் ஏனைய தரப்பினர்கள் சுகாதார மருத்துவ அதிகாரியினாலும் (MOH)/ பொதுச் சுகாதாரப் பரிசோதகரினாலும் (PHI)/ அரசாங்க அதிகாரிகளினாலும் வெளியிடப்பட்டுள்ள சகல பாதுகாப்பு முன்னேற்பாடுகளையும் சுகாதார வழிகாட்டல்களையும் பின்பற்றுகின்றனர் என்பதைச் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்/ஆய்வுக்குழு உறுப்பினர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**பின்னிணைப்பு 2**

## ஆய்வுத் திட்டம்

### நிறைவேற்றுச் சுருக்கம்

**1.** ஆய்வின் பின்புலம், ஆய்வு தீர்க்க முயற்சிக்கும் பிரச்சினை பற்றிய விபரம், ஆய்வின் குறிக்கோள்கள், ஆய்வு முறைமைகள் மற்றும் ஆய்வு தொடர்பான பிற விவரங்களின் பின்னணி என்பனவற்றை இந்த ஆய்வுத் திட்டம் குறிப்பிடுகிறது.

**2.** இந்த ஆய்வு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், Chrysalis இனால் வழங்கப்படுகின்ற ஒழுங்கமைவு ஆதரவுடன், சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையினால் (LST) மேற்கொள்ளப்படுகிறது.

**3.** LST இன் ஆய்வுக்குழு தெரிவு செய்யப்படவுள்ள 51 சமுதாய உறுப்பினர்களுடன் இணைந்து ஆய்வு முறையியல் மற்றும் தரவு சேகரிப்புக் கருவிகளை வடிவமைக்கும். 51 சமுதாய உறுப்பினர்களும் இந்த ஆய்வின் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களாகப் பணியாற்றுவார்கள்.

**4.** இந்த ஆய்வுத் திட்டத்தின் முதலாவது பகுதி நாம் இந்த ஆய்வினை நடத்த விரும்புகின்ற பின்புலத்தினை சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது. ஆய்வு தீர்க்க முயற்சிக்கும் பிரச்சினை பற்றிய விபரம், ஆய்வின் குறிக்கோள்கள் மற்றும் ஆய்வு வினாக்கள் இப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**5.** இந்த ஆய்வுத் திட்டத்தின் இரண்டாம் பகுதியில் ஆய்வு முறையியலும் ஆய்வின் வரையறைகளும் விளக்கப்பட்டுள்ளன. தரவுகளைச் சேகரிக்க ஒரு கலப்பு அணுகுமுறை பயன்படுத்தப்படும். ஆவணப்படுத்தல், ஆலோசனைக் கலந்துரையாடல்கள், நேர்காணல்கள், குவிமையக் குழுக் கலந்துரையாடல்கள், வினாக் கொத்துக்களைப் பயன்படுத்தல் ஆகியவை இந்த ஆய்வு முழுவதும் பயன்படுத்தப்படுவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள முறைகளாகும். இந்த ஆய்வில் பின்பற்றப்படவுள்ள அடிப்படை முறைமையியல் அணுகுமுறை பால்நிலைச் சமத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

**6.** ஆய்வுடன் தொடர்புடைய அபாயநேர்வு மதிப்பீடு பகுதி III இல் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியானது ஆய்வினை ஒட்டியுள்ள பொதுவானத் தடைகள், ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்ற சூழ்நிலை மாற்றங்கள் மற்றும் தரவு சேகரிப்புடன் தொடர்புடைய பிரச்சினைகள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தினை வழங்குகின்றது.

**7.** இந்த ஆய்வின் பகுதி IV ஆய்விற்கான செயற்திட்டத்தையும் உத்தேசக் காலச் சட்டகத்தினையும் கொண்டுள்ளது. எனினும், இங்கே நிர்ணயிக்கப்பட்டுள்ள காலச் சட்டகமானது இந்த ஆய்வினை மேற்கொள்கையில் எழக்கூடிய சாத்தியமான அபாயநேர்வுகளினால் மாற்றங்களுக்கு உட்படக்கூடியது.

## பகுதி I

### 1.1. பின்புலம்

*இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மீயுயர் சட்டமான இலங்கை அரசியலமைப்பானது சமத்துவத்தை உறுதிப்படுத்தி பால் என்பதன் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படுவதைத் தடைசெய்கிறது. இருப்பினும் அது விதிவிலக்குகளுக்கு அனுமதியளிப்பதுடன், வழக்காற்றுச் சட்டங்கள் பெண்களைப் பாரபட்சமாக நடத்த அனுமதிக்கும் சந்தர்ப்பங்களில் அரசியலமைப்பு மேலோங்காமல் அச்சட்டங்களே மேலோங்கி நிற்கின்றன. இது வழக்காற்று நடைமுறைகள் மற்றும் விதிமுறைகள் மேலோங்குவதற்கான ஒரு சூழலை உருவாக்குகின்றது.*

*இலங்கையின் மொத்த சனத்தொகையில் பெண்கள் 52.1% ஆக உள்ளனர். மேலும் பல பெண்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றனர். ஆனால் பொதுவாக அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பங்களிப்பும் பங்கேற்பும் குறைவாகவே காணப்படுகின்றது. குறிப்பாக கல்வி, சட்டம், வணிகம் மற்றும் அரசியல் ஆகிய துறைகளில் உள்ள உயர் பதவிகளிலும் ஏனைய தொழிற் பரப்புக்களிலும் பெண்களின் பங்களிப்பும் பங்கேற்பும் தொடர்ந்தும் போதுமற்றதாகவே உள்ளது. அதிலும் குறிப்பாக பெண்களின் அரசியல் பங்கேற்பு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. 225 உறுப்பினர்களைக் கொண்ட தற்போதைய பாராளுமன்றத்தில் 12 (5.3%) பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். இது மிகவும் துரதிஷ்டவசமானது. ஏனெனில், இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றினை நோக்குகையில் சிரேஷ்ட அமைச்சுப் பதவிகளை வகித்த பல பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்திருக்கின்றனர். பல தொழிற்சங்கத் தலைவிகள் இருந்திருக்கின்றனர். இவற்றிற்கெல்லாம் மேலாக உலகின் முதற் பெண் பிரதமரே இலங்கையில் இருந்துதான் உருவாகியிருக்கின்றார். பெண்களின் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பதற்காக உள்ளூரதிகார சபைகளில் பெண்களுக்கு 25 சதவீதமான இட ஒதுக்கீடு அளித்திருக்கின்றமை பாராட்டுக்குரியது என்றாலும் இந்த ஒதுக்கீடு இன்னமும் ஒரு செயற்திறனற்ற கருவியாகவே இருந்து வருகின்றது. 25 சதவீத ஒதுக்கீடு மூலம் உள்ளூரதிகார சபைகளுக்கு உறுப்பினர்களாகத் தேர்வுசெய்யப்படும் பெண்கள் சமூகத்தில் நிலவிவரும் பாரபட்சமிக்க சமூக மற்றும் கலாசார நியமங்களின் காரணமாக தங்களுடைய கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் இருந்தும் தடுக்கப்படுகின்றனர் என 2020 ஆம் ஆண்டு Search for Common Ground எனும் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை ஆய்வு குறிப்பிடுகின்றது.[115]*

*''சபையின் ஆண் உறுப்பினர்கள் எங்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்த எம்மை அனுமதிப்பதில்லை. ஒன்றில் அவர்கள் எங்களைத் தொந்தரவு செய்கிறார்கள் அல்லது எம்மைப் பார்த்துச் சிரிக்கின்றார்கள்'' - பதுளை உள்ளூராட்சி அதிகாரசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்உறுப்பினர்[116]*

*2020 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய பால்நிலை இடைவெளி அறிக்கையில் 153 நாடுகளின் மத்தியில் இலங்கை 102 ஆவது நாடாகத் தரப்படுத்தப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் இலங்கை 100 ஆவது இடத்தில் இருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அரசியலமைப்பு மூலமும் ஏனைய சட்டங்கள் மூலமும் பெண்களின் உரிமைகளும் சுதந்திரமும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளபோதிலும் இவற்றின் நடைமுறை அமுலாக்கம் கேள்விக்குரியதாகவே உள்ளது. பால்நிலை அடிப்படையிலான இந்தச் சமத்துவமின்மை வடக்கில் மிகத் தெளிவாகக் காணப்படுகின்றது. யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்த காலம் முடிவடைந்துள்ள போதிலும் 30 வருட யுத்தத்தின் விளைவுகளை வெற்றிகொள்ள வடக்கு இன்னும் போராடி வருகின்றது. போரானது சந்தேகத்திற்கிடமின்றி முழுச் சமுதாயத்தினையும் பாதித்துள்ளது. எவ்வாறெனினும், அது பெண்களைப் பல்வேறு வழிகளிலும் தனித்துவமான வழிகளிலும் பாதித்துள்ளது. போரின்போது அசாதாரணமான வகிபாத்திரங்களை வகிப்பதற்கும் பெண்கள் பலவந்தப்படுத்தப்பட்டனர். பெண்கள் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் கவனித்துக்கொண்ட அதேவேளை அன்னையர் முன்னணி போன்ற நிறுவனத்திலும் ஜெய்ப்பூர் கால் போன்ற போஷிப்புக் கருத் திட்டங்களிலும் தலைமைத்துவ வகிபாத்திரங்களையும் வகித்தனர்.*

---

***115*** ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவி வழங்கிய கருத்திட்டத்திற்கான அடிப்படை ஆய்வு–கற்றலிலும் தலைமைத்துவத்திலும் பெண்கள் https://www.sfcg.org/wpcontent/uploads/2020/09/SFCG_Baseline-Study_Final_Report.pdf

***116*** Ibid

எவ்வாறாயினும், போருக்குப் பிந்தைய சூழமைவில், பெண்கள் பொது வாழ்விலும் அரசியல் வாழ்விலும் முனைப்புடன் பங்குபற்றுவதைத் தடுப்பதற்காக வடக்கில் ஆழப் பதிந்துள்ள கட்டமைப்புரீதியான தடைகள் மீண்டும் வீரியத்துடன் தலைதூக்கியுள்ளன.[117] பெண்களுக்கு எதிரான கட்டமைப்புரீதியான தடைகள் சமூகத்தின் கலாசார நம்பிக்கையின் அடிப்படையிலும் மத நம்பிக்கையின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டுள்ள பால்நிலைரீதியான நெறிமுறைகளினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. பெண்களின் தொழில்வாய்ப்புக்கும் ஈடுபாட்டிற்கும் பொருத்தமானவை மற்றும் பொருத்தமற்றவை என்பன மறைமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பெண்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தப் பல கலாசாரத் தடைகளை கடக்கவேண்டியுள்ளது என்றும் இந்தக் கலாசார நெறிமுறைகள் வடக்கு மற்றும் கிழக்கில்[118] கணிசமாக நிலவுகின்றன என்றும் 2015 ஆம் ஆண்டில் பெண் பத்திரிகையாளர்கள் பற்றி நடத்தப்பட்ட ஆய்வு கண்டறிந்துள்ளது. பெண்கள் தங்கள் உரிமைகளையும் நீதியினையும்[119] அணுகுவதைச் சமூக நியமங்கள் தடைசெய்கின்றன என்பதை வடக்கு மற்றும் கிழக்கில் பெண்களின் நீதிக்கான அணுகல் பற்றி 2016 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மற்றொரு ஆய்வு கண்டறிந்துள்ளது. யுத்தத்தின் மோசமான விளைவுகளால் பாதிக்கப்பட்டு, தங்கள் இழப்புக்களிலிருந்து மீண்டு வருவதற்காகப் போராடும் பெண்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மட்டுப்படுத்துவதன் மூலம் வடக்கிலுள்ள சமூக நியமங்கள் பெண்களின் குரல்வளையினை நசுக்குகின்றன என்றால் அது மிகையாகாது. மெய்நடப்பில் பால்நிலைச் சமத்துவம் எனும் இலக்கை அடைய இலங்கை இன்னும் நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது.

### 1.2 ஆய்வுப் பிரச்சினைக் கூற்று

சமத்துவத்திற்கான உரிமைக்கு அரசியலமைப்பு உத்தரவாதம் வழங்குகின்றபோதிலும், இலங்கையில் பெண்களின் சம உரிமைகள் பல்வேறு காரணிகளின் விளைவாகப் பொதுவாகச் சவாலுக்குட்படுத்தப்படுகின்றன. சமூக மட்டத்தில், பெண்களின் உரிமைகளும் சுதந்திரங்களும் அரசியலமைப்பினாலும் (உறுப்புரை 16), நடைமுறையிலுள்ள சமூக நியமங்களினாலும் மட்டுப்படுத்தப்படுகின்றன. தனிநபர்களின் பாலின் அடிப்படையில் அவர்களின் இலட்சியார்த்த வகிபாத்திரத்தினை சமூக நியமங்கள் வரையறுக்கின்றன. சமூக நியமங்களின் நிறுவனமயமாக்கப்பட்ட தன்மை காரணமாக அவை பெண்கள் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சமூக நியமங்களை மீறுதல், சமூக புறக்கணிப்பு மற்றும் சமூகத் தடை ஆகியவற்றினை விளைவுகளாக்குகின்றமையினால் சமூக நியமங்கள் பிணிக்கும் தன்மையைப் பெற்றுக் கொள்கின்றன. 30 வருட சிவில் யுத்தத்தினால் உருவாக்கப்பட்டுள்ள இருண்ட கடந்த காலத்தில் இருந்து தங்கள் வாழ்வினை மீளப் பெற அரும்பாடுபடும் வடக்குப் பெண்கள் சமூக நியமங்களினால் ஏற்படுத்தப்படுகின்ற பால்நிலைப் பாரபட்சத்திற்கும் முகங்கொடுத்து வருகின்றனர். இவை இவர்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக இருந்து வருகின்றன. இவ்வாறான பாரபட்சமிக்க சமூக நியமங்கள் ஒற்றைத் தாயாக இருத்தல், கணவனை இழந்திருந்தல் அல்லது இயலாமைகளைக் கொண்டிருத்தல் போன்ற பாதிப்புறுநிலைகளை மேலும் மோசமானதாக்குகின்றன. ஒரு தசாப்தத்திற்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த போதிலும் இப்பிரதேசங்கள் தொடர்ந்தும் இராணுவமயமாக்கப்பட்டுள்ளன. இவ் இராணுவமயமாக்கலினால் ஒற்றைத் தாய்மார், கணவனை இழந்த பெண்கள் மற்றும் இயலாமைகளைக் கொண்டுள்ள பெண்கள் கொண்டுள்ள பெண்கள் பாரதூரமானப் பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றனர். இவை அவர்களை மேலும் பாதிப்புறு நிலைக்கு ஆளாக்குவதுடன், அவர்கள் தங்களது உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அணுகுவதனையும் தடுக்கின்றன. ஒற்றைத் தாய்மார்கள் மற்றும் கணவனை இழந்த பெண்களுக்கு எதிராகப் பொதுப் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையுடன் இணைந்துள்ள சமூகக் களங்கம் இந்தப் பெண்களின் முன்னேற்றத்திற்கான நடமாட்டத்தையும், தொழில்வாய்ப்பையும், பிற வாய்ப்புக்களையும் மட்டுப்படுத்துகின்றது. வீட்டுப் பராமரிப்பாளர் மற்றும் பிள்ளை பெறுபவள் என பெண்களின் வகிபாத்திரத்தினை மட்டுப்படுத்துவதனூடாக இச்சமூக நியமங்கள் பெண்களின் மீது அபரிமிதமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

---

117 Ibid

118 பத்திரிகையாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம், "நாட்டின் அறிக்கை: இலங்கையில் ஊடகமும் பால்நிலையும் (மார்ச் 2015) at https://samsn.ifj.org/wp-content/uploads/2015/03/SRILANKA.pdf

119 பெண்கள் செயற்பாட்டிற்கான வலையமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட CEDAW நிழல் அறிக்கை, 'வடக்கு மற்றும் கிழக்கில் பெண்களின் நீதிக்கான அணுகல்வ' ஆகஸ்ட் 2016

சமூக நியமங்கள் பற்றியும் அவை பெண்கள் தமது அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் அணுகுவதில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்தும் அண்மைக் காலத்தில் ஆய்வுகள் எதுவும் நடத்தப்படாத காரணத்தினால், பெண்களின் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதிக்கின்ற, குறிப்பாக சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிக்கான சுதந்திரம், மதச் சுதந்திரம் மற்றும் பால்நிலைச் சமத்துவம் ஆகியவற்றினைப் பாதிக்கின்ற பாரபட்சமிக்க சமூக நியமங்கள், தேசிய எடுத்துரைப்புக்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பால்நிலைச் சிக்கல்கள் ஆகியவற்றினை இந்த ஆய்வு பரிசீலிக்க எத்தனிக்கின்றது.

### 1.3. ஆய்வு வினாக்கள்

1. சமூகத்தில் (வட மாகாணத்தில்) நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் யாவை மற்றும் அவை பெண்கள் மீது கொண்டுள்ள பால்நிலை சார்ந்த தாக்கங்கள் எத்தகையது மற்றும் அவை எவ்வாறு பெண்கள் அவர்களது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்துக் கொள்வதற்கு தடை விதிக்கின்றன?

2. மோதல் காலப்பகுதியில் மற்றும் மோதலுக்கு பிற்பட்ட காலப்பகுதிகளில் சமூக நியமங்கள் எத்தகைய மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன? அச்சமூக நியமங்களின் தாக்கங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காகப் பெண்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த உபாயப் பொறிமுறைகள் யாவை?

3. பால்நிலை பாரபட்சமிக்க தேசிய எடுத்துரைப்புக்கள் எவ்வாறு பெண்கள் அவர்களது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்து கொள்வதில் தாக்கம் செலுத்துகின்றன?

### 1.4. ஆய்வின் குறிக்கோள்கள்

1. சமூகத்தில் (வட மாகாணத்தில்) நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களையும், அவை பெண்கள் மீது கொண்டுள்ள பால்நிலை சார்ந்த தாக்கங்களையும், அவை எவ்வாறு பெண்கள் அவர்களது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்து கொள்வதற்கு தடை விதிக்கின்றன என்பதனையும் அறிந்து கொள்ளுதல்.

2. மோதல் காலப்பகுதியில் மற்றும் மோதலுக்கு பிற்பட்ட காலப்பகுதிகளில் சமூக நியமங்கள் எத்தகைய மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன என்பதனையும் அச்சமூக நியமங்களின் தாக்கங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காகப் பெண்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த உபாயப் பொறிமுறைகளையும் கண்டறிதல்.

3. பால்நிலை பாரபட்சமிக்க தேசிய எடுத்துரைப்புக்கள் எவ்வாறு பெண்கள் அவர்களது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்து கொள்வதில் தாக்கம் செலுத்துகின்றன என்பதனை ஆராய்தல்.

## பகுதி II

### 2.1. ஆய்வு முறையியல்

இந்த ஆய்வின் பிரதான முறையியல் அணுகுமுறையாகப் பங்கேற்பு அணுகுமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுச் செயன்முறையில் முன்னாள் பெண் போராளிகள் போன்ற சமூகத்தினால் புறக்கணிக்கப்பட்டுள்ள குழுக்கள் உள்ளிட்ட சமுதாய உறுப்பினர்களின் அர்த்தபுஷ்டியான பங்கேற்பினை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும். இந்தப் பிரதான முறையியல் அணுகுமுறை பால்நிலைச் சமத்துவம் பற்றிய முறையியல் அணுகுமுறையுடன் சேர்ந்திருக்கும். தரவுகளைச் சேகரிக்க ஒரு கலப்பு ஆய்வு அணுகுமுறை பயன்படுத்தப்படும், அதாவது, அளவு மற்றும் பண்பு சார்ந்தத் தரவுகள் சேகரிக்கப்படும்.

### 2.2. தரவுச் சேகரிப்பு முறைகள்



## தரவுச் சேகரிப்புக் கருவி

*குறிப்பாக பெண்களின் மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மீது தாக்கம் செலுத்தக்கூடிய பால்நிலை பாரபட்சமிக்க தேசிய எடுத்துரைப்புக்களைக் கண்காணித்து ஆவணப்படுத்த ஓர் ஊடகக் கண்காணிப்பு ஆவணக்கருவி உருவாக்கப்படும். மூன்று மொழிகளிலுமான (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) அச்சு ஊடகங்கள் கண்காணிக்கப்படவுள்ளன. செய்திப் பத்திரிகைகள் ஆகஸ்ட்* 01 *முதல் ஒக்டோபர் 31 வரையான மூன்று மாத காலப்பகுதிக்கு கண்காணிக்கப்படவுள்ளன. இந்த நோக்கத்திற்காக ஒவ்வொரு மொழியிலிருந்தும் ஒன்று என அரசுக்குச் சொந்தமான செய்திப் பத்திரிகை ஒன்றும் தனியாருக்குச் சொந்தமான செய்திப் பத்திரிகை ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:*

| மொழி | தனியார் செய்திப் பத்திரிகைகள் | அரச செய்திப் பத்திரிகைகள் |
|---|---|---|
| சிங்களம் | அருன | சிலுமின |
| தமிழ் | தினக்குரல் | தினகரன் |
| ஆங்கிலம் | த ஐலண்ட் | சண்டே ஒப்சேவர் |

*சமுதாய உறுப்பினர்களிடமிருந்து தரவுகளைச் சேகரிப்பதற்கானத் தரவுச் சேகரிப்புக் கருவிகள்* CARE *இன்* SNAP *கட்டமைப்பினைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்படும். வடக்கில் பெண்கள் அவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் அணுகுவதற்குத் தடையாகக் காணப்படும் பிரதான பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை அடையாளம் காணும் பொருட்டு, சேகரிக்கப்படும் தரவுகள்* CARE *இன்* SNAP *கட்டமைப்பினூடாகப் பகுப்பாய்வு செய்யப்படும். தரவுச் சேகரிப்புக் கருவிகள் சமுதாய உறுப்பினர்களுடனான திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் போது முன்பரீட்சிக்கப்பட்டு அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில் திருத்தப்படும்.*

## வினாக்கொத்து

*ஆய்விற்கானத் தரவுகளைத் திரட்டுவதற்குரிய தரவு சேகரிப்புக் கருவி (வினாக்கொத்து)* LST *இன் ஆய்வுக் குழுவினரால் தயாரிக்கப்படும். இவ்வினாக்கொத்தின் உருவாக்கத்தில் சமுதாய உறுப்பினர்களின் பங்களிப்பு பல்வேறு உத்திகளினூடாக உறுதி செய்யப்படவுள்ளது. வினாக்கொத்தினை வடிவமைப்பதன் முதற் கட்டமாக, வட மாகாணத்தில் நிலைத்துள்ள பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பாக இலக்கிய மீளாய்வு மேற்கொள்ளப்படும். இலக்கிய மீளாய்வின் அடிப்படையில், குறிப்பிட்ட எண்ணிக்கையான சமூக நியமங்கள் ஆய்வுக் குழுவினரால் பட்டியற்படுத்தபடும். அதனைத்தொடர்ந்து, இத்தகைய சமூக நியமங்கள் தற்காலத்தில் எந்தளவிற்கு சமூகத்தில் நிலைத்துள்ளன என்பதனை அறிந்துக் கொள்கின்ற முயற்சியின் முதற்கட்டமாக, வட மாகாணத்திலுள்ள இளைஞர்களுடன் நிகழ்நிலைக் கலந்துரையாடலொன்று ஒழுங்கு செய்யப்படவுள்ளது. இக் கலந்துரையாடலினூடாக வட மாகாணத்தில் நிலைத்திருக்கின்ற சமூக நியமங்கள் தொடர்பான ஒரு ஆரம்பநிலை அறிவு கட்டியெழுப்பப்படும்.*

*அவ் ஆரம்பநிலை அறிவினை மையமாகக் கொண்டு வினாக்கொத்தின் வரைவு தயாரிக்கப்படும். இவ்வரைவு தரவு சேகரிப்பாளர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சிகளின்போது மேலும் திருத்தப்படும். திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சிகளின் போது ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த தரவு சேகரிப்பாளர்கள் தத்தமது மாவட்டங்களில் நிலைத்திருக்கின்ற பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை அடையாளப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவர். அவ்வாறு பகிரப்படுகின்ற சமூக நியமங்கள் தொடர்பான அறிவினை மையமாகக் கொண்டு வினாக்கொத்து வடிவமைக்கப்படும்.*

## நேர்காணல்கள்

*மதத் தலைவர்கள், தொழில்வாண்மையாளர்கள், பெண்ணியவாதிகள் மற்றும் கல்வியியலாளர்கள் நேர்காணப்படுவர்.*

### குவிமையக் குழுக் கலந்துரையாடல்கள்

*கீழே பட்டியலிடப்பட்டுள்ள குவிமையக் குழுக்களுடன் குவிமையக் குழுக் கலந்துரையாடல்கள் நடத்தப்படும். இவற்றுக்கான கலந்துரையாடல் குறிப்புக்கள் தயாரிக்கப்படும்.*

1. *பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறை ஆகியவற்றிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள்*
2. *பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்*
3. *முன்னாள் பெண் போராளிகள்*
4. *பால்நிலை கடந்த பெண்கள்/ பால்நிலை கடந்த ஆண்கள்/* LGBTIQ
5. *இயலாமைகளைக் கொண்டுள்ளோர்*
6. *சிவில் சமுதாய ஒழுங்கமைப்புக்களின் பிரதிநிதிகள்*
7. *பாலியல் தொழிலாளர்கள்*
8. *பெண் செயற்பாட்டாளர்கள்*

### தரவுச் சேகரிப்பில் நெறிசார் கரிசனைகள்

*இந்த ஆய்வின் நோக்கத்திற்காகத் தயாரிக்கப்படவுள்ள* LST *இன் நெறிசார் விதிமுறைக்கோவை தரவுச் சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு உள்ளிட்ட ஆய்வின் அனைத்துக் கட்டங்களிலும் பின்பற்றப்படும்.*

## 2.3 தரவு சேகரிப்பு

*இந்த ஆய்விற்காக 51 சமுதாய உறுப்பினர்கள் (35 பெண்கள் மற்றும் 16 ஆண்கள்) சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களாகத் தெரிவுசெய்யப்படுவர். ஆய்வில் சமுதாய உறுப்பினர்களின் பங்களிப்பினை உறுதிப்படுத்தும் நோக்கத்துடனும், ஆய்வு விடயப்பொருளுடன் ஒன்றித்திருக்கின்ற கலாசார மற்றும் பாரம்பரிய அம்சங்களைக் கருத்திற்கொண்டும், வினைத்திறனான மற்றும் சுமூகமானத் தரவு சேகரிப்பினை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக, சமுதாய உறுப்பினர்களே தரவு சேகரிப்பாளர்களாக ஈடுபடுத்தப்படவுள்ளனர். அவர்களது பணியின் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு அவர்கள் இந்த ஆய்வின் ''சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள்'' என்ற பதவிநிலையின்கீழ் இந்த ஆய்விற்குள் உள்வாங்கப்படுவர்.*

*கிறிசலிஸ் இனால் தேர்ந்தெடுக்கப்பட்ட 400 பயனாளர்களில் இருந்து தெரிவுக் கருவியினைப் பயன்படுத்தி 51 சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். பயனாளர்களின் இனம், மதம், வயது மற்றும் சமுதாய ஈடுபாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தெரிவுக் கருவி வடிவமைக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட 51 சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் 400 பயனாளர்களிடமிருந்தும், அவசியமெனில், ஏனைய சமுதாய உறுப்பினர்களிடமிருந்தும் தரவுச் சேகரிப்புக் கருவியினைப் பயன்படுத்தித் தரவுகளைச் சேகரிப்பார்கள்.*

#### சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

*சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களுக்கு ஆய்வு பற்றிய கண்ணோட்டத்தினை வழங்கும் பொருட்டு திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படும். இதன்போது ஆய்வாளர்களின் வகிபாத்திரங்கள் மற்றும் பொறுப்புக்கள் உரிய முறையில் விளக்கப்படும். முக்கியமாக, நடைமுறையிலுள்ள சமூக நியமங்கள் பற்றிய சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களின் அறிவு மற்றும் அனுபவத்தினைக் கொண்டு வரைவுத் தரவுச் சேகரிப்புக் கருவியினை மேலும் விருத்திசெய்வதற்காகத் திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சி களின்போது ஒரு குழுச் செயற்பாடு / அணிக் கலந்துரையாடல் நடத்தப்படும்.*

**சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களுக்கான பயிற்றுனர்களுக்கான பயிலமர்வுகள் (ToT)**

*சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களுக்கு இரண்டு நாள்- பயிற்றுனர்களுக்கான பயிலமர்வு நடத்தப்படும். கொவிட் தொற்று நிலைமை மற்றும் சமூக இடைவெளி பற்றிய விதிகள் ஆகியவற்றினைக் கருத்திற் கொண்டு, பயிற்சியினை வழங்குவதற்காக 51 சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களும் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்படுவர். பயிற்சியின் மூலம் பின்வரும் குறிக்கோள்கள் அடையப்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றன:*

1. *சமுதாய மட்டக் கள ஆய்வாளர்கள் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்களை அடையாளங்காண உதவுதல்.*

2. *அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அறிந்து கொள்ள உதவுதல்.*

3. *பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் தொடர்பான சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களின் சுய இணக்கத்தினை மாற்றுவதற்கு உதவுதல்.*

4. *பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் பெண்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மீது எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதனை விளங்கிக் கொள்ள உதவுதல்.*

5. *தரவு சேகரிப்பு தொடர்பான உத்திகள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பாக பயிற்சியளித்தல்.*

### 2.4. தரவுப் பகுப்பாய்வு

*சேகரிக்கப்பட்டத் தரவுகள் பயிற்றுவிக்கப்பட்டக் குழுவொன்றினால் ஆய்வுக் குழுவின் கண்காணிப்புடன் பதிவு செய்யப்படும். பதிவு செய்யப்படுகின்றத் தரவுகள்* ‘Statistical Package for the Social Sciences (SPSS)’ *இன் வாயிலாக பொருட்கோடல் செய்யப்படும். அதன்பின்னர் அத்தரவுகள் ஆய்வுக்குழுவினரால் ஆய்வு நோக்கங்களினை அடைந்துகொள்ளும் வகையில் பகுப்பாய்வு செய்யப்படவுள்ளன. மாவட்டம், வயது, கல்வியறிவு மற்றும் மதம் போன்ற காரணிகளின் அடிப்படையில் தரவுகள் வெவ்வேறாகப் பதிவு செய்யப்பட்டு அட்டவணைகளாக மற்றும் வரைபடங்களாக வடிவமைக்கப்படும்.*

### 2.5 தரவுகளைச் சரிபார்த்தல்

*தரவுகள் சேகரிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, முடிவுகள் கண்டறியப்பட்டதன் பின்னர் அவை மிக எளிமையான வடிவங்களில் சமுதாய மட்டக் கள ஆய்வாளர்களிடையே பகிரப்படும். அம்முடிவுகள் தொடர்பான அவர்களுடைய கருத்துக்கள், அபிப்பிராயங்கள் மற்றும் விமர்சனங்கள் கேட்டறியப்பட்டு, அதனடிப்படையில் சேகரிக்கப்பட்டத் தரவுகள் உறுதிப்படுத்தப்படும் மற்றும் சில சந்தர்ப்பங்களில் தரவுகளின் பின்னணியிலுள்ள காரணங்கள் கேட்டறியப்படும்.*

### 2.6 ஆய்வினை எழுதுதல்

*முதனிலை மூலங்கள் மற்றும் இரண்டாம்நிலை மூலங்கள் என்பவற்றினூடாக சேகரிக்கப்படும் தரவுகளை மையமாகக் கொண்டு இறுதி ஆய்வறிக்கை எழுதப்படவுள்ளது. இந்த ஆய்வின் நோக்கத்திற்காக செய்யப்படவுள்ள நிகழ்நிலைக் கலந்துரையாடல்கள், குவிமையக் குழுக் கலந்துரையாடல்கள், நேர்காணல்கள் என்பனவற்றினூடாகச் சேகரிக்கப்படும் அனைத்து தரவுகளும் இந்த ஆய்வில் உட்சேர்க்கப்படவுள்ளன. பெரும்பான்மையான ஆய்வுப் பங்குபற்றுநர்கள் தமிழ்மொழி பேசுபவர்களென்ற காரணத்தினாலும், ஆய்வுப் பிரதேசத்தில் வசிக்கும் பெரும்பான்மையானோர் தமிழ்மொழி பேசுபவர்களென்ற காரணத்தினாலும், இறுதி ஆய்வறிக்கை தமிழில் எழுதப்படுமென்பதுடன் பின்னர் அது சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்படவுள்ளது.*

## 2.7 ஆய்வு வரையறைகள்

இந்த ஆய்வானது இலங்கையின் வடக்குப் புவியியல் பிரதேசத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் பால்நிலை பாரபட்சமிக்க சமூக நியமங்கள் அதிகளவில் நிலைத்திருக்கின்ற மத்திய மாகாணம் போன்ற இடங்களிலும் இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், இந்த ஆய்வானது அனைத்து அடிப்படை உரிமைகளிலும் சுதந்திரங்களிலும் கவனம் குவிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மீது கவனம் குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், விடயப்பொருளுடன் இணைந்திருக்கின்ற கூருணர்தன்மை காரணமாகப் பக்கச்சார்பு மிக்க தரவுகள் கிடைக்கக்கூடியமைக்கான சாத்தியப்பாடுகளும் உள்ளன. அத்துடன் இந்த ஆய்வின் முடிவுகள் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவில் இருந்து பெறப்படுபவை என்பதால் அவை யுத்தத்தின் விளைவுகளைப் பிரதிபலிக்கக்கூடும் என்பதைக் குறிப்பாகக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## பகுதி III

### அபாயநேர்வு மதிப்பீடு

நாட்டில் நோய்த் தொற்றொன்று நிலவும் சூழ்நிலையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதில் இது அசாதாரணமான சவால்களை உருவாக்கலாம். மேலும், கொவிட்-19 சூழமைவில் சமூக இடைவெளி பற்றிய விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாகத் தரவுகளைச் சேகரிப்பது சவாலாக இருக்கும்.

